2995

T.N.L.A. Debates

Official Report

Vol 46 NO 1

17th November 1987


V211,31 N87
N87.46.1
121540

வெளியீடு 15-6-1988 Issued 15-6-1988

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
### செயலக வெளியீடு

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
### OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, நவம்பர் 17, 1987—தொகுதி 46—எண் 1
Tuesday, the 17th November 1987–Volume 46–No 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat Fort St. George,
Madras-600 009

விலை ரூ.3.00 காசுகள்] [Price Rs-3.00 pais

V211,3! N87
N87.46·1
ஆவணக்காப்பக
136540
சென்னை-600 008.

# உள்ளடக்கம்.

17-11-1987.

பக்கங்கள்.

(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் . vii—xi

(ii) Personnel of the Government of Tamil Nadu xi—xiii

(iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. xvii—xviii

(iv) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) xxi—xxviii

வினாக்கள் — விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 1—50

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. 50—174

தகவல் கோரல்—

உறுப்பினர் கொடுத்த முன்னறிவிக்கை குறித்து 174, 176–179, 180—181

கவன ஈர்ப்பு—

(அ) மேட்டுப்பாளையம் வட்டம், விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வேட்டி, சேலை வழங்க வேண்டியது குறித்து .. .. 175—176, 179—180, 181—183

(ஆ) மதுரை மகாலட்சுமி மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து .. 183—195

(இ) சைதை பகுதி தனியார் தெருக்களிலுள்ள கழிவு நீரை அகற்றுதல் குறித்து .. 195—194

(ஈ) செங்கற்பட்டு மருத்துவமனையில் மயக்க மருந்தியல் மருத்துவர்கள் இல்லாததால் நோயாளிகள் பாதிப்பு குறித்து .. 198—207

(உ) அரியலூர், உடையார்பாளையம், பெரம்பலூர் வட்டங்களில் மூளைக் காய்ச்சல் நோயினால் குழந்தைகள் பாதிப்பு .. .. 201—208

(ஊ) வேதாரண்யத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் மத்தியப் பிரதேசத்தில் கொத்தடிமைகளாக இருத்தல் குறித்து .. 209—212

பக்கங்கள்.

4. அறிவிப்புகள்—

(அ) பேரவை அலுவல் .. .. .. 195—351

(ஆ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.).. 214

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.) .. 2[illegible]

(ஈ) 1981–82 மற்றும் 1982–83 ஆம் ஆண்டுகளுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை மொழிவது குறித்து .. 2[illegible]

(உ) நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.) .. .. .. .. .. 21[illegible]

(ஊ) நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.) .. .. .. .. .. 21[illegible]

(எ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.) .. .. 2[illegible]

(ஏ) தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதியச் சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.) .. .. 3[illegible]

5. அறிக்கை அளித்தல்—

பொது நிறுவனங்கள் குழு .. .. 212— 213

6. அரசினர் சட்ட முன்வடிவுகள் —

(அ) தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகை முறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987 .. 213

(ஆ) தமிழ்நாடு கடன் நிவாரண (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 213—214

(இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 .. 214

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 .. 215



பக்கங்கள்.

(உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (செல்லத் தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு, 1987 215—216

(ஊ) நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, 1987. 219

(எ) நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு, 1987. 219—220

(ஏ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987 .. .. 220—223

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். 220, 221—223

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் .. 220—221

(ஐ) தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 223—235

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். 223, 228—235

திரு. ம. மீனாட்சி சுந்தரம் .. 223—225

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் .. 226— 228

(ஒ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்ச வரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1987 236—254

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். 236, 247—254

திரு. கோ. வீரய்யன் .. .. 236—241

திரு. அ. ரகுமான்கான் .. .. 241—244

திரு. பொ. உத்திராபதி .. 244—247

2995




| | பக்கங்கள். |
|---|---|
| (ஓ) பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1987 .. .. | 255— 305 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 255, 275 288— 305 |
| டாக்டர் கே. சமரசம் .. | 255—267 |
| திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா .. | 267—269 |
| திரு. அ. ரகுமான்கான் .. | 269—275 |
| திரு. கே. சுப்பராயன் .. .. | 276—278 |
| திரு. மா. சின்னராசு .. .. | 278—281 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. | 281— 284 |
| *திரு. செ. செம்மலை .. .. | 284— 288 |
| (ஔ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொது அறக்கட்டளைகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற் கொள்ளுதல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1987 .. .. .. | 305 – 306 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 305—306 |
| (அஅ) தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1987 | 306—321 |
| மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு | 306, 321—321 |
| திரு. கு. ரமணி .. .. .. | 306—312 |
| *திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம் .. | 318—319 |
| | 312—315 |
| திரு. கே. சுப்பராயன் .. .. | 315—31 |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | 319—320 |
| திரு. ஆ. நடராசன் .. . | 320 321 |





| | பக்கங்கள் |
|---|---|
| (ஆஆ) தமிழ்நாடு திரைப் படங்கள் (முறைப்படுத் துதல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன் வடிவு, 1987 .. . . | 323—344 |
| மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் | 323, 343—344 |
| டாக்டர் கே. பி. இராமலிங்கம் . | 324—329 |
| திரு. அ. ரகுமான்கான் . . | 329—335 |
| * திரு. எம். செல்லமுத்து . | 335—338 |
| * திரு. ஜி. கே. ஜெ. பாரதி .. | 338—342 |
| (இஇ) தமிழ்நாடு காணொளிப் (வீடியோ) பேழைப் பதிவுக் கருவிகள் (V.B.R.) மூலமாக தொலைக் காட்சித் திரையில் திரைப் படங்கள் திரையிடப்படுவதை (முறைப்படுத் துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.. | 345 —350 |
| மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் | 345— 350 |
| (ஈஈ) தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதியச் சட்ட முன்வடிவு, 1987 .. .. .. | 351—370 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 531 364—366 370 |
| திரு. பொன் முத்துராமலிங்கம் . | 351—354 |
| * திரு. செ. செம்மலை . . | 355—359 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. | 359—363 |
| 7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1981–82 மற்றும் 1982–83 வாக்கெடுப்பு | 216—218 |
| 8. அரசினர் தீர்மானம்— | |
| (அ) அலுவல் வரிசையில் மாற்றம் | 235—236 344 |
| (ஆ) விதி 32-ஐத் தளர்த்தல் .. .. | 370 |
| 9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் .. | 371—372 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்,

### ஆளுநர்—திரு. சுந்தர்லால் குரானா,

### அமைச்சரவையின் உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| 1 முதலமைச்சர் .. | மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்.—(இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்திய பணியாளர்கள், உள் துறை மற்றும் இலஞ்ச ஒழிப்பு). |
| 2 நிதி அமைச்சர் | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.—(நிதி ,பொது நிர்வாகம், வருவாய், கூட்டுறவு, சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்). |
| 3 உணவு அமைச்சர் | மாண்புமிகு. திரு. ச. இராமச்சந்திரன்:—(உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு). |
| 4 உள்ளாட்சித்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:—(நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி மற்றும் கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, தொழிலாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுது பொருள் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம். |
| 5 தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. க. இராசராம்: (பெருந் தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியங்கள். |

| | | |
|---|---|---|
| 6 | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. பி. உ. சண்முகம்.—(மக்கள் நல்வாழ்வுத் துறை, சூழல் மாசுக் கட்டுப்படுத்தல், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனவளம்). |
| 7 | கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு சி. பொன்னையன்.—கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு, சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், மாவட்ட துணை ஆட்சியாளர், எடை-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்பட), [கம்பெனிகள் பதிவு மற்றும் சர்க்கரைப் பாகு கழிவு]. |
| 8 | போக்குவரத்துத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. சு. முத்துசாமி.—(போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள், பொது, மாவட்ட வருவாய் அதிகாரிகள், கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.) |
| 9 | வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:—(கைத்தறி மற்றும் நெசவாலைகள், வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்று வாரியங்கள், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு). |
| 10 | சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:—(மதுவிலக்கு ஆயத்துறை, கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம், செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, வனங்கள், சின்கோனா திட்டம், தொல்பொருள் இயல், பயண இசைவுச் சீட்டு மற்றும் மின்சாரம்). |



| | | |
|---|---|---|
| 11 | மதிய உணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்.—(சத்துணவு, மகளிர், குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், கதர், பூமிதானம் மற்றும் கிராம தானம்). |
| 12 | வணிக வரித்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. த. இராமசாமி—(வணிக வரிகள்). |
| 13 | ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ஏ. அருணாசலம்—(ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்கள்). |
| 14 | பொதுபபணித்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்.—(பொதுப் பணித்துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்). |

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNOR OF TAMIL NADU.

THIRU SUNDAR LAL KHURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. Chief Minister .. .. | The Hon. Dr. M. G. RAMACHANDRAN<br>(Indian Administrative Service, Indian Police Service and other All-India Services, Home and Prevention of Corruption). |
| 2. Minister for Finance .. .. | The Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN—<br>(Finance General Administration, Revenue, Co-operation, Legislature, Elections, Statistics, Youth Services Corps and Ex-Servicemen). |
| 3. Minister for Food .. .. | The Hon. Thiru S. RAMACHANDRAN—<br>(Food and Price Control). |
| 4. Minister for Local Administration. | The Hon. Thiru R. M. VEERAPPAN—<br>(Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development and Rural Indebtedness, Labour, Census, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, News Print Control, Stationery and Printing and Government Press). |

5. Minister for Industries and Agriculture. — The Hon. Thiru K. RAJARAM—

(Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology, Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainage Boards.)

6. Minister for Health .. .. The Hon. Thiru P. U. SHANMUGAM—

(Health, Environmental Pollution Control, Backward Classes and Fisheries).

7. Minister for Education and Law. — The Hon. Thiru C. PONNAIYAN—

(Education, Official Language, Tamil Development and Culture, Law, Courts, Prisons, Deputy Collectors, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation onMoney Lending, Chits, Registration of Companies and Molasses.)

8. Minister for Transport .. The Hon. Thiru S. MUTHUSAMY—

(Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways, Public District Revenue Officers, Rural Industries including Village, Cottage and Small Industries.)

9. Minister for Housing and Handlooms. — The Hon. Thiru S. THIRUNAVUKKARASU—

(Handlooms and Textiles, Housing and Slum Clearance Boards, Town-Planning and Accommodation Control).



10. Minister for Tourism, Prohibition and Electricity. — The Hon. Thiru V. V. SWAMINATHAN—

(Prohibition and Excise, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act, Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona, Planning Archaeology, Passports and Electricity.)

11. Minister for Noon Meal, Social Welfare and Khadi. — The Hon. Thiru R. SOUNDARARAJAN—

(Nutritious Meals, Social Welfare including Women and Children's Welfare, Beggar's Home, Orphanages, Correctional Administration, Khadi, Bhoodan and Gramdhan).

12. Minister for Commercial Taxes. .. The Hon. Thiru T. RAMASAMY—

(Commercial Taxes.)

13. Minister for Adi Dravidar Welfare. — The Hon. Thiru A. ARUNACHALAM—

(Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.)

14. Minister for Public Works .. The Hon. Thiru K.K.S.S.R. RAMACHANDRAN—

(Public Works Department, Irrigation including Minior Irrigation and Wakf.)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர் :

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்,

பேரவைத் துணைத் தலைவர். :

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல். ;

திரு. மா. சின்னராசு

திரு. ப. ந. இராமச்சந்திரன்.

திரு. கே. குப்புசாமி.

திரு. செ. செம்மலை.

திரு. மா. சுந்தரதாஸ்

செயலாளர் :

திரு. சி. கு. இராமசாமி.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்

(அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| பத்மநாப நம்பியார், திரு. பி. எம்., பி.ஏ., பி.ஜி.எல். | கூடுதல் செயலாளர் |
| பள்ளிகொண்ட பெருமாள், திரு. பெ., பி. ஏ., பி. எல். | கூடுதல் செயலாளர் |
| சீனிவாசன், திரு. சா., பி.எஸ்ஸி. | முதுநிலை குழு அலுவலர் |
| சீதாராமன், திரு. வெ., பி. காம்., பி. ஜி. எல். | துணைச் செயலாளர் |
| டில்லிதுரை, திரு. த. ப., பி. எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர் |
| ஜானகிராமன், திரு. செ. கு., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| சீனிவாசன், திரு. கு. இ., பி.ஏ. | குழு அலுவலர் |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| கனகசபாபதி, திரு. பெ. ச., பி. ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| கேசவராம் திரு. எஸ்., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி. ஏ. | சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி பி.எல் | சார்புச் செயலாளர் |
| சுந்தரராஜன், கா. திரு. செ., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| தியாகராஜன், திரு. கே., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| பாலகிருஷ்ணன், திரு. பா., பி. காம். | சார்புச் செயலாளர் |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி. ஏ. | சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| ஜான், திரு. வ. சா., பி. ஏ. | சார்புச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. டி. பி. ஏ., | சார்புச் செயலாளர் |
| ஜோசப், திரு. மா. கு., பி. ஏ., | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு தோ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| சாமிநாதன், திரு பொ. க. | விவாதப் பதிப்பாளர் |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி. ஏ., பி.எல்., | தலைமை நிருபர் (பேரவை) |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ. | தலைமை நிருபர் (குழுக்கள்) |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல்
(அகர வரிசைப்படி)

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| அ | |
| 1. அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 2. அப்துல் சமத், திரு. ஆ. கா. அ. | திருவல்லிக்கேணி |
| 3. அப்துல் மஜீத், திரு. எச். | வாணியம்பாடி |
| 4. அரங்கநாயகம், திரு. செ. | தொண்டாமுத்தூர் |
| 5. அரிக்குமார், திரு. இரா. | பெரணமல்லூர் |
| 6. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 7. அருணாசலம், திரு. எ. | வரகூர் (செ. வ.) |
| 8. அன்பழகன், திரு. கே. | ஓமலூர் |
| 9. அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 10. அன்பழகன், திரு. பொ. | இளையான்குடி |
| ஆ | |
| 11. ஆண்டி அம்பலம் திரு. மெ. | நத்தம் |
| 12. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி. | ஆண்டிமடம் |
| 13. ஆறுமுகம், திரு அ. | வந்தவாசி |
| 14. ஆறுமுகம், திரு. எச். ஜி. | பென்னாகரம் |
| 15. ஆறுமுகம், திரு. ஆர். எஸ். | ஒட்டபிடாரம் (செ.வ.) |
| 16. ஆறுமுகம், திரு. எ. எஸ். ஏ. | விருதுநகர் |
| 17. ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2 |
| 18. ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | பூந்தமல்லி |
| 19. ஆனந்தன், திரு. மு. | உளுந்தூர்பேட்டை |

| தொடர் எண்ணும், உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| இ | |
| 20. இரகுபதி, திரு. கோ. | காட்பாடி |
| 21. இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 22. இரத்தினவேலு, திரு. செ. | முசிறி |
| 23. இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர் (செ.வ.) |
| 24. இராசமாணிக்கம், திரு. எல்ல. | தாம்பரம் |
| 25. இராசரத்தினம், திரு எப். எம் | கொளச்சல் |
| 26. இராசரத்தினம், திரு. எம். | விழுப்புரம் |
| 27. இராசாங்கம், திரு. மு. | திருவிடைமருதூர் |
| 28. இராசாம்பாள் திருமதி த. | தலைவாசல் (செ.வ) |
| 29. இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 30. இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 31. இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 32. இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | ஆண்டிபட்டி. |
| 33. இராமச்சந்திரன், திரு. கே. எஸ். எம். | போடிநாயக்கனூர் |
| 34. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 35. இராமச்சந்திரன் திரு. ச. | பண்ருட்டி |
| 36. இராமச்சந்திரன், திரு. சோ. மா. | அண்ணா நகர் |
| 37. இராமச்சந்திரன், திரு. ப. ந. | பட்டுக்கோட்டை |
| 38. இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 39. இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 40. இராமலிங்கம், டாக்டர் கே. பி | ராசிபுரம். |
| 41. இளங்கோவன், திரு. ஈ. வே. கி. ச. | சத்தியமங்கலம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| ஈ | |
| 42. ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ. வ.) |
| உ | |
| 43. உச்சி, திரு. கே. | கடலூர். |
| 44. உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ. வ.) |
| எ | |
| 45. எத்திராசன், திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| க | |
| 46. கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம் |
| 47. கதிர்வேலு, திரு. மா. .. | ராணிப்பேட்டை |
| 48. கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு |
| 49. கந்தசாமி, திரு. பி. .. | பொங்கலூர் |
| 50. கல்லன், திரு. கே. .. | உதகமண்டலம் |
| 51. கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம் |
| 52. காளிமுத்து, டாக்டர் கா. .. | மதுரை கிழக்கு |
| 53. கிருஷ்ணசாமி, கே. ஏ. திரு. .. | ஆயிரம் விளக்கு |
| 54. கிருஷ்ணசாமி, திரு. வி. ரா. .. | அணைக்கட்டு. |
| 55. கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. | கும்பகோணம் |
| 56. கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1 |
| 57. குப்புசாமி, திரு. கே. .. | ஒட்டன்சத்திரம் |
| 58. குப்புசாமி, திரு. வே. .. | செய்யாறு |
| 59. குமரகுருபர ராமநாதன், திரு. ச. | விளாத்திகுளம் |
| 60. குமரி அனந்தன், திரு. .. | ராதாபுரம் |
| 61. குமாரதாஸ் டாக்டர் தே., | கிள்ளியூர் |
| 62. கோமதி சீனிவாசன் திருமதி | வலங்கைமான் (செ. வ.) |
| 63. கோவிந்தசாமி, திரு. ஆர். .. | குடியாத்தம். |
| 64. கோவிந்தசாமி, திரு. ச. | எடப்பாடி |
| 65. கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| | **ச** |
| 66. சங்கரலிங்கம். திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 67. சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 68. சண்முகம். திரு. என். .. | சோளிங்கர் |
| 69. சண்முகம், திரு. ப. உ. .. | மேலமலையனூர் |
| 70. சண்முகையா பாண்டியன், திரு. எம். | ஆலங்குளம் |
| 71. சந்திரசேகரன், திரு. ஆ. .. | சோழவந்தான் |
| 72. சந்திரசேகர், திரு. மு. .. | முகையூர் |
| 73. சம்சுல் ஆலம், திரு. எஸ்.டி. வி. | பாளையங்கோட்டை |
| 74. சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டினம் |
| 75. சரோஜா, (திருமதி.) இரா. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 76. சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் (செ. வ.) |
| 77. சித்தன், திரு. என்.எஸ்.வி. .. | திருமங்கலம் |
| 78. சிவக்குமார், திரு. ஆர். .. | சமயநல்லூர், (செவ.) |
| 79. சிவக்குமார், திரு. எம். .. | சூலூர் (செ.வ.) |
| 80. சிவஞானம், திரு. ந. .. | திருவோணம் |
| 81. சிவப்பிரகாசம், திரு. சி. .. | சேந்தமங்கலம் (ஆ.வா) |
| 82. சிவராமன், திரு. எஸ். .. | சின்னசேலம். |
| 83. சிவராஜ், திரு. சு. .. .. | ரிஷிவந்தியம் |
| 84. சின்னக்குழந்தை, திரு. மு. ... | ஆரணி |
| 85. சின்னசாமி, திரு. வே. கு. .. | பவானிசாகர் |
| 86. சின்னராஜி, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி |
| 87. சின்னராசு, திரு. மா. .. | மேட்டுப்பாளையம் |
| 88. சுந்தரதாஸ், திரு. மா. .. | விளவன்கோடு |
| 89. சுப்பராயன், திரு. கே. .. | திருப்பூர் |
| 90. சுப்பிரமணிய ஆதித்தன், திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 91. சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை |
| 92. சுப்பிரமணியன், திரு. வி. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 93. சுப்புராயர், திரு. சி. .. | கம்பம் |
| 94. சுவாமிநாதன், திரு. வி.வி. .. | புவனகிரி |
| 95. செங்காளியப்பன், திரு. ஆர். .. | சிங்காநல்லூர். |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| | **ச—தொடர்ச்சி.** |
| 96. செங்கோட்டையன், திரு. கே. ஏ. | கோபிச்செட்டிபாளையம் |
| 97. செங்கோட்டையன், திரு. பெ. | கபிலர்மலை |
| 98. செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம் |
| 99. செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.) |
| 100. செல்லப்பா, திரு. வி. கோ. .. | கடலூர் |
| 101. சேகர், திரு. கே. பி. கே. .. | பொன்னேரி (செ.வ.) |
| 102. சொர்ணலிங்கம், திரு. கா. .. | திருவாடானை |
| 103. சோலைராசு, திரு. க. .. | மருங்காபுரி |
| 104. சௌந்திரராஜன், திரு. ஆர். .. | ஸ்ரீரங்கம் |
| 105. சௌந்திரராஜன், டாக்டர் கே. | தியாகராய நகர் |
| | **ஞ** |
| 106. ஞானசுந்தரம், திரு. சா. .. | மன்னார்குடி |
| | **ட** |
| 107. டேனியல்ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம் |
| | **த** |
| 108. தங்கமணி, திரு. மு. .. | மாயூரம் |
| 109. தங்கமணி, திரு. கே. எம். .. | திண்டிவனம் |
| 110. தங்கராசு, திரு. ஏ. .. | குறிஞ்சிப்பாடி |
| 111. தங்கராசு, திரு. செ. .. | மங்களூர் (செ.வ.) |
| 112. தங்கவேல்ராஜ், திரு. பி.எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 113. தங்கவேலு, திரு. வி. .. | வால்பாறை (செ.வ.) |
| 114. தமிழ்மணி திரு. .. | திருப்போரூர் (செ.வ.) |
| 115. தமிழரசன், திரு. கு. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 116. தனபால், திரு. ப. .. | சங்கரி (செ.வ.) |
| 117. தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 118. தியாகராஜன், திரு. ஆர். .. | விருத்தாசலம் |
| 119. திருஞானம், திரு. பி. ஆர். .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 120. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி |
| 121. திருமலைசாமிக் கவுண்டர், திரு. | உடுமலைப்பேட்டை |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயா. |
|---|---|
| **த— தொடர்ச்சி.** | |
| 122. தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | மொரப்பூர் |
| 123. தீர்த்தராமன், திரு. ப. .. | பாலக்கோடு |
| 124. துரை அன்பரசன் திரு. .. | நெல்லிக்குப்பம் |
| 125. துரை கிருஷ்ணமூர்த்திதிரு. .. | தஞ்சாவூர் |
| 126. துரை கோவிந்தராசன் திரு... | திருவையாறு |
| 127. துரைசாமி சைதை, திரு. சா.... | சைதாப்பேட்டை |
| 128. துரைராசு, திரு. எஸ். பி. .. | காரைக்குடி |
| 129. துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில் |
| 130. தெய்வநாயகம், திரு. எ. .. | மதுரை சென்ட்ரல |
| 131. தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர் |
| **ந** | |
| 132. நடராசன், திரு) ஆ. .. | பேரூர் |
| 133. நரசிம்ம பல்லவன், திரு. க... | உத்திரமேரூர் |
| 134. நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு |
| 135. நல்லமுத்து, க. டாக்டர். .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 136. நல்லுசாமி, திரு. என். .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 137. நாச்சிமுத்து, திரு. கே. பி. .. | மேட்டூர் |
| 138. நாராயணன், திரு. பு. கோ. .. | பவானி |
| 139. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர் |
| **ப** | |
| 140. பஞ்சவர்ணம், திரு. வி. எஸ். | அருப்புக்கோட்டை |
| 141. பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர். |
| 142. பரமசிவம், திரு. பா. ந. .. | பல்லடம் |
| 143. பழனி, திரு. த. .. .. | ஆற்காடு |
| 144. பழனிச்சாமி, திரு. கா. செ... | காங்கேயம் |
| 145. பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர் |
| 146. பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி |
| 147. பாண்டுரங்கன், திரு. மு. .. | கலசபாக்கம் |
| 148. பாப்பா சுப்பிரமணியன் திரு. | குத்தாலம் |
| 149. பாரதி, திரு. ஜி. கே. ஜெ. .. | திருவொற்றியூர் |
| 150. பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **ப— தொடர்ச்சி.** | |
| 151. பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி |
| 152. பாலகிருஷ்ணன், திரு. வி. .. | சிவகாசி |
| 153. பாலச்சந்திரன், திரு. வை. .. | பத்மநாபபுரம் |
| 154. பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 156. பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர். வி. பி. | வேடசந்தூர் |
| 157. பாலாஜி, திரு. கே. .. .. | காஞ்சிபுரம் |
| 158. பாலுச்சாமி, திரு. ஏ. .. | பரமக்குடி (செ.வ.) |
| 159. பாலுசாமி, அ. திரு. .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 160. பிரணவநாதன், திரு. அ, .. | கடலாடி |
| 161. பிரேம்குமார், திரு. ஆ. .. | திண்டுக்கல் |
| 162. புருஷோத்தமன், திரு. எஸ். .. | அரியலூர் |
| 163 புஷ்பராசு, திரு. த. .. .. | திருமயம் |
| 164 பெரியசாமி, திரு. அ. .. | தாராபுரம் (செ.வ.) |
| 165 பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் |
| 166 பெருமாள், திரு. தெ. .. | கடையநல்லூர் |
| 167 பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி. |
| 168 பொன் முத்துராமலிங்கம், திரு. | மதுரை (மேற்கு). |
| 169 பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். .. | பழனி (செ.வ.) |
| 170 பொன்னுசாமி, டாக்டர். அ. | பெருந்துறை |
| 171 பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு |
| **ம** | |
| 172 மணவாளன், திரு. எஸ். பி. .. | திருப்பத்தூர் |
| 173 மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.) |
| 174 மலர்மன்னன், திரு. அ. .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 175 மனோகரன், திரு. கி. .. | புரசைவாக்கம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **ம—தொடர்ச்சி.** | |
| 176 மனோகரன், திரு. தி. நா. கோ. அ. | திருநாவலூர் |
| 177 மாசிலாமணி, டாக்டர் ந. .. | ஜெயங்கொண்டான் |
| 178 மாதவன், திரு. செ. .. | திருப்பத்தூர் |
| 179 மாதையன், திரு. யு. பி. .. | அந்தியூர் (செ.வ. |
| 180 மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.) |
| 181 மாரிமுத்து, திரு. மு. .. | திருப்பரங்குன்றம் |
| 182 மீனாட்சிசுந்தரம், திரு. மா. .. | வேதாரண்யம் |
| 183 முகம்மது கனி, திரு. ஜே. .. | புதுக்கோட்டை |
| 184 முகம்மது சலீம், டாக்டர். த. | பெரியகுளம் |
| 185 முசிறிபுத்தன், திரு. பி. .. | குளித்தலை |
| 186 முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு |
| 187 முத்துராமலிங்கம், திரு. பி. கே. எம். | உசிலம்பட்டி |
| 188 முத்துவேல், திரு. கே. .. | முதுகுளத்தூர் |
| 189 முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி |
| 190 முருகானந்தம், திரு. டி. என். | செஞ்சி. |
| 191 முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| **ய** | |
| 192 யசோதா, திருமதி டி. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| **ர** | |
| 193 ரகுமான்கா திரு. ன், அ. .. | சேப்பாக்கம் |
| 194 ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 195 ரவீந்திரன், திரு. ஏ. எஸ். .. | திருவண்ணாமலை |
| 196 ராமஜெயம், திரு. ம. நா. .. | வானூர் (செ.வ.) |
| 197 ராமன், திரு. கி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 198 ராஜாபாபு, திரு. ஜெ. .. | போளூர். |
| 199 ரெங்கசாமி, திரு. ஆர். .. | கோவில்பட்டி |
| 200 ரெத்தினராஜ், திரு. எஸ். .. | நாகர்கோவில் |
| **ல** | |
| 201 லட்சுமி, திருமதி பி. .. | அவினாசி (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **வ.** | |
| 202 வடிவேல், திரு. கு. .. | கரூர் |
| 203 வளர்மதி, திருமதி பா. .. | மயிலாப்பூர் |
| 204 விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார் |
| 205 விஜயலட்சுமிபழனிச்சாமி .. | வீரபாண்டி |
| திருமதி | மேலூர். |
| 206 வீரானம்பலம், திரு. க. வெ. .. | நாகப்பட்டினம் |
| 207 வீரய்யன், திரு. கோ. .. | திருநெல்வேலி |
| 208 வீரப்பன், திரு. ஆர். எம். .. | ஒரத்தநாடு |
| 209 வீராசாமி, திரு. தா. .. | ஓசூர் |
| 210 வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஆலங்குடி |
| 211 வெங்கடாசலம், திரு. அ. .. | லால்குடி |
| 212 வெங்கடாசலம், திரு. கி. .. | பரகூர் |
| 213 வெங்கடாசலம், திரு. டி. எம். | தென்காசி |
| 214 வேங்கடரமணன், திரு. டி. ஆர். | டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் |
| 215 வேணுகோபால், திரு. எஸ். .. | தல்லி |
| 216 வேணுகோபால், திரு. கே. வி. | தண்டராம்பட்டு |
| 217 வேலு திரு. இ. வி. கூடலூர் .. | |
| **ஜ** | |
| 218 ஜகதீசன், திரு. பு. கோ. .. | செங்கல்பட்டு |
| ஆனூர் | |
| 219 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 220 ஜெகதீசன், திரு. சு. .. | அரவக்குறிச்சி |
| 221 ஜெயச்சந்திரன், திரு. சா. .. | காட்டுமன்னார் கோவில் (செ.வ. |
| 222 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| **ஹ** | |
| 223 ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. | திருவட்டாறு |
| 224 பிரான்சிஸ், திரு. ஜி. கே. .. | நியமன உறுப்பினர் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | |
|---|---|
| கிருஷ்ணமூர்த்தி திரு. ஆர். .. | தலைமை வழக்கறிஞர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

***1987, நவம்பர் 17, செவ்வாய்க்கிழமை.***

***கார்த்திகை 1, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு-2018.***

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி. எச். பாண்டியன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:***

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து."

பொறுத்திருக்கும் காலத்தில் கொக்குப்போல் அமைதியாக இருக்க வேண்டும்; காலம் வாய்த்தபோது அதன் குத்துப்போல் தவறாமல் செய்து முடிக்க வேண்டும்.

### 1. வினாக்கள்-விடைகள்.

#### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மதுரை, கோவை மாநகர்களில் காவல்துறை ஆணையாளர் நியமனம்.**

145—(*வினா எண் 10436) **திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, கோவை மாநகர்களில் காவல்துறை கமிஷனர் நியமனம் செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நியமனம் செய்யப்படும்?

**மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) சென்னையில் உள்ளதுபோல மதுரை நகருக்கும், கோயம்புத்தூருக்கும் காவல் துறை ஆணையர் பதவி ஏற்படுத்துவதற்கான 1987 ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல் மதுரை மாநகருக்கும் கோயம்புத்தூர் மாநகருக்கும் நீட்டிப்புச் சட்டம் 23—7—1987 நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டது

மேற்படி சட்டம் எந்தத் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்ற அறிவிக்கையினை மாநில அரசு வெளியிட வேண்டும். இதுகுறித்த செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

**திரு. சி. பழனிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, கோவை போன்ற நகரங்களுக்குக் காவல் துறை கமிஷனர் நியமிப்பது பற்றி அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அதைத் துரிதப் படுத்துவதோடு, உடனடியாக மதுரை, கோவை போல் சேலம், திருச்சிக்கும் இதுபோன்ற காவல் துறை கமிஷனர்களை நியமிக்கும் குறிப்பு அரசிடத்தில் உள்ளதா? அவற்றிற்கும் பரிந்துரை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, சேலம், திருச்சி நகரங்களுக்கு இத்தகைய செயற்குறிப்பு கிடையாது. மதுரைக்கும், கோவைக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால், காவல் துறை ஆணையாளர் போடுவது பற்றி பல்வேறு நிதி வாயில்கள் மற்றும் நிர்வாக முடிவுகளுக்கேற்ப அரசு முடிவெடுக்கும்.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுரைக்குக் காவல் துறை கமிஷனர் அலுவலகம் நியமிக்கப்படும்பொழுது அந்தக் கமிஷனர் அலுவலகத்திலுடைய ஜூரிஸ்டிக்ஷன் லிமிட்டை மேலூர், திருமங்கலம் போன்ற பகுதிகளுக்கும் இணைத்து ஏற்படுத்துவதாகச் செயற்குறிப்பு இருக்கிறதா? அதேபோன்று மதுரை ஊரகத்தினுடைய தலைமையிடத்தைத் தேனிக்கு மாற்ற வேண்டுமென்று ஏற்கெனவே அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அது உடனடியாகச் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இந்தக் காவல்துறை ஆணையாளருடைய வரைவு எல்லை மதுரை மாநகராட்சியின் எல்லைக்குள் அடங்கும் என்று சட்டம் உள்ளது. ஆகவே, மதுரை மாநகராட்சி எல்லைக்குள் வருகின்ற பகுதிகள்தான் அதிலே அடங்கும். தேனிக்கு அலுவலகம் மாற்றப்படுவது குறித்து அரசு ஏற்கெனவே ஆணை இட்டிருந்தால் அது செயல்படுத்தப்படும்.



**சென்னை நகர கூட்டுறவு நியாய விலைக் கடைகள்.**

146—(* வினா எண் 12925) **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் உள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைகளை நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நியாய விலைக் கடைகளாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இல்லை.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிவில் சப்ளைஸ் கடைகளெல்லாம் கூட்டுறவு நியாய விலைக் கடைகளாக இன்றைக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. அப்படி மாற்றப்பட்டிருக்கின்ற, சென்னை மாநகரத்தில் இருக்கின்ற கடைகளில் ஒட்டுமொத்தமாக பொருட்களை வைக்க முடியாத ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினால், பொதுமக்களுக்குப் பல நேரங்களில் கேட்கின்ற பொருள்கள் கிடைப்பதில் காலதாமதம் ஆகிறது. எனவே, இதைக் கவனத்திலே கொண்டு இன்றைக்கு சிவில் சப்ளைஸ் கடைகளையெல்லாம் மாற்றிவிட்டு, கூட்டுறவு டி.யு.சி.எஸ். கடைகளின் வாயிலாக வழங்கப்படுகின்ற உணவுப் பொருட்களைச் சீராக விநியோகம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகம் மொத்த வியாபாரத்தில் ஈடுபடும். இதைப்போல சில்லறைக் கடைகளை நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்துவது சரியல்ல என்கின்ற காரணத்தினால் கூட்டுறவுத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையின் மூலம் அந்தக் கடைகள் 1—10—1987 முதல் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. குறைபாடுகள் இருந்தால் கூட்டுறவுத் துறை மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிவில் சப்ளைஸ் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த ஊழியர்களுக்கு டி.யு.சி.எஸ்.-லே வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறதா? ஏற்கெனவே நியாய விலைக் கடைகளின் மூலமாக வழங்கப்படுகின்ற உணவுப் பொருட்களை, என்னென்னவாக இருந்தாலும்,

அரிசியாக இருந்தாலும், அளவுகளிலே குறைவு ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டி, அதை பாக்கெட் மூலம் வழங்கலாம் என்ற ஒரு கருத்து அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்பட்டது. எனவே அந்தக் கருத்தை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் விரும்பினால் கூட்டுறவுத் துறைக்குச் செல்லலாம். இல்லையென்றால் நுகர்பொருள் வாணிபக் கழகத்திலேயே அவர்கள் செயலாற்றுவார்கள். அளவுக் குறைவுக்காக அவற்றை பாலிதீன் பைகள், மற்றவற்றிலே போட்டு விநியோகிக்கப்பட வேண்டுமென்கிற யோசனை ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதைக் கூட்டுறவுத் துறையின் மூலம் கேள்வியைப் போட்டு தக்க பதிலைப் பெற கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். வேணுகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே சிவில் சப்ளைஸ் கீழ் இருந்த கடைகளெல்லாம் கூட்டுறவுச் சங்கங்களிடம் வந்து இருக்கிற காரணத்தால், ஒரு கடைக்கு, 1,000, 2,000 என்று கார்டு இருப்பதனாலே மக்கள் அதிக நேரம் நின்று இன்னலுக்கு ஆளாக்கப்பட்டு அவதிப்படுகிறார்கள். அதை விரிவாக்கி, இன்னும் அதிகக் கூட்டுறவுச் சங்க கடைகள் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை பரிசீலிக்கும்.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பகுதியிலே உள்ள கார்டுதாரர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கூட்டுறவு நுகர்வோர் சங்கங்களை அமைத்து அவர்களே பொருள்களை வாங்கிக் கொள்வதற்கு வேண்டிய வழிவகைகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, அந்த யோசனையின் அடிப்படையிலேதான் இது கூட்டுறவுத் துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறை இந்தக் கருத்தைக் கவனித்துக் கொள்ளலாம்.



**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் கடைகள் இப்பொழுது இயங்குகின்றனவே, அந்தக் கடைகளில் அழுகல் வெங்காயம் வாங்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்களே, அந்த அழுகல் அடிக்கின்ற கடைகள் மீது ஏதாவது நடவடிக்கை எடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, தனிக் கேள்வி கூட்டுறவுத் துறைக்குப் போடவும்.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்த அமுதம் சிறப்பங்காடிகள் அத்தனையும் கூட்டுறவுத் துறைக்கு மாற்றப்பட்டுவிட்ட காரணத்தினால் அவை, எங்கெங்கு சில்லறைக் கடைகள் வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தனவோ, அந்தந்த இடத்தில், கூட்டுறவுத் துறை மூலமாக, கடைகள் அமைத்து விற்பனை செய்யக்கூடிய நிலையை உருவாக்க அரசு முயற்சிக்குமா? ஆந்திராவைப் போன்று, பட்டதாரிகளுக்கு ஏஜன்சி முறையிலே அந்தக் கடைகளைக் கொடுத்து நடத்துவதற்கு திட்டம் ஏதேனும் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அத்தகைய யோசனை ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இப்பொழுது கூட்டுறவுத் துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையின் மூலம் கடைகள் எங்கெங்கு ஆரம்பிக்க முடியவில்லையோ அங்கு, சில குக்கிராமங்கள் இருக்குமானால், அங்கு படித்த, பட்டம் பெற்ற, அல்லது வேலையில்லாத வாலிபர்கள் யாராவது முன்வருவார்களானால், அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. கி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகள் சிறப்பாக செயல்படவும் வலுவான நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தை உருவாக்கவும் அண்மையிலே நாடாளுமன்றத்திலே நிறைவேற்றிய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, அரசு ஆவன எல்லாம் செய்யும்.

## தாசநாயக்கன்பட்டியில் காவல் நிலையம் அமைத்தல்.

147—(*வினா எண் 13898) திரு. அ. பெரியசாமி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அலங்கியம் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து தாசநாயக்கன்பட்டியில் காவல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படுத்தப் படும்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. அ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, பெரியார் மாவட்டம், அலங்கியம் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து தாசநாயக்கன்பட்டியில் காவல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அரசிடம் இல்லை என்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

**திரு. அ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவா களே, தாசநாயக்கன்பட்டியில் ஏற்கெனவே ஒரு புறக் காவல் நிலையம் இருந்து வந்தது. புதிதாக, அலங்கியத்தில் காவல் நிலையம் ஏற்படுத்துகின்றபொழுது, இந்தப் புறக் காவல் நிலையத்தை எடுத்துவிட்டு அந்தப் பகுதியினை அலங்கியம் காவல் நிலைய எல்லையோடு சேர்த்து விட்டார்கள். எனவே, மீண்டும் தாசநாயக்கன்பட்டியில் புறக் காவல் நிலையம் கொண்டு வர அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது உண்மை. தாசநாயக் கன்பட்டியிலே செயல்பட்டு வந்த புறக் காவல் நிலையம் 1987-ல் காவல் நிலையமாக மாற்றப்பட்டு அலங்கியத்தைத் தலைமையிட மாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தாசநாயக்கன்பட்டியில் மீண்டும் புறக் காவல் நிலையம் ஏற்படுத்த வேண்டுமா என்பது பற்றி அரசு ஆராயும்.





## உணவுப் பொருட்களில் கலப்படம்.

148—(*வினா எண் 14326) திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1986-87 ஆம் ஆண்டு உணவுப் பொருள்களில் கலப்படம் செய் ததற்காக நடவடிக்கைக்கு உள்ளானவர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு உணவுப் பொருள்களில் கலப்படம் செய்ததற்காக நடவடிக்கைக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 2,232 ஆகும்.

(முற்பகல் 10-10)

**திரு. எஸ். வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருந்த கேள்விக்குப் பாதிதான் பதில் வந்திருக்கிறது. பாதி வாராமல் இருக்கிறது. உணவுப் பொருட்களில் கலப்படம் செய்வதைத் தடுக்க அரசு எத்தகைய நடவடிக்கை எடுக்கிறது என்றும் கடந்த ஆண்டில் நடவடிக்கை எடுத்துள்ள விவரங்கள் என்ன என்றும் தான் கேட்டிருக்கிறேன். ஆனால் பாதிக்குத்தான் பதில் வந்திருக்கிறது. கலப்படத் தடைச் சட்டத்தினால் சாதாரண சிறு வியாபாரிகள் பாதிக்கப் படுவது பற்றி அரசுக்குத் தெரியுமா? இதைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, பெரிய வியாபாரிகள் என்று சாதாரண வியாபாரிகள் அல்லது குற்றவாளிகள்தான், குற்ற மல்ல; கலப்படம் செய்தால் யாரும் குற்றவாளி இல்லை என்றால் அவர்கள் நீதிமன்றத்தின் மூலம் நிரப ராதிகள் என்று நிரூபிக்க வேண்டும்.

**திரு. எஸ். வேணுகோபால் :** பேரவைத் தலைவர் அவர்களே, உணவுப் பங்கீட்டுப் பொருட்களைக் கொள்முதல் செய்யும் இடத் திலேயே தரமான பொருட்களாகக் கொள்முதல் செய்து கலப் படம் இல்லாமல் தடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். ஏன் இதைக் கேட்கிறேன் என்றால் பாமாயில் [illegible] வருவதும், பாக்கெட்டில் வருவதும் சுத்தமாக இருக் கிறது; ஆனால் பேரலில் வருவது கலப்படம் செய்யப்பட்ட தாக இருக்கிறது. எனவே கொள்முதல் செய்கிற இடத்திலேயே கலப்படத்தைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 17

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே,
அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கலப்படத்தைப்
பொறுத்தவரையில் சாதாரணமாக சில்லறை வியாபாரிகள்தான்
அதிகப்படியான தாக்குதலுக்கு ஆளாகிறார்கள். பெரிய வியா
பாரிகள், ஹோல்சேலைக் கொடுக்கக்கூடியவர்கள்தான், கலப்படப்
பொருட்களை அவர்களே தயாரித்து, மிக்ஸ் பண்ணி மூட்டைகளா
கவும், வேறு வகைகளிலும் வழங்குகிறார்கள். அந்த வகையில்
எண்ணெய்களைக் கூட தயாரிக்கிறார்கள் இதனை சில்லறை
வியாபாரிகள் வாங்கி கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கிற நேரத்
தில்தான் அவர்களிடத்திலிருந்து சாம்பிள் எடுத்துச் செல்லப்
பட்டு சோதனை செய்யப்படுவதால் அதிகாரிகள் இவர்களைப்
பிடித்து இவர்கள் மீது நிறைய கேஸ்களைப் போட்டு விடுகிறார்
கள். எனவே பெரிய வியாபாரிகள் அனேகமாக சிக்கி இருக்க
மாட்டார்கள். எனவே அந்தப் பெரிய ஹோல்சேல் வியாபாரி
களிடத்தில் நடக்கக்கூடிய கலப்படத்தைத் தடுக்க என்ன புதிய
நடவடிக்கையை அரசு எடுக்கப் போகிறது என்பதை நான்
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே,
இதிலே பெரிய வியாபாரிகள் உண்டா இல்லையா என்ற விவரம்
என்னிடத்திலே இல்லை. ஆனால் சிறு வியாபாரிகள் பாதிக்கப்
படுவதாகவும், பெரிய வியாபாரிகள் தப்பித்துக் கொள்வதாகவும்
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். சிறு வியா
பாரிகள் தகவல் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்
கிறது. அப்படிக் கொடுக்கப்படுகின்ற தகவலை வைத்து பெரிய
மீன்கள் தப்பிக்காமல் பார்த்துக் கொள்ள அரசு நடவடிக்கை
எடுக்கும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்
(பேரவைத் துணைத் தலைவர்): பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தக் கலப்படப் பொருட்களைச் சோதனை
செய்கின்ற மையங்கள் மாநிலத்தில் மொத்தம் எத்தனை
இருக்கின்றன? எத்தனை பரிசோதனை மையங்கள் செயல்
படுகின்றன? அந்த மையங்களைக் கூடுதலாக்க வேண்டும்.
அவை குறைவாக இருப்பதால்தான் கலப்படங்களைப் பற்றிய
ஆய்வறிக்கை வருவதில் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே
தவறு செய்பவர்கள் தண்டிக்கப்படுவதற்கு மூன்று, நான்கு



1987 நவம்பர் 17]

ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. எனவே, பரிசோதனை மையங்
களைக் கூடுதலாக்க ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்
கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே,
தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் தர இயலும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே,
கலப்படத்தைப் பற்றி நாம் பேசுகிறோம். ஆனால் நகரமன்றங்
களில் உள்ள சேனிட்டரி இன்ஸ்பெக்டர்கள் சாதாரணக் கடை
களிலிருந்துதான் சாம்பிளை எடுத்துச் சென்று சோதனைக்கு
ஏற்பாடு செய்கிறார்கள். உதாரணமாக ஈரோட்டு மஞ்சள்
விருதுநகரில் உள்ள சில்லறைக் கடைகளில்தான் சோதனை செய்
யப்படுகிறது. அதேபோல் தூத்துக்குடிக்கு அருகில் உள்ள
வேம்பாரில் தயார் செய்யப்படுகிற கருப்பட்டி சிவகாசியில் உள்ள
சானிட்டரி இன்ஸ்பெக்டரால் சோதனை செய்யப்படுகிறது.
எனவே தயாரிக்கப்படுகிற இடங்களிலேயே கலப்படம் இல்லாமல்
தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்பதை நான்
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே,
பொருட்களை உற்பத்தி செய்கிற இடங்களில் மட்டுமல்ல; வினி
யோகம் செய்கின்ற இடத்திலும் கலப்படம் செய்வதற்கான வாய்ப்
புகள் இருக்கின்றன. எனவே எங்கெங்கு பொருட்கள் இருக்கின்ற
னவோ அங்கெல்லாம் கலப்படம் செய்வதற்கு வாய்ப்பு இருப்ப
தால் அரசு நடவடிக்கை எடுக்கிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னதுபோல் தற்
போது நடைமுறையில் உள்ள சட்டம் கலப்படப் பொருட்களை
விற்பவர்கள் மீது மட்டும்தான் பாய்கிறது. அவர்கள் பெரிய வியா
பாரிகளாக இருந்தாலும் சரி, சிறிய வியாபாரிகளாக இருந்தாலும்
சரி கடையிலே கலப்படப் பொருட்கள் விற்கப்படுகிறதே தவிர
கலப்படம் வேறிடத்தில் தான் நடக்கிறது. ஆனால் இந்தச்
சட்டம் அவர்கள் மீது பாய்வதில்லை. கலப்படத்தில் பல வகை
கள் இருக்கின்றன. உயிருக்குத் தீங்கு விளைவிக்கிற கலப்படமும்
இருக்கிறது. வெறும் இலாபத்தை மட்டுமே நோக்கமாகக்
கொண்ட கலப்படமும் இருக்கிறது. உடல் நலத்திற்கும், உயிருக்
கும் ஆபத்து விளைவிக்கக்கூடிய கலப்படப் பொருட்களை விற்

பவர்கள் மீது மட்டுமல்லாமல்—பொருட்களில் கலப்படம் செய் பவர்கள் மீதும் 1982 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டுள்ள அபாய கரமான நடவடிக்கைகளைத் தடுக்கின்ற சட்டத்தின் கீழ் நடவடிக் கை எடுக்கிற வகையில் இதனையும் அதில் சேர்ப்பதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசு இதுபற்றி ஆராயும். ஆனால் கன்ஸ்யூமர் ப்ரொடெக்ஷன் ஆக்ட், அதாவது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் என்று அண் மையில் நமது இந்திய அரசால் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டு அது இப்போது மாநிலங்களில் அமல்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிலே இது போன்ற குற்றங்களை செய்பவர்களைத் தண்டிக்க இடம் இருக் கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சில ஆண்டுகளுக்கு முன்பு அரிசி போன்ற பொருள்கள் கல்லிலே இருந்து செய்யப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டதாகவும், களிமண்ணிலே இருந்து மிளகு செய்யப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அந்த மெஷின் களெல்லாம் கூட கண்டு பிடிக்கப்பட்டதாகவும் பத்திரிகையிலே செய்தி வந்தது. அதன்மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கிறதா ? அப்படி நடவடிக்கை எடுக்காவிட்டால் இனிமேலாவது அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்து தகுந்த தண்டனை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பது கலப்படக்காரர் கள் மிகவும் திறமைசாலிகள் என்பதை. அதை மனதிலே வைத்துக் கொண்டு அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இனிமேலும் எடுக்கப்படும்.

திரு. இரா. நசமுரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய வியாபாரிகள் தான் கலப்படச் சட்டத்தின் கீழ் தண்டனைக்கு ஆளாகிறார்கள். அவர்கள் பெரிய வியாபாரி களிடம் கடனுக்குத்தான் சாக்குகளை வாங்குகிறார்கள்.





ஆதலால் சிறிய வியாபாரிகள் பெரிய வியாபாரிகளைக் காட்டிக் கொடுக்க மாட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறிய வியாபாரிகள் பெரிய வியாபாரிகளைக் கண்டு பிடித்துக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் எப்படிச் சொல்லு வார்கள் ? மேலும் மண்ணெண்ணெயில் தண்ணீரைக் கலப்பதால், சில இடங்களில் எரியவே மாட்டேன் என்கிறது. இதைக் கண்டு பிடித்துத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுவாகச் சொல்லுகிற கருத்து பெரிய வணிகர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள் என்பது. அதற்குரிய தகவல்கள் கிடைத்தால்தான் அரசு அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள முடியும். அந்தத் தகவல்கள் சிறிய வியாபாரிகளுக்குத் தெரிவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே அவர்கள் அதை நேரிடையாகத்தான் தரவேண்டும் என்று இல்லை. எப்படித் தர வேண்டுமோ அப்படித் தந்தாலும் கூட அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்ற வகையிலே தான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களுக்கும் தகவல்கள் தெரியுமேயானால்—எப்படி மண்ணெண்ணெயில் தண்ணீர் கலக்கிறார்கள் என்று சொல்கிறார்களோ—அதுபோன்ற விவரங்கள் தெரியுமேயானால், அதையும் அரசுக்குச் சொன்னால் நிச்சயமாக அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**நியாய விலைக் கடைகள் மூலம் தேங்காய் எண்ணெய் விற்பனை.**

144—(*வினா எண் 15146)—திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை பளிப்பாரா—

(அ) குடும்பக் கார்டு வைத்திருப்பவர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் குறைந்த விலையில் தேங்காய் எண்ணெய் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : எதுவுமில்லை.

[1987 நவம்பர் 17

**திரு. கே. அன்பழகன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலே 1987 டிசம்பரிலே இருந்து பொது விநியோக முறையில் ரேஷன் கார்டு வைத்திருப்பவர்களுக்கு அத்தியாவசியப் பொருள்களோடு தேங்காய் எண்ணெயும் வழங்கப் படுகிறது. அங்கே ஒரு கிலோ தேங்காய் எண்ணெய் என்ன நிகர விலையோ அதில் பாதி விலைக்குக் குறைத்துக் கொடுக்கிறார்கள். அப்படி அந்த அரசு அவர்களுக்கு பல்வேறு வசதிகளைச் செய்திருக்கிறது. அதே மாதிரி கிராமப்புறங்களிலே பரட்டைத் தலையோடு இருக்கும் வசதியற்ற ஏழை மக்களுக்கு தேங்காய் எண்ணெயும் மற்றும் ரேஷன் கார்டு வைத்திருப்பவர்களுக்கு விறகு போன்றவற்றையெல்லாம் இனிமேலாவது பரிட்சார்த்த மான முறையில் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நாம் ஏற்கெனவே கொடுத்து வருவதையே சரியாகவும், ஒழுங்காகவும் உரிய நேரத்திலேயும், உரிய அளவிலேயும் கொடுத்து வந்தால் போதுமானது. தேங்காய் எண்ணெயிலே போய் தலையிட வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே குடும்பக் கார்டுகள் வழங்கும் முறையிலே பெரும்பாலானவர்களுக்கு விடுபட்டுப் போய்விட்டது. நான் உணவுப் பங்கீட்டுத் துறையிலும், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் என்னுடைய தொகுதியான மொரப்பூர் தொகுதியிலேயே விடுபட்டுவிட்டது என்று எடுத்துச் சொன்ன தற்குப் பிறகு, அவர்கள் அதைப் பரிசீலனை செய்து, கார்டுகள் பலருக்கு போலியாகக்கூட வழங்கப்பட்டிருந்ததைக் கண்டு பிடித்து, அந்தக் கார்டுகள் எவ்வளவு கண்டுபிடிக்கப்பட்டதோ, அந்த எண்ணிக்கைக்கு ஏற்றவாறு கார்டுகள் இல்லாதவர்களுக்கு வழங்கினார்கள். மேற்கொண்டு விடுபட்டுப் போனவர்களுக்கு வழங்க வேண்டுமென்றால் அரசு அனுமதி பெற வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். ஆகவே என்னுடைய தொகுதியிலுள்ள பட்டுகோணாம்பட்டி, சித்தேரி போன்ற இடங்களில் ஏழை மக்கள், மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதியிலே பல மக்களுக்கு சரிபார்க்கப் பட்டது, விடுபட்டுப் போய்விட்டது. அப்படிப்பட்ட பகுதிகளில்,



1987 நவம்பர் 17]

விடுபட்டுப் போனவர்களுக்கு திரும்பவும் கார்டுகள் வழங்க அரசு முயற்சிகள் மேற்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இது தேங்காய் எண்ணெயைப் பற்றிய கேள்வி. குடும்பக் கார்டுகளைப் பொறுத்தவரையில், நாம் மீண்டும் எல்லோருக்கும் புதிதாக குடும்பக் கார்டுகளை வழங்க வேண்டும் என்று அரசு முடிவு எடுத்து அதற்கான கார்டுகளை அச்சடிப்பதற்கு ஏற்பாடு செய்து வருகிறோம்.

நம்முடைய நாட்டில் ரூபாய் நோட்டுக்களுக்கே கள்ள நோட்டு அச்சடிக்கிறார்கள். ஆகையினால் கார்டுகளை சும்மா விடுவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. இருந்தாலும் போலி கார்டுகளைக் குறைக்கின்ற நடவடிக்கைகளை அரசு நிச்சயமாக எடுக்கும்.

**திரு. கே. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கடுமையான வறட்சி தமிழகத்திலே நிலவிக் கொண்டிருக்கிறது. அரசு கூட பல்வேறு நிவாரண நடவடிக்கைகளை எடுத்து மக்களுடைய துயர்களைத் துடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே வறட்சியை முன்னிட்டு ரேஷன் கார்டுகளில் வழங்கப்படும் அரிசி, சர்க்கரை போன்றவற்றின் அளவைக் கூடுதலாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அத்தகைய உத்தேசம் ஏதுவும் தற்போது இல்லை.

**திரு. கோ. வீரய்யன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, உள்ள பொருள்களைச் சரியாக வழங்கினாலே போதும், தேங்காய் எண்ணெய்க்குள் தலையிட வேண்டாமென்று சொன்னார்கள். உள்ள பொருள் களைப் பெறுவதற்கு நியாயமாக கார்டு கிடைக்க வேண்டியவர் களுக்கு கிடைக்காமல் இருக்கிறது. பலமுறை மனு செய்தாலும் கிடைக்கவில்லை. அதேநேரத்தில் சிலர் போலி கார்டுகளை வாங்கி உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போலி கார்டுகளைக் குறைப்பதற்கும்,

நியாயமாகக் கிடைக்கவேண்டியவர்களுக்கு கார்டுகள் கிடைப்பதற்கும் புதிய கார்டுகள் அச்சடிப்பதாகச் சொன்னார்கள். இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை யெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, புதியதாக அச்சடித்து நாம் விநியோகிக்க இருக்கிற குடும்பக் கார்டுகளை எந்த அளவிற்கு நல்முறையில் விநியோகம் செய்யலாம் என்பதைப் பற்றி அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். முடிந்தால் ஆங்காங்கே மக்கள் பிரதிநிதிகளை வைத்துக் கொண்டு இந்த குடும்பக் கார்டுகளை விநியோகம் செய்தால் அது உரியவர்களுக்குப் போய்ச் சேர வாய்ப்பிருக்கிறது. ஆகவே எந்த அளவிற்கு விநியோகம் செய்வதில் சீர்திருத்தம் செய்யலாம் என்பதைப் பற்றி அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும். இந்தப் புதிய கார்டுகளை நாம் தந்துவிடுவோமானால் போலி கார்டுகளுக்கு இடமிருக்காது. மீண்டும் வேண்டுமானால் போலி கார்டுகளை அச்சடிக்க முயற்சிக்கலாம். ஆனாலும்கூட அரசாங்கத்திலே தம்முடைய அச்சகத்திலே இதற்கென்று விசேஷமாக கார்டுகளை அச்சடிப்பதற்கு நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஆகவே அதை ட்யூப்ளிகேட் பண்ணுவது என்பது அவ்வளவு லேசான காரியமல்ல.

### சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

150—(*வினா எண் 4893) திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மேலும் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதை தொழில் அனைநயில் பின்தங்கிய மங்களபுரம் பகுதியில் ஆரம்பிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



**திரு. சி. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் அதிகமாகக் கரும்பு உற்பத்தியாகிற நிலங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் ஒரே ஒரு சர்க்கரை ஆலைதான் இருக்கிறது. இப்போது மாநில அரசும், மத்திய அரசும் சர்க்கரை ஆலைகளுக்கு புதியதாக உரிமம் கொடுத்துக் கொண்டிருப்பதால், அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயப் பெருமக்கள் நல்ல பயனைப் பெறும் வகையில் மேலும் ஒரு சர்க்கரை ஆலையை வாழப்பாடி பகுதியிலாவது அல்லது அதற்கு அருகில் இருக்கிற மங்களபுரம் பகுதியிலாவது ஆரம்பிக்க அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, சேலத்தில் ஏற்கெனவே கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று இயங்கி வருகின்றது. ஆகவே மேற்கொண்டு ஆலை அமைக்கிற உத்தேசம் எதுவும் தற்போது இல்லை.

### நெல்லித்துறை ஊராட்சி மன்றத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

151—(*வினா எண் 9330) திருமதி பி. லட்சுமி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லித்துறை ஊராட்சி மன்றத்திற்கென பவானி ஆற்றை ஆதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்கும் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) அதனால் பயன்பெறும் பகுதிகள் எவை?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பவானி ஆற்றை ஆதாரமாகக் கொண்டு நெல்லித்துறை ஊராட்சி மன்றத்திற்கு ரூ. 8,56,100 திட்ட மதிப்பீட்டில் குடிநீர் வழங்கு திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்கு மண்டல தலைமைப் பொறியாளர் அவர்களின் ஆய்வில் உள்ளது. திட்ட ஒப்புதல் பெற்று திட்டம் 1987-88 நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(ஆ) இத்திட்டத்தினால் நெல்லித்துறை ஊராட்சியிலுள்ள நெல்லித்துறை குடியிருப்பு பயனடையும்.

**திருமதி பி. லட்சுமி:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எந்த ஆண்டு முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 17

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, திட்ட ஒப்புதல் பெற்று திட்டம் 1987-88 ஆம் நிதி ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். விரைவில் இந்தப் பணிகள் முடிவுறும்.

## ஆணைகுட்டம் நீர்த்தேக்கம்.

152—(*வினா எண் 12284) **திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விருதுநகருக்கு கட்டப்பட்டு வரும் ஆணைகுட்டம் நீர்த் தேக்கத்தில் இருந்து குடிதண்ணீர் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகருக்கு, கட்டப்பட்டு வரும் ஆணை குட்டம் நீர்த்தேக்கத்திலிருந்து குடிநீர் எடுப்பதற்கான சாத்தியக் கூறுகள் எதும் பரிசீலனையில் இல்லை. ஆனால் விருதுநகருக்கு உடனடிக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்குவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, துவங்கப்பட்டுள்ளன.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் சொல்லும்போது விருதுநகருக்கு குடிநீர்த் திட்டம் வேறு வகையில் செயல்படுகிறது என்று சொன்னார்கள். இந்த ஆணைக்குட்டம் அணைக்கட்டுக்குப் பக்கத்திலேதான் விருது நகருக்கு இப்போது தண்ணீர் சப்ளை செய்யக்கூடிய ஆணைக் குட்டம் நீர் ஏற்று நிலையம் இருக்கிறது. விருதுநகருக்கு கோடை காலத்தில் தண்ணீர் சப்ளை செய்யும் எஸ் எஸ் டாங்கும் பக்கத்திலே 1 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. எனவே இவையெல்லாம் கருத்தில் கொண்டு கட்டப்பட்டு வரும் ஆணைக் குட்ட நீர்த்தேக்கத்திலுடைய தண்ணீரை விருதுநகருக்குக் கொடுத்தால், தண்ணீர் இல்லாத பஞ்ச காலத்திலே மிகவும் கஷ்டப்படுகிற மக்களுக்குத் தண்ணீர் கிடைக்க வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். அதை அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகருக்கு நல்லதொரு குடிநீர்த் திட்டம் தீட்டப்பட்டு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. தற்போது



1987 நவம்பர் 17]

மெட்ராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட்டுக்குச் சொந்தமான
போது மெட்ராஸ் சிமெண்ட்ஸ்
கல் குவாரியிலிருந்து தண்ணீர் எடுக்க, மெட்ராஸ் சிமெண்ட்ஸ்
நிறுவனத்திற்கும் விருதுநகர் நகராட்சிக்கும் ஒரு ஒப்பந்தம் உரு
வாகியிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின்படி கல் குவாரியிலிருந்து
30 குதிரைத் திறன் கொண்ட நீரேற்று இயந்திரங்கள் மூலமாக
தண்ணீர் இறைக்கப்பட்டு, கல்நார் சிமெண்ட் குழாய்கள் மூலமாக
18 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பாலுள்ள விருதுநகருக்கு
தண்ணீர் தருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு
வருகின்றன. விரிவுபடுத்தப்பட்டுள்ள பகுதிகளில் 3 லட்சம்
கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி
கள் கட்டுவதற்கும் ஏற்பாடாகியிருக்கிறது.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது,
ஒண்டிப்புலிநாயக்கனூர் கல் குவாரியிலிருந்து தண்ணீர் கொடுக்
கப்படும் என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கல் குவாரியிலிருந்து
தண்ணீர் எடுப்பது நீண்டகாலத்திற்கு வருமா என்ற சந்தேகம்
இருக்கிறது. ஆணைக்குட்டம் நீர்த்தேக்கமானது விருதுநகர்
தொகுதியில் இருக்கிறது. விருதுநகர் தொகுதியில் உள்ள இந்த
நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணீர் பாசனத்திற்காக சிவகாசிக்குச்
செல்கிறது. எனவே விருதுநகர் தொகுதியில் உள்ள ஆணைக்
குட்டம் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விருதுநகருக்குக் கிடைத்
தால், மக்கள் நல்ல முறையில் பயன் அடைவார்கள். இதைப்பற்றி
பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடமும் கையெழுத்து
வாங்கி அந்தக் கோரிக்கை கொடுக்கப்பட்டது. எனவே, மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சரோடு
கலந்து பேசி, நல்லதொரு திட்டத்தை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே,
மெட்ராஸ் சிமெண்ட்ஸ் நிறுவனத்
திற்கும் நகராட்சிக்கும்
ஏற்கெனவே ஒப்பந்தம் ஏற்பட்டுத்தான் முடிவாகியிருக்கிறது. இந்த
ஒப்பந்தம் ஏற்பட்டது 1986 ஆம் ஆண்டு. ஆகவே, 138 லட்சம்
ரூபாய் செலவில் இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஆகவே
இதிலிருந்து தண்ணீர் கிடைக்கும் என்று கருதி எல்லாவற்றையும்
ஆராய்ந்துதான் திட்டமிட்டிருக்கிறார்கள். புதிய திட்டம் தற்
போது எதுவும் இல்லை.

### போளூர் பகுதியில் சர்க்கரை ஆலை.

153—(*வினா எண் 12511)—**திரு. ஜெ. ராஜாபாபு** : மாண்புமிகு
தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் பகுதியில் சர்க்கரை ஆலை அமைக்க
கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை பொதுத்துறையில் அமைக்கும்
செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இல்லை.

**திரு. ஜெ. ராஜாபாபு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, கடந்த சில தினங்களுக்கு முன்பு கொடுத்த பொது நிறு
வனங்கள் குழுவினுடைய பரிந்துரையில், போளூரில் அமைய
இருக்கின்ற சர்க்கரை ஆலையை மத்திய அரசு தனியாருக்குக்
கொடுக்க இருப்பதாக ஒரு செய்திக் குறிப்பு இருக்கிறது. அது
உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, போளூரில் அப்படி ஒரு சர்க்கரை ஆலை
துவங்குவதற்கு எந்தவிதமான உரிமமும் தற்போது தரப்பட
வில்லை.

**திரு. கே. முத்துவேல்**: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த ஆண்டு தமிழகத்தில் சர்க்கரை ஆலைகள் திறக்
கும் திட்டம் ஏதாவது உள்ளதா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிறைய சர்க்கரை ஆலை
களுக்கு உரிமம் கிடைத்து இருக்கிறது. இன்னும் சொல்லப்
போனால், பல சர்க்கரை ஆலைகளை விரிவாக்கம் செய்வதற்கும்
உரிமம் கிடைத்திருக்கிறது. ஆகவே, நிறைய ஆலைகள் இந்த
ஆண்டு தமிழகத்தில் துவங்க இருக்கின்றன.





**திரு. துரை கிருஷ்ணமூர்த்தி**: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நிறைய சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்
கான உத்தரவு வந்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
அறிவித்தார்கள். அதிலே தஞ்சையிலே ஒரு சர்க்கரை ஆலையை
அமைக்க இருப்பதாகத் தகவல்கள் வந்து கொண்டு இருக்கின்றன.
அப்படி தஞ்சையிலே வரக்கூடிய சர்க்கரை ஆலை எந்தப் பகுதி
யில் வர இருக்கிறது? அப்படி ஒரு செயற்குறிப்பு மத்திய அரசிட
மிருந்து தங்களுக்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: தலைவர் அவர்களே,
தஞ்சையிலே ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு ஒரு புதிய உரிமம்
கிடைத்திருக்கிறது. அதை எந்த இடத்தில் நிறுவுவது என்
பதைப் பற்றி அவர்கள் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எச். ஜி. ஆறுமுகம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்
தில், தமிழகத்திற்கு 10, 15 சர்க்கரை ஆலைகள் கொடுக்கப்பட்
டிருப்பதாகச் சொன்னார்கள். புரட்சித் தலைவருடைய ஆட்சி
யிலே தர்மபுரி மாவட்டத்தில் அரூர் தாலுக்காவிலே ஒரு
சர்க்கரை ஆலை உருவாக இருக்கிறது. அது எந்த இடத்திலே
உருவாக இருக்கிறது? அதற்கான நிலத்தை ஆர்ஜிதம் செய்
வதற்கு அமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்களா
என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: தலைவர் அவர்களே,
அரூர் வட்டத்திலே கூட்டுறவுத் துறையிலே ஒரு சர்க்கரை
ஆலையை நிறுவுவதற்கு உரிமம் பெறப்பட்டு இருக்கிறது. அது
எந்த இடத்திலே ஆரம்பிக்கப்படும் என்பதை நிபுணர் குழு கூடி
இடத்தைச் சென்று பார்த்து, முடிவு செய்யும்.

**திரு. த. மாரிமுத்து**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சர்க்கரை ஆலைகள்
இந்த ஆண்டு நிறைய அமைய இருப்பதாகச் சொன்னார்கள்.
நமது சட்டமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
அறிவித்தார்கள், அறந்தாங்கி தொகுதியில் உள்ள நாகுடியில்

[1987 நவம்பர் 17

**சர்க்கரை** ஆலை ஆரம்பிக்கப்படும் என்று. அது எந்த ஆண்டு **ஆரம்பிக்கப்பட** இருக்கிறது, எப்போது ஆரம்பிக்கப்படும் என்ற **விவரத்தை** அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கிக்கு இன்னும் உரிமம் கிடைக்க வில்லை. கிடைத்த பிறகு அது எந்த இடத்தில் ஆரம்பிக்கப் படும் என்பது இந்த மன்றத்தில் அறிவிக்கப்படும்.

**திரு. ஆர். ரெங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, நமது அமைச்சர் அவர்கள் சென்ற முறை பேசும்போது 35 சர்க்கரை ஆலைகளுக்கு மத்திய அரசிடமிருந்து உரிமம் கேட்டு இருப்பதாகச் சொன்னார்கள். மத்திய அரசிடமிருந்து எத்தனை ஆலைகளுக்கு உரிமம் கிடைத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நாம் 30 சர்க்கரை ஆலைகளுக்கு உரிமம் வேண்டும் என்று கேட்டோம். அப்போது இருந்த மத்திய அர சினுடைய சர்க்கரைக் கொள்கை 1,250 டன் கொள்ளளவு பிழி திறன் உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு உரிமம் தந்து கொண்டிருந் தார்கள். அந்தக் கொள்கை இப்போது மாற்றப்பட்டு 2,500 டன் கொள்ளளவு உள்ள ஆலைகளுக்குத் தருவதற்கு மத்திய அரசு முடிவு செய்தது. ஆகவே 30 சர்க்கரை ஆலைகளுக்கு உரிமம் கேட்பது என்று நாம் முடிவு எடுத்த நேரத்தில், 2,500 டன் என்று சொன்னவுடன் பல கூட்டுறவுத் துறை ஆலைகளுக்கு விரிவாக்கம் கேட்டோம். அதற்கும் அவர்கள் இசைவு தந்திருக் கிறார்கள். அதைப் போலவே புதிய சர்க்கரை ஆலைகளுக்கும் உரிமம் தந்து இருக்கிறார்கள். ஆகவே அந்த 1,250 டன் கொள் ளளவு திறன் என்று கணக்கு எடுத்துக் கொண்டால் ஏறக்குறைய 20 ஆலைகளுக்குப் பக்கமாக நமக்கு உரிமங்களை மத்தியப் பேரரசு வழங்கியிருக்கிறது.



1987 நவம்பர் 17]

## ஸ்ரீபெரும்புத்தூருக்கு பாலாற்று குடிநீர்த் திட்டம்.

154—(*வினா எண் 13730) **திருமதி டி. யசோதா:** மாண்பு மிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புத்தூருக்கு பாலாற்றுத் திட்டம் மூலம் குடி நீர் வழங்க அரசு அனுமதி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எந்த அளவில் உள்ளது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டத் திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மதுராந்தகத்தில் நடைபெற்ற மிகப்பெரிய விழாவில் தமிழக முதலமைச்சர் அவர்கள் ஸ்ரீபெரும்புதூர் குடிநீர்த் திட்டத்திற்கு 1 கோடியே 80 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருப்பதாக எங்களுக்கு அச்சிட்ட அழைப்பிதழில் கொடுத்து இருந்தார்கள். அதனுடைய அடிப்படையில் நான் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய சேர்மேனிடத்தில் அணுகிக் கேட்டபோது கூட சொன்னார்கள். பாலாற்றில் 3 கிணறுகள் தோண்டப்படுகின்றன, அவைகள் உங்கள் தொகுதி மக்களின் குடிநீருக்கு என்று சொன்னார்கள். ஆகவே, செயற்குறிப்பு தான் இருக்கிறது, இன்னும் வடிவம் வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியது முன்னுக்குப்பின் முரணாக எனக்கு தோன்றுகிறது. உண்மை நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 2, 3 குளங்களிலிருந்து மற்றும் ஏரி, குளம், திருமங்கை ஆழ்வார் குளம், நரசிம்ம குளம் ஆகிய இந்தக் குளங்களிலிருந்து நீர் எடுக்கப்பட்டு 60 பொதுக் குழாய்களில் நீர் விநியோகம் செய்யப்படுகிறது. ஆனால் அந்தக் குடிநீர் நன்றாக இல்லை என்று ஒரு நிலைமை இருக்கிறது. பற்றாக்குறையும் இருக்கிறது. குடிக்கத் தகுதி அற்றதாக இருக்கிறது என்ற நிலைமையும் அங்கே இருக்கிறது.

ஆகவே, பாலாற்றை ஆதாரமாகக் கொண்டு இந்த ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சிக்கும் மற்றும் வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 21 கிராமங்களுக்கும் 189 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அது மிக விரைவில் செயலாக்கத்திற்கு வரும்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் வானம் பார்த்த பூமியாக இருக்கிற காரணத்தால் குடிநீருக்கு பொது மக்கள் படுகிற துயரம் அதிகமாக இருக்கிறது. மழை பொழிந்தும் கூட அவர்களுக்கு அந்த குடிநீர்ப் பிரச்சினை இன்றைக்கும் தீர்ந்தபாடில்லை என்ற சூழ்நிலையில் இந்தத் திட்டத்திற்கு உடனடியாக செயல் வடிவம் கொடுக்க எவ்வளவு காலம் ஆகும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அரசினுடைய நிர்வாக ஒப்புதல் பெறுவதற்காக அனுப்பியிருக்கிறது. அரசு நிர்வாக ஒப்புதலைத் தந்த உடன் மிக விரைவில் செயல் ஆக்கம் செய்யப்படும்.

## தஞ்சையில் விவசாயக் கல்லூரி.

155—(*வினா எண் 13935) திரு. ந. சிவஞானம் மற்றும் திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சையில் விவசாயக் கல்லூரி எப்போது, எங்கு ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாய கல்லூரியை ஆரம்பிக்க கொள்கையளவில் அரசு முடிவெடுத்துள்ளது. இந்தக் கல்லூரி அமைப்பதற்குரிய இடம் மற்றும் நிதிவசதி போன்ற விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.



திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையில் வேளாண்மைக் கல்லூரி காட்டுத் தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று பல்கலைக் கழக கமிட்டி சிபாரிசு செய்து இருப்பதாக சென்ற முறை பொறுப்பு வகித்து வந்த வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்து இருந்தார்கள். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையிலே மீண்டும் பரிசிலனை செய்து, இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகம் சிபாரிசு செய்த இடத்திலேயே ஆரம்பிப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுத் தோட்டம் என்ற இடத்தில் நான்காம் வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. தகுந்த இடங்களை ஆய்வுசெய்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அனுப்பியுள்ள செயற்குறிப்பின் மீது அரசு தற்போது பரிசீலனை செய்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை அருகே காட்டுத் தோட்டம் என்கின்ற இடம் நஞ்சை நிலமாக இருக்கின்ற காரணத்தால் அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டிய சூழ்நிலை வருகிறது. அதனால் அரசுக்கும் ஏகப்பட்ட செலவு வருகிறது. தஞ்சை அருகே தெற்கே 10 கிலோ மீட்டரில் நடுவூர் என்ற ஓர் ஊர் இருக்கிறது. அங்கே 400 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் இருக்கிறது. அங்கே, அந்த இடத்திலே விவசாயக் கல்லூரியை நிறுவுவதற்கு அரசு ஆவன செய்யுமா? மேலும் மூன்று வருடமாகப் பரிசீலனையில் இருக்கிறது. இந்த ஆண்டாவது பரிசீலனை முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கல்லூரி என்பது எல்லா வகைப்பட்ட நிலங்கள் இருக்கின்ற இடத்திலே தான் அமைய முடியும். வறண்ட இடத்திலே அமைத்துவிட்டு, விவசாயத்திற்கு பயிர் செய்வதற்கென்று வேறு இடத்தைத் தேடிக் கொண்டு போக முடியாது. ஆகவே நிலங்களை ஒரு நிபுணர் குழுதான்

[1987 நவம்பர் 17

போய்ப் பார்த்தது. ஆனாலும் இப்போது மாணவர்கள் வேறு புதிய விவசாயக் கல்லூரிகளே வேண்டாம் என்று உண்ணாவிரதம் இருக்கக் கூடிய காலம். விரைவிலே அந்த இரண்டையும் சேர்த்து பார்த்துத்தான் நாங்கள் முடிவு எடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. காலதாமதத்திற்கான காரணங்கள் எத்தனையோ இருக்கின்றன. ஆனாலும் எப்படியாவது விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டுமென்பது தான் என்னுடைய எண்ணமாகும்.

**திரு. பி. என். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் அரசு விதைப் பண்ணை ஒன்று இருக்கிறது மாநில தென்னை ஆராய்ச்சிப் பண்ணை ஒன்றும் இருக்கிறது. அங்கே கிட்டத்தட்ட 400 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. அதோடு மட்டுமல்ல. கல்லூரிக்குத் தேவையான கட்டிடங்கள் ஆர். சு.ம. பி. நிறுவனத்தின் மூலம் கிட்டத்தட்ட 20 கட்டிடங்கள் அங்கேயிருக்கின்றன. ஆகவே அமைய இருக்கின்ற கல்லூரியை பட்டுக்கோட்டையில் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா? அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் நவதானியங்கள் விளைவதற்கு ஏற்ற பகுதி பட்டுக்கோட்டைப் பகுதி. அந்தப் பகுதியில் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா? புரட்சித் தலைவர் அவர்கள் அதற்கான உத்தரவை இடுவார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பட்டுக்கோட்டை உறுப்பினர் தன்னுடைய தொகுதியைப் பற்றி விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறார்கள். நன்றி.

## வாழ்க்கைக் கல்வித் திட்டம்.

156—(*வினா எண் 5120) **திரு. செ. செம்மலை:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாழ்க்கைக் கல்வித் திட்டத்தை அமல்படுத்த மாநில அரசு உலக வங்கியின் உதவியை நாடியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?



1987 நவம்பர் 17]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சரின் திட்டத்தை 6—10 வகுப்புகளில் அமுல்படுத்துவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒட்டுமொத்தமாக ரூ. 1,000 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டு, இறுதியில் மைய அரசினுடைய கருத்திற்கு ஏற்ப ரூ. 211 கோடி செலவுக்கு உலக வங்கியின் நிதியுதவியைப் பெற்றுத் தருமாறு மைய அரசை மாநில அரசு கேட்டது. மைய அரசு இது குறித்து நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்திருக்கிறது. மீண்டும் மைய அரசுக்கு இதுகுறித்து நினைவுபடுத்தப்பட்டுள்ளது.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக்கு செலவிடுகிற தொகை ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு, மனித ஆற்றல் மேம்பாட்டிற்குப் போடுகிற ஒரு மூலதனத்திற்குச் சமமாகும். நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னபடி கல்வியானது திட்ட இனத்தில் சேரவில்லை, அதனாலே எங்களாலே உலகவங்கியில் கடனைப் பெற்றுத் தரமுடியவில்லை என்று மைய அரசு சொல்லுமேயானால், அது உண்மையிலே பொறுப்பைத் தட்டிக் கழிப்பதாகும். எனக்கு இருக்கின்ற சந்தேகம் எல்லாம், ஒருவேளை நாம் நவோதயா பள்ளிகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதனால், இந்த உதவி மறுக்கப்படுகிறதோ என்ற அச்சம்கூட எனக்கு எழுகிறது. எனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புவது, ஒவ்வொரு மாநிலத்திற்கும் நவோதயா பள்ளிக்கு மைய அரசாங்கம் எவ்வளவு செலவிடுகிறதோ, அந்தத் தொகையை நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தப் புதிய வாழ்க்கைக் கல்விக்கு ஒதுக்கித் தருமாறு மைய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவோதயா கல்வித் திட்டத்தைப் பொறுத்த வரைக்கும், பரீட்சார்த்தமாக பல மாநிலங்களில் மைய அரசு தற்போது நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கின்ற திட்டம். மாநில அரசு, நம்முடைய அரசு, புரட்சித் தலைவர் அவர்கள் அறவே இந்தத் திட்டத்தை ஏற்கவில்லை. காரணம் இரண்டு.

ஏற்கெனவே அவைக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்று இந்தி மொழியும், ஆங்கில மொழியும் அங்கு பயிற்று மொழியாக இருக்கின்ற காரணத்தால், தாய் மொழிக்கு இடம் இல்லாத நவோதயா திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்க இயலாது என்று பாரதப் பிரதமர் அவர்களுக்கு தெளிவுபடுத்தி யிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-40)

இரண்டாவது, 6-வது வகுப்பிலே சேருவதற்கு நுழைவுத் தேர்வு என்ற ஒரு தேர்வை வைத்து, பட்டிக்காட்டிலே இருந்து வருகிற பின் தங்கிய நிலையிலே இருக்கிற, பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், நல்ல நிலையிலே வசதி வாய்ப்புகளைப் பெற்றிருக்கின்ற 'எலைட் சர்க்கிள்' என்று சொல்லக்கூடிய மக்களோடு போட்டியிட்டு அந்தத் தேர்விலே வெற்றி பெற்றவர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று நவோதயா திட்டத்திலே இருக்கிற காரணத்தால், அந்தத் திட்டம் இரண்டு வித குடிமக்களை இந்தியத் துணைக் கண்டத்தில் உருவாக்கக்கூடிய திட்டமாக மாறிவிடும்; 'செகண்ட் கிளாஸ் சிட்டிசன்களாக' தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை, குறிப்பாக நலிந்த நிலையிலே இருக்கிற மக்களை உருவாக்கி, வளம் படைத்தவர்களை, எலைட் சர்க்கிளை ஆளுகிற வர்க்கமாக அனைத்து மட்டத்திலும், 'அறிவியல், தொழில் நுட்பம், விஞ்ஞானம்' போன்ற மட்டங்களிலும், உயர்நிலை நிர்வாகப் பொறுப்பிலும் அவர்களுக்கே தொடர்ந்து ஒரு உயர்வினைத் தரும் திட்டம்; எனவே ஏற்கமுடியாது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள், பாரதப் பிரதமருக்குத் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கும், வாழ்க்கைக் கல்வித் திட்டத்திற்கும் சம்பந்தம் இல்லை. புதிய கல்விக் கொள்கையில் 1983ஆம் ஆண்டே நாம் கொண்டு வந்த வாழ்க்கைக் கல்வித் திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள எல்லா மாநிலங்களிலும் வாழ்க்கைக் கல்வித் திட்டம் நடைமுறைக்கு வரவேண்டும் என்று மைய அரசு கருத்தைக் கொண்டு இருக்கிறது புதிய கல்வித் திட்டத்திலே இதைச் சேர்க்க முயற்சி செய்து வருகிறது. குறைந்தபட்சம் 1000 கோடி ரூபாய் நிதி இதற்காக





தமிழகத்திற்கு மட்டும் தேவை என்று, திட்டத்தட்ட 135 பிரிவுகளில் வாழ்க்கைக் கல்வித் திட்டத்தினை 6-லிருந்து 10-வது வகுப்பு வரை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவை என்று நாம் கேட்டிருக்கிறோம். அவர்கள் முதலிலே இதற்கு வழி இல்லை என்று சொன்னார்கள். பிறகு உலக வங்கியுடன் பேசுவதற்கு, 211 கோடியாக முதல் கட்டத்திலே குறைத்துக் கோருங்கள் என்று கேட்டார்கள். அப்படி குறைத்து அனுப்பி யிருக்கிறோம். அவர்கள் இன்னமும் ஆய்வு செய்து கொண் டிருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்தின் அனைத்து மட்டத்திலும் இந்தத் திட்டத்தை அவர்கள் கொண்டு வர இருக்கிற காரணத்தால், உலக வங்கியை அணுகி இந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வர மத்திய அரசு முயற்சிக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மைய அரசிற்கு எழுதி இருக்கிறார்கள்.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி முதலிலே மாநிலப் பட்டியலிலே இருந்தது. அந்த அதிகாரமும் தங்களுக்கு வேண்டுமென்று மைய அரசு அதைப் பொதுப் பட்டியலுக்கு மாற்றிக்கொண்டது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, கல்வியை பொதுப் பட்டியலுக்கு மாற்றியதற்குப் பிறகு மாநிலத்திற்கென்று, கல்வி வளர்ச்சிக்கு மைய அரசு ஏதாவது தனி நிதி ஒதுக்கீட்டைச் செய்திறதா என்பது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட இந்த அவையிலே, புதிய கல்வித் திட்டம் 1988 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்படும் என்று சொன்னார்கள். உலக வங்கியிடமிருந்து ஒருவேளை கடன் கிடைப்பதில் தாமதம் கூட ஆகலாம். எனவே, அதற்குள் இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு எந்த வகையில் அந்தத் தொகையை ஈடு கட்டுவதற்கு மைய அரசினுடைய உதவியை மாநில அரசு நாட இருக்கிறது என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கல்வித் திட்டத்தினை தமிழகத்தில் நடைமுறைப் படுத்துவதற்கு மட்டும் குறைந்தபட்சம் 500 கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 20 கோடி

[1987 நவம்பர் 17

ரூபாயை நிதியாகத் தருவதற்கு மைய அரசு முன் வந்திருக்கிறது. பொதுப் பட்டியலுக்கு கல்வியை எடுத்துச் சென்று விட்டு, நிதியுதவியை அதற்கு பெருவாரியாகத் தர மைய அரசு தயக்கம் காட்டினால் புதிய கல்வித் திட்டம் நடைமுறையில் ஈடேறாது, செம்மையாக நடைபெறாது என்று கிட்டத்தட்ட அனைத்து மாநிலங்களுமே மைய அரசிற்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றன. மைய அரசை தமிழகம் உள்பட பல மாநிலங்கள் வற்புறுத்தியும் வருகின்றன.

மதுரை காமராசர் பல்கலைக் கழக பி.பி.ஏ. பட்டம்.

157—(*வினா எண் 8627) திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில், பி.பி.ஏ., பட்டப்படிப்பு படித்தவர்கள் வேறு பல்கலைக் கழகங்களில் எம்.ஏ., எம்.எஸ்சி., போன்ற முதுநிலை பட்ட வகுப்புகளில் சேர முடியாமல் தவிப்பது பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தவிர்ப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ): மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பதிவாளர் தந்த தகவல்படி பி.பி.ஏ. படிப்பு, தொழிற் சார்ந்த படிப்பாகும் என்றும் இப்படிப்பில் தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடங்களாக இல்லாததால் அவர்கள் முதுகலை மற்றும் முது அறிவியல் படிக்க இயலாது என்றும் அவர்கள் M.B.A. வுக்கு மட்டும் சேர்க்கப்படுகிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

**திரு. இரா. முத்தையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பயிற்றுவிக்கப்படுகிற பல்வேறு பாடங்களில் இந்த பி.பி.ஏ.வும் ஒன்றாகும். பொதுவாக, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பயில்கிற மாணவர்களுடைய தரத்தை, மற்ற பல்கலைக்கழகங்கள் ஒப்பிடுகிறபோது, அவரவர் பல்கலைக்கழகங்களின் மதிப்



1987 நவம்பர் 17]

பெண்களை முதலாவது போட்டுக்கொண்டு, மதுரை காமராசர் பல்கலைக்கழக மாணவர்கள், 90 விழுக்காடுக்கும் அதிகமாகவே மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும் அவர்களைக் கடைசியிலேயே வைத்து மதிப்பீடு செய்வதாக, பல்வேறு மாணவர்களிடமிருந்து புகார்கள் வருகின்றன. இப்படி தமிழகத்திற்குள்ளேயே இருக்கிற பல்கலைக்கழகங்கள் ஒன்றுக்கொன்று தரம் பிரித்துப் பார்த்துக் கொண்டிருப்பதால் பல்வேறு மாணவர்கள் பாதிக்கப் படுகிறார்கள். அந்த நிலையில்லாது, எல்லாப் பல்கலைக் கழகங்களின் மதிப்பெண்களையும் சரிசமமாக மதிப்பிடுகிற தன்மையை உண்டாக்க, அரசாங்கம் பல்கலைக்கழகங்களை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.பி.எ.-வைப் பொறுத்தவரைக்கும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இருக்கின்ற ஒரு பாடத்திட்டமாகும். ஆங்கு மதிப்பீடு செய்கிற பணி அந்தப் பல்கலைக் கழகத்தைச் சேரும், மற்ற பல்கலைக்கழகங்களுக்குத் தொடர்பு இல்லை. ஆனால் எம்.பி.ஏ. என்று வருகிறபோது, மேல்படிப்பு வருகிறபோது, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரைக்கும் அங்குதான் அதிகப்படியான மதிப் பெண்களை மாணவர்கள் பெறக்கூடிய அளவிற்கு நடைமுறையில் அணுகுமுறை இருப்பதாகக் கூறப்படுகிறது. அங்குதான் அவர்கள் 'Valuation should be made stricter' என்ற நிலையை அவர்கள் எடுக்கவேண்டும் என்று மற்ற பல்கலைக் கழகங்கள் கூறிக்கொண்டிருக்கின்றன. துணை வேந்தர்களுடைய மாநாட்டில் இதுகுறித்து பேசப்பட்டது. ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. விரைவில் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப் படும்.

ஆயுள் தண்டனையை குறைத்தல்.

158—(*வினா எண் 15223)—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயுள் தண்டனை என்பதை 10 ஆண்டுகளாக மாற்றி அமைக்க சட்டத் திருத்தம் செய்ய மத்திய அரசை மாநில அரசு கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1987 நவம்பர் 17

திட்டத்தில் திருக்கோவிலூர் பேரூராட்சி.

159—(*வினா எண் 4659)—திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) I.U.D.P. திட்டத்தின் கீழ் திருக்கோவிலூர் பேரூராட்சி சேர்க்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் கீழ் எந்தெந்தப் பணிகள் மேற் கொள்ளப்பட உள்ளன?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) திருக்கோவிலூர் பேரூராட்சியில் ரூபாய் 10 இலட்சம் செலவில் மினி சிறப்பு அங்காடி கட்டுவதற்கு நகர் மற்றும் ஊர மைப்பு வாரியத்தின் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**பெரியகுளம்—தாமரைக்குளம் சாலையில் வீட்டுவசதி வாரிய வீடுகள்.**

160—(*வினா எண் 8023)—டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளம்—தாமரைக்குளம் சாலையில் வீட்டுவசதி வாரியத்தால் சுமார் 58 வீடுகள் கட்டப்பட்டுவரும் பணி தேங்கிக் கிடக்கும் காரணம் யாது?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாமரைக்குளத்தில் 72 குடியிருப்புகள் கட்டும் பணி முடிக்கப்பட்டு தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது.

**டாக்டர் த. முகம்மது சலீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவை நான் ஏறக்குறைய ஓர் ஆண்டுக்கு முன்பு எழுப்பினேன். இப்போது அந்தக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்படிப்பட்ட பலமாடிக் கட்டிடங்கள் பெரியகுளத்தில் இயங்கி வரும் அரசு அலுவலகங்களுக்குத் தேவையாக இருக்கின்ற



1987 நவம்பர் 17]

காரணத்தால், மேலும் இப்படிப்பட்ட கட்டிடங்களை பெரிய குளத்தில் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையின் அடிப்படையில், நிதியாதார வரம்பிற்குட்பட்டு அரசு இதைப் பரிசீலிக்கும்.

**குடிசை மாற்று வாரிய வீடுகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு.**

161—(*வினா எண் 8175) திரு. க. பாரமலை: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசை மாற்று வாரியத்தினால் கட்டுப்படும் வீடுகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எத்தனை சதவீதம் ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன?

(ஆ) அதன்படி சென்னை மற்றும் மதுரையில் தாழ்த்தப் பட்ட மக்களில் எத்தனை பேருக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ): குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்படும் வீடுகள், அந்தப்பகுதியில் ஏற்கெனவே வசித்து வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் உட்பட அனைத்து குடிசைவாசிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. எனவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கென தனியே குறிப்பிட்ட சதவீதம் வீடுகள் ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக ஏற்கெனவே இருந்த குடிசை வீடுகளுக்குப் பதிலாகத்தான் புதிதாகக் கட்டப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகப் புதிதாகக் குடியிருப்புகள் கட்டு கிறபோது அதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று இத்தனை சதவீதம் என்று பிரித்துக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 17

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்றுவாரியம் குடியிருப்புகளைப் புதிதாகக் கட்டுகிறபோது, யார் யார் அந்தப் பகுதியில் குடிசைகளில் வாழ்ந்தார்களோ அவர்களைக் குடியமர்த்தத்தான் குடிசை மாற்று வாரியம் வீடுகளைக் கட்டித் தருகிறது. அப்படிக் கட்டித் தரும்போது ஏற்கெனவே அந்தப் பகுதியில் யார் யார் வாழ்ந்தார்களோ—அவர்கள் ஆதிதிராவிடர்களாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி—அவர்கள்தான் குடிசைமாற்று வாரியத்தால் அங்கே கட்டப்பட்ட புதிய வீடுகளில் குடியமர்த்தப்படுகிறார்கள். தனியாக ஆதிதிராவிடர்களுக்கு இத்தனை சதவீதம் என்று ஒதுக்கீடு இல்லை. அவர்களுக்கு தாட்கோ மூலமாகவும் மற்ற பிற அமைப்புகள் மூலமாகவும் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப்பகுதிகளில் கட்டப்படுகிற குடியிருப்புகள் சொந்தமாக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தப் பணி எப்போது நடைபெறும்? அதற்கான கொள்கை முடிவினை அறிவித்தாகி, பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டாகிவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் பதில் தருகிறேன்.

### திருப்பத்தூர் நகரில் வீட்டுவசதி வாரிய வீடுகள்.

162—(*வினா எண் 9621) **திரு. எஸ். பி. மணவாளன் :** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் நகரில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?



1987 நவம்பர் 17]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிலம் கையகப்படுத்தும் பணி முடிவு பெற்றதும், அந்தப் பகுதியில் வீட்டுவசதி வாரியத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும்.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகள் கட்டுவதற்காக எத்தனை ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்பட்டுள்ளது? பல ஆண்டுகளாக நிலம் கையகப்படுத்து வதில் உள்ள தாமதத்தைப் போக்கி விரைவான நடவடிக்கை மேற் கொள்ள அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருப்பத்தூரில் வீட்டுவசதி வாரியத்தால் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு ஏறக்குறைய ரூ. 40 லட்சம் செலவில் 162 குடியிருப்புகளும், ரூ. 10 லட்சம் செலவில் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு 10 குடியிருப்புகளும், ரூ. 96 இலட்சம் செலவில் அரசு ஊழியர்களுக்கு வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 96 குடியிருப்புகளும் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. இதைத் தவிர தமிழக அரசு ஊழியர்களுக்கு வாடகை வீட்டு வசதி திட்டத்தின் கீழ் ரூ. 90 இலட்சம் செலவில் 66 குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசால் முன்னுரிமை அடிப்படையில் திருப்பத்தூர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்குத் தேவைப்படும் 107 ஏக்கரில் ஏறக்குறைய 96 ஏக்கர் நிலம் வரை இறுதி வரைவு அறிக்கை, அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக் கிறது. இந்த நிலங்கள் வீட்டுவசதி வாரியத்தால் கையகப் படுத்தப்பட்ட உடன், உடனடியாக இந்தப் பணிகள் துவங்கப் படும்.

### கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள்.

163—(*வினா எண் 9664) **திரு. ஆர். ரெங்கசாமி :** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம கூட்டுறவு வீடுகட்டும் சொசைட்டிகள் கிராம மக்களுக்கு கடன் வழங்குவதை நிறுத்தியும் செயல் ஆற்றாமலும் உள்ளன என்பதை அரசு அறியுமா?

[1987 நவம்பர் 17

(ஆ) ஆம் எனில், மீண்டும் செயல்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை தனியே அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை.**

கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் இரு வகை உள்ளது. கிராமப்புறங்களில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு நிதி உதவி செய்வதற்கென தற்போது இயங்கிவரும் 104 வட்ட மற்றும் கோட்ட அளவிலான கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் ஒரு வகை. இச்சங்கங்கள் வாயிலாக கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி திட்டம் செயல்படுத்தப்பட்டு அதன் வாயிலாக 1985-86-ம் ஆண்டு வரை 2,18,106 நபர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காகக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இச்சங்கங்கள் வாயிலாக கிராமிய வீட்டுவசதி திட்டம் மற்றும் பெருமளவு வீட்டுவசதி திட்டம் ஆகியவற்றின் மூலம் 40,000 வீடுகள் கட்டுவதற்குக் கடனுதவி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது இயங்கி வரும் மேற்கூறிய 104 வட்ட மற்றும் கோட்ட அளவிலான சங்கங்கள் தவிர கிராமப்புறங்களில் ஏற்கெனவே 253 கிராமிய வீட்டுவசதி சங்கங்கள் இருந்து வந்துள்ளன. இவை இரண்டாவது வகை சங்கங்கள். இச்சங்கங்கள் கடன் வழங்குவதை நிறுத்தியுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை தற்போது செயலிழந்த நிலையில் உள்ளன.

2. மேற்கூறிய 104 வட்ட/கோட்ட அளவிலான கிராம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் 1978-79 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு தமிழ்நாடு முழுவதிலும் கிராமப்புறங்களில் உள்ள பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு வீடுகள் கட்ட கடனுதவி அளித்து வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் பயன் பெறும் மக்களின் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டும் என்ற நோக்கத்தாலும், கட்டப்படுகின்ற வீடுகள் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும் என்கிற எண்ணத்திலும் ஒவ்வொரு வீட்டின் கட்டிட மதிப்பீட்டு செலவு ரூ. 3,000 ஆக இருக்கவேண்டும் என்று 1979 ஆம் ஆண்டு அரசு முடிவு செய்தது. அதற்கேற்ப பழைய திட்டத்தின்கீழ் வீடு ஒன்றுக்கு ரூ. 10,000 கடன் வழங்கப்பட்டது



1987 நவம்பர் 17]

கைவிடப்பட்டது. இதனால் பழைய கிராமப்புற சங்கங்களும் ரூ. 3,000 அளவுக்கே கடன் வழங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த அளவுக்கு மட்டும் கடன் பெற பொருளாதாரத்தில் நலிவுற்றோர் தவிர மற்றவர்கள் முன்வரவில்லை. பிறகு, நலிந்த பிரிவினருக்கான வீடுகள் 1—7—1980 முதல் ரூ. 3,750 மதிப்பீட்டிலும், 1—1—1982 முதல் ரூ. 4,000 மதிப்பீட்டிலும், 1—4—1983 முதல் ரூ. 6,000 மதிப்பீட்டிலும் கட்டலாம் என்றும், இதற்கான ரூ. 4,500 கடனாக வழங்கலாம் என்றும் மீதி ரூ. 1,500-ஐ பயன் பெறுவோரே முதலீடு செய்ய வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டபோதிலும், பழைய கிராமப்புற சங்கங்கள் கொடுக்கும் கடன் தொகை உயர்த்தப்படவில்லை. இதன் காரணமாக அவைகள் கடன் வழங்குவது நின்றுபோய் அவற்றில் பெரும்பான்மையானவை செயலிழந்துள்ளன. ஒரு சங்கம் நல்ல முறையில் செயல்பட வேண்டுமானால் அதற்கு குறைந்தபட்சம் மாதம் ஒன்றுக்கு நிர்வாகச் செலவு ரூ. 1,000 ஆகும். இந்தத் தொகையை ஈட்ட அச்சங்கம் ஆண்டொன்றுக்கு குறைந்தது ரூ. 10 இலட்சத்திற்குக் கடன் கொடுக்கவேண்டும். பழைய கிராமிய சங்கங்களில் பெரும்பாலானவற்றின் செயல் எல்லை (Jurisdiction) குறுகிய அளவிலேயே இருப்பதால் அவைகள் இந்த அளவுக்கு ஆண்டுதோறும் கடன் வழங்க வாய்ப்புகள் இல்லை. எனவே, இச்சங்கங்கள் வழங்கக்கூடிய கடன் அளவை உயர்த்தி அவற்றை நல்ல முறையில் செயல்படவைக்கும் வாய்ப்புகள் இல்லை. தற்போது நகர்ப்புறங்களில் செயல்படும் வீட்டுவசதி சங்கங்கள் எல்லா வருமானப்பிரிவு மக்களுக்கும் வீடுகள் கட்ட கடன் உதவி அளித்து வருகின்றன. கிராமப்புறங்களில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மக்கள் தவிர வேறு பிரிவினருக்கும் கடன் வழங்க ஏற்படுத்தப்பட்ட சங்கங்கள் செயல்படவில்லை. இந்த நிலைமையை மாற்ற வட்டத்திற்கு ஒரு சங்கம் இருக்க வேண்டும் என்கிற நோக்கத்தில் தற்போது இயங்கி வரும் 104 வட்ட மற்றும் கோட்ட அளவிலான சங்கங்கள் தவிர மேற்கொண்டு 64 சங்கங்கள் ஏற்படுத்தி அவற்றின் மூலம் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மக்கள் தவிர, இதர பிரிவினருக்கு வீடுகள் கட்ட கடனுதவி செய்ய ஏற்பாடு செய்யலாம் என்கிற கருத்தும், அப்போது பழைய கிராமிய சங்கங்களை இவற்றுடன் இணைத்து விடலாம் என்கிற கருத்தும், பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு கடனுதவி அளிக்க தனியே ஒரு நிறுவனம் அமைக்கலாம் என்கிற கருத்தும் அரசின் பரிசீலனையில் உள்ளன.

[1987 நவம்பர் 17

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கிராமக்கூட்டுறவு வீடுகட்டும் சொசைடிகள் மூலம் ரூ. 6,000 தான் கடனாக வழங்கப்படுகிறது. இது போதாது என்பதால் இதை உயர்த்தி ரூ. 10,000 கடனாகக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் உள்ள உச்ச வரம்பு—ரூ. 6,000-த்தை ரூ. 10,000 ஆக அல்ல—ரூ. 8,000 ஆக உயர்த்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கிராமக் கூட்டுறவு வீடுகட்டும் சொசைடிகள் மூலம் மாதம் ஒன்றுக்கு 5 அல்லது 6 பேருக்குத்தான் கடன் தரப்படுகிறது. அதை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருப்பதைப்போல் வட்ட மற்றும் கோட்ட அளவில் ஏறக்குறைய 104 சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. 1978-79 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டவை இவை. ஏற்கெனவே 253 கிராமிய வீட்டுவசதி சங்கங்கள் இருந்து வந்துள்ளன. இவைகளின் மூலம் ரூ. 3,000 கடனாக வழங்கப்பட்டது. ஆனால் அதற்குப் போதிய அளவு விண்ணப்பங்கள் வருவதில்லை என்பதால் இந்தச் சங்கங்கள் ஏறக்குறைய செயல்பாடு இழந்த நிலையில் இருக்கின்றன. எனவே வட்ட மற்றும் கோட்ட அளவிலான 104 சங்கங்களைத் தவிர, மேலும் 64 வட்டங்களில் புதிதாக சங்கங்களை ஆரம்பிக்க அரசு பரிசீலித்து வருகிறது. அது முடிந்ததற்குப் பிறகு தாராளமாகக் கடன் வழங்குகிற பணிகள் நடக்கும்.

**செல்வபுரம் வீட்டுவசதி வாரிய வீடுகள்.**

164—(*வினா எண் 10194) திரு. கு. ரமணி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரம், செல்வபுரத்தில் வீட்டுவசதி வாரிய வீடுகளில் குடியிருப்பவர்கள் பலர் அடித்தளத்தில் உள்ள



1987 நவம்பர் 17]

வீடுகளைச் சுற்றி குடிசைகளைக் கட்டி பயன்படுத்துவதும், வாடகைக்கு விடுவதும் ஆன சட்ட விரோத நடவடிக்கைகள் நடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை தடுத்து அங்கு சுகாதாரத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கோவை மாநகரம், செல்வபுரத்தில் வீட்டுவசதி வாரிய வீடுகளில் குடியிருப்பவர்களில் அடித்தளத்தில் உள்ள வீடுகளைச் சுற்றி குடிசைகளைக் கட்டி பயன்படுத்துபவர்கள் மீது உரிய மேல்நடவடிக்கை அவ்வப்போது வீட்டுவசதி வாரியத்தால் எடுக்கப்பட்டு அப்புறப்படுத்தப்படுகிறது.

(ஆ) அங்கு சுகாதாரத்தை பாதுகாக்கும் நடவடிக்கையும் வீட்டுவசதி வாரியத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு அப்புறப்படுத்தப்படுகிறது என்று தெரிவித்தார்கள். ஒவ்வொரு பகுதியிலும் அந்த வீடுகளைச் சுற்றிலும் கட்டப்பட்டுள்ள குடிசைகளின் பட்டியலை நான் தருகிறேன். உண்மையிலேயே அதிகாரிகள் போய்ப் பார்த்து நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் புதிய, புதிய குடிசைகள் தோன்றாது. குடிசை மாற்று வாரியம் என்று வைத்து வீடுகளைக் கட்டிவிட்ட பிறகு அந்த வீடுகளைச் சுற்றிலும் மறுபடியும் குடிசைகள் உருவானால், அதற்காக டபுள் குடிசை மாற்று குடிசைகள் உருவானால், அதற்காக டபுள் குடிசை மாற்று வாரியத்தை நம்மால் உருவாக்க முடியாது. ஆகவே, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அடித்தளத்திலே உள்ள அத்தனை பேரும் செய்யும் சுகாதாரக் கேடுகளை முழுதும் அப்புறப்படுத்த என்னென்ன நடவடிக்கைகளை தீவிரமாக எடுக்க முடியுமோ அதை முனைப்பாக எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைகளை மாற்றி வீடுகளைக் கட்டித் தரும் நோக்கத்திலேதான் அடுக்கு மாடி வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பகுதியில் 56

இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 225 குடியிருப்புகள்; மற்றும் வடக்கு பேசூர் சாலையில் 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1358 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் அடித்தளத்தில் குடியிருப்பவர்கள் அந்த வீட்டிற்குப் பின்னால் குடிசைகளைப் போட்டிருப்பது வாரியத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு அவ்வப்போது அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று தகவல் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அந்தக் குடிசைகள் அகற்றப்படாமல் இருப்பதாகச் சொல்கிறார்கள். இன்னும் அதைப்போல கூரைகள் போடப்பட்ட இணைப்புகள் இருக்குமானால் அவற்றை அப்புறப்படுத்த வீட்டு வசதி வாரியத்திற்கு தாக்கீது அனுப்பப்படும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தக் குடிசைகளைக் கட்டியுள்ள சொந்தக்காரர்கள் அதை வாடகைக்கும் விட்டு இருக்கிறார்கள். மேலும் சிலர் கடைகளை வைத்து வியாபாரம் செய்கிறார்கள். மிக மோசமான வியாபாரம் நடக்கிறது. கள்ளச்சாராயம் வியாபாரம் அங்கே நடக்கிறது. கழிவுப் பொருள்களைக் கொண்டு வந்து வைத்து அவற்றை எரிபொருளாக மாற்றி வியாபாரம் செய்கிறார்கள். இதனால் சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன. ஆகவே அருள்கூர்ந்து அமைச்சர் அவர்கள் அங்குள்ள மாநகராட்சியினுடைய சுகாதார இலாக்காவிற்கு தாக்கீது கொடுத்து, அது மாதிரி போலீஸ் இலாக்காவிற்கும் தாக்கீது கொடுத்து விசேஷ கவனம் செலுத்தி இப்படிப்பட்ட காரியங்கள் நடக்காமல் இருக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னது போல ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள அடுக்கு மாடிக்கட்டிடத்தின் அடித்தளத்தில் உள்ளவர்கள் மேலும் கூரைகளைப் போடுவது தவறாகும். அவர்கள் தங்களுக்காக சொந்தமாக அதை உபயோகப்படுத்தினாலும் தவறு, வாடகைக்கு விட்டாலும் தவறு, கடைகளை நடத்தினாலும் தவறு. அவர்கள் நல்ல முறையில் வியாபாரம் செய்தாலும் தவறு, கெட்ட முறையில் வியாபாரம் செய்தாலும் தவறுதான். ஆகவே அப்படி கட்டப்



பட்டுள்ள இணைப்புகளை அகற்ற மாண்புமிகு உறுப்பினர் சொன்ன வகையிலே நடவடிக்கை எடுக்க வாரியத்திற்கு ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றாலும் ஒன்று கேட்க விரும்புகிறேன். தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் சார்பாக எல்.ஐ.சி.-யிடம் 15 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். ஆகஸ்ட் மாதத்தில் 7.5 கோடி ரூபாய் தர வேண்டும். ஆனால் அய்யனாவரத்தில் வீடு கட்டுவதற்காக அங்குள்ள கூட்டுறவுச் சங்கம் கையகப்படுத்தியிருக்கிற நிலத்தை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமும் கையகப்படுத்தியிருப்பதால் அந்த கூட்டுறவுச் சங்கத்திற்கு எல்.ஐ.சி. மூலமாக கடன் தரப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அவர்களும் வீடு கட்டத்தான் நிலத்தை கையகப்படுத்தியிருக்கிறார்கள். நாமும் வீடு கட்டுவதற்காகத் தான் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் நிலத்தை கையகப்படுத்துகிறோம். ஆகவே அந்த நிலத்தில் வீடுகட்ட எல்.ஐ.சி. கடன் கொடுத்து தமிழகத்திலே உள்ள கிட்டத்தட்ட 300-க்கு அதிகமான நகர கூட்டுறவுச் சங்கங்கள் பயன் அடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல எல்.ஐ.சி. சங்கங்களுக்கு கடன் தருகிற அமைப் தம்முடைய கூட்டுறவுச் பணியாற்றுகிற ஊழியர்களுக்காக வீடு பாகும். எல்.ஐ.சி.-யில் வாங்கியிருக்கிறார்கள். அதற்கு கட்டுவதற்காக அந்த நிலத்தை வாங்கியிருக்கிறார்கள். அதற்கு முன்பே வீட்டுவசதி வாரியத்தால் அந்த நிலம் ஆர்ஜிதம் செய்யப் பட்டு வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து விதிவிலக்கு வேண்டுமென்று எல்.ஐ.சி. சார்பிலே கேட்டிருக்கிறார்கள். அரசின் சார்பிலே அது தனியாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதற்காக அதைக் கொடுத்தால்தான் கடன் தருவோம் என்று அவர்கள் சொல்ல முடியாது, சொல்லவும் கூடாது. அது தவறாகும். கடன் எல்லா மாநிலங்களுக்கும் வழங்கப்படுகிறது.

[illegible]

[1987 நவம்பர் 17

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு:** நம்முடைய மாநிலத்திற்கு கடன் வழங்கவேண்டிய அந்தப் பணி எல்.ஐ.சி.க்கு உண்டு. எனவே அது வேறு பிரச்சினை, இது வேறு பிரச்சினை. இருந்தாலும் இரண்டையும் அரசு பரிசீலிக்கிறது. இந்த இரண்டிலும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை செல்வபுரத்திலே உள்ள பிரச்சினைகள் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். அந்தப் பகுதியிலே வீட்டுவசதி வாரியத்தினால் விடப்பட்டிருக்கும் ரிசர்வ் சைட்லே நூற்றுக்கணக்கான குடிசைகள் போடப்பட்டு பல ஆண்டுகளாகியிருகின்றன. அவைகளிலே ஒரு குடிசையைக்கூட அதிகாரிகள் அகற்றவில்லை. அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே உள்ள வீட்டுவசதி வாரியக் கட்டிடங்களில் கழிப்பிடங்கள், செப்டிக் டேங்க் நாற்றமடிக்கின்ற நிலையில் இருக்கின்றன சுகாதாரமற்ற கேடுற்ற நிலைமையில் இருக்கின்றன. அங்கு பல வீடுகள் பழுதடைந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் அரசு செப்பனிடுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய குறைபாடுகளைக் களைய வீட்டுவசதி வாரியத்திற்கு தக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்கப்படும்.

### இலவச காது கேட்கும் கருவிகள்.

165—(*வினா எண் 633) **திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1985 ஆம் ஆண்டில் காதுகேளாத குழந்தைகள் இதர்களுக்கு இலவச காது கேட்கும் கருவி எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் எத்தனை பேருக்கு வழங்க அரசு திட்டமிடப்பட்டுள்ளது?



1987 நவம்பர் 17]

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 41.68 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 10,415 நபர்களுக்கு இலவசக் காது கேட்கும் கருவிகள் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காது கேட்கும் கருவிகள் இலவசமாக வாங்குவதற்கு என்ன தகுதிகள் இருக்க வேண்டும்? இந்த முகாம் எங்கெங்கே நடக்கிறது என்று சரியான முறையில் சமூகநலத் துறையில் விளம்பரம் இல்லை. அதை நல்லமுறையில் விளம்பரப்படுத்தி இந்த காது கேட்கும் கருவிகள் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா? வெளி மார்க்கெட்டில் சுமார் ரூ. 600, ரூ. 900, ரூ. 2,000 வரையில் விலைக்கு விற்கிறது. சின்னக் கருவிதான். இந்தக் கருவியை அரசு ஒரு நிறுவனத்தின் மூலமாகத் தயாரித்து குறைந்த விலைக்குக் கிடைக்க வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காதொலிக் கருவிகளை இலவசமாகப் பெறுவதற்கு கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். முழுமையாக அல்லது அரைகுறையாக காது கேளாத அனைவரும் அந்த காதொலிக் கருவியைப் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் ஆகின்றார்கள். இரண்டாவது, வல்லுநரின் மதிப்பீட்டின்படி விண்ணப்பதாரருக்கு காது கேளாத நிலை இருக்கிறது, அவருக்குக் காது கேட்கும் கருவி பொருத்தப்பட வேண்டும் என்று ஒரு ஆய்வு அறிக்கையைப் பெறவேண்டும். மூன்றாவது, விண்ணப்பதாரர் காதொலிக் கருவியை ஏற்கெனவே உபயோகப்படுத்தக்கூடிய நிலையில் இருந்து காதொலிக் கருவியைப் பெற்றவராக இருக்கக்கூடாது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இதர திட்டங்களில் காது ஒலிக் கருவி பெற்றவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் இலவசமாக காதொலிக் கருவி பெற இயலாது. மனுதாரரோ அல்லது மனுதாரருடைய பெற்றோர் அல்லது பாதுகாவலருடைய மாத வருமானம் ரூபாய் ஆயிரத்திற்கு மேற்படாமல் இருக்க வேண்டும். பள்ளி செல்லும் குழந்தைகளுக்கும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கும் முன் உரிமை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்கு இலவசமாகக் காதொலிக் கருவிகள் வழங்க

[1987 நவம்பர் 17

வேண்டும் என்று நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக இந்த காதொலிக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. வெளிசந்தையில் ஒவ்வொரு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் அவரவர்களுடைய விலையில் விற்றுக்கொண்டிருக்கின்றார்கள். நாம் காதொலிக் கருவியைத் தயாரித்து விற்பது என்பது அவ்வளவு முடியாத காரியம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்த எண்ணம் பரிசீலிக்கப்படும்.

**சத்துணவு மையங்களை நர்சரி பள்ளிகளாக மாற்றல்.**

166—(*வினா எண் 13398) திரு. க. சோலைராசு மற்றும் திரு. மா. சின்னராசு : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவு மையங்களை நர்சரி பள்ளிகளாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அப்போது அமைப்பாளர்கள் அரசு ஊழியராக அறிவிக்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 2—4 வயதான குழந்தைகளுக்கென இயங்கி வரும் 23,366 முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்ட மையங்களில் 19,140 மையங்கள் நர்சரி பள்ளிகளாக ஏற்கனவே மாற்றப்பட்டு செயல்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் (1987-88), மேலும் 3,500 குழந்தைகள் நல மையங்களை நர்சரி பள்ளிகளாக மாற்ற ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) நர்சரி வகுப்பினை நடத்துவதற்கு அமைப்பாளர்களுக்கு பள்ளிக்கல்வி துறையால் தேர்வு செய்யப்பட்ட ஆதாரப் பயிற்சியாளர்களைக் (Key Resource persons) கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் நர்சரி பள்ளிகளாக மாற்றப்பட்ட 3,500 மையங்களில், அமைப்பாளர்களுக்குப் பயிற்சி மேற்கொள்ளப்பட இருக்கிறது. அமைப்பாளர்களை முழு நேர அரசு ஊழியர்களாக அறிவிக்கும் செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.



1987 நவம்பர் 17]

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களின் குழந்தைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து அமைப்பாளர்களின் எண்ணிக்கையை கூடுதலாக்கவும், பாட முறையைத் திருத்தியமைத்து சிறந்த முறையில் குழந்தைகளுக்கு பாடங்களைச் சொல்லிக்கொடுப்பதற்கும், வணிக நோக்கோடு நடத்தப்படுகின்ற நர்சரிப் பள்ளிகளைத் தடை செய்யவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக நோக்கோடு நடத்தப்படுகின்ற நர்சரிப் பள்ளிகளைத் தடை செய்ய வேண்டிய தேவையில்லை. நமது தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இதை எல்லாம் கருத்தில்கொண்டுதான் நல்லமுறையில் திட்டத்தினைத் தீட்டியுள்ளார்கள். அந்த வகையில் கிராமப்புறங்களில் இயங்குகின்ற சத்துணவுக் கூடங்கள் எல்லாம் கல்வி சத்துணவுக் கூடங்களாக, நர்சரி கூடங்களாக இன்றையதினம் செயல்படுகின்றன. அந்தவகையில் காலப் போக்கில் தனியார் நர்சரிப் பள்ளிகளில் குழந்தைகள் சேர்கின்ற தன்மை குறைந்துவிடும். தற்போது நர்சரிப் பள்ளிகளில் என்ன பாடத் திட்டமோ அதற்குக் குறைவு இல்லாமல் சத்துணவு மையங்கள் நர்சரிப் பள்ளிகளாக இன்றையதினம் மாற்றப்பட்டு வருகின்றன. குழந்தைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவது இல்லை. காரணம் இப்போது இருக்கிற அமைப்பாளர்களே குழந்தைகளை நல்ல முறையில் பராமரிக்கிறார்கள்.

திரு. ஆர். நல்லான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களுக்கு சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களும் சரியான முறையில் குழந்தைகள் போவதில்லை. இதை அரசு அறியுமா? அதோடு வாரம் இரண்டு முறை முட்டை, கறி கொடுக்கப்படுமோ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானே பல சத்துணவு கூடங்களுக்கு நேரடியாகப் போய்ப் பார்த்திருக்கிறேன். நகர்ப்புறங்களில் வேண்டுமானால் சனி, ஞாயிறு தினங்களில் குழந்தைகள் அதிகமாக வராமல் இருக்கலாம். ஆனால் கிராமப்புறங்களில்,

[1987 நவம்பர் 17

எல்லா நாட்களிலும் சத்துணவுக் கூடத்திற்கு சரியாக வருகிறார்கள். இங்கே முட்டை, கறி வழங்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். முட்டையிலும், கறியிலும் இருக்கிற சத்தை விட அதிகமான சத்து காய்கறியில் இருக்கிறது என்பதை உணர்ந்துதான் காய்கறி வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### உலக வங்கி உதவியுடன் சத்துணவுத் திட்டம்.

167—(*வினா எண் 14025) திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 400 கோடி ரூபாய் திட்டத்தில் உலக வங்கி உதவியுடன் சத்துணவுத் திட்டம் எப்போது செயல்படும்?

(ஆ) விரிவாக்கத்தினால் ஏற்படும் பலன்கள் யாவை?

(இ) இந்தத் திட்டத்தினால் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு ஏற்படும் வாய்ப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தையும், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தையும் இணைத்து இம்மாநிலத்தில் "ஒருங்கிணைந்த குழந்தைகள் நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்" என்ற பெயரில் செயல்படுத்த கருத்துரு பரிசிலனையில் உள்ளது. அக்கருத்துரு இறுதியாக்கப்பட்டபின் உலக வங்கிக்கு அனுப்பி ஒப்புதல் பெற்றபின் செயல்படத் துவங்கும்.

(ஆ) தற்போது பயன்பெறும் 2 முதல் 4 வயது வரையுள்ள குழந்தைகளோடு இத்திட்டத்தினால் 6 மாதம் முதல் 24 மாதம் வரையிலான குழந்தைகளுக்கும் மற்றும் கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சிறப்பு இணை உணவும் மற்றும் எல்லா சுகாதார சேவைகளும் அளிக்கப்படும்.

(இ) இத்திட்டத்தினால் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது.



1987 நவம்பர் 17]

### நெடுஞ்சாலைகளில் சோதனைச் சாவடிகள்.

168—(*வினா எண் 14009) திரு. த. பழனி: மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில் பூந்தமல்லி, இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி ஆகிய சோதனைச் சாவடிகளில் லாரிகள் நிற்பதினால் ஏற்படும் இடைஞ்சலைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய சோதனைச் சாவடி அமைந்துள்ள இடங்களில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும், விரைவு நடவடிக்கை மேற்கொள்ளவும், இருவழி வண்டிகளுக்கு தனித் தனியாகச் சோதனைச் சாவடிகள் அமைப்பது அவசியமென்று உணரப்பட்டு படிப்படியாக இருவழிச் சோதனைச் சாவடிகள் அமைப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

1986-87 ஆம் ஆண்டுக்கான பகுதி II திட்டத்தின் கீழ் ஆணை வழங்கப்பட்டு இருவழிச் சோதனைச் சாவடிகள் 2-7-1986 முதல் பூவிருந்தவல்லியிலும், ஓசூரிலும் (கிருஷ்ணகிரி) இயங்கி வருகின்றன.

1986-87 ஆம் ஆண்டுக்கான பகுதி II திட்டத்தின்கீழ் ஆணைபேட்டையில் இருவழிச் சோதனைச் சாவடி அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

### அரசுக்குக் கிடைத்த வணிகவரி.

169—(*வினா எண் 14311) திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985-86, 1986-87 ஆம் ஆண்டுகளில் தமிழக அரசுக்குக் கிடைத்த வணிகவரி எவ்வளவு?

(ஆ) கூடுதல் வரி எவ்வளவு?

**மாண்புமிகு திரு. கு. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசுக்குக் கிடைத்த வணிகவரி—

1985-86-ல் ரூ. 1,035.13 கோடி.
1986-87-ல் ரூ. 1,172.44 கோடி.

(ஆ) கூடுதல் வணிக வரி—

1985-86-ல் ரூ. 99.11 கோடி.

1986-87-ல் ரூ. 105.22 கோடி.

**அரிச்சந்திரா நதியில் படுக்கை அணை.**

170—(*வினா எண் 11909)—**திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தலைஞாயிறு பகுதியில் அரிச்சந்திரா நதியில் ஒரு பெட் டேம் (Bed Dam) கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது அரசின் பரிசீலனையில் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**அணைக்கரை கொள்ளிடத்தில் புதிய கால்வாய் வெட்டுதல்.**

171—(*வினா எண் 12061) **திரு. மு. இராசாங்கம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தாலுக்கா அணைக்கரை கொள்ளிடத்தில் இருந்து புதிய கால்வாய் வெட்டி மண்ணியாற்றில் இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தாலுக்கா அணைக்கரை கொள்ளிடத்திலிருந்து புதிய கால்வாய் வெட்டி மண்ணியாற்றில் இணைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.





**வைகை பெரியார் மேம்பாட்டுத் திட்டம்.**

172—(*வினா எண் 13979) **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வைகை பெரியார் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நிலக்கோட்டை தொகுதி, வத்தலகுண்டு, நிலக்கோட்டை போன்ற வறண்ட பகுதிகளுக்கு 3 ஆயிரம் ஏக்கர்களுக்கு பாசன வசதி அளிக்கவும் அதற்காகும் செலவுத் தொகை ரூபாய் 4 கோடி ஒதுக்கியதாக உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**விருத்தாசலம் தாலுகாவில் ஏரி, குளம், ஆறு, வாய்க்கால் இவைகளை ஆழப்படுத்துதல்.**

173—(*வினா எண் 14396) **திரு. ஆர். தியாகராசன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென் ஆற்காடு மாவட்டம், விருத்தாசலம் தாலுக்காவில் ஏரி, குளம், ஆறு, வாய்க்கால் இவைகளை ஆழப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விருத்தாசலம் வட்டத்திலுள்ள ஏரி, குளம், ஆறு மற்றும் வாய்க்கால் இவைகளின் தேவைக்கும், நிலைமைக்கும் நிதி ஒதுக்கீட்டிற்கும் ஏற்ப பராமரிப்பு நிதியிலிருந்து ஆழப்படுத்தி பராமரிக்க நடவடிக்கை அவ்வப்போது எடுக்கப்பட்டு வருகிறது.

[1987 நவம்பர் 17

**செருக்கனூர் ஏரிக்கரையை அகலப்படுத்துதல்.**

174—(*வினா எண் 14727) **திரு. பூ. மு. நரசிம்மன்** : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம், திருத்தணி வட்டம், செருக்கனூர் ஏரிக்கரையை அகலப்படுத்த அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.**

**1985 ஆம் ஆண்டு சிங்கப்பூர்—சென்னைக்கு வந்த சிதம்பரம் கப்பலில் தீ விபத்தினால் இறந்தவர்கள்.**

1—வினா 80—**திரு. இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சிதம்பரம் கப்பலில் சிங்கப்பூரில் இருந்து சென்னை வரும்போது தீ பிடித்து இறந்தவர்களின் எண்ணிக்கை என்ன?

(ஆ) இறந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிதியில் இருந்து கொடுத்த உதவித் தொகை எவ்வளவு?

**விடை—**

(அ) இத் தீ விபத்தில் மொத்தம் 43 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 24 பேர் இந்திய வம்சாவழியினர், 18 பேர் மலேசியா நாட்டைச் சேர்ந்தவர்கள், மற்றுமொருவர் சிங்கப்பூரைச் சேர்ந்தவர்.

(ஆ) இதை ஒரு தனி நேர்வாகக் கருதி விபத்தில் உயிரிழந்தவர் எந்நாட்டைச் சேர்ந்தவராயிருந்தாலும், அவருடைய குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவையொட்டி, " உயிரிழந்த 43 நபர்களின் குடும்பத்திற்கு தலா ரூ. 5,000 வீதம் மொத்தம் ரூ. 2,15,000 முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.



1987 நவம்பர் 17]

**முதியோர் உதவித் தொகை பெறும் நபர்கள்.**

2—வினா 2464—**திரு. எஸ். இராசாராமன்** : மாண்புமிகு சத்துணவு சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதியோர் உதவித் தொகை பெறும் நபர்களின் எண்ணிக்கை எவ்வளவு? மாவட்டவாரியாக.

(ஆ) உதவித் தொகை கோரி 1984-85 ஆம் ஆண்டு வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை, மாவட்டவாரியாக?

விடை—

(அ) முதியோர் உதவித் தொகை பெறும் நபர்களின் எண்ணிக்கை 15—7—1986 வரை).

| | |
|---|---|
| 1. சென்னை | 11,748 |
| 2. செங்கல்பட்டு | 19,329 |
| 3. வட ஆற்காடு | 25,154 |
| 4. தென் ஆற்காடு | 27,649 |
| 5. தஞ்சாவூர் | 35,472 |
| 6. திருச்சிராப்பள்ளி | 19,605 |
| 7. புதுக்கோட்டை | 11,335 |
| 8. மதுரை | 27,543 |
| 9. அண்ணா | 9,604 |
| 10. இராமநாதபுரம் | 6,878 |
| 11. காமராசர் | 9,093 |
| 12. பசும்பொன் முத்துராமலிங்கம் | 6,886 |
| 13. திருநெல்வேலி | 17,913 |
| 14. சேலம் | 30,403 |
| 15. பெரியார் | 9,060 |
| 16. கோயம்புத்தூர் | 12,969 |
| 17. தருமபுரி | 12,036 |
| 18. நீலகிரி | 1,950 |
| 19. கன்னியாகுமரி | 5,274 |
| | 2,99,901 |

[1987 நவம்பர் 17

(ஆ) 1984-85 ஆம் ஆண்டு முதியோர் உதவித் தொகை கேட்டு வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக.

| மாவட்டம் | எண்ணிக்கை. |
| --- | --- |
| 1. சென்னை | 9,882 |
| 2. செங்கற்பட்டு | 15,337 |
| 3. வட ஆற்காடு | 13,469 |
| 4. தென் ஆற்காடு | 26,779 |
| 5. தஞ்சாவூர் | 20,419 |
| 6. திருச்சிராப்பள்ளி | 12,676 |
| 7. புதுக்கோட்டை | 3,360 |
| 8. மதுரை (அண்ணா மாவட்டம் உள்பட) | 24,691 |
| 9. இராமநாதபுரம் | 2,141 |
| 10. காமராசர் | 4,000 |
| 11. பசும்பொன் முத்துராமலிங்கம் | 2,590 |
| 12. திருநெல்வேலி | 7,363 |
| 13. சேலம் | 12,073 |
| 14. பெரியார் | 3,557 |
| 15. கோயம்புத்தூர் | 4,114 |
| 16. தருமபுரி | 2,570 |
| 17. நீலகிரி | 1,459 |
| 18. கன்னியாகுமரி | 2,952 |
| மொத்த விண்ணப்பங்கள் | 1,69,937 |

முதியோர் உதவித் தொகை கேட்டு வந்த விண்ணப்பங்கள் 1,69,937.

**கட்டயத்தேவன்பட்டி கிராமத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம்.**

3—வினா 96—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி மூவரைவென்றான் கிராமம் கட்டயத்தேவன்பட்டி கிராமத்தில் உள்ள பொது மக்களுக்கு எந்த ஆண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் தீட்டப்பட்டுள்ளது?



1987 நவம்பர் 17]

(ஆ) இந்த குடிநீரை அருந்தினால் பொது மக்களுக்கு வாந்தி, மயக்கம், வயிற்றோட்டம் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், இந்தத் திட்டம் சீர்திருத்தி அமைக்கப்படுமா?

விடை—

(அ) வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம் மூவரைவென்றான் ஊராட்சியைச் சார்ந்த கட்டயத்தேவன்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, 24—1—1974 முதல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) மேற்படி மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியிலிருந்து வரும் தண்ணீரை அருந்துவதால் வயிற்றோட்டம், வாந்தி, பேதி, மயக்கம் போன்றவை ஏற்படுவதாக புகார் ஏதும் வரவில்லை.

(இ) தற்போது வாரியம் மேற்கொண்டிருக்கும் மறு ஆய்வின்படி, இக்கிராமம் வகை 3-க்கு மாற்றப்பட தகுதி பெற்றால் இதற்கான குடிநீர் திட்டம் மேற்கொள்ளப்படும்.

**சென்னை உயர்நீதி மன்றத்தின் பிரிவு வேறு நகரத்தில் அமைக்கும் திட்டம்.**

4—வினா 206—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உயர்நீதிமன்றத்தின் (Circuit Bench) பிரிவு மாநிலத்தில் வேறு நகரத்தில் வைக்கும் திட்டம் ஏதுவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கே துவக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இம்மாநிலத்தின் தென்பகுதி வட்டாரத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக. ஒரு கிளை நீதி ஆயத்தையோ (Bench) அல்லது குறைந்தபட்சம் உயர்

[1987 நவம்பர் 17

நீதிமன்றத்தின் ஒரு முகாம் நீதிமன்றத்தையோ மதுரையில் நிறுவுகின்ற கருத்துருவை மேற்கொள்ளுமாறு 1973 ஆம் ஆண்டிலிருந்தே தமிழக அரசு மைய அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்துள்ளது. தமிழக அரசின் இக்கோரிக்கையை மைய அரசு இன்னும் அங்கீகரிக்கவில்லை. மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி.

5—வினா 211—**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1983-84, 1984-85 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவு?

(ஆ) ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் செலவழிக்கப்பட்டு விட்டதா?

விடை—

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு 1983-84 ஆண்டுக்காக ரூ. 613.03 லட்சங்களும், 1984-85 ஆண்டுக்காக ரூ. 956.80 லட்சங்களும் மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(ஆ) 1983-84 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகம் செலவழித்த தொகை ரூ. 902.29 லட்சமாகும். 1984-85 ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகம் செலவழித்த தொகை ரூ. 1,038.47 லட்சங்கள். அரசு ஒதுக்கீடு செய்த மானியத் தொகையை விட அதிகம் செலவழித்த தொகை பல்கலைக் கழகத்திற்கு வந்த வரவிலிருந்து சரிக்கட்டப்பட்டுள்ளது.



1987 நவம்பர் 17]

## கால்நடை உதவி மருத்துவர்களுக்கு அதிகாரம்.

6—வினா 4267—**திரு. க. வெ. வீரானம்பலம்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் "ஆடு அடிதொட்டியில்" அடிக்கும் ஆடு மாடுகளை தற்போது நடைமுறையில் உள்ளதுபோல் நோய் உள்ள ஆடுகள், மாடுகள் மற்றும் தகுதியில்லாத புலால்களை சுகாதார ஆய்வாளர்களால் ஒதுக்கும் அல்லது அழிக்கும் அதிகாரம் புலால் ஆய்வு செய்யும் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அரசு ஆணை பிறப்பிக்கும்? விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) சென்னை நகர அடித் தொட்டிகளை பொறுத்தவரையில் தமிழ்நாடு இறைச்சி கழகத்தை சார்ந்த கால்நடை உதவி மருத்துவர்கள் அடிப்பதற்காக அனுப்பப்படுகின்ற கால்நடைகளை ஆய்வு செய்து நோய்வாய்ப்பட்ட கால்நடைகளை அடிப்பதைத் தடுக்கிறார்கள்.

மதுரை மாநகராட்சி சட்டப் பிரிவு 395-ல் ஆணையாளரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்படுபவரோ ஆடு, மாடு அடி தொட்டியை எந்த நேரமும் பார்வையிடலாமென்றும், பிரிவு 397-ன்படி உணவுக்கென வைக்கப்பட்டுள்ள பிராணிகள் நோயுற்றிருந்தால் அவற்றைப் பறிமுதல் செய்து பிரிவு 399-ன்படி அழிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பிரிவின்கீழ் தகுதி இல்லாத புலால்களையும் அழிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாநகராட்சியில் பணியாற்றும் கால்நடை உதவி மருத்துவருக்கு இந்தப் பிரிவுகளின்கீழ் நடவடிக்கை எடுக்க ஆணையாளர், மதுரை மாநகராட்சி, அவர்கள் அதிகாரம் வழங்கினாலே போதுமானது.

கோவை மாநகராட்சி பொது சுகாதார இலாக்காவில் தகுதியுள்ள கால்நடை மருத்துவ அலுவலர் உள்ளார். அவர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள ஆடு மற்றும் மாடு அறுவை

மனைகளை அன்றாடம் மேற்பார்வையிடுகிறார். மாநகராட்சி ஏல விதிகளின்படி அறுவை மனைகளில் வதை செய்ய கொண்டு வரும் பிராணிகள் மாநகராட்சி கால்நடை மருத்துவ அலுவலரால் பார்வையிட்டு ஒப்புக் கொள்ளப்பட்ட பிராணிகளையே வதை செய்ய வேண்டும். ஒப்புக்கொள்ளப்படாத ஆடு, மாடு போன்ற பிராணிகளை வதை செய்ய அனுமதிக்கக் கூடாது என்ற விதி உள்ளது.

### தமிழ்நாட்டில் நடந்துள்ள முகமூடி கொள்ளைகள்.

7—வினா 256—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகமூடி கொள்ளை இதுவரை எத்தனை நடந்துள்ளது?

(ஆ) அதில் உயிர் சேதம் எவ்வளவு?

(இ) கண்டுபிடிக்க முடியாமல் உள்ள வழக்குகள் எத்தனை?

விடை—

(அ) (1) தமிழ்நாட்டில் 1983 ஆம் ஆண்டில் 7 முகமூடி கொள்ளைகளும்,

(2) 1984 ஆம் ஆண்டில் 6-ம்,

(3) 1985-ல் இரண்டும், ஆக மொத்தம் 15 சம்பவங்கள் நடந்துள்ளன.

(ஆ) இச்சம்பவங்களில் 1984-ல் ஓய்வு பெற்ற தமிழ்நாடு சிறப்புக் காவல் படை தளவாய் திரு. சந்திரா என்பவர் முகமூடி கொள்ளையர் தாக்குதலில் பரிதாபமுற்று பின்னர் மருத்துவ மனையில் மரணமுற்றார்.

(இ) இவ்விரு வருடங்களில் நடந்த 13 முகமூடிக் கொள்ளைகளிலும் குற்றவாளிகள் டில்லியைச் சேர்ந்த சான்ஸி கொள்ளைக் கூட்டத்தினர் என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இக்கொள்ளையில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இக்கொள்ளையர் தலைவன் லட்சுமணன் சிங் இன்னும் தலைமறைவில் உள்ளார். திருட்டுப் பொருட்கள் அனைத்தும் தலைவர் லட்சுமணன் சின் வசமுள்ளதால் பொருட்கள் இன்னமும் மீட்கப்பட ...



அக்கொள்ளையர் தலைவனை கைது செய்து களவாடப்பட்ட பொருட்களையும் மீட்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

### நெய்வேலியில் இரண்டாவது மின் நிலையம்.

8—வினா 461—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையம் அமைப்பதற்கான இரண்டாவது கட்டப் பணிகள் துவங்கப்படுவது குறித்து மத்திய அரசிடமிருந்து தகவல் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மின் நிலையம் எப்பொழுது முதல் செயல்பட துவங்கும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) பிற்காலத்தில் 210 மெ. வா. திறனுடைய நான்கு பிரிவுகளுடன் விரிவுபடுத்தும் வகையில் 210 மெ.வா. திறனுடைய மூன்று பிரிவுகளுடன், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் 1,470 மெ.வா. திறனுடைய இரண்டாவது அனல் மின் நிலையத்தை அமைத்து வருகிறது. முதல் பிரிவு மார்ச் 1986-ல் செயல்படத் துவங்கும் எனவும், மேலும் மூன்று பிரிவுகள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும் முன்னர் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சாத்தூர் வழக்கறிஞர்.

9—வினா 478—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தூரில் வழக்கறிஞர் ஒருவர் போலீசாரால் தாக்கப்பட்ட சம்பவம் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இந்த சம்பவத்தில் உடனடியாக அரசு தலையிட்டு 11—3—1985 தேதியிட்ட அரசு ஆணை எண் 584-ல் ஓய்வு பெற்ற நீதிமன்ற நீதிபதி திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையில் அமைக்கப்பட்ட காவலர் வழக்கறிஞர் தகராறு குறித்த நிலைக் குழுவின் முன் வைக்கப்பட்டது. இக்குழு இச்சம்பவம் குறித்து விசாரித்து அரசுக்கு அறிக்கை அனுப்பும்.

### சென்னையில் முடிவெட்டும் நிலையங்களில் வசூலிக்கப்படும் கட்டணம்.

10—வினா 618—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் முடிவெட்டிக்கொள்வதற்கும், சேவிங் செய்து கொள்வதற்குமான கட்டணங்கள் வரும் ஏப்ரல் மாதம் முதல் உயர்த்தப்போவதாக முடிதிருத்துவோர் சங்கம் அறிவித்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) இந்த உயர்வைத் தடுக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை யாது?

விடை—

(அ) 1—4—1985 முதல் சென்னையில் முடிவெட்டவும் சவரம் செய்யவும் கட்டணம் உயர்த்தப்படும் என்பது சம்பந்தமாக தகவல் ஏதும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை.

(ஆ) அரசு, முடிவெட்டுதல் மற்றும் சவரம் செய்தலுக்காக கட்டண நிர்ணயம் செய்து ஆணை ஏதும் வெளியிடாததால் "கட்டண உயர்வைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்ற கேள்விக்கு இடமில்லை.



### புதிதாக வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்.

11—வினா 727—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் புதியதாக வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் கருத்தரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தஞ்சை மாவட்டம் பாபநாசம் தொகுதியில் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் காட்டுத் தோட்டம் என்னும் இடத்தில் மற்றுமொரு வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

### இயற்கை எரிவாயு கமிஷன் மூலம் சோதனை நடத்தப்பட்ட இடங்கள்.

12—வினா 743—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த ஆண்டில் தமிழகத்தில் இயற்கை எரிவாயு கமிஷன் மூலம் எந்தெந்த இடங்களில் சோதனை நடைபெற்றது?

(ஆ) அதன் விவரம் யாது?

விடை—

(அ) 1984-85 ஆம் ஆண்டில் மத்திய அரசைச் சார்ந்த இயற்கை எரிவாயு கமிஷன் தஞ்சாவூர் மாவட்டத்தில் மன்னார்குடி; ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமநாதபுரம்; தென் ஆற்காடு மாவட்டம் நெய்வேலி, புவனகிரி, சிதம்பரம் மற்றும் கோவில் களப்பால் ஆகிய இடங்களில் சோதனை நடத்தியுள்ளது.

(ஆ) 1984-85-ல் கோவில்களப்பால் என்னுமிடத்தில் ஒரு எண்ணெய்க் கிணறு தோண்டப்பட்டுள்ளது. இதனை சோதனை செய்ததில் உயர்தரமுள்ள எண்ணெயும் எரிவாயுவும் இருப்பது

தெரிய வந்தது. இவற்றின் அளவினையும் வணிக ரீதியில் அவற்றின் நிலைத்திருக்கும் தன்மையையும் மதிப்பீடு செய்யும் பொருட்டு முற்றாய்வு துறையிடும் பணி மேற்கொள்ளப்படவிருக்கிறது. நரிமணம் என்னுமிடத்தில் தோண்டப்பட்ட மற்றொரு கிணறு இவ்வாண்டு இறுதிக்குள் முடிவடையும். 1984-86-ல் ஆறு களப்பணி குழுக்களை அமைத்து, காவிரி நதி வடி நிலத்தில் மூன்று கிணறுகளை தோண்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**திருவில்லிப்புத்தூர் தொகுதி, செங்குளம் ஆதி திராவிட மக்களுக்கு நில ஆர்ஜிதம்.**

13—வினா 769—**திரு. இரா. தாரஸைக்கனி :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, செங்குளம் கிராம ஆதி திராவிட பொது மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து, வீட்டு மனைப்பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) காமராசர் மாவட்டம், திருவில்லிப்புத்தூர் வட்டம், அத்திக்குளம் செங்குளம் கிராமத்தில் 2.16 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**நன்னிலம்—நாகூர் செல்லும் தனியார் நகரப் பேருந்து.**

14—வினா 770—**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம்—நாகூர் சென்று கொண்டிருந்த தனியார் நகரப் பேருந்து அடிக்கடி ஓடாமல் நின்று விடுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?



விடை—

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் பேருந்து நிலையத்திலிருந்து நாகூர் வரையிலான வழித்தடத்தில் திரு. பாலாஜி டிரான்ஸ் போர்ட் பேருந்து 1—1—1984-ல் இருந்து நிறுத்தப்பட்டு, ஓடாமல் இருந்தது என போக்குவரத்து ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும் மேற்சொன்ன தடத்தில் மாற்று ஏற்பாடு செய்யும் வகையில் போக்குவரத்து ஆணையர் சோழன் போக்குவரத்துக் கழகத்தைக் கேட்டுக்கொண்டு அவ்வாறே மேற்படி கழகம் TML 5001 என்ற எண்ணுள்ள பேருநதை 21—5—1985 லிருந்து இயக்குகிறது என போக்குவரத்து ஆணையரின் அறிக்கையி லிருந்து தெரிகிறது.

**அய்யலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.**

15—வினா 888—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பழனிச்சாமி சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலுகா, அய்யலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) வேடசந்தூர் தாலுகா அய்யலூரில் நடப்பு 1985—86-ல் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவ அரசு ஆணை யிட்டுள்ளது.

(ஆ) விரைவில் செயல்படத் துவங்கும்.

**தனியார் கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் அலுவலர் நியமனம்.**

16—வினா 910—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவைகளில் ஆசிரியர் அலுவலர் நியமனங்களில் பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோருக்கு உரிய சதவீதம் இடங்கள் ஒதுக்க அரசு வகை செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனை அமல்படுத்தாத நிர்வாகிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது?

விடை—

(அ) சிறுபான்மைக் கல்வி நிலையங்கள் நீங்கலாக உள்ள ஏனைய தனியார் கல்லூரிகள், மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர், மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர் நியமனங்களில் தாழ்த்தப்பட்டோர், மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு செய்வதற்கு, முறையே தமிழ் நாடு தனியார் கல்லூரிகள் (வரன் முறைப்படுத்தும்) விதிகள், 1976 மற்றும் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன் முறைப்படுத்தும்) விதிகள், 1974 முதலியவற்றில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தனியார் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு செய்து ஆணைகள் ஏதும் வெளியிடப்படவில்லை.

(ஆ) இட ஒதுக்கீடு விதிகளுக்கு முரணாகச் செய்யப்படும் நியமனங்களின் பொருட்டு மானியம் வழங்கப்படுவதில்லை.



**சைதை தொகுதியிலுள்ள சுடுகாடுகளுக்கு சுற்றுச் சுவர் கட்டுதல்.**

17—வினா 1052—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சைதை தொகுதியில் உள்ள மடுவன்கரை சுடுகாடு, கோட்டூர் சூரியா நகர் சுடுகாடு, கிண்டி அருளாயன் பேட்டை சுடுகாடு இவைகளுக்கு சுற்றுச்சுவர் மற்றும் தேவையான கருவிகள் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

கோட்டூர் சூரியா நகர் சுடுகாட்டிற்குச் சுற்றுச் சுவர் கட்டுவதற்காக ஒப்பம் ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வேலை விரைவில் ஆரம்பிக்கப்பட்டு ஆறு மாதத்தில் முடிக்கப்பட்டுவிடும்.

கிண்டி அருளாயன் பேட்டை சுடுகாட்டில் தங்கும் கொட்டகை, எரிக்கும் மேடை, கிணறு போன்ற அபிவிருத்திப் பணிகளுக்கு ரூ. 98,000 நிதி ஒதுக்கப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டு விட்டது. மடுவன்கரை மற்றும் கிண்டி அருளாயன் பேட்டை சுடுகாடுகளின் நிலப்பரப்பளவை, மாவட்ட ஆட்சியாளரிடம் நிர்ணயம் செய்யும பணி மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி முடிந்ததும், இவைகளுக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணி மேற்கொள்ளப்படும். இந்தச் சுடுகாடுகள் மிகச் சிறியவை. சுடுகாட்டில் தேவையான கருவிகளான மண்வெட்டி, கடப்பாறை ஆகிய கருவிகளை, வெட்டியான்களே வைத்திருக்கிறார்கள். இக் கருவிகளை மாநகராட்சி வழங்குவதில்லை.

**மதுவிலக்குக் குற்றங்களை விசாரிக்க நாகையில் நீதிமன்றம் அமைத்தல்.**

18—வினா 1059—திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுவிலக்கு குற்றங்களைப் பற்றி விசாரிப்பதற்கு தஞ்சை மாவட்டம் முழுவதும் ஒரே நீதிமன்றம் இருப்பதைப் பிரித்து நாகையில் ஒரு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பிரித்து அமைக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்போது தஞ்சாவூர் மேற்கு மற்றும் தஞ்சாவூர் கிழக்குப் பகுதிகளுக்கு சேர்த்து ஒரு சிறப்பு முதல் வகுப்பு குற்றவியல் (மது விலக்கு) நீதிமன்றம் தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றது. தஞ்சாவூரிலுள்ள நாகப் சிறப்பு முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் (1985 86) பகுதி II பட்டினத்தில் மதுவிலக்கு வழக்குகளை விசாரணை செய்ய ஒரு திட்டத்தின்கீழ் தஞ்சாவூர் கிழக்கு மாவட்டம் அமைப்பதற்கு ஒரு செயற்குறிப்பை உயர்நீதிமன்றப் பதிவாளர் அனுப்பினார். அரசு அதனைப் பரிசீலனை செய்து நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு அதனை 1986—87 பகுதி II திட்டத்தின் கீழ் உரிய காலத்தில் செயற்குறிப்பை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளார். உயர்நீதிமன்றத்திடமிருந்து செயற்குறிப்பு வந்ததும் உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**வழக்கறிஞர்கள், காவலர்கள் இடையில் ஏற்படும் மோதல்கள்.**

19—வினா 1208—திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழக்கறிஞர்கள், காவலர்கள் இடையில் அடிக்கடி ஏற்படும் மோதலை விசாரிக்க ஏற்படுத்தியுள்ள மூவர் குழுவில் யார் யார் உள்ளனர்?

(ஆ) அவர்களுடைய அதிகார வரம்பு என்ன?

விடை—

(அ) வழக்குரைஞர்—காவலர் இருவருக்குமிடையே நல்லுறவை நிலை நிறுத்த ஓய்வு பெற்ற உயர் நீதிபதி ஒருவர், காவல் துறை இயக்குநர் மற்றும் சட்டக் குழுத் தலைவர் (Chairman of the Bar Council) ஆகியவர்களைக் கொண்ட "நிலைக் குழு" (Standing Committee) 23—8—1984 நாளிட்ட உள்துறை அரசாணை (நிலை) எண். 1869-ல் அரசு ஏற்படுத்தியுள்ளது. அக்குழுவில் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார், உறுப்பினர் மற்றும் அக் குழுவின் தலைவராகவும், காவல்துறை இயக்குநர் திரு. வி. ஆர். லட்சுமிநாராயணன், சட்டக்குழுத் தலைவர் (Chairman, Bar Council) திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் அக் குழுவின் மற்ற இரு உறுப்பினர்களாகவும் உள்ளார்கள்.



(ஆ) காவலருக்கும் வழக்குரைஞருக்கும் ஏற்படும் தகராறு களால் எங்கெங்கு சட்டம் ஒழுங்கு மிகவும் பாதிக்கப்பட்டுள்ள தாகக் கருதுகிறதோ, அந்த நிகழ்ச்சிகளை எல்லாம் நிலைக்குழு வின் ஆய்வுக்கு அரசு அனுப்புகிறது. நிலைக்குழு அவ்விடத்திற்கு நேரில் சென்று விசாரணை செய்து அவ்விடத்தில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையை நீக்க அரசுக்கு அறிக்கை அளிக்கும்.

**திண்டுக்கல் அருகே மலைவாழைக்கு ஏற்படும் முடிக் கொத்து நோய்.**

20—வினா 1328—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் அருகே உள்ள சிறுமலையில் வாழைகளில் முடிக் கொத்து நோய் விழுந்து மலைவாழை முழுவதும் அழிந்து விட்டது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அப்பகுதியில் வாழை பயிரிட அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) சிறுமலைப் பகுதியில் மலைவாழை பயிர் முடிக் கொத்து என்ற வைரஸ் நோயின் தாக்குதலால் அதிக அளவில் பாதிக்கப் பட்டுள்ளது. இந்த மலை வாழைப் பழ சாகுபடியினை மீண்டும் புதுப்பிக்கும் நோக்குடன், மாநில அரசு மைய அரசின் நிதி உதவியுடன் முடிக் கொத்து நோய் ஒழிப்புத் திட்டத்தினை 1—10—1976-ல் துவக்கி செயலாக்கியது. இந்த நோயின் கொடுமை யினை மலைவாழைப்பழ சாகுபடியாளர்கள் முழுமையாக அறிந்து கொண்டு தடுப்புச் செயலில் ஈடுபடாததாலும், சாகுபடி யாளர்களின் ஒத்துழைப்பு முழுமையாக இல்லாததாலும், இந் நோயினை முழுவதுமாகக் கட்டுப்படுத்த இயலாமல் ஒழிப்புத் திட்டம் 1979 ஜூலை மாத இறுதியுடன் கைவிடப்பட்டது.

[1987 நவம்பர் 17

(ஆ) முடிக் கொத்து நோயினால் பாதிக்கப்பட்ட மலைப் பகுதிகளில் உள்ள மலை வாழைக் கன்றுகளை பயிரிடும் விவசாயிகளுக்கு நோய் தாக்காத, தரமான மலை வாழைக் கன்றுகள் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வாழைக் கன்றுகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

முடிக் கொத்து நோயிலிருந்து நோய் பரவாத வாழைப் பயிரினை காப்பதற்கு, நோயினை பரப்புவதற்கு ஏதுவாயுள்ள பூச்சியை தடுக்க மருந்து வகைகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

## தமிழகத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்.

21—வினா 1359—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படாத கிராமங்கள் எத்தனை?

(ஆ) நடப்பு நிதியாண்டில் அக்கிராமங்களுக்கு குடிநீர் வழங்கப்படுமா?

விடை—

(அ) 1—4—1985 நிலவரப்படி மொத்தம் 13,025 கிராமக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி தேவை.

(ஆ) 1985-86-ஆம் ஆண்டில், 3,500 குடியிருப்புகளுக்கு குடிநீர்த் திட்டம் செய்து தரப்படவிருக்கிறது.

## தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி.

22—வினா 1377—திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் 1985—86 ஆம் ஆண்டில் வேளாண்மைக் கல்லூரி ஆரம்பிக்க உத்தேசம் உள்ளதா?



1987 நவம்பர் 17]

விடை—

ஆம்.

தஞ்சை மாவட்டத்தில் காட்டுத் தோட்டம் என்னும் இடத்தில் மற்றுமொரு வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

## வெப்பனப்பள்ளியில் கிடைக்கும் தங்கத்தாது.

23—வினா 1417—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் வெப்பனப்பள்ளி ஒன்றியத்தில் பெருமளவில் கிடைக்கும் தங்கத்தாதுவை கோலார் தங்கச் சுரங்கத்திலுள்ள தொழிற்சாலையில் சுத்தம் செய்திட மைய அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இதுவரை மத்திய அரசைச் சார்ந்த இந்திய புவியியல் கழகத்தின் தமிழ்நாட்டுப் பிரிவும் தமிழ்நாடு மாநில புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் மூலம் தர்மபுரி மாவட்டம் வெப்பனப்பள்ளி ஒன்றியத்தில் தங்கம் கிடைக்க வாய்ப்பு இருப்பதாகத் தெரிய வருகிறது. ஆனால் தங்கத் தாதுவின் அளவும் அது கோலாரிலுள்ள தங்கத் தொழிற்சாலையில் சுத்தம் செய்யப்படுமா என்பதும் ஆராய்ச்சியின் முடிவில்தான் தெரிய இயலும். இவ்வாராய்ச்சி முடிய இன்னும் இரு ஆண்டுகளுக்கும் மேலாக ஆகும் என கணக்கிடப்பட்டிருக்கிறது.

[1987 நவம்பர் 17

**வழக்கறிஞர்கள், காவலர்களிடையே ஏற்படும் மோதல்கள்.**

24—வினா 1431—மாண்புமிகு திரு. **வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வழக்குரைஞர்களுக்கும் காவல் துறையினருக்கும் இடையே அடிக்கடி மாநிலத்தில் பல்வேறு இடங்களில் எழுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

விடை—

காவலர்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் இடையே ஏற்படும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்க்க ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவர், காவல் துறை இயக்குநர், சட்டக் குழுத் தலைவர் (Chairman of Bar Council) ஆகியவர்களைக் கொண்ட நிலைக்குழு (Standing Committee) ஒன்றை 23-8-1984 நாளிட்ட உள்துறை அரசாணை (நிலை) எண். 1869-ல் அரசு ஏற்படுத்தியுள்ளது. ஓய்வு பெற்ற நீதிமன்ற நீதிபதி திரு. கிருஷ்ணசாமி ரெட்டி மேற்படி நிலைக் குழுவின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். வழக்குரைஞர்களுக்கும், காவல் துறையினருக்கும் இடையே கன்னியாகுமரி மாவட்டத்தில் திருநாயினார் குறிச்சியில் 6-2-1985 ஆம் தேதியில் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் சாத்தூரில் 5—3—1985 ஆம் தேதியில் ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்கள் மேற்படி குழுவின் முன் வைக்கப்பட்டுள்ளன. நிலைக்குழுவின் இறுதி அறிக்கை வந்ததும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஊராட்சி ஒன்றியங்களில் கையிறைப்பான்களை பழுதுபார்க்க பணியாளர்கள் நியமனம்.**

25—வினா 1434—மாண்புமிகு திரு. **வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1987 நவம்பர் 17]

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குடிநீர்க் குழாய்களை பழுதுபார்க்க போதுமான பிட்டர்கள் நியமிக்கப்படாததால் தமிழகம் முழுதும் பல கிராமங்களில் உள்ள குழாய்கள் நீண்ட நாட்களாக பழுதுபட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை நிவர்த்திக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கோடை காலத்தில் கையிறைப்பான்களில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிபார்க்கும் பொருட்டு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கையிறைப்பான்களின் எண்ணிக்கைக்கேற்பவும், பழுதுகளை சரிபார்ப்பதற்கு ஏற்படும் கால அளவின் அடிப்படையிலும் கூடுதலான பணியாளர்களை தற்காலிகமாக நியமிக்கவும் அவர்களுக்கு தகுந்தமுறையில் ஊதியம் வழங்கிடவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**உரிமம் பெற்ற விசைத்தறிகள்.**

26—வினா 1439—**திரு. ஜே. ஹேமச்சந்திரன் மற்றும் எம். செல்லமுத்து :** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உரிமம் பெற்ற விசைத்தறிகள் எவ்வளவு?

(ஆ) உரிமம் பெறாத விசைத்தறிகள் எவ்வளவு?

(இ) டெக்ஸ்டைல்ஸ் கண்ட்ரோல் கமிஷனர் உத்தரவு 13-4-1983 உயர்நீதி மன்றத்தில் தடை பெறப்பட்டதற்கு கைத்தறி இயக்குநர் எதிர் மனு போட்டுள்ளாரா ?

(ஈ) தடையை ரத்து செய்ய ஏதேனும் ஏற்பாடு உண்டா ?

விடை—

(அ) தமிழகத்தில் 96,307 உரிமம் பெற்ற விசைத்தறிகள் இயங்கி வருகின்றன.

(ஆ) சுமார் ஒரு இலட்சம் விசைத்தறிகள் உரிமம் பெறாமல் இயங்கி வருவதாக அரசுக்குத் தெரிய வந்துள்ளது.

(இ) ஆம். கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் சார்பாக அந்தந்த சரக கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர்களால் 18 வழக்குகளுக்கு எதிர் மனுக்கள் போடப்பட்டுள்ளன.

(ஈ) இவ்வழக்குகளில், முக்கிய பிரதிவாதியான பம்பாயிலுள்ள துணி நூல் ஆணையர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### குடந்தை நகரில் பாதாள சாக்கடை அமைத்தல்.

27—வினா 1471—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடந்தை நகருக்கு பாதாள சாக்கடை அமைப்புத் திட்டத்தை அமல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கும்பகோணம் நகராட்சியில் ஒரு பகுதிக்கு மட்டும் பாதாள சாக்கடை அமைக்கப்பட்டுள்ளது. இதர பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைப்பதற்கான திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்படுகின்றது.

### தமிழகத்திலுள்ள அரசு பனிக்கட்டி நிலையங்கள் மற்றும் குளிர்பதன நிலையங்கள்.

28—வினா 1580—திரு. சைதை சா. துரைசாமி மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசு பனிக்கட்டி நிலையங்கள் மற்றும் குளிர்பதன நிலையங்கள் எத்தனை நல்ல முறையில் இயங்கி வருகின்றன?



(ஆ) குளிர்பதன அறைகளை வாடகைக்கு விடுவதால் அரசுக்குக் கிடைக்கும் இலாபம் என்ன?

(இ) இந்த நிலையங்களை மூடிவிடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) தமிழ்நாட்டில் மீன் துறையின் கட்டுப்பாட்டில் 5 பனிப் பொறி நிலையங்களும், ஒரு குளிர்பதன நிலையமும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில், 3 மீன் பதப்படுத்தும் நிலையங்களும், 2 பனிப் பொறி நிலையங்களும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

(ஆ) மீன் துறையில் உள்ள குளிர்பதன அறைகள் மீனவர்கள் நலன் கருதி வர்த்தக ரீதியில் அமைக்கப்படாததால், இலாபம் குறித்த பிரச்சினை எழவில்லை. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக குளிர்பதன நிலைய அறைகள் வாடகைக்கு விடப்படுகின்றன.

(இ) மீன் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள எண்ணூர் குளிர்பதன நிலையம் மற்றும் கடப்பாக்கம், முட்டம், பழவேற்காடு, கோவளம், பரங்கிப்பேட்டை, அதிராம்பட்டினம், சேதுபாவா சத்திரம் ஆகிய இடங்களில் உள்ள பனிப்பொறி நிலையங்களையும் மூடுவதற்கான ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

### திருவில்லிப்புத்தூர் தொகுதியில் குடிநீர் விரிவுபடுத்தல்.

29—வினா 1585—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதி சுந்தரபாண்டியம் பேரூராட்சி, மம்சாபுரம் பேரூராட்சி, வ. புதுப்பட்டி பேரூராட்சி, எஸ். கொடிக்குளம் பேரூராட்சி ஆகிய பேரூராட்சிகளுக்கு குடிநீர் விரிவு படுத்தும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

[1987 நவம்பர் 17

விடை—

சுந்தரபாண்டியம் பேரூராட்சிக்கும், எஸ். கொடிக்குளம் பேரூராட்சிக்கும் ஆய்வுப்பணிகள் முடிவடைந்து குடிநீர்த் திட்ட அறிக்கை தயாரிக்கப்பெற்று வருகிறது.

மம்சாபுரம் பேரூராட்சிக்கும், வ. புதுப்பட்டி பேரூராட்சிக்கும் குடிநீர்த் திட்டம் வகுக்க ஆய்வுப் பணிகள் நடைபெறுகின்றன.

**மதுரை அவனியாபுரத்தில் குடிசை மாற்று வாரிய வீடுகள்.**

30—வினா 1589—**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அருகே வைகை ஆற்றோரம் உள்ள அவனியாபுரத்தில் குடிசைவாசிகளுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாநகர் அவனியாபுரத்தில் 65 ஏக்கர் நிலம் குடிசைப் பகுதி மாற்று வாரியம் மாவட்ட ஆட்சியரிடம் இருந்து பெற்றுள்ளது. இந்நிலத்தை ஆட்கோ கடன் வசதியுடன் ரூ. 2.34 கோடி செலவில் மேம்படுத்தி வைகை ஆற்றோரம் தாழ்வான பகுதி மற்றும் ஆட்சேபத்திற்குரிய இடங்களில் உள்ள இரண்டாயிரம் (2,000) குடிசைவாசிகளுக்கு வீட்டு வசதி செய்து தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**தமிழ்நாட்டில் பாலியஸ்டர் நூல் தயாரிக்கும் ஆலை அமைக்கும் திட்டம்.**

31—வினா 1612—**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பாலியஸ்டர் நூல் தயாரிக்கும் ஆலை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது பற்றிய விவரம் யாது?



1987 நவம்பர் 17]

விடை—

(அ) மற்றும் (ஆ) செயற்கை இழைப்பட்டு நூல் உற்பத்தி செய்வதற்காக, எட்டயபுரத்தில் பாரதி நூற்பாலை நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. செயற்கை இழைப்பட்டு நூலில் பாலியஸ்டர் நூலும் ஒரு பிரிவாகும். இதைத் தவிர பாலியஸ்டர் நூல் தயாரிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**சமூக நலத்துறையினால் பயனடைந்த உடல் ஊனமுற்றவர்கள், விதவைகள் மற்றும் ஆதரவற்ற முதியோர்கள்.**

32—வினா 1624—**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக நலத்துறையினால் கடந்த ஆண்டு உடல் ஊனமுற்றவர்கள் மற்றும் விதவைகள், ஆதரவற்ற முதியோர்கள் எவ்வளவு பேர் பயனடைந்தார்கள்?

(ஆ) அவர்களுக்கு என்ன உதவிகள் அளிக்கப்பட்டன?

விடை—

(அ) கடந்த ஆண்டில் சமூக நலத்துறையின் மூலம் பயன் அடைந்தோர் விவரம்—

| | |
|---|---|
| (i) உடல் ஊனமுற்றவர்கள் | 29,616 |
| (ii) விதவை மற்றும் ஆதரவற்ற பெண்கள் | 93,013 |
| (iii) ஆதரவற்ற முதியோர்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் | 1,83,256 |
| மொத்தம் | 3,05,885 |

(ஆ) ஆதரவற்ற முதியவர்களுக்கு உதவித் தொகை மற்றும் சத்துணவு, நலிவுற்ற பெண்கள், விதவைகளுக்கு சிறு தொழில் செய்ய வங்கி மூலம் கடனுதவி, விதவைத் தாய்மார்களின் பெண் குழந்தைகளுக்கு கல்யாணச் செலவிற்காக பண உதவி, விதவை மற்றும் நலிவுற்ற தாய்மார்கள் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள் வழங்குதல், உடல் ஊனமுற்றவர்களுக்கு பெட்டிக் கடை வைக்க பண உதவி மற்றும் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வங்கிகள் மூலம் மானியம் பெற்றுத் தருதல் போன்ற உதவிகள் வழங்கப்பட்டன.

[1987 நவம்பர் 17

**அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும் தேதியில் 'சஸ்பெண்ட்' செய்யும் உத்தரவை ரத்து செய்தல்.**

33—வினா 1632—**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் தேதியில் சஸ்பெண்ட் செய்யும் உத்தரவை "ரத்து" செய்யும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

தமிழ்நாடு அரசுப் பணிகள் (பாகுபாடு, கட்டுப்பாடு மற்றும் மேல் முறையீடு) விதி 17 (e )-ன் கீழ், ஒரு பணியாளர் தொகுதியின் உறுப்பினருக்கு விரோதமாகக் கடும் குற்றச்சாட்டுக்கள் பற்றியதோர் விசாரணை செய்ய உத்தேசம் இருக்குமாயின் அல்லது அத்தகைய விசாரணை முடிவாகாமல் இருக்குமாயின், அல்லது அவர் மீது எதாவதொரு கிரிமினல் குற்றம் பற்றிய குற்றச்சாட்டு ஒன்று பரிசீலனையிலாவது, நீதிமன்ற விசாரணையிலாவது இருக்குமாயின், அன்றியும் அவரை வேலையில் இருந்து தற்காலிகமாக விலக்கி வைப்பது பொது நலனுக்கு அவசியம் இருக்குமாயின், அவரை வேலையிலிருந்து தற்காலிகமாக விலக்கி (சஸ்பெண்ட்) வைக்கலாம். இந்த விதியை ரத்து செய்யும் குறிப்பு அரசு பரிசீலனையில் இல்லை.

**நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசி.**

34—வினா 1640—**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள நியாய விலைக் கடைகளில் என்ன விலையில் அரிசி வழங்கப்படுகிறது?

(ஆ) ஒரு ஆண்டிற்கு சத்துணவு மையத்திற்கும், ரேஷன் கார்டுகளுக்கும் எவ்வளவு அரிசி வழங்கப்படுகிறது?

(இ) இதனால் அரசுக்கு ஏற்படும் இழப்பு யாது?



விடை—

| | |
|---|---|
| (அ) (1) சாதாரண ரகம் கிலோ ஒன்றுக்கு | ரூ. 1.75 |
| (2) சன்னரகம் கிலோ ஒன்றுக்கு | ரூ. 2.25 |
| (3) மிகச் சன்ன ரகம் கிலோ ஒன்றுக்கு | ரூ. 2.50 |

(ஆ) 1984-85 ஆம் ஆண்டு பொது விநியோக முறையின் கீழ் சுமார் 7.32 இலட்சம் டன் அரிசியும், சத்துணவுத் திட்டத்திற்கு சுமார் 2.27 இலட்சம் டன் அரிசியும் வழங்கப்பட்டது.

(இ) ஆண்டொன்றுக்கு சுமார் 95 கோடி ரூபாய்.

**நத்தம் தொகுதி, கோம்பைப்பட்டியில் வசிக்கும் மக்களுக்கு சாலை வசதி.**

35—வினா 1672—**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்ப்பட்டி யூனியன், கோம்பைப் பட்டியில் வசிக்கும் மக்களுக்கு சாலை வசதியும் மயானப் பாதை வசதியும் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சாலை வசதியும், மயானப் பாதையும் அமைத்துத்தர அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்.

(அ) நத்தம் தொகுதி, சாணார்ப்பட்டி யூனியன், கோம்பைப் பட்டியில் வசிக்கும் மக்களுக்கு சாலை வசதியும், மயானப் பாதையும் அமைத்துக் கொடுக்குமாறு 1985-86 ஆம் ஆண்டு "தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில்" சாணார்ப்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பணி 1985 செப்டம்பர் இறுதிக்குள் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### நத்தம் தொகுதி, கூவனூத்து கிராமம், நொச்சி ஓடைப்பட்டி, கோட்டைப் புதூர் கிராமங்களுக்கு சாலை வசதி.

36—வினா 1680—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்ப்பட்டி ஒன்றியம், கூவனூத்து-நொச்சி கிராமம், நொச்சி ஓடைப்பட்டி, கோட்டைபுதூர் ஆகிய கிராமங்களுக்கு சாலை வசதி செய்து தர அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், கூவனூத்து-நொச்சி ஓடைப்பட்டியிலிருந்து கோட்டைப்புதூருக்கு சாலை அமைக்கும் வேலை 1985-86 ஆம் ஆண்டு ஊரக நிலமற்றோர் வேலை உறுதி அளிப்புத் திட்டத்தில் ரூ. 10,000 மதிப்பீட்டில் செய்ய சேர்க்கப்பட்டு உள்ளதாக கோட்ட வளர்ச்சி அலுவலர் தெரிவித்து உள்ளார்.

### வேலைவாய்ப்பிற்கு வயது வரம்பு.

37—வினா 1705—திரு. க. சோலைராசு: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

உலக இளைஞர் ஆண்டை ஒட்டி வேலை வாய்ப்பிற்கு வயது வரம்பை மத்திய அரசு தளர்த்தியதுபோல் தமிழ்நாட்டிலும் வயது வரம்பு தளர்த்தப்பெறுமா?

விடை—

மைய அரசில் உலக இளைஞர் ஆண்டை ஒட்டி வேலை வாய்ப்பிற்கு வயது வரம்பை தளர்த்தி ஆணை வெளியிடப்பட்டதாகத் தகவல் ஏதும் இல்லை. எனவே, மைய அரசினைப் பின்பற்றி இம்மாநிலத்திலும் உலக இளைஞர் ஆண்டை ஒட்டி வேலை வாய்ப்பிற்கு வயது வரம்பினை தளர்த்தியது குறித்து தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.





38—

### தமிழ்நாட்டில் விசைத்தறி.

வினா 1707—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விசைத்தறியை அறவே ஒழிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) விசைத்தறியினால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) இது போன்ற திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) ஆம்.

(இ) சில துணி ரகங்கள் கைத்தறிகளில் மட்டுமே நெசவு செய்யப்பட வேண்டும் என மத்திய அரசு ஒதுக்கியிருந்தது. இருப்பினும் விசைத்தறியாளர்கள் மேற்படி கைத்தறிக்கென ஒதுக்கப்பட்ட ரகங்களை, நெசவு செய்வதின் மூலம் கைத்தறிகளின் வளர்ச்சி குறைதல் மற்றும் சந்தை வாய்ப்பு இழப்பு ஆகிய காரணங்களால் விசைத்தறியுடன் போட்டி போட முடியாமல் கைத்தறியாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனை நிவர்த்தி செய்ய கைத்தறிகளுக்கென சில ரகங்களை திட்டவட்டமாக ஒதுக்க மத்திய அரசு விரைவில் ஆணையை பிறப்பிக்க உள்ளது. அதன்படி ஒதுக்கப்பட்ட கைத்தறி ரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்ய முடியாது. அவைகளை விசைத்தறியில் உற்பத்தி செய்தால் தண்டிக்கப்படுவதுடன், அவைகளின் விற்பனையைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்க, சட்டத்தில் வகை செய்யுமாறும் மத்திய அரசு வலியுறுத்தப்பட்டுள்ளது.

**போலி சான்றிதழ் பெற்று விசைத்தறி துணிகள் ஏற்றுமதி.**

39—வினா எண் 1708—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறித் துணி என்ற போலி சான்றிதழ் பெற்று விசைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்து வருவதால் தமிழ் நாட்டில் கைத்தறி நெசவாளர்கள் வேலை இல்லாமல் அவதிப் படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) இப்பொருள் பற்றி அரசுக்கு எந்த முறையீடும் வரப் பெறவில்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

**பெரியார், சேலம், கோவை மாவட்டங்களில் விசைத்தறிகள்.**

40—வினா எண் 1709—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார், சேலம், கோவை மாவட்டங்களில அனுமதி பெறாமல் பல விசைத்தறிகள் இயங்கிக் கொண்டிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அனுமதி இல்லாமல் விசைத்தறி வைத்திருப்பவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) பெரியார், சேலம், கோவை மாவட்டங்களில் அனுமதி அனுமதி பெறாமல் பல விசைத்தறிகள் இயங்கிக் கொண்டிருப்பது பற்றிய விவரம் அரசுக்கு தெரிய வந்துள்ளது.

(ஆ) உரிமம் பெறாமல் நிறுவப்பட்டு அங்கீகாரம் இல்லாமல் இயங்கி வரும் விசைத்தறிகளின் மீது நடவடிக்கை எடுப்பதும் மற்றும் அவைகளுக்கு உரிமம் வழங்கி அங்கீகரிப்பதும் மைய அரசின் அதிகாரத்திற்குட்பட்டது. மத்திய அரசின் 9-2-1981 தேதியிட்ட அறிவிப்பின்படி (Press Note) 31-3-1981-க்கு



முன்பு, உரிமம் இல்லாமல் நிறுவப்பட்டிருந்த 83,807 விசைத்தறிகளை அங்கீகரித்து, மத்திய அரசின் மண்டல துணி நூல் ஆணையரால் உரிமம் வழங்கப்படுகிறது.

**கல்விக் கூடங்களின் வாயிலில் ஈ மொய்க்கும் தின்பண்டங்கள் விற்பனை தடுத்தல்.**

41—1717—**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்விக் கூடங்களின் வாயிலில் ஈ மொய்க்கும் தின்பண்டங்கள் விற்பதைத் தடுக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவை?

விடை—

கல்விக்கூடங்களின் வாயிலில் ஈ மொய்க்கும் தின்பண்டங்கள் விற்பதைத் தடுக்க பொதுச் சுகாதாரச் சட்டம் மற்றும் உணவுக் கலப்பட தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களும் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

**பூச்சி மருந்துகள் அடிப்பதன் மூலம் புதிய பூச்சிகள் உற்பத்தி.**

42—வினா எண் 1730—**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூச்சி மருந்துகள் அடிப்பது மூலம் புதிய பூச்சிகள் உற்பத்தியாகும் வாய்ப்புகள் உண்டா?

(ஆ) ஆம் எனில், பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேறு முறைகள் ஆராயப்படுகின்றனவா?

விடை—

(அ) பூச்சி மருந்து அடிக்கும்பொழுது சரியான மருந்துகள் சரியான சமயத்தில் சரியான அளவில் அடிக்காவிட்டால் பூச்சிகள் உற்பத்தியாகும் வாய்ப்பு சில சமயங்களில் உண்டு.

(ஆ) இவ்வாறு பூச்சிகள் பெருகுவதை தடுக்கத்தான் பல வேறு வழிகளில் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. அவற்றுள் சிறப்பானவை—

(1) பூச்சி மற்றும் நோய் தாக்குதலை எதிர்த்து தாக்குதலை தாங்கவல்ல ரகங்களை பயிரிடுதல்.

1987 நவம்பர் 17]

(2) ஒருங்கிணைந்து பயிர் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடித்தல்.

(3) எதிர் உயிரினங்களைப் பயன்படுத்தி பூச்சிகளை ஒழித்தல்.

**ஊராட்சி ஒன்றியத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டப் பணிகள்.**

43—வினா எண் 1758—திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டப் பணிகள் நடத்தப்படுவது குறித்து அரசு ஆணை ஏதும் பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் 1980 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தமிழகத்தில், மத்திய அரசு வெளியிட்டுள்ள வழிமுறைகளின்படி தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் 1985-86 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்தை (Annual Plan) தயார் செய்வதற்குண்டான வழிமுறைகள் அடங்கிய உத்திரவும் மாநில அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

**காட்பாடி தொகுதியில் பீடி தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம்.**

44—வினா 1761—திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதியில் பீடி தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



1987 நவம்பர் 17]

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**சாதாரண மின் விளக்குகளுக்கு பதில் குழல் விளக்குகள் அமைத்தல்.**

45—வினா 1772—திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சாதாரண மின்விளக்குகளுக்கு பதில் குழல் விளக்குகள் எல்லா இடங்களுக்கும் எப்போது அமைக்கப்படும்?

விடை—

மார்ச் 1986-க்குள் தெரு விளக்குகளிலுள்ள எல்லா சாதாரண விளக்குகளும் குழல் விளக்குகளாக மாற்றி அமைக்கப்படும்.

**வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள உடல் ஊனமுற்றோர் மற்றும் விதவைகள் எண்ணிக்கை.**

46—வினா 1828—திரு. செ. செம்மலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலை வேண்டி பதிவு செய்துள்ள உடல் ஊனமுற்றோர் மற்றும் விதவைகள் ஆகியோரின் தனித்தனியான எண்ணிக்கை எவ்வளவு? (31—3—1985 முடிய).

விடை—

தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலை வேண்டி பதிவு செய்துள்ள உடல் ஊனமுற்றோர் மற்றும் விதவைகள் ஆகியோரின் எண்ணிக்கை தனித்தனியான எண்ணிக்கை பின்வருமாறு : (31—3—1985-ல் உள்ளபடி).

(அ) உடல் ஊனமுற்றோர் .. 19,494 பேர்

(ஆ) விதவைகள் .. 5,595 பேர்.

[1987 நவம்பர் 17

## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுகளின் விற்பனை.

47—வினா 1833—திரு. செ. செம்மலை மற்றும் திரு. க. சோலைராசு: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுகளின் விற்பனை குறைந்து வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், விற்பனையை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) 1984 ஆம் ஆண்டின் பரிசுச் சீட்டு விற்பனையைவிட 1985 ஜனவரி முதல் விற்பனையில் முன்னேற்றம் உள்ளது.

(ஆ) எழவில்லை.

## சொட்டு நீர்ப்பாசன முறையை ஊக்குவித்தல்.

48—வினா 1835—திரு. செ. செம்மலை: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சொட்டு நீர்ப் பாசன முறையை ஊக்குவிக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சொட்டு நீர்ப்பாசன முறையை விவசாயிகளிடையே பரப்பும் நோக்கத்துடன் அரசு சொட்டுப் பாசன கருவி களை அமைத்துக் கொள்ளும் விவசாயிகளுக்கு ஊக்குதவித் தொகை வழங்கும் ஒரு புதிய திட்டத்தை 1984—85-ல் ரூ. 2.00 லட்சம் செலவில் செயல்படுத்தியது. இந்தத் தவிர சொட்டு நீர்ப் பாசனம் மற்றும் இதர உபகரணங்கள் மூலம் பாசனத்தை ஊக்குவிக்கும் மைய அரசின் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு மானிய [illegible] 20 சொட்டு நீர்ப் பாசன கருவிகள் 1984—85-ல் வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது.



1987 நவம்பர் 17]

## ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியமாக ரூபாய் 5,000 வழங்கும் திட்டம்.

49—வினா 1872—திரு. ஏ. எஸ். [illegible]: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு ஓய்வு ஊதியமாக ரூ. 5,000 (ஐயாயிரம்) வழங்கும் திட்டத்தை 31—5—1984 அன்று ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் விஸ்தரிக்கும் கருத்து ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு 1—4—1984-லிருந்து அமுல்படுத்தப்பட்டுள்ள சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டத்தினை உதவி பெறும் கல்வி நிறுவனங்களிலுள்ள பணியாளர்களுக்கும் 1—4—1984-லிருந்து விரிவுபடுத்தி அரசாணை நிலை எண் 1468, கல்வி, நாள் 21—[illegible]-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டத்தை தொழில் துறையில் பின் தங்கிய வட்டமாக அறிவித்தல்.

50—வினா [illegible]—டாக்டர் [illegible] பொன்னுசாமி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் பெருந்துறை வட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அறிவிக்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கூடுதலாக சில வட்டங்களை தொழில் துறையில் பின் தங்கிய வட்டங்களாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரி சீலனையில் உள்ளது. இந்தப் பட்டியலில் பெருந்துறை வட்டமும் அடங்கியுள்ளது. எனவே, கூடுதல் வட்டங்களைப் பற்றிய தீர்மானம் எடுத்தவுடன், அறிவிக்கப்படும்.

### மேல்நிலைப்பள்ளி இறுதியாண்டுத் தேர்வில் கேள்விகள்.

51—வினா 1972—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைப்பள்ளி இறுதியாண்டுத் தேர்வில் கேள்விகள் தவறாகக் குறிக்கப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : மேல்நிலைப் பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வில் கேள்விகள் தவறாகக் குறிக்கப்படவில்லை. ஆனால் கணித பாட வினாத்தாளில் சில அச்சுப் பிழைகள் இடம் பெற்றி ருந்தன. அப்பிழைகள் திருத்தப்பட்டன.

### பேருந்து மற்றும் லாரிகளில் கண்களைக் கூசும் புதிய ரக பல்புகளை உபயோகிப்பதைத் தடை செய்தல்.

52—வினா 1983—திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பேருந்துகளிலும், லாரிகளிலும் கண்களைக் கூசும் வகை யில் புதிய ரக பல்புகளை உபயோகப்படுத்தி வருவதைத் தடை செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?



விடை—

1940 ஆம் ஆண்டையத் தமிழ் நாட்டு இயக்கூர்திகள் விதி களிலுள்ள 303-ஆம் விதியில், எந்தவொரு இயக்கூர்தியிலும் கண் களைக் கூசும் வகையில் குமிழ்களை (பல்புகளை) உபயோகப் படுத்தக் கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விதி செயல் படுத்தப்படுகிறது.

### திருமங்கலத்திலுள்ள தீயணைப்பு நிலையம்.

53—வினா எண் 1995—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் விடையளிப்பாரா—

(அ) திருமங்கலத்தில் தீயணைப்பு நிலையம் எப்போதி லிருந்து செயல்பட உள்ளது ?

(ஆ) இதனை துரிதப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் தீயணைப்பு நிலையம் 4—10—1985 முதற்கொண்டு இயங்கி வருகிறது.

### வடிகால் பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஏற்று செய்தல்.

54—வினா எண் 2007—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வடிகால் பணிகளை ஏற்றுச் செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மதுரை மாவட்டத்தில் எவ்வளவு பணிகள் செய்யப்பட்டுள்ளன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டத்தில் பெரியகுளம், திருமங்கலம் நகராட்சிகளிலும் மதுரை மாநகராட்சியில் ஒரு பகுதியிலும் வடிகால் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் ஏற்றுச் செய்தவையாகும். மேலும் பழனி நகராட்சி வடிகால் திட்டமும், மதுரை மாநகராட்சியில் வேறு பகுதியான இஸ்மாயில்புரம், அவனியாபுரம் ஆகிய இடங்களுக்கு வடிகால் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தால் செயலாக்கத்தில் உள்ளன.

**மின் துறையில் மின் இழப்பைக் குறைக்கும் நடவடிக்கை.**

55—வினா 2027—திரு. செ. செம்மலை: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு, மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா— [illegible]

மின்சாரத் துறையில் (Linc Loss) லைன் லாஸ் குறைக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

விடை—

மின் இழப்பைக் குறைப்பதற்காகத் தேவைப்படும் இடங்களில் புதிய துணை மின் நிலையங்கள் நிறுவுதல், "ஷண்ட்கப்பாஸ்டர்கள், ஸ்டாடிக் வார் ஜெனரேட்டர், சீரிஸ்கபாஸிடர், சின்க்ரனஸ் கண்டன்சர்" முதலிய சாதனங்களை அமைத்தல் போன்ற பணிகளை மின்வாரியம் மேற்கொண்டு வருகிறது. மேலும் தேவையான இடங்களில் மின் கம்பிகளையும் மாற்றி அமைக்கும் பணிகளையும் மின்வாரியம் மேற்கொண்டு வருகிறது.

**போளூர் தொகுதி படவேடு பகுதியில் செண்பகத்தோப்பு அணை கட்டும் திட்டம்.**

56—வினா 2030—திரு. ஜெ. ராஜாபாபு: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போளூர் தொகுதி படவேடு பகுதியில் செண்பகத்தோப்பு அணை கட்டும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?





விடை—

வடாற்காடு மாவட்டம், போளூர் வட்டம், கமண்டலாற்றின் குறுக்கே செண்பகத்தோப்பு அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**பேரூராட்சிகளின் வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கை.**

57—வினா 2050—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வருமானம் குறைவாக உள்ள பேரூராட்சிகள் எத்தனை உள்ளன?

(ஆ) பேரூராட்சிகளில் வருமானத்தைப் பெருக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) பொதுவாகவே அனைத்துப் பேரூராட்சிகளின் வருமானம் குறைவாக உள்ளது. காரணம் அனைவருக்கும் மான வீட்டு வரியானது திருத்தியமைக்கப்படாமல் இருந்தமையே. இதற்கான தடையை அண்மையில் அரசு நீக்கியுள்ளது. எனவே, இனிமேல் பேரூராட்சிகளின் வருமானம் பெருக வாய்ப்புள்ளது. மேலும் அரசு தற்போது பேரூராட்சிகளின் வளர்ச்சிக்குரிய வருமானத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்புகளையும், வழிகளையும் ஆய்வு செய்ய உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்துள்ளது.

**தமிழ்நாட்டில் வருமானம் இல்லாத பேரூராட்சிகளில் தெரு விளக்குகள்.**

58—வினா 2051—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வருமானம் இல்லாத பேரூராட்சிகளில் தெரு விளக்குகளுக்கு மின் கட்டணம் கட்ட முடியாமல் தெரு விளக்குகள் எரியாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசு எடுத்து வரும் நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நிதி வசதியற்ற பேரூராட்சிகளின் மின் கட்டணத் தொகை செலுத்த நிதி வசதி உள்ள பேரூராட்சிகளிலிருந்து தொகை கடனாக வழங்கப்படுகிறது. மேலும் நிலுவையில் உள்ள பேரூராட்சிகளால் நிலுவை தவணை முறை நடப்பு மாதக் கட்டணத்துடன் (+1) பிரதி மாதமும் செலுத்தப்பட்டு மின் துண்டிப்பு தவிர்க்கப்படுகிறது. இத்தவணை முறையை பின்பற்ற இயலாத நிதி வசதி அற்ற பேரூராட்சிகளுக்கு மின் கட்டணம் செலுத்த கடன் வழங்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

**நெடுஞ்சாலை ஓரங்களில் கட்டப்பட்டுள்ள கோவில்கள்.**

59—வினா 2055—**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலை ஓரங்களில் அனுமதியின்றி கோவில்களை கட்டி இருப்பதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) நெடுஞ்சாலை ஓரங்களில் கட்டப்பட்டுள்ள கோவில்களில் சில போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளன. அவை வலிய அகற்றப்பட்டால் பொது மக்களின் மனம் நோகலாம். என்பதனால் அகற்றப்படாமல் உள்ளன.

**மணப்பாறை நகருக்கு காவிரி நதியிலிருந்து குடிநீர்.**

60—வினா 2061—**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை நகருக்கு, குளித்தலை அருகே காவிரி நதியிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது தொடங்கப்படும்?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு?





விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) காவிரி ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்ட மணப்பாறை குடிநீர்த் திட்டம் ஐரோப்பிய பொருளாதாரக் குழுமத்தின் நிதி உதவி பெறும் திட்டங்களின் பட்டியலில் சேர்க்கப்படுவதற்காக மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஐரோப்பிய பொருளாதார குழுமத்திடமிருந்து நிதியுதவி கிடைத்தவுடன் மணப்பாறை குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

**1983-84-ல் அரசு தஞ்சை மாவட்டத்தில் துவக்கிய புதிய பேருந்து வழித்தடங்கள்.**

61 வினா 2067—**திரு. பி. என். இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983-84 ஆம் ஆண்டில் அரசு தஞ்சை மாவட்டத்தில் துவக்கிய புதிய பேருந்து வழித்தடங்கள் எத்தனை?

(ஆ) அவற்றில் அரசு நிறுவனங்கள் மூலம் எத்தனை?

(இ) தனியார் மூலம் எத்தனை?

விடை—

(அ) 1983-84-ல் தொடங்கப்பட்ட புதிய பேருந்து வழித்தடங்களின் மொத்த எண்ணிக்கை—72.

(ஆ) மற்றும் (இ) அவற்றுள் அரசு நிறுவனங்கள் மூலம் தொடங்கிய வழித்தடங்களின் எண்ணிக்கை—71. தனியார் மூலம் தொடங்கிய வழித்தடங்களின் எண்ணிக்கை—1.

[1987 நவம்பர் 17

## அரசு போக்குவரத்துக் கழகங்களிலுள்ள உபயோகமற்ற பேருந்துகள்.

62—வினா 2086—திரு. பி. என். இராமசந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களிலும் 1984 ஜனவரி முதல் டிசம்பர் வரை உபயோகமற்ற பேருந்துகள் எத்தனை?

(ஆ) அவை ஏலம் விடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) அனைத்து அரசு போக்குவரத்து கழகங்களிலும் 1984 ஜனவரி முதல் டிசம்பர் வரை உபயோகமற்ற பேருந்துகளின் எண்ணிக்கை மொத்தம் 873 ஆகும்.

(ஆ) அவற்றில் 722 பேருந்துகள் ஏலத்தில் விற்கப்பட்டுள்ளன.

(இ) சில பேருந்துகள் 1985 ஆம் ஆண்டு ஏலத்துக்குக் கொண்டுவரப்பட்டன. சில பேருந்துகள் கல்வி நிலையங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. மற்றும் சில பேருந்துகள் பணிமனையிலேயே ஓய்வு அறைகளாக மாற்றப்பட்டுள்ளன.

## தமிழகத்தில் சிறையில் உள்ள ஆயுள் கைதிகள்.

63—வினா 2190—திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தற்போது சிறையில் உள்ள ஆயுள் கைதிகள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அண்ணா பிறந்த நாளன்று தகுதியின் அடிப்படையில் மேற்படி கைதிகளை விடுதலை செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1987 நவம்பர் 17]

விடை—

(அ) 30-4-1985-ன்படி தமிழக சிறைகளில் 2,303 ஆயுள் தண்டனை சிறைவாசிகள் உள்ளார்கள்.

(ஆ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## புயலினால் மீனவக் குப்பங்களில் ஏற்பட்டுள்ள சேதம்.

64—வினா 2202—திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984 நவம்பர் மாதம் பெய்த மழை புயலினால் பழவேற்காடு பகுதி மீனவக் குப்பங்களில் மீன்பிடி வலை-படகு ஆகியவற்றிற்கு சேதம் ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் வழங்கப்பட்ட நஷ்ட ஈடு பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வட செங்கற்பட்டு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பழவேற்காடு பகுதிக்கு மீன்பிடிச் சாதனங்களின் இழப்பிற்கு நிவாரணமாக ரூ. 6,47,800 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட நிவாரணத் தொகையை மீனவர்களுக்கு மானியமாக வழங்கலாமா என அரசு பரிசீலித்து வருகிறது.

## தாம்பரம் நகராட்சியில் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு.

65—வினா எண் 2224.—திரு. எல்லே. இராசமாணிக்கம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் நகராட்சியில் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(இ) பணிகள் எப்பொழுது தொடங்கி, எப்பொழுது முடியும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) தாம்பரம் நகராட்சியில் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு வாரியத்தின் ஆய்வில் உள்ளது. ஆய்வு முடிந்த பின்னரே திட்ட மதிப்பீடு தெரியவரும்.

ஆய்வு முடிந்து திட்ட அறிக்கை தயாரிக்கப்பெற்று தேவையான ஒப்புதல் பெற்றபின் பணிகள் தொடங்கப்பெறும்.

**பென்னகரம் வட்டம், நாகமரை கிராமம், நெருப்பூர் அருகே ஆசாரி கிணற்றுப்பள்ளம் அணை கட்டும் திட்டம்.**

66—வினா 2234—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பென்னகரம் வட்டம் நாகமரை கிராமம் நெருப்பூர் அருகே ஆசாரி கிணற்றுப் பள்ளம் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆசாரி கிணற்றுப் பள்ளத்தின் குறுக்கே அணை கட்டும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை. ஆனால் ஒரு ஏரி அமைக்கும் திட்டம் உள்ளது. தல அதிகாரிகள், இத்திட்டத்தை தயாரித்து வெகு விரைவில் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

**சொகுசு விரைவு பேருந்து.**

67 வினா 2285—திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பொறையார் ஆகிய நகரங்களுக்கு சென்ற சொகுசு (விரைவு பேருந்துகளை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் நிறுத்தி விட்டதை அரசு அறியுமா?



(ஆ) ஆம் என்றால், மீண்டும் அப்பேருந்தை விட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பொறையார் ஆகிய நகரங்களுக்கு சென்ற சொகுசு விரைவுப் பேருந்து நிறுத்தப்பட்டு, அதற்குப் பதிலாக 1—10—1985 முதல் புதிய சாதாரண விரைவுப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இத்தடத்தில் மீண்டும் சொகுசுப் பேருந்துகளை இயக்கும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

**விவசாயத் தொழிலாளர்களின் ஊதிய விகிதம்.**

68—வினா 2290—திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர்களின் ஊதிய விதத்தை மாற்றியமைக்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ந் தேதியிலிருந்து அமுலிலிருக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விதங்களை திரும்பவும் மாற்றியமைக்கும் பொருட்டு அரசுக்கு ஆலோசனை கூற குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின்கீழ் குழு ஒன்றினை அமைக்க அரசு நில சீர்திருத்த ஆணையரைக் கலந்தாலோசித்து வருகிறது. இக் குழு அமைக்கப்பட்டு அதன் அறிக்கை அரசுக்குக் கிடைத்த பின்பு அரசு விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விதங்களை மாற்றியமைக்கும்.

[1987 நவம்பர் 17

**ஆதி திராவிடர்களுக்கு குடியிருப்புகள் கட்ட அரசு வழங்கும் மானியத் தொகை.**

69—வினா 2354—திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்களுக்கு குடியிருப்புகள் கட்ட அரசு வழங்கும் மானியத் தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

**தொழிற்சாலை சட்டத்தை அமலாக்காத முதலாளிகளுக்கு சிறை தண்டனை வழங்கல்.**

70—வினா 2375—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிற்சாலைச் சட்டத்தை அமலாக்காத முதலாளிகளுக்கு அபராதம் விதிப்பதற்குப் பதிலாக சிறை தண்டனை வழங்குகின்ற முறையில் சட்டத்தைத் திருத்தும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

விடை—

தொழிற்சாலைச் சட்டத்தை அமலாக்காத முதலாளிக்கு அபராதம் விதிப்பதற்கு பதிலாக சிறைத் தண்டனை வழங்குகிற முறையில் சட்டத்தைத் திருத்தும் பிரேரணை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1987 நவம்பர் 17]

**கொசுக்களை ஒழிக்கும் திட்டம்.**

71—வினா 2392—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொசுக்களின் கொடுந்தாக்குதல் தமிழகம் முழுவதும் பெருகி இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) கொசுக்களை ஒழிக்க அரசின் திட்டம் என்ன?

விடை—

(அ) மாநிலத்தின் சில பாகங்களில் கொசுக்களின் தொல்லை இருப்பதை அரசு அறியும்.

(ஆ) கொசுக்களை ஒழிக்க, தேசிய மலேரியா தடுப்புத் திட்டம், நகர மலேரியா ஒழிப்புத் திட்டம் ஆகிய திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

**திருப்பூர் நகரத்தில் பாதாளச் சாக்கடை.**

72—வினா 2397—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரத்தில் பாதாளச் சாக்கடை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர் நகராட்சியில் சாக்கடைத் திட்டத்திற்குண்டான ஆய்வு மதிப்பீடு ஒன்று ரூ. 50,000-க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது கள ஆய்வுப் பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. ஆய்வுப் பணிகள் முடிவடைந்தவுடன், விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, முறையான ஒப்புதல் பெறப்பட்டு திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### கூட்டுறவுச் சட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அதிகாரம் வழங்குதல்.

73—வினா 2402—திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நடைமுறையில் உள்ள கூட்டுறவுச் சட்டத்தை தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அதிக அதிகாரம் வழங்குகிற முறையில் திருத்தி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

தற்போது நடைமுறையில் உள்ள தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் மற்றும் தமிழ்நாடு 1934 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் சட்டம் ஆகியவைகளுக்குப் பதிலாக தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளது. அச்சட்டத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவிற்கு தேவையான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### பாபநாசம் தொகுதி சுவாமிமலை பேரூராட்சியிலுள்ள உயர் நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக உயர்த்தல்.

74—வினா 2414—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதி சுவாமிமலை பேரூராட்சியிலுள்ள உயர் நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், வரும் கல்வியாண்டில் செயல் முறைப் படுத்தப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பாபநாசம் தொகுதி சுவாமிமலை பேரூராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளி சார்பில் பொதுமக்கள் பங்குத் தொகை ரூ. 25,000 செலுத்தப்பட்டால் வரும் ஆண்டில் மற்ற உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துவதற்கான கருத்துருக்களை பரிசீலிக்கும்போது இப்பள்ளி குறித்த கருத்துருவும் கவனத்தில் கொள்ளப்படும்.





### கோயில்கள் நிதியிலிருந்து திருமணம் செய்து கொண்டோர்.

75—வினா 2431—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அறநிலையத் துறை நிர்வாகத்தின் கீழ் உள்ள கோயில்களில், கோயில்கள் நிதியிலிருந்து 1984-85-ல் எத்தனை திருமணம் செய்து வைக்கப்பட்டன ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

(இ) இதில் ஆதி திராவிடர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் அறநிலையத்துறை நிர்வாகத்தின் கீழ் உள்ள கோயில்களின் நிதியிலிருந்து 1984-ஆம் ஆண்டு 112 திருமணங்களும், 1985-ஆம் ஆண்டு இதுவரை 19-ம் ஆக 131 சிறப்புத் திருமணங்கள் செய்து வைக்கப்பட்டன.

(இ) இதில் ஆதி திராவிடர்களின் திருமணங்கள் 99 ஆகும்.

### காடுகளில் வனவிலங்குகள் தண்ணீர் குடிக்க குட்டைகளைச் செப்பனிடல்.

76—வினா 2436—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள காடுகளில் வனவிலங்குகள் தண்ணீர் குடிப்பதற்கு வசதியாக குட்டைகள் செப்பனிடவும், வெட்டவும் செய்ற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், 1983-84, 1984-85-ஆம் ஆண்டுகளில் எவ்வளவு செலவு செய்யப்பட்டது ?

(இ) என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட்டன ?

விடை—

விவர அறிக்கையொன்று அவையின்முன் வைக்கப்படுகிறது.

**அறிக்கை.**

(அ) இயற்கைப் பாதுகாப்புத் திட்டம் **(Scheme for nature Conservation)** என்ற மாநில அரசு திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிறைவேற்றப்படும் காடுகளில் உள்ள வனவிலங்குகளுக்கு உணவு வசதிகள் செய்தல், பாதுகாப்பு வசதிகள் செய்தல் போன்ற அபிவிருத்தித் திட்டப் பணிகளுடன் தண்ணீர் வசதிகள் செய்யும் பணிகளும் நிறைவேற்றப்படுகின்றன. அறிவிக்கப்பட்ட வனவிலங்குச் சரணாலயங்களில் வனவிலங்குகள் தண்ணீர் குடிப்பதற்கு வசதியாக குட்டைகளைச் செப்பனிடுதல், வெட்டுதல், சிறிய அணைகள் கட்டுதல், ஏற்கனவே உள்ளவைகளைப் பராமரித்தல் போன்ற வேலைகள் ஆண்டுதோறும் இதர அபிவிருத்திப் பணிகளுடன் சேர்க்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

(ஆ) தண்ணீர் வசதிகள் செய்யும் பணி, உணவு வசதிகள், பாதுகாப்புப் பணி, பாதை அமைத்தல், சிப்பந்திகள் குடியிருப்பு போன்ற இதர அபிவிருத்திப் பணிகளுடன் நிறைவேற்றப்படுவதால், இதற்கு மட்டும் செலவிடப்பட்ட விவரங்கள் இல்லை. ஆனால், வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் வனவிலங்குச் சரணாலயங்கள் மற்றும் காப்புக் காடுகளில் உள்ள வனவிலங்குகளின் தண்ணீர் வசதிக்காக 1983-84-இல் ரூ. 41.90 இலட்சம் செலவிடப்பட்டது.

(இ) வனவிலங்குகள் தண்ணீர் குடிப்பதற்கு ஏற்கனவே உள்ள குளம்/குட்டைகளைப் பராமரித்தல், தேவையான இடங்களில் புதிய கிணறுகள், குளம்/குட்டைகள் வெட்டுதல், கைப்பம்புகள் அமைத்தல், சிறிய அணைகள் கட்டுதல், கால்வாய் வெட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தையல் இயந்திரங்கள் வழங்கப்பெற்றோர்.**

77—வினா 2446—திரு. எஸ். **இராசாராமன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட **வினாக்களுக்கு** விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பிப்ரவரி 1985 முடிய எத்தனை பேர்களுக்கு தையல் இயந்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன? (மாவட்ட வாரியாக).



(ஆ) இதை, நகரப் பகுதிகளுக்கு விஸ்தரிப்பு செய்ய அரசு, மைய அரசை வற்புறுத்துமா?

விடை—

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பிப்ரவரி 1985 முடிய 35,072 பேர்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட வாரியான பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண்ணும் மாவட்டமும். | 1-4-1979 முதல் 28-2-1985 முடிய வழங்கப்பட்ட தையல் இயந்திரங்கள். |
|---|---|
| (1) | (2) |
| 1. செங்கல்பட்டு | 3,747 |
| 2. வட ஆற்காடு | 3,700 |
| 3. தென் ஆற்காடு | 1,005 |
| 4. சேலம் | 3,496 |
| 5. தர்மபுரி | 863 |
| 6. கோயம்புத்தூர் | 3,671 |
| 7. நீலகிரி | 689 |
| 8. பெரியார் | 2,547 |
| 9. திருச்சிராப்பள்ளி | 2,337 |
| 10. தஞ்சை | 4,167 |
| 11. புதுக்கோட்டை | 346 |
| 12. மதுரை | 2,452 |
| 13. இராமநாதபுரம் | — |
| 14. பசும்பொன் முத்துராமலிங்கம் | 906 |
| 15. காமராசர் | 162 |
| 16. திருநெல்வேலி | 3,511 |
| 17. கன்னியாகுமரி | 1,473 |
| மொத்தம் | 35,072 |

(ஆ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் கிராம மேம்பாட்டுக்கெனவே உருவாக்கப்பட்டது. எனவே, இதனை நகர்ப்புறங்களுக்கு தொடர விதிகளில் இடமில்லை.

[1987 நவம்பர் 17

## குடுதுறையை சுற்றுலா தலமாக்குதல்.

78—வினா 2461—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் கூடுதுறையினை சுற்றுலா தலமாக ஆக்கும் சொற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன?

விடை —

(அ) ஆம்.

(ஆ) அருங்காட்சியகம் அமைத்தல், சாலை அமைத்தல், பூங்காக்கள் அமைத்தல், ஒளிவிளக்குகள் அமைத்தல், சிற்றுண்டி வசதிகள், பெண்களுக்கான உடை மாற்றும் அறை கட்டுதல், வாகனங்கள் நிறுத்த வசதிகள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கிருஷ்ணாநதித் திட்டம் மூலம் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து குடிநீர் வழங்கல்.

79—வினா 2468—திருமதி டி. யசோதா: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணா நதித் திட்டம் மூலம் செம்பரம்பாக்கம் ஏரியில் நிரப்பப்படும் தண்ணீரை சென்னை மக்களுக்கு குடிநீராக வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பகுதி விவசாய மக்களுக்கு விவசாயம் செய்ய அரசு என்ன ஏற்பாடு செய்துள்ளது?



ஆவணக்காப்பக ... சென்னை-600 008. 136540

நவம்பர் 17]

விடை —

(அ) ஆம்.

(ஆ) செம்பரம்பாக்கம் ஏரியின் முழு நீர் மட்டத்தினை 2 அடி உயர்த்தும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் ஏரியின் கொள்ளளவு அதிகரிக்கும். இக்கூடுதல் கொள்ளளவு கிருஷ்ணா நீரைத் தேக்கி வைக்க உபயோகிக்கப்படும். மேலும், இந்த ஏரியின் தற்போதைய நீர்வரத்து முழுவதும் பாசனத்திற்கே பயன்படுத்தப்படும்.

பூண்டியிலிருந்து பெறப்படும் கிருஷ்ணா நீரின் அளவு மற்றும் நீர் பிடிப்பு பகுதியிலிருந்து பாசனத்திற்காக பயன்படும் நீரின் அளவு ஆகியவற்றிற்குத் தனித்தனியாக கணக்குகள் வைத்து பராமரிக்கப்படும்.

## ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் கசிவுநீர் குட்டைகள் பழுதுபார்க்கும் பணி.

80—வினா 2470—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின்கீழ் ஏற்கெனவே அமைக்கப்பட்டு பழுதான கசிவு நீர் குட்டைகள் பழுது பார்க்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணம் என்ன?

விடை—

(அ) ஆம். அரசு அறியும்.

(ஆ) ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் (ஆர். எல். இ. ஜி. பி) புதியதாக கசிவு நீர்க் குட்டைகள் அமைப்பதற்குத்தான் மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஏற்கெனவேயுள்ள குட்டைகளைப் பழுது பார்க்கவோ பராமரிக்கவோ அனுமதி வழங்கவில்லையாகையால் அந்த வேலைகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனினும் கசிவு நீர்க் குட்டைகள்

கட்டி முடிக்கப்பட்டவுடன் அவற்றை பராமரிக்க அந்தப் பகுதிக் குட்பட்ட ஊராட்சி ஒன்றியங்களிடத்தில் வேளாண்மைப் பொறி யியல் துறையினரால் ஒப்படைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பின்பு அவற்றை பராமரிக்கவும் பழுது பார்க்கவும் ஊராட்சி ஒன்றியங்கள் நடவடிக்கைகள் மேற் கொள்ளும்.

## ஆலம்பாடியிலுள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கம்.

81—வினா 2472—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி குஜிலியம்பாறை ஒன்றியம் ஆலம்பாடியில் உள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கத்திற்கென செட்டி நாடு சிமெண்ட் நிறுவனத்திடமிருந்து ராயல்டி மற்றும் அதன் மீதான உள்ளூர் வரி, உள்ளூர் மேல்வரி வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், ஆண்டுக்கு எவ்வளவு தொகை?

(இ) எந்த ஆண்டு வரை அந்த நிறுவனம் செலுத்தி யுள்ளது?

விடை—

(அ) செட்டிநாடு சிமெண்ட் கம்பெனியிடமிருந்து அவர்கள் எடுக்கும் சுண்ணாம்புக் கற்களுக்குரிய ராயல்டி பாக்கி இல்லா மல் வசூலிக்கப்பட்டு வருகின்றது. ராயல்டி மீதான உள்ளூர்வரி, உள்ளூர் மேல்வரி வசூலிக்க உச்ச நீதி மன்றத்தின் தடை இருப் பதால் உள்ளூர் வரி, உள்ளூர் மேல்வரி வசூலிக்கப்படவில்லை. ஆனால் அரசு குறிப்பாணை எண். 37080/டி111/70-15, நாள். 4—3—1971-ன்படி உள்ளூர் வரி மற்றும் உள்ளூர் மேல்வரிக்காக முடக்கு வரிக்குச் சமமான தொகையை காப்புத் தொகையாக வசூலிக்கப்பட்டு வருகின்றது.



(ஆ) திருவாளர், செட்டிநாடு சிமெண்ட் நிறுவனத்தார் சுண்ணாம்புக் கற்கள் வெட்டியெடுக்கும் அளவிற்கு ராயல்டி செலுத்தி வருகின்றது.

| வருடம். | சுண்ணாம்புக் கற்கள் எடுக்கப் பட்ட அளவு (டன்களில்) | இராயல்டி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1983 | 3,35,000 | 11,22,086.25 |
| 1984 | 5,60,000 | 22,21,074.00 |
| 1985 | 5,15,000 | 21,37,500.00 |

மேலும் இந்நிறுவனத்திடமிருந்து ஆண்டொன்றுக்கு கீழ்க் காணும் தொகையும் வசூலிக்கப்படுகிறது.

| | ரூ. |
|---|---|
| ராயல்டியின் மீதான உள்ளூர் வரி, உள்ளூர் மேல்வரிக்காக முடக்கு வரிக்குச் சமமான காப்புத் தொகை | 9,439.87 |
| தரை வாடகை | 433.86 |
| தரை வாடகையின் மேல் உள்ளூர் வரி, உள்ளூர் மேல் வரி. | 195.24 |
| உள்ளூர் மேல் வரி | 1,084.65 |
| | 11,153.62 |

(இ) மேற்கூறிய தொகைகளை இந்நிறுவனம் 1985 ஆம் ஆண்டு வரை செலுத்தியுள்ளது.

## அரசு பரிசுச்சீட்டு விற்பனையில் அரசுக்குக் கிடைத்த லாபம்.

82. வினா 2489—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1977 முதல் 1984 முடிய தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டு விற்பனையில் அரசுக்கு கிடைத்த லாபம் எவ்வளவு?

(ஆ) கோயில் திருப்பணிக்கு என்று தனியாக பரிசுச்சீட்டு நடத்தப்படுமா?

[1987 நவம்பர் 17

விடை—

(அ) தமிழ் நாட்டில் 1977 முதல் 1984 முடிய அரசுக்குக் கிடைத்த வருவாய் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

| | |
|---|---|
| 1977—78 | 176 இலட்சம் |
| 1978—79 | 194 இலட்சம் |
| 1979—80 | 158 இலட்சம் |
| 1980—81 | 229 இலட்சம் |
| 1981—82 | 313 இலட்சம் |
| 1982—83 | 300 இலட்சம் |
| 1983—84 | 54 இலட்சம் |
| 1984—85 | 49 இலட்சம் |

(ஆ) கோயில் திருப்பணிக்கு என்று தனியாக பரிசுச் சீட்டு நடத்த பிரேரணை ஒன்றும் பரிசீலனையில் இல்லை.

**சென்னை நகரில் சைக்கிள் ரிக்ஷாக்களை ஒழிக்கும் திட்டம்.**

83. **வினா எண்.** 2495—**திரு. இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் எத்தனை சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) சைக்கிள் ரிக்ஷாக்களை ஒழிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

(அ) சென்னை நகரில் 31—12—1985 வரை இயந்திரம் பொருத்தப்பட்ட 468 சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும் 4,743 சாதாரண சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) ரிக்ஷா ஓட்டுநர்களின் உடல் வலிமையைக் களையும் வகையிலும், இயந்திரம் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு அதிக எண்ணிக்கையில் உரிமங்கள் வழங்க வேண்டியும் புதிய சைக்கிள் ரிக்ஷாக்களுக்கான உரிமங்களை 17—2—1981 ஆம் நாளுக்குப் பிறகு வழங்க வேண்டாமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் மனித சக்தியால் இயக்கப்படும் சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு வழங்கப்படும் உரிமங்களை ஆண்டுதோறும் 10 விழுக்காடு குறைத்துக் கொண்டு வந்து அவற்றை நாளடைவில் அறவே ஒழித்திட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.





**குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வோருக்கு ஊக்கத் தொகையை அதிகரித்தல்.**

84—வினா 2496—**திரு. இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வோருக்கு அளிக்கும் ஊக்கத் தொகையை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

(இ) 1980 முதல் 1984 முடிய ஒவ்வொரு ஆண்டும் தமிழ் நாட்டில் எத்தனை பேர் அறுவை சிகிச்சை செய்துள்ளார்கள்.

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ)

| | |
|---|---|
| 1980—81 | 1,38,831 |
| 1981—82 | 1,88,828 |
| 1982—83 | 2,70,719 |
| 1983—84 | 4,96,780 |
| [illegible] | 5,25,341 |

[1987 நவம்பர் 17

**தமிழக அரசு முத்திரை சின்னம்.**

85—வினா 2518—**திரு, இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பார்—

(அ) தமிழக அரசு முத்திரை சின்னம் திருவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் கோவில் கோபுரத்தை மாதிரியாகக் கொண்டதா?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசு பயன்படுத்தும் அரசு முத்திரையில் காணப் பெறும் கோயில் கோபுரம், தென்னிந்தியக் கோயில் கோபுரம் ஒன்றின் மாதிரி வடிவமாகும். அது எந்த ஒரு குறிப்பிட்ட கோயில் கோபுரத்தின் மாதிரி வடிவமும் அல்ல.

**1984-ல் தமிழ் நாட்டில் நடைபெற்ற சட்டமன்ற நாடாளுமன்ற, தேர்தலுக்கு செலவிடப்பட்ட தொகை.**

86—வினா 2521—**திரு. இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1984-இல் நடைபெற்ற நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களில் அரசுக்கு செலவான தொகை எவ்வளவு?

(ஆ) இதில் மத்திய அரசின் பங்கு என்ன?

**விடை—**

(அ) தமிழ் நாட்டில் 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற சட்டமன்ற தேர்தல்களில் அரசுக்கு, இதுவரை, ரூ. 9,96,79,031.45 செலவானதாக கணக்கிடப்பட்டுள்ளது.

(ஆ) மொத்த செலவில் 50 விழுக்காடு தொகை மத்திய அரசின் பங்கு ஆகும்.



1987 நவம்பர் 17]

**அழகர் கோவில் காடுகளிலுள்ள பெரிய அணில் இனத்தைப் பாதுகாத்தல்.**

87—வினா 2540—**திரு. இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, செம்பகத் தோப்பு, அழகர் கோவில் காடுகளில் காணப்படும் உலகத்திலேயே பெரிய 'அணில்' இனத்தைப் பாதுகாக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது?

(ஆ) அணில் வேட்டையைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) இந்த பெரிய அணில் முற்றிலும் பாதுகாக்கப்படும் இனமாகக் (Protected Species) கருதப்பட்டு 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம் முதல் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, இதை வேட்டையாடுதல் குற்றமாகும். வேட்டையைத் தடுக்க அப்பகுதியில் வனக் காவலாளிகள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

**செண்பகத் தோப்பு மலைவாழ் மக்களுக்காக கிராமத் தொழில்கள் தொடங்குதல்.**

88—வினா 2563—**திரு. இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு சத்துணவு சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் செண்பகத் தோப்பு மலைவாழ் மக்களுக்கென தேன் சேகரித்தல் போன்ற கிராமத் தொழில்கள் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

விடை—

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 30 பேருக்கு தேனீ வளர்ப்புப் பயிற்சி அளித்தது. செண்பகத் தோப்பு மலைவாழ் மக்கள் நலனுக்கென தேனீ வளர்ப்பு கூட்டுறவுச் சங்கமும் அமைக்க வாரியம் நடவடிக்கை மேற்கொண்டது. ஆனால், அவர்கள் விரும்பியபடி ஏற்கனவே செண்பகத் தோப்பில் இயங்கி வரும், பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பின்னர் போதிய வாய்ப்புகள் ஏற்படின் தனியாக தேனீ வளர்ப்புக்கென கூட்டுறவுச் சங்கம் அமைக்க வாரியம் உரிய நடவடிக்கை எடுக்கும்.

### தமிழக மீனவர்களை பாதுகாக்க கடலோரப் பகுதிகளில் ரோந்துப்படை

89—வினா 2571—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இலங்கை இராணுவத்திடமிருந்து தமிழக மீனவர்களை பாதுகாக்கும் வகையில் தமிழக கடலோரப் பகுதிகளில் ரோந்துப் படை விரிவாக்கப்படுமா?

விடை—

இந்தியா-ஸ்ரீலங்கா ஒப்பந்தப்படி கச்சத்தீவு ஸ்ரீலங்கா வசம் ஒப்படைக்கப்பட்டது. கச்சத்தீவைச் சுற்றி இறால் மீன்கள் அதிகம் உள்ளன. நமது மீனவர்கள் அங்கு தெரிந்தோ தெரியாமலோ மீன் பிடிக்கச் சென்று விடுகின்றனர். நமது மீனவர்கள் நமது கடல் எல்லைக்குள் தக்க பாதுகாப்புடன் மீன் பிடிக்க மாற்று அடிப்படையில் ரோந்துப் பணி செய்ய இந்திய கடலோர காவற்படை மூன்று கப்பல்களையும் தயார் நிலையில் வைத்துள்ளனர். அன்றாடம் ஒரு கடலோர காவற்படை கப்பலும் இந்திய கப்பற்படையின் ஒரு கப்பலும் ஒரு கப்பற்படையின் ஹெலிகாப்டரும் நிரந்தரமாக ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இதனை விரிவுபடுத்த அரசு ஆராய்ந்து வருகிறது.





### ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சத்துணவுத் திட்டத்தை சேர்த்துக் கொள்ளுதல்.

90—வினா 2575—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சத்துணவு சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 7-வது ஐந்தாண்டு திட்டத்தில் சத்துணவுத் திட்டத்தைச் சேர்த்துக் கொள்ள மத்திய அரசு இசைந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தை தமிழ்நாட்டின் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள மத்திய திட்டக்குழு ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால் அப்பணிக்குத் திட்ட நிதி ஒதுக்கீடு அளவைக் குறிப்பிடவில்லை. இருப்பினும் இவ்வைந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆண்டுத் திட்டம் போடும் பொழுது, மாநில வரவு-செலவுத் திட்டத்தில் இப்பணிக்குத் தகுந்த திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

'காட்கில்' விதிப்படி 'மொத்த மான்யம்' 'மொத்தக் கடன்' என்ற அடிப்படையில் மாநிலத்திற்கு மத்திய திட்ட உதவி அமைவதால் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற்கென்று தனியாக மத்திய உதவியை பெற முடியாது. இப்பணிச் செலவை அரசே முழு அளவில் ஏற்கும்.

### சென்னையில் அதிகப்படியாக கட்டணம் கேட்கும் ஆட்டோ ஓட்டுநர்கள் மீது நடவடிக்கை.

91—வினா 2584—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் குறிப்பிட்ட இடத்திற்கு வர மறுக்கும் ஆட்டோ டிரைவர்கள் மீதும், அதிகப்படியான கட்டணம் கேட்கும் ஆட்டோ டிரைவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கவும்;

(ஆ) ஆட்டோவில் மீட்டர்கள் ஒழுங்காக வேலை செய்வதைக் கண்காணிக்கவும், அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) பொது மக்களிடமிருந்து வரும் புகார்களுக்கு உடனடியாக ஓட்டுநர்கள் மீதும், அவ்வூர்தியின் உரிமையாளர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து, விளக்கம் பெற்று, உரிய தண்டனைகள் வழங்கப்படுகின்றன. ஆட்டோவில் மீட்டர்கள் ஒழுங்காக வேலை செய்வதைக் கண்காணிக்க மோட்டார் வாகன ஆய்வாளர் (பறக்கும்படை) செயல்பட்டு, குற்றம் கண்டுபிடித்து, தவறு செய்யும் ஓட்டுநர் மீதும், உரிமையாளர் மீதும் நடவடிக்கை எடுத்து உரிய தண்டனைகள் வழங்கப்படுகின்றன.

**சென்னை நகரப் பேருந்துகளில் ஜேப்படியைத் தடுக்க காவலர்களை நியமிக்கும் திட்டம்.**

92—வினா 2597—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரப் பேருந்துகளில் ஜேப்படியைத் தடுப்பதற்காக நெரிசலான நேரங்களில் காவலர் (உடுப்பு அணியாத) நியமிக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

கூட்ட நெரிசல் நாட்களிலும், சம்பள பட்டுவாடா நாட்களிலும், பேருந்து நிலையங்களிலும், மிகவும் நெரிசல் உள்ள பேருந்து வழித்தடங்களிலும், சீருடை அணியாது சாதாரண உடையணிந்த காவல் துறையினர் ஜேப்படி திருட்டை தடுக்கும் வண்ணம் செயல்படும் திட்டம் சென்னை நகரில் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது.



**திருவில்லிப்புத்தூர் நகர் மாரியம்மன் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கத்தின் கோரிக்கை.**

93—வினா 2602—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் நகர் இண்ட். 49 மாரியம்மன் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கத்திற்கு வேண்டிய மூலப் பொருட்களை வெளி மாநிலங்களிலும் வெளி இடங்களிலும் கொள்முதல் செய்யும்போது, கொள்முதல் வரி விலக்கு செய்ய வேண்டும் என அரசுக்கு அச்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், கோரிக்கை மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) நிலக்கடலை மீதான வரி விதிப்பு 17—3—1986-க்கு முன் முதல் விற்பனை முனையில் இருந்தது. அதன்பின் வெளி மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்து கொண்டுவரும் நிலக்கடலை மீது 3 விழுக்காடு முதல் விற்பனை முனையிலும், இதுவல்லாது பிற நிலக்கடலை கொள்முதலுக்கு 3 சதவீத வரி முதல் கொள்முதல் முனையில் விதிக்கப்படுகிறது. எனவே வெளி மாநிலங்களிலிருந்து சரக்குகள் கொள்முதல் செய்யப்படும் பொழுது இந்த மாநிலத்தில் கொள்முதல் வரி விதிக்கப்படுவதில்லை. எனவே, வெளி மாநிலங்களிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் மாரியம்மன் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம் செய்யும் கொள்முதல்களுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்ற கேள்விக்கே இடமில்லை. இந்த மாநிலத்தில் கொள்முதல் செய்வதைப் பொறுத்தமட்டில் அரசு ஆணை எண் 2469, வருவாய், நாள் 31—7—1970-ன்படி கூட்டுறவு எண்ணெய் உற்பத்தியாளர் சங்கத்தில் உறுப்பினராக உள்ளவர்கள் சொந்தமாக நாட்டு செக்கின் மூலம் உற்பத்தி செய்யப்படும் எண்ணெய்க்காக வாங்கப்படும் நிலக்கடலை மற்றும்

நிலக்கடலைப் பருப்பு போன்ற பொருள்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு கொள்முதல் வரி விலக்கு அளிக்கப்பட்டது. முகவை மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் இண்ட் 49 மாரியம்மன் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம் அரசு ஆணையில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறியதால் கொள்முதல் வரி விதிக்கப்பட்டது. அவ்வாறு விதிக்கப்பட்ட கொள்முதல் வரியினைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரிக்கை மனு வந்துள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

## சென்னை நகரில் வீட்டு வரி விதிப்பு சீர்படுத்தல்.

94—வினா 2613—திரு. இரா.— தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் வீட்டுவரி விதிப்பதில் உள்ள குழப்பத்தைச் சீர்படுத்துவது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—

(அ) குழப்பம் ஏதுமில்லை.

(ஆ) ஆனால் இப்போதுள்ள முறையை மேலும் சீரமைக்க ஆபரேஷன் ரிசர்ச் குரூப் **(Operation Research Group)** என்ற வரி ஆலோசனைக்குழு தற்பொழுது கடைப்பிடித்து வரும் வரிவிதிப்பு முறைகளை ஆராய்ந்து சீரிய முறையில் திருத்தி அமைக்க கருத்துக்களை தெரிவிக்கும்படி நியமிக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய பரிந்துரைகள் விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றன.



## கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சுகாதார நிலையங்களில் பண மோசடி நடைபெற்றதாக வரப்பெற்ற புகார்.

95—வினா 2615—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சுகாதார நிலையங்களில் சேர்ந்த பணம் ரூ. 5 இலட்சம், அதிகாரிகள் மோசடி செய்ததாக அரசுக்குப் புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## சென்னை விமான நிலையத்தில் புதிய விமான நிலையம் கட்டுதல்.

96—வினா 2639—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை விமான நிலையத்தில் புதிய விமான நிலையம் கட்டவும், சர்வதேச விமான நிலைய கட்டிடம் கட்டவும் மத்திய அரசை மாநில அரசு பரிந்துரை ஏதும் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஏற்கனவே இவ்வகை செயற்குறிப்பு மத்திய அரசின் சிவில் விமான போக்குவரத்துத் துறையின் பரிசீலனையில் உள்ளது.

[1987 நவம்பர் 17

### விராலிமலைப் பகுதியை சுற்றுலா தலமாக்குதல்.

97—வினா 2720—திரு. க. சோலைராசு : மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், விராலிமலைப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள விராலிமலை மாவட்ட சுற்றுலா மையமாக தேர்வு செய்யப்பட்டு இரண்டாவது கட்டத்தில் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

### பெரிய புலியூர் எரிசாராயத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவுநீர்.

98—வினா 2742—திரு. பொ. உத்திராபதி மற்றும் திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிக்கு அருகிலுள்ள பெரியபுலியூர் எரிசாராயத் தொழிற்சாலைக் கழிவுநீர் பவானி ஆற்றில் கலக்கப்பட்டு பொது மக்கள் பெரும் பாதிப்பிற்குள்ளானதாகப் புகார்கள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக மேற்படி தொழிற்சாலை வெளியிடுகின்ற கழிவு நீரினால் மாசு ஏற்படாமல் தடுக்க தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.



1987 நவம்பர் 17]

### சென்னை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை, கும்பகோணம் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் மூலம் அஞ்சல் செய்தல்.

99—வினா 2748—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் மூலம் சென்னை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் அஞ்சல் செய்யும் வகையில் அமைக்கும்படி மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யும் உத்தேசம் உள்ளதா?

விடை—

சென்னை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை கும்பகோணம் உட்பட தமிழ்நாட்டில் உள்ள எல்லா தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்களிலிருந்தும் அஞ்சல் செய்யும் வகையில் 'மைக்ரோ வேவ்' தொடர்பு மூலம் இணைக்கப்பட வேண்டும் என்று அரசு வலியுறுத்தி வருகிறது.

### தாம்பரத்திலிருந்து வண்டலூர் உயிரியல் பூங்காவிற்கு செல்லும் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

100—வினா 2756—திரு. எல். இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரத்திலிருந்து வண்டலூர் உயிரியல் பூங்காவிற்கு செல்லும் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : வடபழனியிலிருந்து தாம்பரம் செல்லும் 18-என் எண் கொண்ட பேருந்துகளின் எண்ணிக்கை நான்கு அதிகரிக்கப்பட்டு அவை வண்டலூர் பூங்காவரை தற்போது

இயக்கப்படுகின்றன. மேலும் தடம் 18-ஏ என்று பிராட்வே யிலிருந்து தாம்பரம் வரை இயக்கப்படும் பேருந்துகள் அனைத்தும் 5—8—1985 முதல் சனிக்கிழமைகள், ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் விடுமுறை நாட்களில் வண்டலூர் பூங்காவரை இயக்கப்படுகின்றன.

**உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள்.**

101—வினா 2842—**திரு. கோ. வீரய்யன்** : மாண்புமிகு நிதி யமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப் பட்ட நிலங்கள் கோர்ட் தாவாவில் உள்ளனவா ?

(ஆ) அப்படி இருந்தால் எத்தனை வழக்குகள் ?

(இ) எவ்வளவு நிலம் சம்பந்தப்பட்டது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 143.

(இ) சம்பந்தப்பட்ட நிலம் 12,555 ஏக்கர்கள்.

**சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியில் பழுதடைந்துள்ள குடிநீர் மோட்டார்களை சீர் செய்தல்.**

102—வினா 2888—**திரு. ச. கோவிந்தசாமி** : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியில் பழுதடைந் துள்ள குடிநீர் மோட்டார்களை சீர் செய்ய எடுக்கப்பட்ட நடவ டிக்கை யாது ?

விடை—

சேலம் மாவட்டம், எடப்பாடி குடிநீர் திட்டத்தின் கீழ் அமைக்கப் பெற்றுள்ள இரண்டு மின்விசை நீரேற்று இயந்தி ரங்கள் நீண்டகால ஓட்டத்தினால் பழுதடைந்தன. அவை கடந்த



ஏப்ரல் மாதம் மாற்றி அமைக்கப்பட்டன. அவற்றில் ஒன்று சிறப்பான முறையில் இயங்கி வருகிறது. மற்றொன்றின் மின் சுருள் சோதனை ஓட்டத்தின்போது எரிந்துவிட்டதால் இதனை பழுது பார்க்கும் பணி விரைவில் முடிக்கப்பெற்று குடிநீர் வழங்கு வதில் ஏற்பட்டுள்ள தடைகள் களையப்படும்.

**வேடசந்தூர் தாலுக்கா, உல்லியக்கோட்டை கிராமத்தில் குட்டை அமைத்தல்.**

103—வினா 3326—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலுக்கா, உல்லியக்கோட்டை கிரா மத்தில் சர்வே எண் 948, 950-ல் குட்டை அமைக்க ஆய்வு நடத்தப் பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்பொழுது துவங்கும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மேற்படி குட்டை தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், சர்வே எண் 962/2-ல் ரூ. 2.10 இலட்சம் மதிப் பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

**மதுரை திருமலை நாயக்கர் மகாலை அரும்பொருட்காட்சியகமாக மாற்றல்.**

104—வினா 3330—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் உள்ள திருமலை நாயக்கர் மகாலை அரும் பொருட் காட்சியகமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீல னையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1987 நவம்பர் 17

விடை—

(அ) திருமலை நாயக்கர் மகாலில் ஏற்கெனவே ஒரு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு 1978 முதல் இயங்கி வருகிறது. விரிவாக்கும் திட்டம் எதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### கிருட்டினகிரி ஊராட்சி ஒன்றியம் கண்ணம்பள்ளி கோயில் முதல் பாலகுளி வரையுள்ள சாலைப்பணி.

105—வினா 3948—திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் கிருட்டினகிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கண்ணம்பள்ளி கோயில் முதல் பாலகுளி கிராமம் வரை உள்ள சாலை ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் 1985-86 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது எடுத்து முடிக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) 1985-86 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு குறைவாக இருந்ததால், இச்சாலைப் பணி எடுத்துக்கொள்ளப்படவில்லை. எனினும், 1987-88 ஆம் ஆண்டு ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் வரைமுறைக்கு உட்பட்டிருந்தால் சேர்த்துக் கொள்ளப்படும்.



### உப்பிலியாபுரம் தொகுதி, பச்சைமலைப் பகுதியை தனி ஊராட்சி ஒன்றியமாக்கல்.

106—வினா 4382—திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உப்பிலியாபுரம் தொகுதி பச்சைமலையிலுள்ள வண்ணாடு பஞ்சாயத்து, கோம்பை பஞ்சாயத்து, தென்புறநாடு பஞ்சாயத்து, சேலம் மாவட்டத்தில் உள்ள ஆத்திநாடு பஞ்சாயத்துக்களைச் சேர்த்து தனி ஊராட்சி ஒன்றியமாக அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

பச்சைமலைப் பகுதியை தனி ஊராட்சி ஒன்றியமாக அமைக்க கோரி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார். இந்த வேண்டுகோள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

### சேலம் மாவட்டம், சேந்தமங்கலத்திலுள்ள பேருக்குறிச்சி, பள்ளிப்பட்டி கிராமங்களுக்குக் குடிநீர்.

107—வினா 5248—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் பகுதியிலுள்ள பேருக்குறிச்சி, பள்ளிப்பட்டி ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க திட்டம் எதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

[1987 நவம்பர் 17

விடை—

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் ஒன்றியம் பேளுக்குறிச்சி மற்றும் பள்ளிப்பட்டிக் குடியிருப்புகளுக்கென அமைக்கப்படவுள்ள குடிநீர்த் திட்ட மதிப்பீடுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டிற்குள் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

**சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.**

108—வினா 6794—திரு. செ. செம்மலை: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், திண்டமங்கலம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பஞ்சு காளிப்பட்டி, மேல் காளிப்பட்டி ஆகிய இடங்களுக்காக கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், திண்டமங்கலம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட மேல்காளிப்பட்டி கிராமம் வகை 6-லிருந்து வகை 3-க்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதே பஞ்சாயத்தைச் சேர்ந்த பஞ்சு காளிப்பட்டி கிராமம் வகை 6-லிருந்து வகை 3-க்கு மாற்றம் செய்த பின்னர் மேற்கண்ட இரண்டு கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் 1987-88 ஆம் நிதி ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு செயல் படுத்தப்படும்.



1987 நவம்பர் 17]

**உதகை ஒன்றியம் காரக்கல் கிராமத்திற்குக் குடிநீர்.**

109—வினா 5977—திரு. கே. உச்சி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை ஒன்றியத்தைச் சேர்ந்த கரக்கல் கிராமத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்பொழுது துவங்கப்படும்?

(இ) அதற்கான திட்ட மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் ஒன்றியம் கரக்கல் குடியிருப்புக்கு, ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் ஒரு குடிநீர்த் திட்டம் அமைத்திட ஆய்வுப் பணிகள் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணி முடிவுற்றதும் திட்ட மதிப்பீடு தெரியவரும். திட்டப் பணிகள் நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள் துவங்கப்பெறும்.

**ஊட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊர்மலை, ஒசட்டி பகுதிகளுக்கு குடிநீர்.**

110—வினா 5978—திரு. கே. உச்சி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதி ஊட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊர்மலை, ஒசட்டி ஆகிய பகுதிகளுக்குக் குடிநீர்த் திட்டப்பணி முடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான மதிப்பீடுத் தொகை எவ்வளவு

[1987 நவம்பர் 17

விடை—

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் ஒன்றியத்தைச் சேர்ந்த ஊர்மலை, ஒசட்டி பகுதிகளுக்கு அமைக்கப்படவுள்ள குடிநீர்த் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு, முடிவு பெறும் நிலையில் உள்ளன. இப்பணி முடிவுற்றதும், திட்ட மதிப்பீடு தயாரிக்கப்படும். நடப்பு நிதியாண்டிற்குள் இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**வெளி மாநிலங்களுக்கு வைக்கோல் அனுப்புதலை தடை செய்தல்**

111—வினா 6787—**திரு. இரா. தாமரைக்கனி**: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து வெளிமாநிலங்களுக்கு வைக்கோல் அனுப்புவது தடை செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் வைக்கோல் பற்றாக்குறையுள்ளதால் 1955 ஆம் ஆண்டு இன்றியமையாத சட்டம், பிரிவு 3-ன் கீழ் கால் நடைகளின் தீவனமான வைக்கோலை முன் அனுமதி இல்லாமல் தமிழ்நாட்டில் இருந்து வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடாது என்று 1983-ம் ஆண்டிலிருந்து அவ்வப்போது தடை விதித்து, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கடைசியாகப் பிறப்பிக்கப்பட்டுள்ள தடை ஆணை 9—10—1986 முதல் 8—4—1987 வரை அமுலில் இருக்கும்.



1987 நவம்பர் 17]

**சேலம் மாவட்டம் தாரமங்கலம் யூனியன் மல்லியக்குட்டை ஆதி திராவிடர்களுக்கு குடிநீர்.**

112—வினா 7496—**திரு. செ. செம்மலை**: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் யூனியன் மல்லியக்குட்டை ஆதி திராவிடர்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்கும் வகையில் ஒரு ஆழ்குழாய் கிணறு அமைக்கும் திட்டம் உள்ளதா?

விடை—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியத்திலுள்ள மல்லியக்குட்டை ஆதி திராவிடர் குடியிருப்புக்கு, மல்லியக் குட்டை கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கப்பெற்று வருகிறது.

**சேலம் மாவட்டம், இருசாகவுண்டன்புதூர், சின்னராசன் வளைவு, ஆத்தூரான் வளைவு ஆகிய இடங்களுக்குக் குடிநீர்.**

113—வினா 7508—**திரு. செ. செம்மலை**: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் யூனியன், ராமிரெட்டிப்பட்டி பஞ்சாயத்துக்குட்பட்ட இருசாகவுண்டன்புதூர், சின்னராசன் வளைவு, ஆத்தூரான் வளைவு ஆகிய இடங்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்க ஆழ்குழாய் கிணறு (போர்வெல்) அமைக்கப்படுமா?

விடை—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியத்தில் இருசாகவுண்டன்புதூர் குடியிருப்பின் மக்கட்தொகை 153 ஆகும். இங்குள்ள கைபிறைப்பான் ஒன்று குறைந்த அளவே நீர் தருவதால் இங்கு மாற்று ஆழ்துளைக் கிணறு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வொன்றியத்திலுள்ள பின்வொரசன் வளைவு மற்றும் ஆத்தூரான் வளைவு ஆகிய குடியிருப்புகளுக்கு 1987-88 ஆம் நிதியாண்டில் குடிநீர் வசதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பெறும்.

### தமிழ்நாட்டில் T.N.S.C. வங்கி கிளைகள்.

114—வினா 7690—திரு. கே. உச்சி : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழ்நாட்டில் T.N.S.C. வங்கியின் கிளைகள் மற்ற மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், மாவட்ட வாரியாக எத்தனை கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### உசிலம்பட்டி தாலுகாவில் காடு வளர்ப்புத் திட்டம்.

115—வினா 8278—திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய அரசின் திட்டமான என்.ஆர்.இ.பி. போன்ற பணிகளில் காடு வளர்ப்பு பணிக்காக ஒன்றிய அலுவலகங்கள் மூலம் 1985-86-ம் ஆண்டுக்காக ரூ. 4 இலட்சத்திற்கும் மேலாக ஒதுக்கப்பட்டு, தற்சமயம் மழை இல்லாத காரணத்தால் உசிலம்பட்டி தாலுகாவில் இத்திட்டம் முழுமையான தோல்வியை தழுவிடும் நிலை குறித்து மறுபரிசீலனை செய்ய தமிழக அரசு மத்திய அரசைக் கோர திட்டமிட்டுள்ளதா ?





விடை—

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம் ஆகியவற்றின்கீழ் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் உசிலம்பட்டி தாலுகாவைச் சேர்ந்த உசிலம்பட்டி, சேடப்பட்டி மற்றும் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியங்களில், 1985-86-ம் ஆண்டு நடப்பட்ட கன்றுகளில் 35 விழுக்காடுகள் மழையின்மை காரணத்தால் பட்டுப் போயின. எஞ்சியவை நடப்பட்டு பெரும்பாலும் வளர்ந்துள்ளன. இத்திட்டம் செயல்படுவது பற்றி மறுபரிசீலனை செய்யக் கோரும் கருத்துரு அரசிடமில்லை.

### திருவாரூரில் ஆஃப்செட் அச்சகம்.

116—வினா 8448—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூரில் ஆஃப்செட் அச்சகம் அமைக்க தஞ்சாவூர் மார்க்கெட்டிங் சம்மேளனம் திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### மயிலாடுதுறை-முத்துப்பேட்டை சாலை.

117.—வினா 8480—திரு. பா. மணிமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை-முத்துப்பேட்டை சாலையில் உள்ள வளைவுகளை நேர் செய்வதற்கு ஏதேனும் திட்டம் உள்ளதா ?

விடை—

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் உள்ள வளைவுகளை நேராக்கி சாலையை அகலப்படுத்துவதற்கு நில ஆர்ஜிதம் உட்பட தோராயமாக ரூ. 2 கோடி தேவைப்படும். அரசின் நிதிப்பற்றாக் குறையின் காரணத்தால் தற்போது இப்பணியை உடன் எடுத்துச் செய்ய இயலாது.

**ஜெயங்கொண்டம் தொகுதி, தா. பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1984-85-ல் அமைக்கப்பட்ட சாலைகளின் எண்ணிக்கை.**

118—வினா 8817—**டாக்டர் ந. மாசிலாமணி**: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள தா. பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1984-85 ஆம் நிதியாண்டில் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள சாலைகள் எத்தனை?

(ஆ) ஆகிய செலவு எவ்வளவு?

விடை—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி தா. பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் 1984-85 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சாலைகளின் விவரம்:—

| சாலையின் பெயர். | நீளம் (கி.மீ.) |
|---|---|
| 1. தா. பழூர்-விளாங்குடி சாலையிலிருந்து வானநல்லூர் வரை | 2.00 |
| 2. தா. பழூர்-விளாங்குடி சாலையிலிருந்து மேலமைக்கல்பட்டி | 2.40 |
| 3. தா. பழூர் விளாங்குடி சாலையிலிருந்து பருக்கல் | 2.00 |
| | 6.40 |

(ஆ) ரூ. 6.36 இலட்சம்.



**ஜெயங்கொண்டம், மீன்சுருட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தும் திட்டம்.**

119—வினா 8825—**டாக்டர் ந. மாசிலாமணி**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள மீன்சுருட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**நாகர்கோவிலில் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் பட்டை தீட்டும் பொருட்கள் தயாரிக்கும் திட்டம்.**

120—வினா 8854—**டாக்டர் தே. குமாரதாஸ்**: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் நாகர்கோவிலில் பட்டை தீட்டும் பொருட்கள் (Type remou lding Materials) தயாரிக்கும் உத்தேசம் உண்டா?

விடை—

இல்லை.

[1987 நவம்பர் 17

**நெல்லை மாவட்டம் அச்சன்புதூர் பேரூராட்சி காவல் நிலையம்.**

121—வினா 9191—திரு. தெ. பெருமாள்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் அச்சன்புதூர் பேரூராட்சி காவல் நிலையத்திற்கு கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திருச்சி மாவட்டத்தில் மொத்த நியாயவிலைக் கடைகள்.**

122—வினா 9446—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் இயங்கும் மொத்த நியாய விலைக் கடைகள் (அமராவதி கூட்டுறவு அங்காடி) எத்தனை?

(ஆ) மாவட்டத்தில் எத்தனை குடும்ப கார்டுகள் வழங்கப் பட்டுள்ளன?

விடை—

(அ) திருச்சி மாவட்டத்தில் இயங்கும் மொத்த நியாய விலைக் கடைகள் (அமராவதி கூட்டுறவு அங்காடி) 79.

(ஆ) 9,24,870 குடும்ப கார்டுகள்.



1987 நவம்பர் 17]

**நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதியில் சமையலறைக் கூடங்கள்.**

123—வினா 9457—திரு. கே. உச்சி: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதியில் சத்துணவு சமையலறைக் கூடங்கள் இல்லாத கிராமங்கள் எத்தனை?

(ஆ) அவைகளுக்கு சமையலறைக் கூடங்கள் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியில் 15 கிராமங் களில் சத்துணவு சமையலறைக் கூடங்கள் இல்லை.

(ஆ) மேற்குறிப்பிட்ட கிராமங்களில் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து, சமையலறைக் கூடங்கள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

124—

**பென்னாகரம் தொகுதியில் குடும்ப கார்டுகள் வழங்குதல்.**

124—வினா 9651—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பென்னாகரம் தொகுதியில் பல ஆயிரக்கணக்கான பேர்களுக்கு குடும்ப கார்டுகள் வழங்கப்படாதது அரசின் கவனத்திற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு குடும்ப கார்டு கிடைக்கப் பெறாத அனைவருக்கும் கிடைக்க வகை செய்யப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) பல ஆயிரக்கணக்கான குடும்ப அட்டைகள் வழங்கப்படாமல் உள்ளதாக பென்னாகரம் தொகுதியில் இருந்து புகார்கள் எதுவும் பெறப்படவில்லை.

பென்னாகரம் தொகுதியில் பள்ளிப்பட்டி மற்றும் ஒண்டிக் கோட்டை கிராமங்களில் குடும்ப அட்டைகள் வழங்கப்படவில்லை என்று கோரிக்கைகள் வரப்பெற்று பள்ளிப்பட்டி கிராமத்தில் 129 குடும்ப அட்டைகளும், ஒண்டிக்கோட்டை கிராமத்தில் 58 குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டுவிட்டன.

### குமரி மாவட்டத்தில் முட்டம்-பிள்ளைத்தோப்பு கடற்கரை இணைப்புச்சாலை.

125—வினா 9831—திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில் முட்டம்-பிள்ளைத்தோப்பு கடற்கரை இணைப்புச்சாலை திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—

கன்னியாகுமரி மாவட்டத்தில் குருத்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள முட்டம்-பிள்ளைத்தோப்பு ஆகிய இரு கடற்கரை கிராமங்களையும் இணைக்கும் சாலையினை அமைத்து மேம்பாடு செய்ய 1986-87 ஆம் ஆண்டு ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் ரூ. 5.00 இலட்சம் மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு அதற்கான ஆயத்த பணிகளும் மதிப்பீடும் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. விரைவினில் பணிகள் தொடங்கப்படும் நிலையில் உள்ளது.

### ஜெயங்கொண்டம் தொகுதி, குணமங்கலம் அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்தல்.

126—வினா 9968—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள குணமங்கலம் அரசு மருந்தகத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?



விடை—

அரசாணை நிலை எண் 692, சுகாதாரம், நாள் 28—3—1986-ல் சில மருந்தகங்களுடன் குணமங்கலம் மருந்தகத்தையும் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற ஆணையிடப்பட்டு ஆரம்ப சுகாதார நிலைய இயக்குநரின் நடவடிக்கையில் உள்ளது.

### ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள்.

127—வினா 10019—திரு. கு. ரமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சிகள் குறைந்தது ஒரு தொலைக்காட்சிப் பெட்டியும், பேரூராட்சிகள் குறைந்தது இரண்டு தொலைக் காட்சிப் பெட்டிகளும் கண்டிப்பாக வாங்கி வைத்தாக வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டு நடைமுறைப் படுத்தியுள்ளது உண்மையா?

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கவுன்சில்களின் வேண்டுகோளின்படி இது செய்யப்பட்டுள்ளதா? அல்லது அரசே தீர்மானித்து செய்ததா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

### புதுக்கோட்டை பிரகதாம்பாள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடங்கள்.

128—வினா 10122—திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை பிரகதாம்பாள் மேல்நிலைப்பள்ளியில் புதியதாக வகுப்பறைகள் கட்டித் தரப்படுமா?

(ஆ) சைக்கிள் ஸ்டாண்டு கட்டித் தரப்படுமா?

(இ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

(அ) இது குறித்து கருத்துருக்கள் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) மற்றும் (இ) இப்பள்ளியில் 600 சைக்கிள்கள் நிறுத்துவதற்கு வசதியாக ஸ்டாண்டு கட்டித்தர நடவடிக்கைகள் புதுக்கோட்டை முதன்மை கல்வி அலுவலரால் மேற்கொள்ளப்பட உள்ளது.

**தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்கோயிலில் ஆதி திராவிடர் மற்றும் நரிக்குறவர்களுக்கு பட்டா.**

129—வினா 10327—**திரு. சா. ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்கோயில் நகர எல்லைக்கு உட்பட்ட காந்தியார் வீதியில் ஆர்.எஸ். எண் 18-ல் குடியிருக்கிற ஆதி திராவிடர், நரிக்குறவர் மற்றும் இருளர் சமுதாயத்தினர் ஆகியவர்களுக்கு மேற்படி இடத்தை பட்டா செய்து கொடுக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பட்டா கொடுக்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பொதுப்பணித்துறையினரின் இசைவு கேட்கப்பட்டுள்ளது. மேற்படி துறையினரிடமிருந்து இசைவைப் பெற்றவுடன் பட்டா கொடுக்கப்படும்.



**மத்திய அமைச்சரால் கதர்த் துறைக்கு வழங்கப்பட்ட நிலங்கள்.**

130—வினா 10427—**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்கள் கதர்த்துறைக்கு இலவசமாக முப்பது ஏக்கர் நிலம் வழங்கியுள்ளார் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

(இ) என்ன தேவைக்காக அந்த நிலங்களை பயன்படுத்த அரசு முடிவு செய்துள்ளது ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்கள் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் கண்டனூர் கிராமத்தில் தமக்குச் சொந்தமான நிலத்தில் சுமார் 30 ஏக்கர் நிலத்தை கதர் வாரியத்தின் மூலம் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டங்களை தொடங்கிட வாரியத்திற்கு வழங்கியுள்ளார். வேலை வாய்ப்பளிக்கக்கூடிய 7 அலகுகளை அங்கு துவங்க வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், மாவனல்லா பகுதிக்கு குடிநீர் வசதி.**

131—வினா 10443—**திரு. கே. உச்சி :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், மாவனல்லா பகுதியில் போதுமான அளவு குடிநீர் வசதி இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், மாவனல்லா கிராமத்திற்கு குடிநீர் வழங்க ரூ. 4.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் நடப்பு நிதியாண்டிற்குள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்படும்.

## தஞ்சை மாவட்டம், வல்லம் பேரூராட்சியில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி.

132—வினா 10476—திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வல்லம் பேரூராட்சியில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை நடைபெறும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## கோவில்பட்டி பூவநாதசாமி கோவிலுக்கு கல்யாண மண்டபம் மற்றும் தங்கும் விடுதி.

133—வினா 10484—திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி பூவநாதசாமி கோவிலுக்கு (செண்பக வல்லி அம்மன் கோவில்) கல்யாண மண்டபமும் தங்கும் விடுதியும் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?



விடை—

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி பூவநாதசாமி திருக்கோயிலுக்கு (செண்பகவல்லி அம்மன் கோயில்) அனைத்து வசதிகளுடன் கூடிய திருமண மண்டபம் ரூ. 3,00,000 உத்தேச மதிப்பீட்டுத் தொகையில் கட்ட உத்தேசிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

## தமிழகத்தில் செயற்கை முத்து தயாரித்தல்.

134—வினா 10520—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் செயற்கை முத்து தயாரிப்பு எந்நிலையில் உள்ளது?

விடை—

1983-ம் ஆண்டு ஜூலை திங்களில் நிறுவப்பட்ட கூட்டு நிறுவனம் தமிழ்நாடு முத்து நிறுவனமாகும். இந்நிறுவனத்தில் 1983-ம் ஆண்டு நவம்பர் திங்களில்தான் பணிகள் துவங்கப்பட்டன. இந்நாள் வரை பிற தரத்தின் தன்மை உள்ள மொத்தம் 9.453 கிலோ கிராம் எடையுள்ள முத்துக்கள் இந்நிறுவனத்தால் அறுவடை செய்யப்பட்டு கைவசம் உள்ளன. இந்த முத்துக்களின் தரத்தின் தன்மை அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டாளரால் உறுதி செய்யப்பட்ட பின்னர் விற்பனை துவங்கப்படும்.

## கல்லூரியில் பயின்ற தமிழாசிரியர்களுக்கு உதவித் தொகை.

135—வினா 10529—திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலையில்லா பட்டதாரிகளுக்கு அரசு வழங்கும் உதவித் தொகை ரூ. 100 போன்று முறையாக, கல்லூரியில் பயின்ற தமிழாசிரியர்களுக்கு ரூ. 50 கொடுப்பதை உயர்த்தி ரூ. 100 வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1987 நவம்பர் 17

விடை—

பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உதவித் தொகை ரூ. 100 வழங்கப்படுகிறது. பி.லிட். (எந்த மொழியிலாவது) தேர்வு பட்டப்படிப்பிற்குச் சமமானது என்பதால் பி.லிட். (தமிழ் உட்பட) தேர்ச்சி பெற்றவர்களுக்கும் உதவித் தொகை ரூ. 100 வழங்கப்பட்டு வருகிறது.

**1985-86-ல் விவசாயிகளுக்கு கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் கடன்.**

136—வினா 10547—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985-86 ஆம் ஆண்டில் கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கிய கடன் தொகை எவ்வளவு ?

(ஆ) 1986-87 ஆம் ஆண்டில் வழங்க உத்தேசிக்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு ?

விடை—

(அ) ரூ. 21.41 கோடி.

(ஆ) ரூ. 20.00 கோடி.

**கட்டபொம்மன் வாரிசுக்கு உதவித்தொகை.**

137—வினா 10641—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டபொம்மன் வாரிசுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ?



1987 நவம்பர் 17]

விடை—

(அ) வீரபாண்டிய கட்டபொம்மனின் வாரிசுகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

(ஆ) ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 150 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**சாத்தான்குளம், முதலூர் ரோட்டிலுள்ள பொது கிணறுகள்.**

138—வினா 10666—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம், முதலூர் ரோட்டில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள ஏழு பொதுக் கிணறுகளை கைப்பற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

சாத்தான்குளம் முதலூர் சாலை ஓரங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை, சாத்தான்குளம் பேரூராட்சி மன்றத்தில் உள்ள நில அளவு படத்தைக் கொண்டு வட்ட நில அளவையர்கள் மூலமாக குறியிட்டு சாத்தான்குளம் வட்டாட்சியர் முன்னிலையில் நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அதிகாரிகளின் உதவியுடன் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. கிணறுகளின் மீது ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.

**கோவில்பட்டியில் சமுதாயக் கிணறுகள் அமைத்தல்.**

139—வினா 10833—திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதியில் சமுதாயக் கிணறுகள் அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின்கீழ் கோவில்பட்டியில் ஒரு சமுதாயக் கிணறு அமைக்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இக்கிணற்றிற்காக நில ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ஆய்வு அறிக்கையின் பேரில், இவ்வாண்டில் கோவில்பட்டி வட்டாரத்தில் ஒரு சமுதாயக் கிணறு அமைக்கப்படும்.

**நீலகிரி மாவட்டத்தின் விவரச் சுவடி தயாரித்தல்.**

140—வினா 10878—திரு. கே. உச்சி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தின் விவரச் சுவடி. தயாரிக்கப்பட்டு விட்டதா?

விடை—

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விவரச் சுவடிகள் உள்ளன. இவைகளில் இன்றுவரையிலான மாற்றங்கள் செய்து வெளியிடும் பணி மாவட்ட வாரியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை ஏழு மாவட்டங்களுக்கான விவரச் சுவடிகள் திருத்தி வெளியிடப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்ட விவரச் சுவடியைப் பொறுத்தவரை இப்பணி இன்னும் தொடங்கப்படவில்லை.



**1986-87-ல் கட்டிய கிராமப்புற சுகாதார கழிப்பிடங்கள்.**

141—வினா 10984—திரு. கே. உச்சி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1986-87 ஆம் ஆண்டில் கிராமப்புற சுகாதார கழிப்பிடங்கள் கட்டும் சிறப்பு ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின்கீழ் சுகாதார கழிப்பிடங்கள் கட்ட அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு?

(ஆ) எந்தெந்த கிராமங்களில் எத்தனை கழிப்பிடங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது?

(இ) நீலகிரி மாவட்டத்தில் 1—5—1986 வரை எத்தனை கிராமங்களில் கட்டப்பட்டுள்ளன?

விடை—

(அ) ரூ. 47.40 இலட்சம்.

(ஆ) எல்லா மாவட்டங்களிலும் மொத்தம் 6,771 கிராமப்புற சுகாதார கழிப்பிடங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) நீலகிரி மாவட்டத்தில் 1—5—1986 வரை ஒரு கழிப்பிடமும் கட்டப்படவில்லை.

**நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், தும்மனட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தல்.**

142—வினா 11077—திரு. கே. உச்சி : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், தும்மனட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில். அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

(அ) உதகை ஒன்றியத்தில் டி. ஓர்நல்லி, தூனேரி, ஷோலூர் மற்றும் இத்தலார் ஆகிய நான்கு இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர தும்மனட்டியில் ஏற்கனவே செயல்பட்டு வந்த அரசு மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றவும் அரசு ஆணையிட்டிருக்கிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

### பழநி நகரசபை காந்தி மார்க்கெட்டில் ஆக்கிரமிப்புகள்.

143—வினா 11091—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்), திரு. இரா. முத்தையா மற்றும் திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம், பழநி நகரசபைக்கு சொந்தமான காந்தி மார்க்கெட்டில் ஆக்கிரமிப்பாளர்களை அனுமதித்து கடை கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

(அ) அண்ணா மாவட்டம், பழநி நகரசபைக்குச் சொந்தமான காந்தி தினசரி மார்க்கெட்டில், ஆக்கிரமிப்பாளர்களால் கடைகள் ஏதும் கட்டுவதற்கு நகராட்சியால் அனுமதிக்கப்படவில்லை. அவ்வாறு கடைகள் ஏதும் கட்டப்படவுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



### மதுரை-திருமங்கலத்திற்கு பாண்டியன் போக்குவரத்துக் கழக இரவு சர்வீஸ்.

144—வினா 11221—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை-திருமங்கலத்திற்கு பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மூலம் இரவு சர்வீஸ் பேருந்து எப்போது முதல் விடப்படும்?

**விடை—**

மதுரை பெரியார் பேருந்து நிலையம் திருமங்கலம் தடத்தில் பேருந்துகளை உபயோகிப்பவர்களின் வசதியை முன்னிட்டு 19—1—1987 முதல் இரவு நேர சர்வீஸ் விடப்பட்டுள்ளது.

### ஜெயங்கொண்டம் தொகுதியில், விக்கிரமங்கலம் மற்றும் உதயநத்தம் கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம்.

145—வினா 11319—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் விக்ரமங்கலம், உதயநத்தம் கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

ஜெயங்கொண்டம் தொகுதியில் ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் மீன்சுருட்டியில் ஏற்கனவே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அத்தொகுதியில் விக்கிரமங்கலம், உதயநத்தம் கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

[1987 நவம்பர் 17

### ஜெயங்கொண்டம் தொகுதி, மீன்சுருட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில கம்ப்யூட்டர் பாடம்.

146—வினா 11354—**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள மீன்சுருட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் கம்ப்யூட்டர் பாடம் கொண்டுவரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மேற்கண்ட பள்ளியில் 1986-87-ல் 11-ம் வகுப்பில் முதல் பாடத் தொகுப்பிலிருந்து நீக்கப்பட்ட "உயிரியல்" பாடத்திற்குப் பதிலாக "கம்ப்யூட்டர் அறிவியல்" பாடத்தை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### கோவை மாவட்டத்தில் "இன்வெல் போர்" உள்ள இடங்கள்.

147—வினா 11406—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் வறண்ட கிணறுகளில் வறட்சியின் காரணமாக "இன்வெல் போர்" எத்தனை இடங்களில் போடப்பட்டுள்ளது?

(ஆ) திருப்பூர் ஒன்றியத்திற்குள் எத்தனை கிணறுகளில் போடப்பட்டுள்ளது?

விடை—

(அ) 1985-86-ல் 106 கிணறுகளிலும் 1986-87-ல் இதுவரை 45 கிணறுகளிலும் "இன்வெல் போர்கள்" போடப்பட்டுள்ளன.

(ஆ) 1985-86-ல் பல்லடம் தாலுக்காவில் அமைக்கப்பட்ட 27 இன்வெல் போர்களில் திருப்பூர் ஒன்றியத்திற்காக ஒரு போர்வெல் மட்டும் போடப்பட்டது.



1987 நவம்பர் 17]

### நீலகிரியில் ஜாவா சிட்ரோனெல்லா புல் பயிரிடல்.

148—வினா 11448—**திரு. கே. உச்சி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜாவா சிட்ரோனெல்லா புல் என்ற நறுமண பயிரை நீலகிரி மாவட்டத்தின் மற்ற இடங்களில் வளர்க்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) 1500 மீட்டர் உயரமும், அதற்கு கீழுள்ள இடங்களில் மற்றும் ஓர் ஆண்டிற்கு 5000 மி.மீ. அளவுக்கு மழை குறைவாகவுள்ள இடங்களில் மட்டும் ஜாவா சிட்ரோனெல்லா புல் நன்றாக வளரும். இப்புல் நீலகிரி மாவட்டத்தில் சேரன்கோடு பிரிவிலும், பாடந்தொரை பகுதியிலும் சின்கோனாத் துறையால் பயிரிடப்படுகிறது. மற்றைய பகுதிகளில் இப்பயிரை விஸ்தரிக்க இயலாது.

(ஆ) இக்கேள்வி எழ இடமில்லை.

### சாணார்பட்டி ஒன்றியத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் வீடுகள்.

149—வினா 1158—**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், கணவாய்ப்பட்டி ஊராட்சி, கொரசினம்பட்டியில் தீ விபத்தினால் சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் இனாமாக கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு மட்டும் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. ஆனால் நத்தம் தொகுதி சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், கணவாய்ப்பட்டி ஊராட்சி, கொரசினம்பட்டியில் தீ விபத்தினால் சேதமடைந்த வீடுகள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி அல்லாத வேறு இனத்தைச் சார்ந்தவர்களுக்குரியதால், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில், புதிய வீடுகள் கட்டித்தர வழியில்லை.

### நத்தம் தொகுதியில் குடிநீர் வழங்கல்.

150—வினா 1951—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி யூனியன், மார்க்கம்பட்டி, எல்லெப்பட்டி, கோம்பைப்பட்டி, வி. மேட்டுப்பட்டி, கோவில்பட்டி ஆகிய கிராமங்களில் குடிநீர் வசதியின்றி மக்கள் கஷ்டப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், குடிநீர் கஷ்டம் தீர அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

(அ) மற்றும் (ஆ) சாணார்பட்டி ஊராட்சி ஒன்றிய மார்க்கம்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் வழியாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எல்லெப்பட்டிக்கு அஞ்சுகுழிப்பட்டியிலுள்ள மேல்நிலை நீர்த்தொட்டியில் இருந்து குடிநீர்க் குழாயிணைப்பு தரப்பட்டுள்ளது. மேலும் கையிறைப்பான் ஒன்று நன்முறையில் இயங்கி வருகிறது. கோவில்பட்டியிலும், வி. மேட்டுப்பட்டியிலும் உள்ள கையிறைப்பான் நல்ல முறையில் இயங்கி வருகிறது. கோம்பைப்பட்டியிலுள்ள பொதுக் கிணறு ஆழப்படுத்தப்பட்டு தற்போது போதுமான குடிநீர் உள்ளது.



(1985-86) ஒன்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தாறாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

21. 1981-82 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்).

22. 1981-82 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

23. 1982-83 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்).

24. 1982-83 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

25. 1981-82 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை. (தமிழ், ஆங்கிலம்).

26. 1982-83 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை. (தமிழ், ஆங்கிலம்).

27. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (முதலாவது பட்டியல்).

28. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (இரண்டாவது பட்டியல்).

29. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (மூன்றாவது பட்டியல்).

30. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (நான்காவது பட்டியல்).

31. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (ஐந்தாவது பட்டியல்).

136548

[1987 நவம்பர் 17

151—வினா 1955—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி யூனியன், மணியக்காரன்பட்டி, சோத்தாம்பட்டி ஊரில் புதியதாக கிணறு வெட்டப்பட்டும், பழைய கிணற்றில் உள்ள மோட்டார் பம்பை எடுத்து புதியதில் வைக்காமல் இருப்பதால் குடிநீர் கஷ்டம் கொண்டு மக்கள் அல்லல் படுவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மோட்டார் பம்ப் புதிய கிணற்றில் வைக்க அரசு முன்வருமா?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம் திம்மனநல்லூர் ஊராட்சியைச் சேர்ந்த ஜோத்தாம்பட்டி மன்றம் மணியக்காரன்பட்டி ஆகிய கிராமங்களில் பொதுப்பணித்துறையினரால் வெட்டப்பட்ட புதிய குடிநீர் கிணறு உள்ளது. மேற்படி கிராமங்களில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கான கிணறுகளில் போதிய அளவு குடிநீர் இல்லாத காரணத்தால் இத்தொட்டிகளிலுள்ள மின் மோட்டார்கள் புதிய கிணற்றிற்கு மாற்றி பொருத்தப்பட்டன. மின்னிணைப்பு விரைவில் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மின்னிணைப்பு கிடைத்தவுடன் குடிநீர் வழங்கப்பெறும். தற்சமயத் தேவைக்கு மணியக்காரன்பட்டி மற்றும் ஜோத்தாம்பட்டி கிராமங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கையிறைப்பான் அமைக்கப்பெற்று நல்ல முறையில் இயங்கி வருகிறது.

152—வினா 6908—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், கொழிஞ்சிப்பட்டி, தொட்டியப்பட்டி கிராமங்களில் குடிநீருக்காக அடி[illegible]ப் பைப் போட்டுத்தர அரசு முன்வருமா?

[1987 நவம்பர் 17

விடை—

சாணார்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த கொழிஞ்சிப்பட்டி கிராமத்தில் ஆழ்துளைக் கிணறுடன் அமையப்பெற்ற 15,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தொட்டி ஒன்று நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேலும் இங்குள்ள குடிநீர்க் கிணற்றிலிருந்தும் மக்களுக்கு தேவையுரன குடிநீர் கிடைக்கிறது. தொட்டியப்பட்டி கிராமத்தில் உள்ள குடிநீர்க் கிணற்றில் போதிய அளவு தண்ணீர் உள்ளது. எனவே குழாய்களைப்பான்கள் அமைக்க வேண்டிய அவசியமில்லை.

### மயிலாடுதுறை நீதிமன்ற வளாகத்தில் குடிநீர் வசதி.

153—வினா 2276—திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை நீதிமன்ற வளாகத்தில் குடிநீர் வசதி இல்லாதது பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை நீதிமன்ற வளாகத்திலுள்ள நீதிமன்ற கட்டிடங்களுக்கு மூன்றாண்டுகளுக்கு முன்னரே குடிநீர் இணைப்புடன் வழங்கப்பட்டு உபயோகத்தில் இருந்து வருகிறது. வளாகத்திலுள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. இணைப்பிற்கான ஆய்வுக் கட்டணத்தை வீட்டுவசதி வாரியம் நகராட்சிக்கு இதுவரை செலுத்தவில்லை. மேற்படி ஆய்வுக் கட்டணம் செலுத்தப்பட்டவுடன் குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



1987 நவம்பர் 17]

### சென்னை-தஞ்சைக்குச் செல்லும் திருவள்ளுவர் விரைவுப் பேருந்துகள்.

154—வினா 2424—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து தஞ்சாவூர் செல்லும் திருவள்ளுவர் விரைவுப் பேருந்துகளில் ஏதேனும் ஒன்றை கும்பகோணம், சுவாமி மலை, திருவையாறு வழியாக மாற்றிவிட அரசு முன் வருமா?

விடை—

கும்பகோணம், சுவாமி மலை, திருவையாறு வழியாக சென்னைக்குப் புதிய பேருந்து விடும் திட்டம் தனியே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

### கோவில்பட்டி நகரில் மேம்பாலங்கள் கட்டும் திட்டம்.

155—வினா 4092—திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி நகரத்தில் லாயல்மில் பக்கம் உள்ள ரயில்வே குறுக்குச் சாலையிலும், லட்சுமி மில்ஸ் பக்கமுள்ள ரயில்வே குறுக்குச் சாலையிலும் மேம்பாலம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1987 நவம்பர் 17

**உசிலம்பட்டியிலுள்ள நீதிமன்ற நடுவர்களுக்கு வீட்டுவசதி.**

156—வினா 4402—**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்**: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டியில் உள்ள மூன்று நீதிமன்ற நடுவர்களுக்கு தனி வீட்டுவசதி ஏற்படுத்தித் தர அரசிடம் குறிப்பேதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித்தர உள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டியிலுள்ள தனி குற்றவியல் முதல் வகுப்பு மற்றும் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிபதிகள் தற்காலிகமான நீதிமன்றங்களில் பணி புரிவதால் Temporary Courts அவர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. 1986-ம் ஆண்டு பிப்ரவரி திங்களில் உயர்நீதிமன்றம் உசிலம்பட்டியிலுள்ள உட்கோட்ட நீதிமன்ற நடுவருக்கு வீட்டுவசதி செய்து கொடுப்பதற்கு செயற்குறிப்பு ஒன்றை அரசிற்கு அனுப்பியுள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**உதவி ஆணையர்களின் நிர்வாகத்தில் அதிக வருமானமுள்ள கோயில்.**

157—வினா 4567—**திரு. மா. மணிமாறன்**: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதவி ஆணையர்களின் நிர்வாகத்தில் உள்ள கோயில்களில் அதிக வருமானம் உள்ள கோவில் எது?

(ஆ) குறைந்த வருமானம் உள்ள கோவில் எது?



1987 நவம்பர் 17]

விடை—

(அ) உதவி ஆணையர்களின் நிர்வாகத்திலுள்ள கோயில்களில் அதிக வருமானமுள்ள கோவில் கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரத்திலுள்ள அருள்மிகு இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வம் ஆகும்.

(ஆ) குறைந்த வருமானம் உள்ள கோயில் செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சீபுரம் அருள்மிகு தேவராசபெருமாள் திருக்கோயிலாகும்.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆலயங்களின் நிலங்களை குத்தகையாக வைத்திருப்போர் கட்டவேண்டிய குத்தகைத்தொகை.**

158—வினா 4809—**திரு. வை. பாலச்சந்திரன்**: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இணைக்கப்பட்ட ஆலயங்களின் நிலங்களை குத்தகையாக வைத்திருப்பவர்கள் கட்ட வேண்டிய குத்தகைத் தொகையில் நிலுவை இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

(இ) அந்த நிலுவையை வசூல் செய்ய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 5,69,124,250 லிட்டர் நெல்லும், ரூ. 3,45,881.36 பணமும் நிலுவையில் உள்ளன.

(இ) நிலுவைத் தொகை முழுவதையும் உடன் வசூலிக்க அனைத்து கண்காணிப்பாளர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல்; சில நிலுவைகளை வசூலிக்க நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல்

செய்தல், அலுவலர்களால் ஈடு செய்யவேண்டியதை மாத சம்பளத்தில் ஈடு செய்தல் ஆகிய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### பாளையங்கோட்டை மத்திய சிறையில் கைதிகளுக்கு உணவு வழங்குதலில் முறைகேடுகள் பற்றிய புகார்.

159—வினா 4841—திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை மத்திய சிறையில் கைதிகளுக்கு வழங்கப்படுகிற உணவில் முறைகேடுகள் நடப்பதாகப் புகார் வந்துள்ளது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) அதன்மீது அரசின் நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பாளையங்கோட்டை மத்திய சிறையில் கைதிகளுக்குரிய உணவுப் பொருட்களில் கொள்ளை நடப்பதாகப் புகார்கள் பெறப்பட்டன. விசாரணையில் அப்புகார்கள் உண்மையல்ல எனத் தெரியவந்தது

### கால்நடை உதவியாளர்களுக்கு டெரிகாட்டன், பாலியஸ்டர் சீருடைகள் வழங்கல்.

160—வினா 4998—திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை பராமரிப்புத் துறையில் பணிபுரியும் கால்நடை உதவியாளர்களுக்கு டெரிகாட்டன் அல்லது பாலியஸ்டர் சீருடைகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?





விடை—

(அ) மற்றும் (ஆ) கால்நடை பராமரிப்புத் துறையில் பணிபுரியும் கால்நடை உதவியாளர்கள், ஒவ்வொருவருக்கும் ஒரு ஆண்டிற்கு ஒரு முறை கைத்தறி சீருடை அளிக்க ரூ. 105 செலவாகிறது. இத்தொகைக்குள் எவ்வளவு பாலியஸ்டர் துணி வாங்க முடியுமோ அவ்வளவு வாங்கிக்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. அவ்வாறு வாங்க விரும்பாவிட்டால் கைத்தறித் துணிதான் வாங்க வேண்டும். பாலியஸ்டர் சீருடைக்காக அரசு கூடுதல் செலவினத்தை ஏற்க இயலாது.

### சென்னை மற்றும் வில்லிவாக்கம் தொகுதியில் அபிவிருத்திப் பணிகள்.

161—வினா 5208—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்மையில் முதலமைச்சர் தலைமையில் கூட்டப்பட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் சென்னை நகரத்திலும் வில்லிவாக்கம் தொகுதியிலும் முன் அனுமதி பெறாமல் அபிவிருத்தித் தொகையைக் கட்டாமலும் பத்தாண்டுகளுக்கு மேலாகக் குடியிருப்பவர்களுக்கு மின்சாரம், சாலை, சாக்கடை வசதி, குடிநீர் வழங்குதல் போன்ற வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்படும் என்று கூறிய வாக்குறுதி எந்த அளவுக்கு நிறைவேற்றப்பெற்றுள்ளது ?

விடை—

சென்னைப் பெருநகரில் உள்ள தனியார் தெருக்களை அபிவிருத்தி செய்வதற்கு 29—4—1986 நாளிட்ட அரசு ஆணை எண் 541-ன் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி 25 சதவிகித அபிவிருத்தித் தொகையை முன்கூட்டிப் பெறாமலேயே, சென்னை மாநகராட்சி இந்தத் தெருக்களை மேம்படுத்தி இதற்கு ஆகும் மொத்த அபிவிருத்தித் தொகையையும், 10 வருடங்களில் மனை

சொந்தக்காரர்களிடமிருந்து சொத்து வரியுடன் சேர்த்து வசூல் செய்யும். சென்னை மாநகராட்சி இப்பணிகளை உடனடியாக மேற்கொள்ள அரசு 1986-87 ஆம் ஆண்டுக்கு ரூ. 130 இலட்சங்கள் மாநகராட்சிக்கு ஒதுக்கியுள்ளது.

**பைங்குளம் பகுதியில் மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைத்தல்.**

162—வினா 5699—**டாக்டர் தே. குமாரதாஸ்** : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட பைங்குளம் என்கிற பகுதியில் மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைத்துக் கொடுப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(ஆ) அத்திட்டம் உடனடியாக தொடங்கப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட பைங்குளம் பகுதியில் நிலமட்ட வேறுபாடுகளுக்கு ஏற்ப, குடிநீர் விநியோகம் சீராக அப்பகுதியில் அனைத்து இடங்களுக்கும் கிடைக்கும் வகையில் 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் முறையே ரூபாய் 1,20,000, ரூபாய் 1,75,000 மற்றும் ரூபாய் 2,62,500 மதிப்பீட்டில் அமைக்க தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தால் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மதிப்பீடு தயாரிக்கப்பட்டவுடன், தேவையான நிர்வாக ஒப்புதல் பெற்று, இத்திட்டப் பணிகள் தொடங்கப்பெறும்.





**கொடுவள்ளியில் அமைக்கப்படும் ஆட்டுத்தொட்டியை இடம் மாற்றல்.**

163—வினா 5757—**திருமதி பா. வளர்மதி** : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை அடுத்த கொடுவள்ளியில் அமைக்கப்படவிருக்கும் ஆட்டுத்தொட்டியை வேறு இடத்திற்கு மாற்றக் கோரி 10 ஆயிரம் பேர் கையெழுத்திட்ட மகஜர் இந்திய நுகர்வோர் சங்கத்தின் சார்பில் ஜூலை 1985-ல் அரசுக்கு அளிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) சென்னை அடுத்த கொடுவள்ளி கிராமத்தில் அமைக்கப்படவிருந்த ஆட்டுத்தொட்டியை மாற்று இடத்திற்கு மாற்றக்கோரி 10 ஆயிரம் பேர் கையெழுத்திட்ட மனு இந்திய நுகர்வோர் சங்கத்தின் சார்பில் மகஜர் எதும் அரசுக்கு வரவில்லை. மேலும் கொடுவள்ளியில் அமையவிருந்த நவீன ஆட்டுத் தொட்டி கட்டும் பணியானது கைவிடப்பட்டது.

**கே. வேட்ரப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டும் திட்டம்.**

164—வினா 5773—**திரு. எச். ஜி. ஆறுமுகம்** : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கே. வேட்ரப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) 1985-86 ஆம் ஆண்டிற்கான பாடநூல் நிறுவன நன்கொடை நிதியிலிருந்து இப்பள்ளிக்கு ரூ. 1.50 லட்சம் செலவில் இரு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டிடம் கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளது.

## வீட்டிலிருந்தபடி பீடி தயாரிக்கும் தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி சட்டம் அமுலாக்கல்.

165—வினா 6878—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீட்டிலே இருந்தவாறே பீடி தயாரித்தாலும் அந்தத் தொழிலாளர்களுக்கும் பிராவிடண்ட் பண்டு நிதி திட்டம் பொருந்தும் என்ற சட்டத்தை தமிழ்நாடு அரசு அமுல்படுத்துகிறதா ?

விடை—

வீட்டில் இருந்தவாறே பீடி சுற்றும் பணி புரிபவர்கள் 1966 ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறார்கள். இவர்கள் 1952 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதி மற்றும் பல்வகை காப்புரைகள் சட்டப்படி கூறப்பட்ட "தொழிலாளர்கள்" அல்ல என்ற தனது முடிவை புது தில்லி உச்ச நீதி மன்றம் 25—9—1985 ஆம் தேதிய தனது உத்திரவு மூலம் ரத்து செய்து, 31—5—1977 ஆம் தேதி முதற்கொண்டு வருங்கால வைப்பு நிதி சட்டம் பீடி நிறுவனங்களில் அமலாக்கப்பட வேண்டும் என்றும், வீட்டில் இருந்து பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கும் இச்சட்டம் பொருந்தும் என்றும் தீர்ப்பு வழங்கியுள்ளது. இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் வருங்கால வைப்புநிதி சட்டத்தை அமல் செய்ய அதிகாரம் பெற்றவரான தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி வட்டார ஆணையாளர் தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.





## இராமேஸ்வரத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வரவேற்பு மையம் அமைக்கும் திட்டம்.

166—வினா 7050—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரத்தில் சுமார் 20 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் வரவேற்பு மையம் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தங்குமிட வசதிகளுடன் கூடிய சுற்றுலா வரவேற்பு மையம் ஒன்றினை இராமேஸ்வரத்தில் கட்டுவதற்கு மத்திய சுற்றுலா துறை 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 18.45 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்த முதல் தவணையாக ரூ. 7.00 இலட்சம் அளித்துள்ளது. பொதுப்பணித்துறை இத்திட்டத்தினை இரண்டு ஆண்டு காலத்திற்குள் நிறைவேற்றி முடிக்கும். இதனை பின்பு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்று நடத்தும்.

## எலவம்பட்டி பஞ்சாயத்து தோப்பு புறம்போக்கில் குடியிருப்போருக்கு பட்டா வழங்கல்.

167—வினா 7505—திரு. செ. செம்மலை : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் தாரமங்கலம் யூனியன், எலவம்பட்டி பஞ்சாயத்துக்குட்பட்ட தோப்பு புறம்போக்கில் குடியிருந்து வரும் நாடார் தெரு மக்களுக்கு அந்த இடத்தைப் பட்டா செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

[1987 நவம்பர் 17

விடை—

ஓமலூர் வட்டம்; எலவம்பட்டி கிராமம் சர்வே எண் 125/1 தோப்பு புறம்போக்கில் சுமார் 27 நபர்கள் குடிசைகள் போட்டு நீண்ட நாட்களாக பிரோஜிமா அனுபவம் செய்து வருகிறார்கள். இவர்களின் ஆக்கிரமிப்பு பாகத்தை தோப்பு புறம்போக்கிலிருந்து நத்தமாக நிலமாற்றம் செய்து அவர்களுக்கு ஒப்படை வழங்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு சேலம் கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் பணிக்கப்பட்டுள்ளார்.

**நீலகிரி மாவட்டத்தில் புதியதாக ஆரம்பிக்கப்படும் மேல்நிலைப் பள்ளிகள்.**

168—வினா 7649—திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980-81 முதல் 1984-85 ஜூன் வரை புதியதாக மேல்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்க வந்த கோரிக்கை மனுக்கள் எத்தனை?

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் மட்டும் எத்தனை?

(இ) அதில் பரிசீலிக்கப்பட்டவை எத்தனை?

(ஈ) அனுமதி அளிக்கப்பட்டவை எத்தனை?

விடை—

(அ) சுமாராக 500 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் மட்டும் எட்டு உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன.

(இ) மேற்கண்ட எட்டு உயர்நிலைப் பள்ளிகளின் கோரிக்கை மனுக்களும் பரிசீலிக்கப்பட்டன.

(ஈ) இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன.



1987 நவம்பர் 17]

**கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தால் முடிவு செய்யப் பட்ட சாலை விபத்து நஷ்ட வழக்குகள்.**

169—வினா 7758—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985-ஆம் ஆண்டு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தால் நீதிமன்றத்திற்கு வெளியே முடிவு செய்யப்பட்ட சாலை விபத்து நஷ்ட வழக்குகள் எவ்வளவு?

(ஆ) வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

(அ) 1985-ம் ஆண்டு 29 சாலை விபத்து இழப்பீட்டு வழக்குகள் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தினரால் நீதிமன்றத்திற்கு வெளியே முடிவு செய்யப்பட்டன.

(ஆ) மொத்தம் ரூ. 1,13,184.50 வழங்கப்பட்டது.

**தோல்மாலைப்பட்டி—கே. அருணாசலபுரம் சாலையில் பாலம் கட்டுதல்.**

170—வினா 7847—திரு. ச. குமரகுருபா ராமநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதி, புதூர் ஒன்றியத்திலுள்ள தோல் மலைப்பட்டியில் இருந்து கே. அருணாசலபுரம் செல்லுகிற சாலையின் பாலங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

விடை—

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் பாலங்கள் கட்ட தோராயமாக ரூ. 7.70 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணி அரசு அங்கீகரிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இதுவரை இடம் பெறவில்லை. அரசின் குறுகிய நிதிவளம் காரணத்தால் தற்போ

[1987 நவம்பர் 17

இப்பணியினை உடன் எடுத்துச் செய்ய இயலாது. இருப்பினும் அரசின் நிதிவளம் இடம் தரும்போது, வேலையின் முக்கியத்துவம் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு இப்பணியினை இனிவரும் ஆண்டுகளில் இதர மாவட்ட சாலைத் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்ய தக்க பரிசீலனை செய்யப்படும்.

**தாமரங்கோட்டை அருள்மிகு ஜலகண்டீஸ்வரர் திருக்கோயில் திருப்பணி.**

171 வினா 8081—திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, தாமரங்கோட்டை அருள்மிகு ஜலகண்டீஸ்வரர், வரதராஜப் பெருமாள் திருக்கோயில் திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை வட்டம், தாமரங்கோட்டை அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோவிலில் ரூ. 1,97,000 உத்தேச மதிப்பீட்டில் 18 வகையான திருப்பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் திருப்பணிகள் செய்வது குறித்து உடன் நடவடிக்கை மேற்கொள்ள திருக்கோயில் நிர்வாகிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**கோவை மாநகராட்சி வளாகத்திற்கு பின்புறமுள்ள பழைய மார்க்கெட்.**

172—வினா 8237—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாநகராட்சி வளாகத்திற்கு பின்புறமுள்ள பழைய இரும்பு, மீன், மட்டன் மார்க்கெட் உட்பட மேற்படி எம்.ஜி.ஆர். மார்க்கெட்டை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது.



1987 நவம்பர் 17]

விடை—

பழைய மார்க்கெட்டை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் இல்லை. எனினும், பழைய மார்க்கெட்டிலுள்ள மீன் மார்க்கெட்டினை மட்டும், உக்கடம் மாநகராட்சி லாரிப்பேட்டையிலுள்ள காலி இடத்திற்கு மாற்ற, மாநகராட்சியால் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**காங்கேயம் சிவன்மலைக் கோயில் பாதாள அறையில் கண்டுபிடிக்கப்பட்ட புதையல்.**

173—வினா 8249—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், காங்கேயம் சிவன் மலைக் கோயிலில் உள்ள பாதாள அறையில் புதையல் கண்டுபிடிக்கப் பட்டதென்றும், அவைகள் செப்பு அண்டாக்களில் இருந்த தென்றும் சொல்லப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம், காங்கேயம் சிவன்மலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயிலில் திருப்பணி வேலைகளுக்காக 2—12—1982 அன்று பள்ளியறைக்கு வானம் தோண்டும்போது காணப்பட்ட நிலவறையில், திருக்கோயிலின் உபயோகத்திலிருந்து பழுதடைந்த பாத்திரப்பொருள்கள் கண்டு எடுக்கப்பட்டன. இதைத் தவிர விலைமதிப்புள்ள புதையல் எதுவும் கிடைக்கவில்லை. மேற்கண்ட பொருட்கள் திருக்கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன.

[1987 நவம்பர் 17

**ஒக்கடம் சி.எம்.சி. காலனி பகுதியில் அரிசன மக்களுக்கு திருமண மண்டபம் கட்டும் திட்டம்.**

174—வினா 8250—**திரு. ஆ. நடராசன்**: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாநகரில் உள்ள ஒக்கடம் சி.எம்.சி. காலனி பகுதியில் சிலாட்டர் ஹவுஸ் அருகில் அரிசன மக்களுக்கு திருமண மண்டபம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது.?

விடை—

இப்பகுதியில் ரூ. 99,000 மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்ட உத்தேசித்து ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இவை முடிவு செய்யப்பட்ட பின்பு, விரைவில் வேலை துவங்கப்படும்.

**சொக்கம்புதூருக்கு செல்லும் சாமியார் புதுவீதி சாலையை பழுதுபார்த்தல்.**

175—வினா 8256—**திரு. ஆ. நடராசன்**: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரம், சொக்கம்புதூருக்கு சாமியார் புதுவீதி வழியாகச் செல்லும் ரோடு பழுதுபட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், சீர்செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) 1986-87 ஆம் ஆண்டில் இப்பணியினை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ. 1,75,000-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. விரைவில் வேலை தொடங்க, தக்க மேல் நடவடிக்கை மாநகராட்சி எடுத்து வருகிறது.



[1987 நவம்பர் 17

**கல்லுக்குழி பகுதி குடிசைவாசிகளுக்கு வீடுகட்டித் தரும் திட்டம்.**

176—வினா 8257—**திரு. ஆ. நடராசன்**: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாநகரம், புலியகுளம் அருகில் உள்ள கல்லுக்குழி பகுதியில் உள்ள குடிசைவாசிகளுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

விடை—

கோவை மாநகரம், புலியகுளம் அருகில் உள்ள கல்லுக்குழி பகுதியில் உள்ள குடிசைவாசிகளுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**நீர்குண்டா ஓடை குறுக்கே குட்டை கட்டுதல்.**

177—வினா 8268—**திரு. ச. கோவிந்தசாமி**: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இடைப்பாடி பக்கநாடு நீர்குண்டா ஓடை குறுக்கே குட்டை கட்டுவதற்காக ரூ. 2,00,000 ஒதுக்கப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், வேலை பூர்த்தி ஆகிவிட்டதா ?

விடை—

(அ) இத்திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

### சூளைமேடு பகுதியில் மழைகாலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதைத் தடுக்கும் திட்டம்.

178—வினா 8283—திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட சூளைமேடு பகுதியில் உள்ள ஔவை நகர் போன்ற பகுதிகளில் கடந்த ஆண்டு புயல் ஏற்பட்ட காலந்தொட்டு, இன்னும் முழங்கால் அளவு தண்ணீர் தேங்கி சுகாதாரக்கேடு விளைவிப்பது குறித்து அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க திட்டமிட்டுள்ளதா ?

விடை—

சென்னை, சூளைமேடு ஔவை நகர் பகுதியில் உள்ள தெருக்கள் தனியார் தெருக்களாகும். இப்பகுதியில் குடியிருப்பவர்கள் இதுவரை சாலை அமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் சீரமைப்புக் கட்டணம் எதுவும் சென்னை மாநகராட்சிக்குச் செலுத்தவில்லை. ஆகையால், அப்பகுதியில் சீரமைப்புப் பணிகள் இதுவரை சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் அரசு ஆணை எண் 541, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, 29—4—1986 தேதியிட்ட ஆணையில், சீரமைப்புத்தொகை செலுத்தாத பகுதிகளுக்கும் சீரமைப்புப் பணிகள் செய்து அதற்கு ஆகும் தொகையை பத்து ஆண்டுத் தவணைகளில் மனை சொந்தக்காரர்களிடம் வீட்டுவரியுடன் சென்னை மாநகராட்சி வசூலிக்கவும் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்தும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



### விவசாயத் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் ஒருங்கிணைந்த ஈட்டுறுதித் திட்டங்களில் சேர்த்துக்கொள்ளப் பட்டோர்.

179—வினா 9038—திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர்களுக்கு என்று அறிவிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த இன்சூரன்ஸ் திட்டம் ஆகிய இரு திட்டங்களிலும் 31—12—1985 வரை தமிழ் நாட்டில் எத்தனை பேர் சேர்ந்திருக்கிறார்கள் ? குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தில் எத்தனை பேர் சேர்ந்திருக்கிறார்கள் ?

(ஆ) அவர்களில் எத்தனை பேர் தொடர்ந்து மாதந்தோறும் தொகை செலுத்தி வந்திருக்கின்றனர் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஈட்டுறுதியுடன் இணைந்த ஓயவு உதவிச் சிறப்புத் திட்டத்தில் 31—12—1985 முடிய 4,55,983 பேர்கள் சேர்ந்துள்ளார்கள். குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் 48,595 பேர்கள் சேர்ந்துள்ளார்கள். இவர்களில் 8,362 பேர் தொடர்ந்து சந்தாத் தொகை செலுத்தி வருகிறார்கள்.

### கோவை மத்தியப் பேருந்து நிலையத்திலுள்ள தங்கும் விடுதி.

180—வினா 9371—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரத்தில் மத்தியப் பேருந்து நிலையத்திலுள்ள தங்கும் விடுதியில் உள்ள அறைகளை பினாமி பெயர்களில் தொடர்ந்து சிலர் அனுபவித்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) பயணிகளுக்கு அறைகள் கிடைப்பதில்லை என்பது உண்மையா ?

(இ) நாள் கணக்கில் அல்லாமல் மணிக்கணக்கில் வசூல் செய்வது உண்மையா ?

விடை—

(அ) கோவை மாநகராட்சி மத்தியப் பேருந்து நிலையத்திலுள்ள தங்கும் விடுதியில் உள்ள அறைகளைப் பினாமி பெயர்களில் தொடர்ந்து அனுபவித்து வருவது இல்லை. ஆனால், தமிழ்நாடு நகர் நிர்வாகப் பயிற்சி நிலையத்தில் பயிற்சிக்காக வருபவர்களுக்கு (நகராட்சிப் பணியாளர்கள்) மட்டும் 10 அல்லது 12 தங்கும் அறைகள் ஒதுக்கப்பட்டு, அதற்கான கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) அறைகள் காலியாக இருப்பதை வைத்துக்கொண்டு தான் பயணிகளுக்குத் தங்கும் அறைகள் கொடுக்கப்படுகின்றன.

(இ) தங்கும் அறைகளை நாள் கணக்கில்தான் கொடுக்கப்பட்டு வாடகை வசூல் செய்யப்படுகிறது. மணிக்கணக்கில் ஒருவருக்கும் கொடுப்பது இல்லை.

### பறையபட்டி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடைபெற்ற கையாடல் மீது நடவடிக்கை.

181—வினா 9495—திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை யூனியன் பறையபட்டி கிராமத்தில் உள்ள பறையபட்டி கூட்டுறவு விற்பனை உற்பத்தி சங்கத்தின் தலைவரால் பணம் கையாடல் செய்யப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பறையபட்டி அரிசன பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர், சங்கச் செயலரின் உடந்தையுடன் சங்க நிதி ரூ. 37,927.06-ஐக் கையாடல் செய்துள்ளார். அதில் பின்னால் பல தேதிகளில் ரூ 20,560-ஐத் திருப்பிச் செலுத்தியுள்ளார். மேற்படி



கையாடல் சம்பந்தமாக தலைவர் மீது குற்றவியல் மற்றும் தகுதியின்மை நடவடிக்கையும் செயலர் மீது குற்றவியல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டன. தவிர, கையாடல் பணத்தில் திருப்பிச் செலுத்தியது போக மீதித் தொகையை வசூலிக்க தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டப்படி தண்டத் தீர்வு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### உசிலம்பட்டி நீதிமன்ற வளாகத்திற்குள் சிற்றுண்டிச்சாலை மற்றும் வங்கிக்கான கட்டிட வசதிகள்.

182—வினா 9504—திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி நீதிமன்ற கட்டிட வளாகத்திற்குள் ஏற்கனவே உத்தேசித்து முடிவு செய்யப்பட்ட சிற்றுண்டிச்சாலையும், தனி வங்கியும் (Extension counter) செயல்படத்தக்க கட்டிட வசதிகள் எப்போது கட்டப்பட உள்ளன?

விடை—

உசிலம்பட்டி நீதிமன்றக் கட்டிடத்திற்கு அருகாமையில் சிற்றுண்டிச்சாலையும் தேனீர் விடுதியும் இருப்பதால் மேற்படி கட்டிட வளாகத்திற்குள் தனியாக சிற்றுண்டிச்சாலை அமைக்கத் தேவையில்லை என உயர்நீதிமன்றம் கருதியதால் அதற்கான திட்ட மதிப்பீடு அரசுக்கு அனுப்பவில்லை. மேலும் மேற்படி நீதிமன்றக் கட்டிட வளாகத்திற்குள் தனி வங்கி Extension counter செயல்படக் கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை.

### கைதிகளுக்கு தியானம் கற்றுக்கொடுத்தல்.

183—வினா 9514—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கைதிகள் எல்லோருக்கும் ஒரு நிலைப்படுத்தல் (Meditation) தியானம் கற்றுக்கொடுக்கப்படுமா?

[1987 நவம்பர் 17

விடை—

எல்லா மத்திய சிறை, மாநில மகளிர் சிறை, வேலூர் மற்றும் பார்ஸ்டன் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவைகளிலுள்ள சிறை வாசிகளுக்கு ஆழ்நிலைத் தியானம் (Transcendental Meditation) சென்னை மகாரிஷி இன்ஸ்டிடியூட் ஆப் கிரியேடிவ் இன்டலிஜென்ஸ் மூலம் நியமிக்கப்பட்ட பயிற்சியாளர்களைக்கொண்டு இலவசமாக 1981 முதல் தொடர்ச்சியாக பயிற்றுவிக்கப்படுகிறது. மதுரை சமூக வேலை நிலையத்தாரால் முதலில் மத்திய சிறை, மதுரையிலுள்ள சிறைவாசிகளுக்கு ஆழ்நிலை தியானம் பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் மகரிஷி இன்ஸ்டிடியூட் ஆப் கிரியேடிவ் இன்டலிஜென்ஸ் மூலம் நியமிக்கப்பட்ட பயிற்சியாளர் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**அரிமளம் மற்றும் பொன்னமராவதியிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் பயிற்சி துவக்கும் திட்டம்.**

184—வினா 9809—**திரு. த. புஷ்பராசு**: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் அரசு மேல் நிலைப் பள்ளியிலும், பொன்னமராவதி வலம்புரி வடுகநாதன் மேல்நிலைப் பள்ளியிலும் ஆசிரியர் பயிற்சி துவக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப்பள்ளிகளில் இப்பாடப் பிரிவு 1986-87-லிருந்து அனுமதிக்கப்பட்டுள்ளது. மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடப் பிரிவில் இடைநிலை ஆசிரியப் பயிற்சி வகுப்பு தொடங்க 1985-86-ல் அனுமதிக்கப்பட்டது. இவ்வகுப்பில் சேர 10-ம் வகுப்பில் மொத்தத்தில் 300 மதிப்பெண்களும் மொழிப் பாடங்களில் 50 சதவீதமும் பெற்றிருக்க வேண்டும். 25 வயதுக்கு



1987 நவம்பர் 17]

உட்பட்டிருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு மதிப்பெண் விதி மற்றும் வயது வரம்பில் சலுகை அளிக்கப் பட்டுள்ளது. இப்பயிற்சி முடித்தவர்கள் இடைநிலை ஆசிரியர் களாக நியமனம் பெறலாம்.

**நீலகிரி மாவட்டம் ரோஸ் காட்டேஜ் பகுதியிலுள்ள மரப்பாலத்தை புதுப்பித்தல்.**

185—வினா 9856—**திரு. கே. உச்சி**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், ரோஸ் காட்டேஜ் பகுதியிலுள்ள மரப்பாலம் பழுதடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பாலத்தைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) எப்போது இதன் பணி துவங்கும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பேரூராட்சிக்கு உட்பட்ட ரோஸ் காட்டேஜ் நடைபாதையில் உள்ள நடைபாலம் இரும்பு கர்டர் போடப்பட்டு பாலம் அமைக்கப் பட்டுள்ளது. வெள்ளம் வரும்போது இப்பாலத்திற்கு பாதிப்பு ஏற்படும். இப்பால வேலை பாராமரிப்புக்கு ரூ. 1,276 செலவு செய்யப்பட்டு அவ்வப்போது பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பாலத்தை நிரந்தர பாலமாக மாற்ற ரூ. 30,000 மதிப்பீட்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் எடுத்து பணியை விரைவில் முடிக்க கோத்தகிரி பேரூராட்சி நிர்வாக அலுவலருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

[1987 நவம்பர் 17

**அணைக்கரையில் நீச்சல் குளம் கட்டும் திட்டம்.**

186—வினா 9923—**டாக்டர் ந. மாசிலாமணி** : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அணைக்கரையில் (Lower Anicut) ஒரு நீச்சல் குளம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

தற்சமயம் இல்லை.

**சாத்தம்பாடி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம்.**

187—வினா 9942—**டாக்டர் ந. மாசிலாமணி** : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள சாத்தம்பாடி ஒன்றிய துவக்கப்பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

**மதுரை நகரில் இரவு நேர நகரப் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தல்.**

188—வினா 10038—திரு. மு. **மாரிமுத்து** : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரில் இரவு நேர நகரப் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துகின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) எந்தெந்தத் தடங்களில் புதிதாக இரவு நேரப் பேருந்துகள் தொடங்கப்பெற உள்ளது ?



1987 நவம்பர் 17]

விடை—

(அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகம் தற்பொழுது மதுரையில் இயக்கிவரும் இரவு நேர நகரப் பேருந்துகளை மக்கள் முழுவதுமாக பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஆகவே, இரவு நேர நகரப் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப் படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் எதுவுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**டேனிஷ்பேட்டையில் பழப்பண்ணை அமைத்தல்.**

189—வினா 10071—**திரு. கே. அன்பழகன்** : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் ஓமலூர் தொகுதி டேனிஷ்பேட்டையில் பழப்பண்ணை வைக்க அரசு முன்வருமா ?

விடை—

இப்பகுதிக்குத் தேவைப்படும் பல்வகை தோட்டக்கலைப் பயிர்களின் நடவுச் செடிகள் கிடைக்கும் நோக்குடன் ஆத்தூர் வட்டம், முள்ளுவாடியில் 48 எக்டேர் பரப்பில் தோட்டக்கலைப் பண்ணை நிறுவப்பட்டுள்ளது. எனவே, டேனிஷ்பேட்டையில் பழப்பண்ணை அமைத்திடல் என்பது இந்நிலையில் அத்தியாவசியமாகக் கருதப்படவில்லை.

**ஓமலூரில் அண்ணா போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்கும் திட்டம்.**

190—வினா 10081—**திரு. கே. அன்பழகன்** : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூரில் அண்ணா போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தகுதியான நிலம் கையகப்படுத்தியபின் ஓமலூரில் அண்ணா போக்குவரத்துக் கழகத்தினரால் பணிமனை அமைக்கப்படும்.

### புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியில் எம்.ஏ. நிறைநிலை வகுப்புகள் தொடங்குதல்.

191—வினா 10119—திரு. ஜே. முகம்மதுகனி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியில் எம்.ஏ. (இலக்கியம்), எம்.ஏ. (பொருளாதாரம்) தொடங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியில் எம்.ஏ. (இலக்கியம்), எம்.ஏ. (பொருளாதாரம்) ஆகிய நிறைநிலை வகுப்புகள் இவ்வாண்டில் (1986-87) தொடங்க அக்கல்லூரி முதல்வரிடமிருந்து கருத்துருக்கள் பெறப்படவில்லை. எனவே, அவ்வகுப்புகளை இந்த ஆண்டு தொடங்க இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சாலைகளைச் செப்பனிடும் திட்டம்.

192—வினா 10129—திரு. ஜே. முகம்மதுகனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை, கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியங்களில் கந்தர்வகோட்டை முதல் உடையார் தெருவரை, கந்தர்வகோட்டை முதல் கடுகாடு சாலை வரை, கந்தர்வ



கோட்டை முதல் கொத்தகம் வரை ஆகிய சாலைகளைச் செப்பனிட்டு புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் கந்தர்வகோட்டை உடையார் தெருவில் கி.மீ. 0/0—0/4-ல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் செஞ்சாலை பரப்பப்பட்டுள்ளது. கந்தர்வகோட்டை-கடுகாடு சாலையில் கி.மீ. 0/2-ல் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. கந்தர்வகோட்டை—கொத்தகம் சாலையில் கி.மீ. 1/0—2/0-ல் 1981-82-ல் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் செஞ்சரளை பரப்பும் பணி முடிவு பெற்றுள்ளது.

### கோவில்பட்டி தொகுதியில் ஊனமுற்றோர் உதவித்தொகை கேட்டு மனு செய்துள்ளோர் எண்ணிக்கை.

193—வினா 10142—திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதியில் 1976 ஜனவரி முதல் 1986 ஜூன் முடிய எத்தனை ஊனமுற்றோர் பென்சனுக்கு மனு செய்துள்ளனர் ?

(ஆ) எத்தனை பேருக்கு பென்சன் தரப்பட்டது ?

விடை—

(அ) 1,273 ஊனமுற்றோர் உதவித்தொகைக்கு மனு செய்துள்ளனர்.

(ஆ) 360 பேருக்கு உதவித்தொகை அளிக்கப்பட்டது.

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் கணக்கு தணிக்கை.**

194—வினா 10308—**திரு. மா. மணிமாறன்** : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் கணக்கு எந்த ஆண்டு வரை தணிக்கை செய்யப்பட்டுள்ளது ?

விடை—

1983 ஆம் ஆண்டு ஜூலை திங்களில் துவக்கப்பட்ட தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 1983-84 மற்றும் 1984-85 ஆம் ஆண்டுக் கணக்குகள் தணிக்கை முடிக்கப்பட்டு, அக்கணக்குகள் அடங்கிய முதலிரண்டு ஆண்டு அறிக்கைகளும் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முன் வைக்கப்பட்டுவிட்டன. கழகத்தின் 1985-86 ஆம் ஆண்டு கணக்குகள் தணிக்கை செய்து முடிக்கப் பட்டுள்ளது. தணிக்கை அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 'சிப்காட்' தொழிற்சாலைகள்.**

195—வினா 10636—**திரு. த. மாரிமுத்து** : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள 'சிப்காட்' எத்தனை ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ளது ?

(ஆ) தற்பொழுது எத்தனை தொழிற்சாலைகள் இயங்கு கின்றன ?

(இ) 'சிப்காட்' முழுமையாக செயல்படும்போது எவ்வளவு பணியாளர்கள் வேலை செய்கிறார்கள் ?



விடை—

(அ) 438 ஏக்கர்.

(ஆ) 7 தொழிற்சாலைகள்.

(இ) 1,000 பணியாளர்கள்.

**திருவல்லிக்கேணியிலிருந்து வள்ளலார் நகருக்கு புதிய பேருந்து வழித்தடம் ஏற்படுத்தல்.**

196—வினா 10917—**திரு. கே. உச்சி** : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை மாநகரம், திருவல்லிக்கேணியிலிருந்து பெல்ஸ் சாலை, வாலாஜா சாலை, அண்ணா சாலை, பூக்கடை, பிராட்வே, ஸ்டான்லி மருத்துவமனை வழியாக வள்ளலார் நகருக்கு புதிய பேருந்து வழித்தடம் ஏற்படுத்தும் செயற் குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தடம் எண் 2 நான்கு பேருந்துகளும் திருவல்லிக்கேணியிலிருந்து வள்ளலார் நகருக்கு வால்டாக்ஸ் சாலை வழியாக இயக்கப்படுகின்றது. தடம் எண் 32-ல் 25 பேருந்துகள் விவேகானந்தர் இல்லத்திலிருந்து வள்ளலார் நகருக்கு மேற்குறிப்பிட்ட வழிகளில் இயக்கப்படுகின்றன. தடம் எண் 30-ல் 7 பேருந்துகள் விவேகானந்தர் இல்லத்திலிருந்து கொருக்கப்பேட்டைக்கும், தடம் எண் 32-ஏ 10 பேருந்துகள் டாக்டர் அம்பேத்கார் பாலத்திலிருந்து தண்டையார் பேட்டைக்கும், திருவல்லிக்கேணி, வள்ளலார் நகர் வழியாக இயக்கப்படுகின்றன. எனவே, புதிய பேருந்து வழித்தடம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

[1987 நவம்பர் 17.

**திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளில் டெலிவிஷன் பெட்டி பொருத்தும் திட்டம்.**

197—வினா 10947—திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் நீண்ட தூரம் பயணம் செய்யும் பேருந்துகளுக்கு டெலிவிஷன் பெட்டி (விடியோ) பொருத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தை பொருத்த வரையில் நீண்ட தூரம் பயணம் செய்யும் அனைத்து பேருந்துகளிலும் டெலிவிஷன் பெட்டி (விடியோ) பொருத்தும் செயற்குறிப்பு ஏதும் இல்லை. எனினும் சோதனை முறையில் 7 திருவள்ளுவர் போக்குவரத்து பேருந்துகளில் டெலிவிஷன் பெட்டிகள் பொருத்தப்பட்டு உள்ளது.

**மீனவ விதவை தாய்மார்களுக்கு மறுவாழ்வு அளித்தல்.**

198—வினா 10961—திரு. கே. உச்சி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1985-86-ஆம் ஆண்டு மீனவ விதவை தாய்மார்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் தாகு அடிப்படையில் மீன் அங்காடிகள் எத்தனை அமைக்கப்பட்டன?

விடை—

1985-86-ம் ஆண்டு மீனவ விதவை தாய்மார்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சென்னை மீன் விற்பனை அங்காடியில் தாகு அடிப்படையில் இரண்டு மீனவ விதவைகள் பணிபுரிகின்றனர்.



1987 நவம்பர் 17]

**சென்னையிலிருந்து திருச்சி மற்றும் தஞ்சாவூருக்கு படுக்கை, குளிர்சாதன வசதியுள்ள பேருந்து விடும் திட்டம்.**

199—வினா 11355—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-திருச்சி மற்றும் சென்னை-தஞ்சாவூர் இடையே படுக்கை வசதி கொண்ட குளிர்சாதன வசதியுடைய பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

சென்னையிலிருந்து திருச்சி, தஞ்சாவூர் முறையே 325 கி.மீ. 321 கி.மீ. தூரம் உள்ளன. இவ்விரு வழித்தடங்களிலும் இயங்கும் பேருந்து பகலில் 1 ஓட்டமும் இரவில் 1 ஓட்டமும் ஆக 2 ஓட்டங் களாக செயல்படுகின்றன. போதிய பயணிகள் விகிதம் இராத இத்தடத்தில் குளிர்சாதன வசதியுடைய பேருந்துகள் பகலில் இயக்கப்படுமேயானால் பொருளாதார ரீதியில் பயனைத் தராது. தவிர இரயில் வசதிகளும் இவ்விரு வழித்தடங்களில் உள்ளன. எனவே, இவ்வழித்தடத்தில் படுக்கை வசதி கொண்ட குளிர் சாதன பேருந்துவிடும் செயற்குறிப்பேதும் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

**2. தகவல் கோரல்.**

**உறுப்பினர் கொடுத்த முன்னறிவிக்கை குறித்து.**

டாக்டர் தே. குமாரதாஸ்: தலைவரவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் குமாரதாஸ், உங்களுக்கு அனுமதி தரவில்லை. நீங்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடு) தினமும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். நான் உங்களுக்கு அனுமதி தரவில்லை. (குறுக்கீடு) எது எது முடியுமோ, எந்த எந்த இந்த அவையில் விவாதிக்க வேண்டுமோ அதற்கு மட்டும்தான் அனுமதி உண்டு. அமருங்கள் (குறுக்கீடு)

### 3. கவன ஈர்ப்பு.

**(அ) மேட்டுப்பாளையம் வட்டம் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வேட்டி, சேலை வழங்க வேண்டியது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் மா. சின்னராசு, பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் தமிழக முதல்வர் அறிவித்த விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வேட்டி சேலை வழங்கும் திட்டத்தில் பயன்பெற வேண்டிய தகுதியுடைய நூற்றுக்கணக்கான விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு, கோவை மாவட்டத்தில் குறிப்பாக மேட்டுப்பாளையம் வட்டத்தில் பயன் கிடைக்காதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களின் துயரினைப் போக்கும் வகையில் இலவசமாக வேஷ்டி, சேலை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. அவ்வாணையையொட்டி நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களின் ஒவ்வொரு குடும்பத்தைச் சார்ந்த 40 வயது மற்றும் அதற்கும் மேலுள்ள ஆண் தொழிலாளிக்கு ஒரு வேஷ்டியும், 30 வயது மற்றும் அதற்கும் மேலுள்ள பெண் தொழிலாளிக்கு ஒரு புடவையும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் பணி புரியும் அனைத்துப் பகுதிகளிலும் நிறைவேற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.



கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள மேட்டுப்பாளையம் வட்டத்தில் உள்ள 12,455 விவசாயத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு 9—11—1987 வரை 14,200 வேஷ்டியும், 13,900 சேலையும் வினியோகம் செய்யப்பட்டுள்ளது. மேட்டுப்பாளையம் வட்டத்தில் மேலும் 5,760 குடும்பங்களுக்கு வேஷ்டி, சேலை ஆகியவை வழங்கப்படவிருக்கிறது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடம் விரைவில் துணிகள் பெறப்பட்டு வினியோகம் செய்வதற்கு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் வட்டத்தில் மேலும் ஏறக்குறைய 5,800 விவசாயத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு வேஷ்டி, சேலை ஆகியவை வழங்கப்பட இருக்கிறது என்று விவர அறிக்கையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இன்னும் அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்த வேஷ்டி, சேலை வழங்கப்படவில்லை. அப்படி விடுபட்டுப் போன அவர்களுக்கு அடுத்த வாரத்தில் அவைகள் வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு). மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய மனிதாபிமான உள்ளத்தோடு அறிவிக்கப்பட்டிருக்கிற இந்தத் திட்டத்தில் தகுதியுடையவர்கள் என்பதற்கு என்ன வரையறையை நிர்ணயித்திருக்கிறார்கள் என்றால் பெரும்பாலும் கிராம நிர்வாக அதிகாரிகள் ரேஷன் கார்டுகளைத் தான் அவர்களுடைய தகுதியை வரம்பாகக் கொண்டு நிர்ணயிக்கிற கருவியாக நிர்ணயித்திருக்கிறார்கள். ரேஷன் கார்டுகளில் பல இடங்களில் மாத வருமானம் குறித்து தவறாக குறிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் அவர்களுக்கு இதில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

(முற்பகல் 11-10)

### 2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

**உறுப்பினர் கொடுத்த முன்னறிவிக்கை குறித்து—தொடர்ச்சி.**

(டாக்டர் கே. குமாரதாஸ் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது முறையல்ல; தயவு செய்து உட்காருங்கள். இல்லையென்றால் அவைத் தலைவர்

நடவடிக்கை எடுக்கவேண்டிவரும். உங்களை நான் அனுமதிக்க வில்லை. உங்களுடைய பிரச்சினை என்ன என்பதை எழுத்து மூலமாகக் கொடுத்தால் அவை முன்னவர் அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர் பதில் சொல்ல வாய்ப்பு இருக்கும். இப்படித் திடீரென்று கேட்டால் அது சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் தெரியாது, எனக்கும் தெரியாது. ஆகவே நீங்கள் அமருங்கள். (குறுக்கீடு) இப்படி நினைத்த நேரத்தில் எழுந்து பேசுவதைத் தடுக்க ஒரேவழி நடவடிக்கை எடுப்பதுதான்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஒரு பொறுப்பு வாய்ந்த உறுப்பினர் விதிமுறைகளுக்கு அடங்கித்தான் நடக்க வேண்டும். அவையில் ஒழுங்கு, கட்டுப்பாடு இல்லாமல் குறுக் கிடக்கூடாது. எல்லா உறுப்பினர்களும் விதிமுறைகளுக்கு உட்பட்டு, ஒத்துழைக்க வேண்டும். உறுப்பினர்களுடைய பிரச் சினைகளைக் கவன ஈர்ப்பாகவோ அல்லது மற்ற வகையிலோ கொண்டுவரலாம். கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக்கூட ஒரு நாளைக்கு இரண்டுதான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விதி இருந்தாலும், அந்த விதியைத் தளர்த்தி 2, 3 நாட்களாகப் பல கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்புகின்ற பிரச்சினைகளுக்குக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாகவோ, சிந்தனையைப் பதிவு தீர்மானத்தின் மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ விடை அளிக்க வேண்டுமென்ற வகையில் விதியையும் தளர்த்தி, பதில் சொல்கிறோம்.

பிரச்சினை எதுவாக இருந்தாலும், விதிமுறைகளை ஒட்டி எழுதிக் கொடுத்தால் அதற்கான விவரங்களைத் தெரிந்துகொண்டு பதில் அளிக்கலாம். இப்படித் திடீரென்று என்ன விவரம் என்று யாருக்கும் தெரியாத நிலையில் பிரச்சினைகளை எழுப்புவது சரியல்ல; முறையும் அல்ல.

டாக்டர் தே. குமாரதாஸ் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை முன்னவர் பேசும் போது நின்றுகொண்டிருப்பது சரியல்ல; நான் உங்களை அனு மதிக்கவில்லை; உட்காருங்கள்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒழுங்கு முறைகளுக்கு விதி முறைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்றையதினம் உங்கள் கட்சியின் சார்பில் பேசியபோது இதுபற்றி குறிப்பிட்டிருக்கலாம். துணை மானியக் கோரிக்கையில் பேசியிருக்கலாம். ஒவ்வொன் றுக்கும் ஒரு முறை இருக்கிறது. இப்படிக் குறுக்கிடுவது முறையல்ல. (குறுக்கீடு) ஒரு பொது நலன் கருதிதான் அனுமதிக்கவில்லை; உங்களைப் பேச விடவில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எதற்கும் ஒரு வரன்முறை இருக்கிறது; விதி இருக்கிறது; அதை ஒட்டித்தான் பேசவேண்டும். எதைப் பேச வேண்டும், எதைப் பேசக் கூடாது என்பதற்கு விதி இருக்கிறது. பொறுப்பு வாய்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைக் கடைபிடிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் அவையை நடக்கவிடாமல் இப்படிக் குறுக் கிடுவது நல்லது அல்ல. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது விளம்பரத்திற்காகச் செய்வது; நாட்டுக்காக அல்ல. பிரச்சினை எதுவாக இருந்தாலும் அதைக் கொண்டுவர பல வழிகள் இருக்கின்றன. (குறுக்கீடு) நேற்றையதினம் இதைச் சொல்லியிருக்கலாம். (குறுக்கீடு) விதி முறையில் இடமில்லை; அமருங்கள். நீங்கள் கூறுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பல தடவை கேட்டுக்கொண்ட பிறகும் ஒரு பொறுப்பு வாய்ந்த உறுப்பினர் இப்படி நடந்துகொள்வது முறையல்ல. (குறுக்கீடு)

[1987 நவம்பர் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அமர்ந்தால் சரி. இல்லாவிட்டால் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடு) உங்களை வெளியேற்றவேண்டி வரும். (குறுக்கீடு)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களை வெளியேற்றுகிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** * *

(டாக்டர் தே. குமாரதாஸ் அவையை விட்டு வெளியேறினார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் இதுவரையில் குறிப்பிட்டவை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

### 3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

**(அ) மேட்டுப்பாளையம் வட்டம் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வேட்டி, சேலை வழங்க வேண்டியது குறித்து—தொடர்ச்சி.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராஜ் அவர்களுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்களையொட்டி இங்கே ஏற்கெனவே கொடுக்கப்பட்ட வேட்டி, சேலைகள் போக மீதி வேட்டி சேலைகள் வழங்கப்படுகிற அத்தகைய சூழ்நிலை விரைவில் ஏற்படும் என்பதற்கான காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவசமாக வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரையில் 1,28,044 குடும்பத்தினருக்கு மொத்தம் 1,04,900 வேட்டிகளும், 1,24,636 சேலைகளும் மற்றும் 2,70,666 கிலோ அரிசியும் வினியோகம் செய்யப்பட்டுள்ளன. இன்னும் சிலபல பகுதிகளுக்கு வினியோகம் செய்ய

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





வேண்டி இருக்கிறது. விரைவில் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதற்குக் காரணம்—சாதாரணமாகக் கைத்தறித் துறையைப் பொறுத்தவரையிலே தேங்கியிருக்கிற ஜனதா வேட்டி, சேலைகளைக் கொடுப்பதற்காகவும், கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி செய்வதற்காகவும், அதேநேரத்தில் வறட்சியினால் இடர்ப்பாடுகள் உற்றுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவ வேண்டும் என்பதற்காகவும் 40 வயதுக்கு மேற்பட்ட ஆண் தொழிலாளர்களுக்கும், 30 வயதுக்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்களுக்கும் வேட்டி, சேலைகள் வழங்குகிற திட்டம் 1983 ஆம் ஆண்டு கடைப்பிடிக்கப்பட்டது போன்று இப்போதும் கடைப்பிடிக்கவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள். எவ்வளவு துணிகள் தேங்கியிருக்கின்றன என்று கைத்தறித் துறையைக் கேட்டபோது ரூ. 10 கோடி அளவுக்குத் தேங்கி இருக்கிறது என்று சொன்ன அளவில் தான் 1983 ஆம் ஆண்டு 10 கோடி ரூபாய் அளவுக்கு வழங்கப்பட்டதை வைத்து நாம் இப்போது 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தோம். ஆனால் இந்த ஆண்டிலே அந்த 10 கோடி ரூபாயிலே கைத்தறித் துறையிலே இருந்த அவ்வளவு வேட்டிகளும், சேலைகளும் வழங்கப்பட்டுவிட்டன. மேற்கொண்டு வேட்டி, சேலைகள் நெய்துதரவேண்டும் என்ற அளவுக்குக் கைத்தறித் துறை இருக்கிறது. இல்லாவிட்டால் வேறு மாநிலங்களுக்குச் சென்று வாங்கிக்கொண்டு வருவது என்றால் அது இந்த மாநிலத்திற்குப் பயன்தராது என்ற காரணத்தால் அவர்கள் அவகாசம் கேட்டிருக்கிறார்கள். அவ்வாறு அவகாசம் கேட்டதோடு கூடுதலாகத் தொகையும் கேட்டிருக்கிறார்கள். இந்த இரண்டும் மாண்புமிகு முதலமைச்சருடைய ஆணைக்கு விடப்பட்டு இருக்கிறது. எனவே விரைவில் அதைத் தருவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

**உறுப்பினர் கொடுத்த முன்னறிவிக்கை குறித்து.**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் மீனவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆனால் விளக்கத்தில் அவர்கள் 12 மீனவர்களைக் காணவில்லை என்று

சொல்லிக்கொண்டிருந்தார்கள். பிறகு போகும்போது 8 மீனவர்களைக் காணவில்லை என்று சொன்னார்கள். 4 பேர்கள் எப்படியோ கிடைத்துவிட்டார்கள், நன்றி. ஆனால் மீனவர்கள் தவறிவிட்டதாக அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை. அவர் என்னுடைய அறையிலே வந்து இதைப்பற்றி எழுதிக் கொடுத்திருந்தால் நிச்சயமாகத் தேடுவதற்கு விமானத்தை அனுப்பியிருக்கலாம். தேடும் முயற்சி செய்திருக்கலாம். இப்போதும் நான் தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன். என் அறையிலே எழுதிக் கொடுத்தால் நிச்சயமாக அரசாங்கம் அவர்களைத் தேடுவதற்கான நடவடிக்கையை எடுக்கும் என்பதை நான் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

(அ) மேட்டுப்பாளையம் வட்டம், விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வேட்டி, சேலை வழங்க வேண்டியது குறித்து—தொடர்ச்சி.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நிதியமைச்சர் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு தமிழகத்தில் வாழக்கூடிய 60 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்கு, அதாவது 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கும், 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும் வேட்டி, புடவை வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதாவது இன்னொரு பக்கத்தில் கைத்தறித் துணிகள் தேங்கி அதனால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய கைத்தறி நெசவாளர்களுக்குப் பயன் அளிக்கிற வகையிலும்தான் அரசு இந்தத் திட்டத்தை அறிவித்தது. ஆனால் தஞ்சை மாவட்டத்தில் கிட்டத்தட்ட 8 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள், அரசின் கணக்கின்படியே. நான் நேற்று வரையிலும் மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுத் தெரிந்துகொண்ட வகையில், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்குத்தான் வழங்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஒரு கிராமத்தில் 200 பேர் வேட்டி, சேலை வாங்கக்கூடிய தகுதி படைத்தவர்கள் இருக்கிறார்கள் என்றால் 50 பேர்கள் அளவுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேட்டி, புடவை வழங்கப்பட்டுவிட்ட பல்வேறு கிராமங்களில் இன்னும் அரிசி கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இப்படிக் கிராமத்தில் இருக்கக்கூடிய



மக்கள் மத்தியில் சிலருக்குக் கொடுத்தும், சிலருக்குக் கொடுக்காமலும் இருப்பது மேலும் வேட்டி, புடவை கொடுக்கப்பட்டவர்களுக்கு அரிசி கொடுக்காமல் இருப்பது போன்ற பிரச்சினைகளால் அங்கே இருக்கக்கூடிய ரெவின்யூ அதிகாரிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் இடையே சச்சரவு, வருத்தம் ஏற்படக்கூடிய அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. அதைத் தடுக்கிற வகையில் துரிதமாக, அரசு அறிவித்தபடி அனைத்து விவசாயத் தொழிலாளர்களுக்கும் வேட்டி, புடவை, அரிசி ஆகியவற்றை வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்ட வகையிலேகூட முக்கியமான 3 மாவட்டங்களுக்கு மட்டும்தான் 1 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதிலே தஞ்சை மாவட்டம் ஒன்று. அந்த 1 கோடி ஒதுக்கீடு செய்ததிலே கூட கிட்டத்தட்ட 5 லட்சம் பேர்களுக்கு வேட்டி, சேலைகள் கொடுத்திருக்க வேண்டும். அந்த வகையிலேதான் தஞ்சை மாவட்டத்திற்கு ஒரு கோடியும் தென்னாற்காடு மாவட்டத்திற்கு ஒரு கோடியும், வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஒரு கோடியும், மற்ற மற்ற மாவட்டங்களுக்கு 75 லட்சம், 60 லட்சம், 80 லட்சம் என்ற வகையிலேதான் ஒதுக்கீடு வருகிறது.

இப்போது இதுவரையில் வழங்கப்பட்ட துணியினுடைய மொத்த மதிப்பீடு 8 கோடியே 88 லட்சமாக ஆகிறது. இனி வழங்கப்பட வேண்டிய துணிகளுடைய மதிப்பீடு 6 கோடியே 96 லட்சம் என்று, அங்கங்கு இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், விவசாயிகளுடைய எண்ணிக்கையை வைத்து கொடுத்த கணக்கிலே இருந்து அவர்கள் கோருகிறார்கள். ஆகவே மொத்தம் 15 கோடியே 84 லட்சம் தேவைப்படும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே அரசு அனுமதித்த தொகை 10 கோடி. மேற்கொண்டு 5 கோடியே 84 லட்சம் தேவைப்படும் என்று குறிப்பிடுகிறார்கள். இந்தக் குறிப்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கைத்தறி நெசவாளர்களிடத்திலே இனிமேல்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 நவம்பர் 17

இந்த ஜனதா வேட்டி சேலைகளை நெய்வதற்கு கால வரையறை அளிக்கப்பட வேண்டும் என்றும், அதிலும் 15—4—1988-க்குள்ளாக படிப்படியாக ஜனவரி மாதத்திற்குள்ளாக 4 லட்சமும், பிப்ரவரி இறுதிக்குள் 7 லட்சமும், மார்ச் முடிவிற்குள்ளாக 7 லட்சமும் ஆக மொத்தம் 15—4—1988-க்குள்ளாக 4 லட்சத்து 27 ஆயிரம் அளவுக்கு இந்த வேட்டி சேலைகளை வழங்க முடியும் என்று கைத்தறி துறையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போதே தரவேண்டும் என்று சொன்னாலும், அதற்கு இருப்பு இல்லாத காரணத்தால் இதற்கு காலத்தை நீட்டிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரிசி வழங்கப்படாதது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது பற்றிய விவர குறிப்புகள் இல்லை. ஆனால் அப்படி கொடுக்கப் படாமல் இருந்தால் அதைக் கொடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை அரசு மேற்கொள்ளும்.

(ஆ) மதுரை மகாலட்சுமி மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் பொன். முத்துராமலிங்கம், மு. மாரிமுத்து, பி. கே. எம். முத்துராமலிங்கம், கு. ராமணி, கோ. வீரய்யன், எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. பொன். முத்துராமலிங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மதுரையில் உள்ள மகாலட்சுமி மில்லில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நிர்வாகம் சம்பளம் கொடுக்காததால் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலை குறித்து" அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.



1987 நவம்பர் 17] [திரு. ஆர். எம். வீரப்பன்]

**அறிக்கை.**

மதுரை பசுமலையில் உள்ள மகாலட்சுமி டெக்ஸ்டைல் மில்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தில் பணி புரியும் சுமார் 1,200 தொழிலாளர்கள் 24 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி 25—11—1986 காலை 7-00 மணி ஷிப்டு முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள்.

2. மேற்சொன்ன தொழிற் தாவா குறித்து பல்வேறு நாட்களில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின்போது தொழிற்சங்கத்தின் தரப்பில் அவர்களது 24 அம்சக் கோரிக்கைகளை பரிசீலிக்கப்படாவிட்டாலும், தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12(3)-ன் கீழ், 1983-ம் வருடம் அப்போதைய சென்னை, தொழிலாளர் துறை இணை ஆணையர் அவர்கள் முன் ஏற்பட்ட ஒப்பந்தப்படி, தொழிலாளர்களுக்கு பணி நிரந்தரம் மற்றும் ஊதியம் பட்டுவாடா செய்தல், ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு பணிக்கொடை தொகை கொடுத்தல் ஆகிய முக்கிய கோரிக்கைகளையாவது நிர்வாகம் உடன் பரிசீலித்து ஆவன செய்தால், வேலை நிறுத்தத்தை கைவிட்டு, வேலைக்குத் திரும்புவதைப் பற்றி பேச முயற்சிப்பதாக தெரிவித்தார்கள்.

3. நிர்வாகத்தின் தரப்பில் நிதி நிலைமை மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அவர்களது ஆலை நலிவுற்ற ஆலை என தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்டது எனவும், கோரிக்கைகளை தற்போது பரிசீலிக்க வாய்ப்புகளே இல்லை எனத் தெரியப்படுத்தினார்கள். மேலும், 1985-86 ஆம் வருடத்திற்கு போனஸ் முடிவு செய்யும்பொழுது மேற்படி பொதுக் கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதில்லை என்ற கருத்து ஒற்றுமை இரு தரப்பாரிடமும் இருந்ததாகத் தெரிவித்த பின் அதற்கு மாறாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதாகத் தெரிவித்தார்கள். பல்வேறு வகையில் முயற்சிகள் மேற்கொண்டு ஒப்பந்தம் ஏற்படுத்த முயன்றும், இரு தரப்பினரும் தத்தம் நிலையை வலியுறுத்தியதால் ஒப்பந்தம் ஏற்பட வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

4. ஆலை திறக்கப்படாத நிலையில், இவ்வாலையை இணைத் துறை நிறுவனமாக (Joint Sector Industry) மாற்றி, ஆலையில் மறுபடியும் தொழில் நடைபெற சாத்தியக் கூறுபாடுகள் உள்ள வை என்பதை ஆராய நியமிக்கப்பட்ட நிலையான குழு (Standing Committee) 28—4—1987 அன்று மேற்படி ஆலையை பார்வை யிட்டு இயந்திரங்களின் தகுதியையும், ஆலையின் நிதி நிலைமை யையும் பரிசீலித்து பின்னர் கடன் கொடுக்க தயாராக உள்ள வங்கி தாரர்களிடமும், பல்வேறு தொழிற்சங்கத்தைச் சார்ந்த தொழி லாளர் பிரதிநிதிகளிடமும் இப்பிரச்சினை குறித்து விவாதிக்கப் பட்டது. அச்சமயம் நிலையான குழுவின் தலைவர் திரு. கே. ரங்கநாதன், கோவை, தென்னிந்திய நூற்பாலைகள் ஆராய்ச்சிக் கழகம் (South India Textiles Research Association, Coimbatore) தொழிலாளர்களுக்கு சில நிபந்தனைகளை விதித்து அவற்றிற்கு ஒப்புதல் அளித்தால்தான் இந்த ஆலையை இணைத் துறை நிறுவனமாக (Joint Sector Industry) மாற்றி தொழில் தொடங்க வாய்ப்புகள் உண்டு என்று தெளிவுபடுத்தினார்கள்.

5. விவாதத்திற்குப் பின்னர் தொழிலாளர்கள் தரப்பில் நிபந் தனைகளை ஒப்புக்கொள்ள சம்மதம் தெரிவித்து, உடன் இந் ஆலையை இணைத்துறை நிறுவனமாக மாற்றி அமைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொண்டுள்ளார்கள். இது தொடர்பாக ஏ.ஐ.டி.யு.சி. (All India Trade Union Congress) சி.ஐ.டி.யு. (Centre of Indian Trade Union) சங்கத்தைச் சார்ந்தவர்கள் இணைத்துறை நிறுவனமாக மாற்றி அமைக்கப்பட உள்ளதை கொள்கை அளவில் ஒத்துக்கொண் டார்கள். தொழிலாளர்களின் ஊதியக் குறைவு மற்றும் வேலைப் பளு மாற்றம் போன்ற விஷயங்களை ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவித்தார்கள்.

6. 21—8—1987 அன்று தொழிலாளர் துறை ஆணையர் முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தையின்போது நிர்வாகம் பஞ்சாப் நேஷனல் வங்கியுடன் ஆலையில் உள்ள பஞ்சுகளை விற்பது பற்றி ஒரு இணக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் 1986 மாதத்திற்கு தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய சுட்டிய சம்பள பாக்கி வகைக்கு பிடித்தம் ஏதும் இல்லாமல் ஒரு



தொகையை முன்பணமாக வழங்கவேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டது. ஆனால் இதுவரை பஞ்சு விற்பனை செய்யப்படாததால் இந்த தொகை அளிக்கப்படவில்லை.

7. மேலும் இந்த ஆலை கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறையினால் அரசு ஆணை எண் 117, நாள் 20—5—1987-ம் நாளைய உத்தரவின்படி ஏற்கனவே நிவாரண நிறுவனமாக அறிவிக்கப்பட்டிருந்த காலத்தை மேற்கொண்டு ஒரு ஆண்டுக்கு நீட்டிக்கப்பட்டு, 7—3—1988 வரை நிவாரண நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவின்படி தொழிலாளர் களுக்கு தொழிற் தகராறு சட்டப்படி லே-ஆப் சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை.

8. இவ்வாலைக்கு மின் வெட்டிலிருந்து விலக்கு, வணிக வரி கடன் போன்ற சலுகைகளை அளித்து, ஆலையை ஒரு இடருதவி நிவாரண நிறுவனமாக அறிவித்த போதிலும், இவ்வாலை நிலைப்புத்தன்மை அற்றதாகவே உள்ளது. இதன் நிலைப்புத் தன்மை பற்றி ஆராய அமைக்கப்பட்ட நிலையான் குழு இவ் வாலை நிலைப்புத் தன்மை அற்றது எனத் தெரிவித்துள்ளது. இவ்வாலைக்கு நிதி உதவி அளிக்கும் வங்கியினர் அத்தொகைக் கான வட்டி வீதத்தை ஏற்கனவே நிர்வாகம் செலுத்தி வரும் வட்டி வீதத்திலிருந்து 2 விழுக்காடு குறைக்கலாம் என்ற நிலையி லிருந்து அதனை 5 விழுக்காடாகக் குறைக்க ஒப்புக்கொண்டால் இதனை நிலைப்புத் தன்மை உடையதாக அமைக்கலாம் என்றும், ஆனால் ஆலையின் நிலைப்புத் தன்மை உறுதி அற்றதாக உள்ள நிலையில் இணைந்த கூட்டு நிர்வாகத்தின் கீழ் இதனைச் செயல் படுத்த வேண்டாம் எனவும் கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார். மேற்படி அறிக்கைகளை ஆராய்ந்து இந்த ஆலையை கூட்டு நிர்வாகத்தின்கீழ் செயல் படுத்த இயலாது என கைத்தறி துணி நூல் மற்றும் கதர் துறை முடிவு செய்துள்ளது.

9. இதற்கிடையில் இவ்வாலையைச் சார்ந்த தொழிலாளர்கள் 3—11—1987 முதல் 7—11—1987 வரையிலும் மற்றும் 9—11—1987 ஆகிய நாட்களிலும் ஆலை அதிபர் வீட்டின் முன்பும் ஆலையின்

முன்பும் மறியல் செய்ய முயன்றதின் காரணமாக சுமார் 420 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 10—11—1987 முதல் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்த விவர அறிக்கையில் கண்டுள்ள விவரங்களின்படி அந்த ஆலையைக் கூட்டுறவுத் துறையில் நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. நீங்கள் ஏற்கனவே அமைத்த திரு. ரங்கநாதன் குழு எடுத்துச் சொல்லிய சிபாரிசின் அடிப்படையில் தொழிலாளர்கள் சில இழப்புகளை ஏற்றுக் கொண்டாலும் அல்லது முதலீடு செய்திருக்கிற வங்கிகள் வட்டியின் சதவீதத்தைக் குறைத்துக் கொண்டாலும், கூட்டுறவுத் துறையிலே நடத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று அறிக்கை தெரிவிக்கிறது. எனவே இந்தச் சூழ்நிலையில் கூட்டுறவுத் துறையில் அந்த ஆலை நிர்வாகத்தை நடத்தி அல்லல் படும் தொழிலாளர்களுக்கு உதவிட அரசு முன் வருமா என்று அறிய விரும்புவதோடு ஏற்கனவே இழப்புகளுக்கும், இடர்பாடுகளுக்கும் ஆளாகியிருக்கிற தொழிலாளர்கள், இன்றைக்குச் சிறையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களை விடுதலை செய்வதற்கும் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முன்பு நியமிக்கப்பட்ட நிலைக் குழுவினுடைய தலைவர்களும் மற்றவர்களும் அதை ஒரு கூட்டுறவுத் துறையாக மாற்றி ஏற்பாடு செய்து நடத்தலாம் என்று கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அதை நடைமுறைப் படுத்துவதற்காக நடைபெற்ற விவாதத்திலே இருந்து மீண்டும் பல்வேறு பிரச்சினைகள் வங்கிகளின் சார்பும், மற்ற தொழிலாளர்கள் பிரச்சினைகள் சார்பும் எழுப்பட்டதைக் கருத்திலே கொண்டு அப்படி நடத்த முடியாது என்கிற அந்தக் கருத்தையும் கைத்தறி பஞ்சாலைக் கழக இயக்குநரும் அதற்கு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறவர்களும் அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே தான் அப்படிக் கூட்டுறவுத் துறையில் நடத்த முடியாத சூழ்நிலை அந்தப் பஞ்சாலையில் இருக்கிற



தென்ற கருத்து இதிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கைது செய்யப்பட்டிருக்கிற தொழிலாளர்கள் ஜாமீனில் வெளியே வரலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவேளை ஜாமீனில் வெளியே வரவில்லையென்றால் அவர்கள் ரிமாண்ட் செய்யப்பட்டிருக்கிற காலம் முடிந்தவுடன் தானாக விடப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***திரு. மு. மாரிமுத்து:** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இங்கே அவை முன் வைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கை தற்போதைய நிலையை எடுத்துச் சொல்வதாக இல்லையென்றே கருதுகிறேன். காரணம் இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற 'கூட்டுப் பொறுப்பிலே இந்த மில்லை ஓட்ட முடியாது' என்ற முடிவு ஆறு மாதங்களுக்கு முன்னதாக எடுக்கப்பட்டதாகும். அதற்குப் பின்னால் ஒரு உயர்மட்டக்குழு கூடிப்பேசி தமிழகத்தைப் பொறுத்தவரையில் மகாலட்சுமி மில்ஸ் உட்பட 8 மில்களை நாம் எடுத்து ஓட்டலாம்; அப்படி ஓட்டும்போது வங்கிகளிடம் உத்தரவாதம் கொடுத்து ஓட்டுவதற்கு முயற்சி செய்யலாம் என்று பரிந்துரை செய்திருப்பதாகச் சொல்லப்பட்டது. அந்தப் பரிந்துரையின் மீது நமது கைத்தறித் துறை இயக்குநர் அவர்களும், தொழிலாளர் நல கமிஷனர் அவர்களும் நடவடிக்கையெடுத்து அந்தக் கோப்பு நடைமுறையில் இருந்து வருவதாகத் தெரிய வருகிறது. அரசு அந்தக் கோப்பை பரிசீலித்து உயர்மட்டக் குழுவின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு, 1,200 தொழிலாளர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினை என்பதை கவனத்தில் கொண்டு. இந்த மில்லைத் திறப்பதற்கான வழி முறைகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1,200 தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிற பிரச்சினை, அவர்களின் வாழ்க்கைப் பிரச்சினை என்ற காரணத்தால் தான் தொழிலாளர் நலத்துறை இதில் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு நிர்வாகத்தோடும். கைத்தறி பஞ்சாலைத் துறையோடும் பேச்சுவார்த்தைகள் நடத்தி எப்படியாவது இந்த மில்லை ஓடவைக்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், பல்வேறு முயற்சிகள் எடுத்ததற்குப் பிறகும் இதை ஓட்ட முடியாதென்ற முடிவிற்கு கைத்தறி

பஞ்சாலைத் துறை வந்து தங்களுடைய இறுதி முடிவைத் தெரிவித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப் போல் ஆறு மாதங்களுக்கு முன்னால் இந்தக் கருத்தை அவர்கள் தெரிவித்திருந்தாலும் மீண்டும் அவர்கள் இந்தக் கருத்தை மறுபரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்; அப்படிப்பட்ட பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன என்ற தகவலைத் தருகிறார்கள். அதற்குப் பிறகு நம்முடைய தொழிலாளர்கள் நலத்துறையின் ஆணையர் அவர்களும், கைத்தறி பஞ்சாலைத் துறையின் இயக்குநர் அவர்களும், இதுகுறித்து விரிவாக விவாதித்தார்கள் என்ற தகவல் தான் அரசினிடத்தில் இருக்கிறதே தவிர, அந்த விவாதத்திலிருந்து என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதற்கான சான்றுகள் இன்னும் அரசுக்கு கிடைக்கவில்லை. அப்படி அந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்குமானால், அதைத் துரிதப்படுத்தி நடத்துவதற்கு தொழிலாளர் நலத்துறை முடிவெடுக்க முடியாது. அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டிய கைத்தறி பஞ்சாலைத் துறைக்கு தொழிலாளர் நலத்துறை பரிந்துரைத்து, அதை எப்படியாவது நடத்துவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்ற அந்தப் பரிந்துரையை வழங்கும்.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, இந்த மகாலட்சுமி மில் பிரச்சினை என்பது அந்த முதலாளிகள் குடும்பத்தின் பிரச்சினையாக இருந்து, அதன் காரணமாக இன்றைக்குத் தொழிலாளர்கள் 1,200 பேர்களுக்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைக்குச் சென்றவர்களில் பாதிக்கு மேல் பெண்களாக இருக்கிறார்கள். அவர்கள் சிறையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் தரப்படவில்லையென்ற கோரிக்கை இருக்கிறது. அந்தச் சம்பளம் எந்த முறையில் தரப்பட வேண்டுமென்பதைப்பற்றி அதிகாரிகள் எல்லாம் ஒட்டுமொத்தமாக ஒரு கூட்டமைப்பில் கூடிப்பேசி, அனைத்து இயக்கங்களையும் தொழிற்சங்கங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து முடிவைக் கூட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த முதலாளிகள் அங்கேயிருக்கக்கூடிய பஞ்சினை விற்று தொழிலாளர்களுக்கு உரிமை சம்பளத்தில் ஏதாவது கொடுக்கலாம் என்று தெரிவித்திருந்தாலும். இன்றைக்கு அந்த முதலாளிகள் ஆடிட்டர்



...இல் இருப்பவர்கள் தங்களுடைய சொந்தக் கடனைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? இதுபற்றி நடவடிக்கையெடுத்து, தொழிலாளர்களுக்கு சம்பளத்தை ஓரளவிற்காவது கொடுக்கக்கூடிய வாய்ப்பைத் தர அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த வேலை நிறுத்தத்தினாலே அல்லது கதவடைப்பினாலே பாதிக்கப்பட்டு இருக்கிற தொழிலாளர்களுக்கு சுமார் 13 லட்சம் ரூபாய் சம்பளம் பாக்கியாக வழங்கப்பட வேண்டியுள்ளது. ஆனால் இப்போது அவர்கள் கையிருப்பிலே ஏதோ கண்ணுக்குத் தெரிந்த பணமாக அந்தப் பஞ்சாலையிலே இருப்பது, இந்த பருத்திகள் தான். அந்தப் பருத்தியை, எப்படியாவது விற்று, இந்தக் கடன்களை அடைப்பதற்கு இரண்டாவது பட்சமாக நடவடிக்கை எடுத்தாலும், முதலிலே இந்தத் தொழிலாளர்களுக்கு உரிய அந்தச் சம்பள பாக்கியையாவது பட்டுவாடா செய்யவேண்டும் என்று தொழிலாளர் நலத்துறை வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் இதிலே ஒரு சங்கடம், நிர்வாகத்தரப்பிலேயிருந்து அதற்குக் கடன் கொடுத்த, அதற்கு மேலாணை நடத்திக்கொண்டு இருக்கிற வங்கிகளிடத்திலேயிருந்து வருகிற பதில் இந்தப் பஞ்சு விலை குறைந்துவிட்டிருக்கிறது, ஆகவே இப்போது விற்பனை செய்தால், அதிலே மிகப் பெரிய இழப்பு ஏற்படும் என்று காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தொழிலாளர் நலத்துறைக்கு ஆணையின் தரப்பிலேயிருந்து ஒரு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்டு, பஞ்சாலை மூடியிருக்கிற சூழ்நிலையில், ஏதோ விலை குறைந்துவிட்டது, அதனாலே 50 ஆயிரம் ரூபாய், 1 லட்சம் அல்லது 2 லட்சம் நஷ்டம் வரும் என்பதைக் காரணம் காட்டி பாடுபட்ட தொழிலாளர்களுக்கு, வேலை செய்த காலத்திற்குக்கூட சம்பளம் கொடுக்காமல் மறுத்துக்கொண்டு இருப்பது நியாயமுமல்ல, அது சட்டப்படி சரியாகவும் இருக்காது. ஆகவே இந்தத் தொழிலாளர்களுக்குரிய சம்பளப் பாக்கியையாவது முதலிலே அடைப்

பதற்கு, அவர்களுக்குக் கொடுப்பதற்கு, அதற்குரிய பஞ்சுகளை எந்த விலைக்கு விற்க முடியுமோ, அந்த விலைக்கு விற்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்ற கருத்தைத் தொழிலாளர் நலத் துறை அந்த நிர்வாகத்திற்கும், பொறுப்பேற்றுக்கொண்டிருப் பவர்களுக்கும் வற்புறுத்திக்கொண்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளில் தொழிலாளர் நலத்துறை தீவிரமாக ஈடுபடும்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே சொல்லப்பட்ட விஷயங்களிலிருந்து நமக்குத் தெரிவது, இந்த 1,200 தொழிலாளர்களும் படு மோசமான நிலைமையில் இருக்கிறார்கள் என்பதுதான். 100 பெண்கள் உட்பட 451 பேர்கள் சிறையில் இருக்கிறார்கள். அவர்கள் உண்மையிலேயே சிறைக்குப் போகவேண்டும் என்று சொல்லிப் போனதல்ல. அவர்கள் வேலை செய்ததற்கான கூலியைக் கேட்பதற்காகப் போராடினார்கள். இந்தச் சமயத்திலே மேனேஜ்மெண்டார் அந்தப் பருத்தியை எப்படியாவது அங்கேயிருந்து தப்பித்து எடுத்துக்கொண்டு போய், விற்பதற்கு முயற்சி எடுத்தபோது, அதைத் தொழிலாளர்கள் எதிர்த்து, தொழிலாளர் நல ஆணை யாளர் அதிலே தலையிட்டு, அப்படி பஞ்சை விற்றால் இவர் களுக்கு முதலிலே சம்பளப் பணம் கொடுக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இதையும் அவர்கள் கேட்கத் தயாராக யில்லை.

மேலும் பிராவிடன்ட் பணத்தை, சம்பளத்திலிருந்து பிடித்த பணத்தை கட்டவில்லை. இ.எஸ்.ஐ. பணம் கட்டவில்லை. கோ-ஆப்பரேட்டிவ் ஸ்டோருக்கு பிடித்த பணத்தையும் கட்ட வில்லை. கோ-ஆப்பரேட்டிவ் பேங்கிற்குப் பிடித்த பணத்தை யும் கட்டவில்லை. எல்.ஐ.சி. பாலிசிக்குப் பிடித்த பணத்தையும் கட்டவில்லை. இவ்வளவு பணமும் தொழிலாளர்கள் வேலை செய்த சம்பளத்திலேயிருந்து பிடித்தம் செய்தாகிவிட்டது. ஒரு கோடி ரூபாய் வரையிலும் அவர்கள் கையில் வைத்துத்தான் அவர்களுடைய காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. complete misappropriation. It is இதன் பேரிலேயே அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கலாம். கணக்குக் கதி இல்லாத மேனேஜ்மென்ட் என்று நாங்கள் கருதவில்லை. அவர்களுக்கு சொந்த சொத்துக்கள் இருக்கும். அதை இதிலே போட வேண்டாம் என்று நினைத்திருப்பார்கள். அந்த மில்லுக்கு





ஏதாவது காலி இடம் இருந்தால் கூட அதை விற்று, அந்தப் பணத்தை எடுப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும். ஓரேயொரு வழிதான் எங்களுக்குப் படுகிறது. அதை இந்த அரசு செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஒன்று, எந்த முறையி லாவது இந்த மில்லைத் திறந்து நடத்துவதற்கு பல கமிட்டிகளும், குழுக்களும், தொழிலாளர் நல இலாக்காவும் முயற்சி எடுத்து செய்தால் நல்லது. செய்யட்டும். அது இல்லை என்றால், காலதாமதம் செய்யாமல் அரசு அதனுடைய நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளப் போகிறோம் என்று பகிரங்கமாகப் பிரக டனப்படுத்தி, மேனேஜ்மெண்ட் அந்த மில்லைத் திறப்பதற்கு உண்டான நிலைமையை உருவாக்கினால், ஒருசமயம் அவர்கள் அதை நடத்துவதற்கு முன்வரலாம். அப்படியில்லை என்று சொன்னால், அரசு எடுத்து நடத்தலாம். அரசு எடுத்து நடத் தினால், தொழிலாளர்கள் முழு ஒத்துழைப்பையும் அதற்கு எப்படித் தர முடியுமோ, அப்படித் தரத் தயாராக இருக் கிறார்கள். அந்த நடவடிக்கை வருமா? இந்தச் சம்பளத்தைக் கொடுப்பதற்கு அந்த மில்லினுடைய சொத்துக்களை ஜப்தி செய்தாவது, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து, அவர் களுக்குக் கொடுக்கவேண்டிய சம்பளத்தையும், பாக்கிப் பணத்தை யும் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா? இதுதான் சரியான நடவடிக்கையாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கடைசிப் பகுதிக்கு முதலிலே பதில் சொல்லிவிடுகிறேன். இதை அரசு எடுத்து நடத்தவேண்டும் என்று அல்லது நடத்துவோம் என்கிற அறிவிப்பைச் செய்தால் ஒருவேளை அவர்கள் ஒரு வழிக்கு வருவார்கள் என்று ஒரு கருத்தை உறுப்பினர் அவர்கள் தெரிவித் தார்கள். ஆனால் இப்போது நான் பதில் அளித்துக்கொண்டு இருப்பது தொழிலாளர் நலத்துறையின் சார்பில். ஆகவே ஒரு நிர்வாகத்தை ஒரு பஞ்சாலையை அரசு ஏற்றுக்கொள்வது என்பதோ அல்லது அரசு நிர்வாகத்திலே நடத்துவது என்பதோ அதைப்பற்றி முடிவு எடுக்கவேண்டிய துறை தொழிற்துறை அல்லது பஞ்சாலைத் துறை. ஆகவே தொழிலாளர் நலத்தை பொறுத்தவரையில் தொழிலாளர் நலத்துறை பார்க்கும். இந்த

தொழிலாளர்களுக்கு எப்படியாவது வாழ்வு அளிக்கவேண்டும், தொழிலாளர்கள் எந்த காலத்திலும், எந்த காரணத்தாலும் கஷ்டப்படக்கூடாது என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவருடைய லட்சியத்தின்படி இதற்கான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கிறது. ஆனால் அதைக் கையகப்படுத்தி அரசே நடத்த முடியுமா என்பதை அது சம்பந்தப்பட்ட துறையினர் பரிசீலிப்பார்கள். அப்படிப் பரிசீலிக்க வேண்டும் என்று தொழிற்சங்கத் தலைவர் என்ற முறையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் எப்படி அதிலே அக்கறை காட்டுகிறார்களோ அதை விட அதிக அக்கறையோடு தமிழக அரசின் தொழிலாளர் நலத் துறையும் அக்கறை காட்டி இந்த கருத்தை அந்தத் துறைக்குத் தெரிவிக்கும்.

அவர்கள் அதற்கு முன்னாலே தெரிவித்த கருத்து இந்த நிர்வாகத்தினர் சுமார் 1 கோடி ரூபாய்க்கு மேல் தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்த பல்வேறு பகுதிகளைச் சார்ந்த தொகைகளையும் கட்டாமல் அவர்கள் வைத்துக்கொண்டு தொழிலாளர்களுக்கு இவ்வளவு சங்கடங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். அது உண்மைதான். அது எப்படி இந்தச் சட்டத்தின் மூலம் அவர்களுக்கு அந்த உரிமையை அல்ல, அந்த வசதியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நாம் தொழிலாளர் நலத்துறையிடத்திலே கேட்டு இருக்கிறோம். தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கிற அந்தத் தொகைகள் உடனடியாக அரசாங்கத்தின் பொறுப்புக்கு வந்து ஆக வேண்டும். அப்படி வராமல் அவர்களே வைத்துக்கொண்டு அவர்களுக்கு ஏற்படுகிற கஷ்டங்களுக்கு நியாயமான கஷ்டமாகவும் இருக் கலாம் அல்லது அவர்களுக்குள்ளேயே ஏற்படுகிற சச்சரவினால் ஏற்படுகிற கஷ்டமாகவும் இருக்கலாம். அதற்காக தொழிலாளர் கள் தருகிற பணத்தை எடுத்து எப்படி அவர்கள் செலவழிக் கிறார்கள் என்பதும், அதற்கு சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று நீண்ட நாளாக சொல்லுவார்கள். அது எப்படி நடைமுறைக்கு சாத்தியப்படுகிறது, அது எந்த சட்டத்தில் அவர்களுக்கு அந்த வசதிகள் கிடைக்கின்றன என் பதையும் தொழிலாளர் நலத்துறை மிகத் தீவிரமாக ஆய்ந்து



கொண்டிருக்கிறது. இப்படி தொழிலாளர்கள் கட்டுகிற பணத்தை யார் எடுத்து செலவு செய்தாலும், அது மோசடி குற்றம் ஆகும்; கையாடல் செய்கிற குற்றம் ஆகும். ஆகவே, தொழிலாளர் நலத்துறை இதிலே மிகுந்த தீவிரமான உணர்வோடு இந்தக் கருத்துக்களைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. இந்த [illegible] மில்லைப் பொறுத்தவரையில், தொழிலாளர்களுடைய பணம் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் அவர்களிடத்திலே இருக்கிறது. அது முறையாக வங்கிகளில் செலுத்தப்படவில்லை. அதைப்போலவே சம்பள பாக்கி 13 லட்ச ரூபாய் இருக்கிறது. எப்படியாவது இந்தக் கையிருப்பிலே இருக்கிற பஞ்சை விற்று நம்முடைய தொழிலா ளர்கள் சம்பளப் பாக்கியைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும். அதைப் போலவே வங்கி கடன் கொடுத்து முன் னுரிமை பெற்று இருந்தாலும், தொழிலாளர்கள் கட்டியிருக்கிற பணத்துக்குப் பாதுகாப்பு ஏற்படுகிற வகையில், ஒருவேளை இதுவரை சட்டத்திலே இடம் இல்லை என்றாலும், இனிமேல் அந்தச் சட்டத்தினுடைய பாதுகாப்பு அதற்கு ஏற்படுகிற முயற்சியிலே தமிழக அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டு இருப்பதைப் பற்றி தெரிவித்தார்கள். அவர்கள் வேலைநிறுத்தம் செய்து அல்லது ஆலை திறக்கவேண்டும் என்ற கோரிக்கையை வைத்து அங்கே அவர்கள் செய்த ஆர்ப்பாட்டத்திற்காக கைது செய்யப் படவில்லை. ஒரு தனியார் வீட்டின் முன்னால் போய் பலாத் காரமாக மறியல் என்கிற பெயரால் சில சம்பவங்கள் நடை பெற்றதை ஒட்டித் தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் அந்த மறியல் காலம் முடிவுற்று விட்டது என்பதைக் கருத்தில் கொண்டு அவர்களை விடுதலை செய்ய அரசாங்கம் சொல்லி ஆகிவிட்டது. ஆனாலும் சட்டப்படி ரிமாண்டு செய்யப்பட்டு விட்ட காரணத்தாலே அவர்கள் முறையாக ஜாமீன் கொடுத்து வெளியிலே போகலாம் என்று தொழிற்சங்கத் தலைவர்களிடத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி செல்லுகிறவர்களை அரசாங்கத் தரப்பிலிருந்தோ அல்லது காவல் துறையிலிருந்தோ அதற்கு ஆட்சேபணை தெரிவிக்கக்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 17

கூடாது என்றும் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் வெளியிலே போய் இருக்கிறார். இன்னைமயமைகள் அந்த ரிமாண்டு காலம் முடிவுற்ற உடனே, இயற்கையாகவே அவர்கள வெளியிலே போய் விடுவார்கள்.

## 4. அறிவிப்புகள்

### (அ) பேரவை அலுவல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்றைக்கு 12 சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறை வேற்றப்பட உள்ளதால், பேரவை மாலையிலும் கூடும். காலை நிகழ்ச்சிகள் 1-30 மணிக்கு முடிவுற்று பேரவையின் மாலை நிகழ்ச்சிகள் மாலை 4-00 மணிக்கு கூடும்.

## 3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

### (இ) சைதை பகுதி தனியார் தெருக்களிலுள்ள கழிவு நீரை அகற்றுதல் குறித்து.

*** திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சைதை பகுதியில் உள்ள தனியார் தெருக்களில் அடிப்படை வசதிகள் செய்யப்பட வேண்டுமென்று பிறப்பிக்கப்பட்ட அரசாணைப்படி, சைதை பகுதியின் பாதி தெருக்களுக்கு மேலாக பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிவுற்றும் மீதமுள்ள தாழ்வான பகுதிகளில் உள்ள தனியார் தெருக்களில் கழிவுநீர் அகற்றும் வசதி மேற்கொள்ளப்படாததால் அப்பகுதி வாழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 11-40)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.



1987 நவம்பர் 17] [திரு. க. இராசாராம்]

**அறிக்கை.**

சென்னை நகரில் தனியார் தெருக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க தமிழ்நாடு அரசு ஆணை எண். 541, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20—4—1986-ல் ரூ. 430.00 இலட்சத்திற்கு ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், அடிப்படை வசதிகளில் ஒன்றான பாதாள சாக்கடை வசதிகள் அமைக்க, அரசு ஆணை எண். 949, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12—8—1986-ல் சென்னை மாநகராட்சியை ரூ. 100.00 இலட்சங்கள் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு கொடுக்கு மாறு ஆணையிடப்பட்டுள்ளது.

2. தனியார் தெருக்களில், ஏற்கனவே அருகில் இருக்கும் கழிவுநீர் அமைப்புகளுடன் இணைக்க சாத்தியக்கூறு உள்ள 125 தெருக்களில் ரூ. 94.93 இலட்சம் செலவில் இந்த ஆண்டு 1987-88 கழிவுநீர் குழாய்கள் அமைக்கும் பணி எடுத்துக் கொள்ள திட்டம் தீட்டப்பட்டு பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் 43 தெருக்கள் சைதை தொகுதியில் அடங்கும். இவற்றிற்கு செலவிட திட்ட மதிப்பீடு ரூ. 30,46,700 ஆகும்.

3. சைதை தொகுதியில் 33 தெருக்கள் தாழ்வாக இருப்பதாலோ அல்லது வேறு காரணங்களினாலோ அருகிலுள்ள கழிவுநீர் அமைப்புடன் உடனடியாக நேரடியாக இணைக்க இயலாது. இவற்றிற்கு கழிவு நீரகற்று வசதி அமைக்க பொருத்தமான ஒரு வடிவு அமைப்பு செய்யப்பட்டு உரிய காலத்தில் கழிவுநீர் அகற்றும் பணி எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் குறிப்பிட் டுள்ளதைப் போல 33 தெருக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்யலாம் என்று வாரியத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகு, "Feasibility and non-feasibility" என்று சொல்லி, 33 தெருக்கள் இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கின்றன. எடுத்துக் கொள்ளப்படாத தெருக்களுக்கு ஒரு வடிவமைப்பு செய்யப்பட்டு, உரிய காலத்தில் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. அந்த உரிய வடிவமைப்பு எவ்வளவு நாட்களுக்குள் எடுக்கப்படும்? அந்தப் பணியை விரைந்து செய்து முடித்தால்,

[திரு. சைதை சா. துரைசாமி] [1987 நவம்பர் 17

இந்தத் திட்டத்தை அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு மிகவும் பெருமை சேர்ப்பதாக இருக்கும். எனவே அந்த உரிய காலத்தினை, மிக விரைவாக முடிக்க அல்லது அதற்கென்று ஒரு தனிப் பொறியாளரை நியமித்து, இந்த வடிவமைப்பு சம்பந்தப்பட்ட பணிகளைத் தொடங்க மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவருடைய சைதை தொகுதியில் 43 தெருக்களுக்கு ரூ. 30,46,700 செலவிலே திட்டம் மதிப்பிடப் பட்டு, தற்போது வேலைகள் எல்லாம் நடந்துகொண்டிருக் கின்றன. 33 தெருக்கள் தாழ்வாக, அல்லது மற்ற காரணங்களால் நேரடியாக இணைக்க இயலாத தன்மையில் இருக்கின்றன. ஆகவே கழிவு நீரகற்று வசதி அமைக்க பொருத்தமான ஒரு வடிவமைப்பு செய்ய தற்போது குடிநீர் வடிகால் வாரியம் முயன்று வருகிறது. அந்தப் பணிகள் விரைவிலே மேற்கொள்ளப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், விரைவில் என்பதற்கு ஒரு கால நிர்ணயம் செய்து அறிவித்தால், அந்தப் பணி துவங்க ஏதுவாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு கால நிர்ணயம் செய்து அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி சென்னை நகர சுற்றுப் புறத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பணி போக்குவரத்து மத்தியிலும், மற்றவைகளுக்கு மத்தியிலும் மிகுந்த சிரமத்தோடு இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. ஆகவே கால நிர்ணயம் பற்றி உடனடியாகச் சொல் வதற்குக் கஷ்டமாக இருக்கிறது. அதற்கு இன்னும் வடிவமைப்பு அமைக்கப்படாமல் இருக்கின்றது. வடிவமைப்பு அமைத்த வுடனேயே எவ்வளவு காலம் என்பது இந்த அவையின் முன் தெரிவிக்கப்படும்.



1987 நவம்பர் 17]

(ஈ) செங்கற்பட்டு மருத்துவமனையில் மயக்க மருந்தியல் மருத் துவர்கள் இல்லாததால் நோயாளிகள் பாதிப்பு குறித்து.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு அரசு மருத்துவமனையில் மயக்கம் கொடுக்கும் மருத்துவர்கள் இல்லாததால் அறுவை சிகிச்சைகள் கடந்த 2 மாதங்களாக நடைபெறாததால் நோயாளிகள் படும் இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

### அறிக்கை.

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் இரண்டு மயக்க மருந்தியல் பேராசிரியர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒருவர் 10—8—1987 முதல் நான்கு மாதங்களாக ஊதியமில்லா விடுப்பில் சென்றுள்ளார். அவர் விடுப்பு 9—12—1987 உடன் முடிவடைகிறது. மற்றொரு பணியிடம் தற்போது நிரப்பி 10—11—1987 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. அந்த மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு மயக்க மருந்தியலில் ஐந்து உதவி அறுவை மருத்துவர்/பயிற்றுனர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டன. அவற்றுள் மூன்று பணியிடங்களில் ஏற்கனவே மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார் கள். மற்றொரு பணியிடத்திற்கு சென்னை மருத்துவ கல்லூரியி லிருந்து ஒரு மருத்துவர் மாற்றப்பட்டுள்ளார். அவர் பணியில் சேர இருக்கிறார். மற்றும் ஒரு பணியிடத்தில் உள்ள மருத்துவர் மாறுதலில் சென்றுள்ளதால், அவ்விடம் நிரப்பப்படாமல் உள்ளது. மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவர்கள் பற்றாக் குறையாக இருக்கின்ற காரணத்தால் காலியாக உள்ள இடங்களை உடனுக்குடன் நிரப்ப இயலவில்லை. இருப்பினும் அவற்றை நிரப்ப தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

3. கடந்த மூன்று மாதங்களில் சுமார் 106 அறுவை சிகிச்சைகளும், 632 குடும்ப நல அறுவை சிகிச்சைகளும் செங்கற்பட்டு அரசு மருத்துவமனையில் செய்யப்பட்டுள்ளன. மேலே கூறப்பட்ட நிலையில் செங்கற்பட்டு அரசு மருத்துவமனையில் விருப்ப அறுவை சிகிச்சைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே, கடந்த இரண்டு மாதங்களாக அறுவை சிகிச்சை நடைபெறாமல் நோயாளிகள் இன்னல் படும் நிலை செங்கற்பட்டு மருத்துவமனையில் எழவில்லை.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே நான் பார்க்கின்றபோது அமைச்சர் அவர்கள் மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவர்கள் பற்றாக்குறையாக இருப்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல் அங்கே இருக்கின்ற மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவர் ஒருவர் 4 மாத காலம் சம்பளம் இல்லாமல், விடுப்பில் சென்றுள்ளதையும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அவர்கள் சொல்லியிருப்பது கடந்த 3 மாத காலமாக 106 அறுவை சிகிச்சைகளும், 632 குடும்பநல அறுவை சிகிச்சைகளும் நடைபெற்றதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் சொன்னது 2 மாதம் என்று சொல்லியிருக்கிறேன். அதற்கு முன்பாக ஒரு மாத காலத்திலிருந்து அறுவை சிகிச்சைகள் நடைபெற்றதா? அல்லது 3 மாத காலம் தொடர்ச்சியாக அறுவை சிகிச்சைகள் நடைபெறாமல் மருத்துவமனை இயங்கிக் கொண்டிருந்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அளித்திருக்கின்ற விவர அறிக்கையில் அறுவை சிகிச்சைகள் நடந்து கொண்டிருப்பதற்கு புள்ளிவிவரங்கள் தந்திருக்கிறேன். மேற்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் என்ன கேட்கிறார் என்று தெரியவில்லை. இருந்தாலும் மயக்க மருந்து கொடுக்கின்ற மருத்துவர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்பது உண்மைதான். அதை அதிகமாக ஆக்க வேண்டுமென்று அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. இப்போது அந்த மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவர்கள் புதியதாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். விரைவாக அவர்கள் சேர்ந்து இருப்பார்கள். இந்தக் குறைபாடு நீக்கப்பட்டுவிட்டது என்று கருதுகிறேன்.



**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மயக்க மருந்து கொடுக்கின்ற மருத்துவர்கள் குறைவாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அதை நிறைவு செய்வதற்கு என்ன வழி வகைகள் இந்த அரசாங்கத்திலே இருக்கிறது என்பதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நான் கேட்டது, அறுவை சிகிச்சைகள் 3 மாத காலமாக நடப்பது பற்றி அவர்கள் கணக்கு கொடுத்திருக்கிறார்கள். முன்பிருக்கிற ஒரு மாதத்தில் தான் இந்த அறுவை சிகிச்சைகள் செய்யப் பட்டதா என்பதை சரிபார்த்துச் சொல்ல வேண்டும். இதற்கு நான் இன்னொரு சான்றுகூட சொல்ல இருக்கிறேன். செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், புதுப்பட்டியைச் சார்ந்த பெண், மதுராந்தகம் அரசு மருத்துவமனையிலே சென்ற 29—10—1987 ஆம் நாள் அன்று குடும்ப நல அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இறந்துவிட்டார். அதற்குக் காரணம் அங்கே மயக்க மருந்து கொடுத்தவர் சரியான முறையிலே கொடுக்கவில்லை, அதிகமாகக் கொடுத்துவிட்டார் என்ற சந்தேகம் இருக்கிறது. இதை சரிபார்த்து அமைச்சர் அவர்கள் இதை களைவதற்குண்டான முயற்சிகளை செய்வாரா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே, மயக்க மருந்து கொடுக்கின்றவர்களை பயிற்சிப் பதற்காக இருக்கின்றவர்களின் எண்ணிக்கையை கூடுதலாக ஆக்கலாமா என்று அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. அதன் மூலம் இந்தக் குறைபாட்டைப் போக்க முடியும் என்று நினைக்கிறோம். மெடிக்கல் கோடில் மயக்க மருந்து கொடுக்கின்றவர்களுக்கு 6 மாதம் பயிற்சி இருந்தாலே போதும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி பயிற்சி கொடுத்து குறைபாடுகளை விரைவிலே போக்க முடியும் என்று நான் நம்புகிறேன். மதுராந்தகத்தில் அறுவை சிகிச்சை செய்யும்போது ஒருவர் இறந்துவிட்டார் என்று சொல்கிறார். அவர் மயக்க மருந்து கொடுத்துவிட்டதால் இறந்துவிட்டாரா என்பது தெரியாது. இந்த அவையிலே அடிக்கடி அதிகமாக மயக்க மருந்து கொடுத்து விட்டார்கள் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். நான் உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்வது. இன்று கூட பத்திரிகையிலே வேறு ஒரு மாநிலத்தைப்பற்றி செய்தி வந்திருக்கிறது. ஒரு பெண்ணிற்கு மயக்க மருந்து கொடுத்து காற்றுக்கு

கிழே உடல் வேலை செய்யவில்லை என்ற செய்தி வந்து இருக்கிறது, பார்த்திருக்கலாம். மயக்க மருந்து கொடுப்பதனால் இம்மாதிரி சிக்கல் எல்லோருக்கும் வருவதில்லை. ஏதோ வேறு சில உடல் கோளாறு காரணமாக அந்த விபத்துக்கள் ஏற்படக் கூடும். எனவே மயக்க மருந்து கொடுத்தவர்கள் தவறாக கொடுத்தார்கள் என்று குற்றம் சாட்டுவது சரியல்ல. அப்படித் தவறாகக் கொடுத்திருப்பார்களானால் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) அரியலூர், உடையார்பாளையம், பெரம்பலூர் வட்டங்களில் மூளைக்காய்ச்சல் நோயினால் குழந்தைகள் பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் டாக்டர் ந. மாசிலாமணி, கே. சுப்பராயன், ஈ. வெ. கி. ச. இளங்கோவன், கே. வெங்கடாசலம், மா. மணிமாறன், ஆ. நடராசன், க. சோலைராசு, பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "அரியலூர், உடையார்பாளையம், பெரம்பலூர் வட்டங்களில் தற்போது மூளைகாய்ச்சல் நோயினால் குழந்தைகள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

தமிழ் நாட்டில் காணப்படும் என்சிபலைடிஸ் (Japanese Encephalitis) என்னும் மூளைக்காய்ச்சல் நோய் புதிதல்ல. பல ஆண்டுகளாக இருந்து வரும் ஒன்று. வைரஸ் மூளைக்காய்ச்சல் நோய் சாதாரணமாக வாத்துகள் உள்பட சில



பறவைகளிடம் காணப்படுகிறது. இப்பறவைகளின் மூலம் நோய் கிருமிகள் பன்றிகளுக்கு கொசுக்கள் மூலமாக பரவுகின்றது. பன்றியின் இரத்தத்தில் இந்நோய்க் கிருமிகள் வளர்ச்சியடைகின்றன. பன்றிகள் தங்கி இருக்கும இடங்களில் உள்ள "க்யூலெக்ஸ்" கொசுக்கள் மனிதர்களைக் கடிப்பதால் வைரஸ் மூளைக்காய்ச்சல் நோய்க் கிருமிகள் அவர்களின் உடலில் சென்று மூளையையும் அதன் உறைகளையும் பாதிக்கின்றன. பலரது உடலில் இக்கிருமிகள் கொசுக்கடியின் மூலம் சென்று இருப்பினும் ஒரு சிலருக்கு இந்நோயின் அறிகுறிகள் தோன்றி கவலைக்கிடமாக முற்றுகிறது. தென்னாற்காடு மாவட்டத்தில் சந்தேகத்திற்கு உரிய முறையில் மூளைக்காய்ச்சல் இருப்பது குறித்து செய்தி அறிந்தவுடன் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்ககத்தின் இணை இயக்குநர் (மலேரியா) அவர்கள் 13—10—1987 முதல் 16—10—1987 வரை தென்னாற்காடு மாவட்டத்தில் முகாமிட்டு விபரமாக விசாரணைகள் மேற்கொண்டும் களத்தில் புலனாய்வுகள் நடத்தியும் தடுப்பு நடவடிக்கைகளான பூச்சி கொல்லி தெளித்தல் மற்றும் புகை அடிக்கும் பணி முதலானவைகளை பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய கிராமங்களில் மேற்கொள்ளச் செய்தார். இதுவரை கிடைக்கப்பெற்ற அறிக்கைகளின்படி இந்த வருடம் 12—11—1987 வரை தென்னாற்காடு மாவட்டத்தில் நோயால் 238 பேர் பாதிக்கப்பட்டு 99 பேர்கள் இறந்தனர். பாதிக்கப்பட்ட கிராமங்கள் அனைத்தும் பொது சுகாதார இலாகா பணியாளர்களின் தீவிர கண்காணிப்பில் உள்ளன.

2. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இதுவரை 62 பேர்கள் பாதிக்கப்பட்டதாகவும், 26 பேர்கள் இறந்து போனதாகவும் திருச்சிராப்பள்ளி மாவட்ட சுகாதார அதிகாரி அறிவித்துள்ளார். பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இணை இயக்குநர் (மலேரியா) அவர்கள் நிலைமையை நேரில் அறியும் பொருட்டு இப்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முகாமிட்டுள்ளார். பாதிக்கப்பட்ட இடங்களில் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3. தேவையான தடுப்பு மற்றும் கட்டுப்படுத்துவதற்கான முறைகள் பற்றிய சுற்றறிக்கைகள் மற்றும் நெறிமுறைகள் எல்லா மாவட்ட சுகாதார அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1987 நவம்பர் 17

பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய உடனடியாக கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நோயால் பாதிக்கப்பட்டவர்களை உரிய நேரத்தில் மருத்துவ மனைகளில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இவ்வியாதி பரவாமல் தடுக்க இவ்வியாதியைப் பரப்பும் கொசுக்களின் அடர்த்தியைக் குறைக்க பூச்சி கொல்லி தெளிக்க தேவையான குழுக்கள் நியமிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகின்றன. சுகாதாரக் கல்வி போதனைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

**டாக்டர் ந. மாசிலாமணி:** துணைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்ற ஜப்பானிஸ் என்சிபலைடிஸ் என்ற வியாதியைத் தமிழகத்திலே 1956 ஆம் ஆண்டிலேயே கண்டு பிடித்திருக்கிறார்கள். கடந்த 30 ஆண்டுகளாகத் தீவிர நடவடிக்கை எடுக்காததால், இந்த நோய் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு திருச்சி மாவட்டத்தில் அதிகமாக உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு போன வருடம் இறந்தவர்களைவிட, அதிகமாக தென்னாற்காடு மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது ஒரு சீசனல் டிசீஸ் போன்று வந்துகொண்டிருக்கிறது ஒவ்வொரு வருடமும். மழைக் காலம் வருகின்றபோதெல்லாம் இந்த மூளைக் காய்ச்சல் நோய் குறிப்பாக பெரம்பலூர், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், அரியலூர் போன்ற இடங்களில் அதிக அளவில் இருக்கிறது. இந்த நோயை நிரந்தரமாகக் கட்டுப்படுத்துவதற்கு ஏதேனும் திட்டம் அரசின் கைவசம் உண்டா? அடுத்து, இந்த நோயால் எதிர் காலத்தில்—அடுத்த ஆண்டு சாகப் போகின்ற—இறக்கப்போகின்ற குழந்தைகளின் இறப்புகளைத் தவிர்ப்பதற்கு அரசிடம் திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூளைக்காய்ச்சல் என்று சொல்லப்படுகின்ற ஜப்பானிஸ் என்சிபலைடிஸ் என்பது தமிழ் நாட்டிலே எத்தனை ஆண்டாக இருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது. என்றாலும் இதற்கு உலகத்திலேயே போதிய மருத்துவம் இல்லை என்பதை அனைவரும் அறிவார்கள்.



1987 நவம்பர் 17] [திரு. ப. உ. சண்முகம்]

ஆனால் வருவதற்குமுன் தடுப்பதற்காகத்தான் ஜப்பானில் இதற்கு ஒரு ஊசியைக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் அப்பல்லோ மருத்துவமனையில் பொதுவாக பகுதியையில செய்து வந்திருக்கிறது. ஆனால் வந்துவிட்டால் அதற்கு சாதாரண மருத்துவம்தான் செய்ய வேண்டியிருக்கிறது. வந்துவிட்டால் அதை குணப்படுத்துகின்ற மருந்தை உலகத்திலே கண்டு பிடித்ததற்குப் பிறகுதான் நாம் அதைப்பற்றி யோசிக்க முடியும். கண்டு பிடிக்கவில்லை. மருத்துவர்கள்தான் அதை கண்டுபிடிக்க வேண்டும். அது ஆராய்ச்சியாளர்கள் செய்ய வேண்டிய ஒன்று. இது சீசனல் டிசீஸ் தான். மழைக்காலம் வரும்போதுதான் வரும். பன்றிகள் அதிகமாக இருக்கின்ற இடங்களில், இந்தப் பன்றிகளை மூளைக் காய்ச்சல் கொசு கடித்துவிட்டு, பின்னர் மனிதர்களையும், குழந்தைகளையும் கடிப்பதால் ஏற்படுகிறதே தவிர வேறு அல்ல என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதைத் தடுக்க ஒரே வழிதான் இருக்கிறது. கொசு பரவாமல் தடுப்பதற்காகக் கொசு மருந்து தெளிப்பதைத் தவிர வேறு எந்தப் புதிய வழியும் கிடையாது. இந்த வழியைத்தான் இப்போது அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது. தடுப்பதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. திருச்சி போன்ற இடங்களில் இந்த நோய் வந்த உடனே நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரடியாக அனுப்பி பார்த்துவரச் சொல்லியிருக்கிறேன். பார்த்து வந்து விவரம் கொடுத்திருக்கிறார்கள். திருச்சியில் மொத்தம் பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை 58, இறந்தவர்களுடைய எண்ணிக்கை 24 என்று இந்த ஆண்டிற்கான கணக்கு கொடுத்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11-50)

இது கூடுதலானது தான். இருந்தாலும் இவர்கள் மூளைக் காய்ச்சல் வியாதியால்தான் இறந்தார்களா என்று நிச்சயமாக அறுதியிட்டுச் சொல்லமுடியுமா என்று கேட்டதற்கு, அதற்குண்டான அறிகுறிகள் தெரிகின்றதே தவிர, அதனால் தான் இறந்தார்கள் என்று எங்களால் உறுதியாக சொல்ல முடியாது என்றுதான் மருத்துவர்கள் கூறுகிறார்கள். வேறு ஒன்றுமில்லை. இருந்தாலும் இதைப்பற்றி அரசு உன்னிப்பாகக் கவனித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பேட்டில் 12—11—1987 வரை தென்னாற்காடு மாவட்டத்தில் 238 பேர் பாதிக்கப்பட்டு, 99 பேர்கள் இறந்திருப்பதாகவும், திருச்சி மாவட்டத்தில் 62 பேர்கள் பாதிக்கப்பட்டு, 26 பேர்கள் இறந்து இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், நமது தமிழகத்தில், மருத்துவத் துறையில் மிகப் பெரும் முன்னேற்றமான நிலை ஏற்பட்டுள்ளது. சிறந்த மருத்துவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். சென்ற ஆண்டு கேட்கிறபோதுகூட, பன்றிகள் அதிகமாக இருக்கின்ற சென்னையில் இந்த நோய் வருகிறது என்று சொல்லி, பன்றிகளை முழுமையாக ஒழித்திருக்கிறோமே தவிர, நோய்கள் இன்னமும் தடுக்கப்படாமலேயுள்ளன. கடைசியாக அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, கொசுக்களினால்தான் அதிகமாக இந்த நோய் வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த மூளைக் காய்ச்சல் நோய் எங்கிருந்து வருகிறது, எப்படி அதைத் தடுக்கவேண்டும், எப்படி ஒழிக்கவேண்டும் என்பதற்கு—ஒரு காலத்தில் கிராமப்புறத்திலே அதிகமான உஷ்ணம் ஏற்படுகிற போது, அம்மைகள் எல்லாம் வந்து கொண்டிருந்தன. இன்று அம்மையைக்கூட ஒழிக்கக்கூடிய அளவுக்கு மருத்துவத் துறை வளர்ந்து முன்னேற்றப் பாதையில் நாம் சென்று கொண்டிருக்கிறோம்—அப்படியே, மூளைக் காய்ச்சலுக்கான காரணத்தைக் கண்டுபிடித்து அதை ஒழிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். கிராமப்புறங்களிலே கூட, இயற்கை மாற்றம் காரணமாக இரவு முழுவதும் தூங்கமுடியாத அளவிற்குக் கொசுத் தொல்லை இருக்கின்றது. குழந்தைகளுக்கு கொசுக் கடியினால் அதிக நோய் பரவி வருகிறது என்பதை அமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, அதைத் தடுப்பதற்கும், மூளைக் காய்ச்சலைக் கண்டுபிடித்து அறவே ஒழிப்பதற்கும், நமது மருத்துவர்களை வெளிநாட்டிற்கு அனுப்பி அதற்கான பயிற்சி பெற்று வரச் செய்வதற்கும், கிராமப்புறத்திலே இருக்கிற கொசுக்களை ஒழிக்க ஆங்காங்கு இருக்கக் கூடிய தாலுகா சுகாதார மருத்துவர்கள் மூலமாக, கொசு மருந்து அடிப்பதற்கும், அந்த நோயைத் தடுப்பதற்கும் தீவிரமான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூளைக் காய்ச்சல் வியாதிக்குண்டான விவரத்தைப் பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். இங்கிருந்து மருத்துவர்களை வெளிநாட்டிற்கு அனுப்பி பயிற்சி பெறச் செய்யலாமா என்று சொன்னார்கள். உலகத்திலேயே இதற்குண்டான மருந்து உண்டா என்பது தெரியவில்லை. நான் விசாரித்தறிந்த மட்டில், அதற்கு மருந்து கிடையாது. வராமல் தடுப்பதற்காகத்தான் இன்ஜெக்ஷன் போடுகிறார்கள். அதுவும் ஓராண்டுக்குத்தான் அதைத் தடுக்க முடியும் என்றும் சொல்கிறார்கள். வராமல் தடுப்பதற்குத்தான் அப்போலோ மருத்துவமனையில்கூட இனாமாக ஊசி போடுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். போகின்ற குழந்தைகளுக்கும் போடுகிறார்கள். வந்த பிறகு என்ன செய்வது என்பதைப்பற்றி—சாதாரணக் காய்ச்சலுக்கு உண்டான மருத்துவம்தான் செய்யமுடியும், வேறு வழியில்லை. அதற்கு என்னென்ன செய்யவேண்டும் என்று துண்டு விளம்பரங்கள் தமிழிலேயே அச்சடித்து இலாகா மூலம் கிராமப்புறங்களில் கொடுத்து இருக்கிறார்கள். காய்ச்சல் வந்தால் உடனே மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவேண்டும். வீட்டிலேயே வைத்து கை மருத்துவம், நாட்டு மருத்துவம் செய்து, வியாதியை முற்ற வைத்து விட்டதற்குப் பிறகு ஏதும் செய்ய முடியாமல் போய்விடும். காய்ச்சல் வந்தவுடனே மருத்துவமனைக்குப் போனால், அதற்குண்டான 'ஆண்டிபயாடிக்' கொடுத்து குழந்தைகளைக் காப்பாற்றமுடியும், எனவே, நான் கேட்டுக் கொள்வது, காய்ச்சல் வந்தவுடன் மருத்துவமனைக்குச் சென்று, உரிய மருத்துவர்களைச் சந்தித்து, மருத்துவம் தேடிக் கொள்ளவேண்டும் என்பதுதான். தவிர, அரசு அதைத் தடுப்பதற்கு எடுக்கின்ற ஒரு முயற்சியானது—கொசுக்களை ஒழிப்பதற்கு, கொசு மருந்து அடிப்பதற்கு ஆங்காங்கு தற்காலிகமாக ஆட்களை நியமித்து கிராமங்கள் முழுவதும் எங்கெங்கு பன்றிகள் அதிகமாக இருக்கின்றனவோ, அந்த வியாதிகள் எங்கெங்கு வந்திருக்கின்றனவோ, அங்கெல்லாம் கொசுக்களை ஒழிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அந்த நோய் பரவுவதற்கான காரணமென்று,
முதலிலே வாத்திலிருந்து பின்னாலே பன்றிக்கு வந்து, பொது
மக்களுக்கு வருவதாக அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள்.
எங்கெங்கு வாத்துகள் இருக்கின்றனவோ, எங்கெங்கு பன்றிகள்
இருக்கின்றனவோ அங்கெல்லாம் இந்த நோய் பரவாமல் தடுப்
பதற்கு அரசாங்கத்திலே பிரைமரி ஜெறல்த் சென்டர்கள் மூலமாக,
இருக்கின்ற அலுவலர்களைப் பயன்படுத்தி, அதைச் செய்ய
அரசு முன்வருமா ? இன்றைக்கு கிராமப்புறங்களிலே கொசுத்
தொல்லை அதிகமாக ஆகிவிட்டது. உள்ளாட்சித்துறை
அல்லது ஊராட்சி மன்றங்கள் மூலமாக அதைப் போக்குவதற்கு
அவர்களிடம் நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால், கிராமப்
புறங்களில் கொசுத் தொல்லை மிகவும் அதிகமாகிவிட்டது.
எனவே, அத்தொல்லையைப் போக்குவதற்கு, அரசாங்கமே
பொறுப்பேற்று, மருத்துவத் துறை மூலம் கொசுக்களை ஒழிக்க
முன் வருமா என்பதையும் அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** துணைத் தலைவர் அவர்
களே, எந்தெந்த இடங்களில் அந்த வியாதி பாதிப்பதாக அறிவிக்
கப்பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் கொசு ஒழிப்பதற்கென,
தனியாக தற்காலிகமாகப் பணியாளர்களை நியமித்து, கொசு
மருந்து தெளிப்பதற்கான ஏற்பாட்டை அரசே செய்து கொண்டு
வருகிறது.

**திரு. க. சோலைராசு :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, வழக்கமாக, தென்னாற்காடு மாவட்டத்
திலும், அரியலூர் பகுதியிலும் பாதிப்பை ஏற்படுத்திவந்த இந்த
வியாதி தற்போது எல்லையை விரிவுபடுத்தி, வையம்பட்டி, மணப்
பாறை வரை பாவிக் கொண்டிருக்கிறது. எனவே, அந்த நோய்
அடிக்கடி வந்து கொண்டிருக்கிற பகுதிகளில் முன்னெச்சரிக்கை
யாக ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிரந்தரப் பணியாளர்
களைப் பணியில் அமர்த்தி, கொசு மருந்து அடிக்கிற பணிக்கு
ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும்
மருங்காபுரி பகுதியிலே இருக்கிற, மணப்பாறை ஊன்றியக்கிலே
இருக்கிற பக்தாநத்தம் பகுதியில், இந்தக் கவன ஈர்ப்பு கொடுத்
தற்குப் பிறரு பார்க்கிறபோது, கக்குவான் நோய்கண்டு பல



குழந்தைகள் இன்றைக்கு மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிக்
கொண்டிருக்கிறார்கள். ஆரம்பச் சுகாதார நிலையத்தைச்
சேர்ந்த மருத்துவர்கள் ஓரளவிற்குச் சிகிச்சை அளித்துக்
கொண்டிருந்தாலும்கூட, சிகிச்சை முறையை மிகவும் துரிதப்
படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வையம்பட்டியில்
மூளைக்காய்ச்சலால் சமீபத்திலே இருவர் இறந்துவிட்டிருக்
கிறார்கள். எனவே அத்தகைய பகுதிகளிலேயெல்லாம் ஆரம்பச்
சுகாதார நிலையங்களில் உள்ளவர்களைத் துரிதப்படுத்தி இந்த
வியாதியைத் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொண்டு முயற்சிகளை
இந்தத் துறையினர் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையத்தில்
இருக்கிற ஊழியர்கள்தான் அந்த இடங்களுக்குச் சென்று மருந்து
தெளிக்கவேண்டுமென்று இல்லை. இதற்காக, தனியாக, மருந்து
தெளிப்பதற்கென்று ஆட்களை புதிதாக நியமித்து, மருந்து
தெளிக்கச் சொல்லியிருக்கிறோம். மருந்து தெளிப்பதற்கு
உண்டான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். இந்த வியாதி
விரிவாகப் போய்கொண்டிருக்கிறது என்று சொன்னால்,
எவ்வளவு விரிவாகப் போனாலும், அரசு செலவைப்பற்றி கவனிக்
காமல் மருந்து தெளித்து அதைக் கட்டுப்படுத்தும் என்று நான்
தெரிவித்துக்கொள்கிறேன். கக்குவான் வியாதி பற்றிக் குறிப்
பிட்டார்கள். கக்குவான் வியாதி குழந்தைகளுக்கு வரக்கூடிய
6 கொடிய வியாதிகளில் அதுவும் ஒரு வியாதி. குழந்தைகளாக
இருக்கும்போதே ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு எடுத்துச்
சென்று தடுப்பூசி அல்லது சொட்டு மருந்துகளைப் போட்டுக்
கொள்வார்களேயானால், கக்குவான், தொண்டை அடைப்பான்
போன்றவை குழந்தைகளுக்கு வராமல் தடுக்க முடியும். இவை
களை ஆரம்பத்திலேயே செய்திருக்க வேண்டும். இனிமேலாவது
பொது மக்கள் அவ்வாறு செய்யும்படி, மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் தன்னுடைய தொகுதியிலே இருக்கின்ற பொது
மக்களுக்குத் துண்டுப் பிரசுரம்போட்டு தெரிவிக்கவேண்டுமென்று
நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[1987 நவம்பர் 17

### (ஊ) வேதாரண்யத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் மத்தியப் பிரதேசத்தில் கொத்தடிமைகளாக இருத்தல் குறித்து.

**திரு. மா. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், வேதாரண்யத்தில்
இருந்து சுமார் 300 தொழிலாளர்களை, மத்தியப் பிரதேச
மாநிலம், ரேவா மாவட்டம், சிறிமூர் என்னுமிடத்தில் கொத்
தடிமைகளாக பட்டினி போட்டதில் ஒருவர் இறந்துள்ளதும்
பாதிக்கப்பட்ட மற்றவர்களுக்கு நிவாரணம் அளிப்பதும்
குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்
திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட
அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் திருத்துறைப்பூண்டியைச்
சேர்ந்த தொழிலாளர்கள், மத்தியப்பிரதேச மாநிலம், ரேவா
மாவட்டம், சிறிமூர் கிராமத்தில் கட்டப்படும் அணைக்கட்டு
வேலைக்காக "ரே கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்" என்னும் நிறுவனத்தின்
கீழ் உயர்ந்த ஊதியம் கிடைக்கும் என்று உறுதியளிக்கப்பட்டு,
30—9—1987-க்கு முன்னர் கொண்டு செல்லப்பட்டதாகவும், அங்கு
அவர்கள் உணவு மற்றும் உறைவிடமின்றி கொத்தடிமைகளாக
கஷ்டப்படுவதாகவும் அங்கிருந்து தப்பி வந்த, திரு. ரவிச்சந்திரா
என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில், தஞ்சாவூரைச்
சேர்ந்த காவல்துறை ஆய்வாளர் ஒருவரின் தலைமையில் காவல்
துறைப் பிரிவு ஒன்று தொழிலாளர்களை மீட்டு வருவதற்கென்று
16—10—1987 அன்று மத்தியப் பிரதேச மாநிலத்திற்கு அனுப்பப்
பட்டது.

2. மத்தியப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த வருவாய் மற்றும்
காவல்துறை அதிகாரிகளின் உதவியுடன், சிறிமூர் கிராமத்
திலிருந்து 17 குழந்தைகள் உட்பட 221 தொழிலாளர்கள்
25—10—1987 அன்று மீட்கப்பட்டனர். 25—10—1987 அன்று
காலை 4-30 மணிக்கு இத்தொழிலாளர்கள், ரயில் மூலம் புறப்
பட்டனர். 26—10—1987 அன்று இரவு 10-30 மணிக்கு மெட்பஞ்சரா



1987 நவம்பர் 17] [திரு. எ. அருணாசலம்]

என்னும் ரயில் நிலையத்தில் மின்சாரம் பாய்ந்ததால் தொழி
லாளர்கள் பிரயாணம் செய்த இரு ரயில் பெட்டிகளுள் ஒன்று
தீப்பற்றியது. எனினும் இவர்கள் அனைவரும் அன்றிரவு 11-30
மணிக்கு நாக்பூர் அடைந்துள்ளனர். அதே இரயில் மூலம்
இத்தொழிலாளர்கள் அனைவரும் 30—10—1987 அன்றிரவு 8-30
மணிக்கு சென்னை வந்தடைந்தனர். சென்னையிலிருந்து தொழி
லாளர்கள் அனைவரும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப்
பேருந்துகள் மூலம் 31—10—1987 அன்றிரவு நாகப்பட்டினத்
திற்குக் கொண்டுவரப்பட்டு தத்தம் சொந்த கிராமங்களுக்கு
அனுப்பப்பட்டனர்.

3. இத்தொழிலாளர்களுள், (1) அண்ணாச்சி என்கிற மாரி
முத்து, த/பெ. கன்னையன், (2) இராமசாமி, (3) செல்வராஜ்
மற்றும் (4) பாண்டியன் என்னும் நால்வர் நோய்வாய்ப்பட்டு
உடனடியாக நாகப்பட்டினம் தலைமை மருத்துவமனையில்
சேர்க்கப்பட்டனர். இவர்களுள், அண்ணாச்சி என்கிற மாரி
முத்து என்பவர் காய்ச்சல், வயிற்றுப்போக்கினால் மற்றும் நீண்ட
தூர பயண அலைச்சல் காரணமாக 31—10—1987 அன்றிரவு 9-50
மணிக்கு இறந்தார். பிரேத பரிசோதனை செய்யப்பட்டு,
சான்றிதழ் எதிர்பார்க்கப்படுகிறது. ஏனைய மூவரும் நல
மடைந்து வருகின்றனர்.

4. இது சம்பந்தமாக 31—10—1987 வெளிப்பாளையம் காவல்
நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட குற்ற
வாளிகள் நால்வர் 7—11—1987 அன்று கைது செய்யப்பட்டு
காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது மேல் நடவடிக்கை
எடுக்கப்பட்டு வருகிறது.

5. கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டம், 1976-இன் பிரிவு
10-இன்படி கொத்தடிமைகளை வைத்திருப்போர் மீது சம்பந்தப்
பட்ட மாவட்ட ஆட்சியாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இதன்படி, மத்தியப் பிரதேசம் மாநிலம், ரேவா/சத்னா மாவட்ட
ஆட்சியாளர், தனது எல்லைக்குட்பட்ட இடத்தில், கொத்தடிமை
முறை நடைமுறையில் இல்லாதவாறு நடவடிக்கை எடுத்திருக்க
வேண்டும். தற்பொழுது தமிழ் நாட்டிற்கு கொண்டு வரப்பட்
டுள்ள தொழிலாளர்கள் அனைவரும் மத்தியப்பிரதேச

மாநிலத்தில் கொத்தடிமைகளாக வைக்கப்படவில்லை. எனவே, கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டத்தின் அடிப்படையில் விடுப்புச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. இது ஒரு மோசடி வழக்கு என்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்.

**திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கை பற்றியும் மற்ற சில விஷயங்களைப் பற்றியும்தான் தந்திருக்கிறார்கள். ஆனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கும், இறந்துபோனவருடைய குடும்பத்திற்கும், அரசு மூலமாக அல்லது முதலமைச்சர் நிதியிலிருந்து ஏதாவது உதவிகளைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறந்துபோனவருடைய பிரேத பரிசோதனை அறிக்கையை அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அதன் பிறகு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர் அவர்கள், உண்மையிலேயே இது ஒரு கடத்தப்பட்ட நிகழ்ச்சியில்லையென்றும், கொத்தடிமைகளாக அவர்கள் கடத்தப்படவில்லையென்றும் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இதை ஒரு ஃபோர்ஜரி-யான நிகழ்ச்சியென்றுகூட மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த விவரங்களையெல்லாம் பெற்ற பிறகுதான், அந்தக் குடும்பங்களுக்கு எப்படி உதவி அளிக்கப்படவேண்டுமென்பது பற்றி அரசு ஆவன செய்யும்.

**திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அறிக்கை ஒரு பக்கம் உண்மையாக இருந்தாலும், நிச்சயமாக அந்தக் குடும்பங்களிடம் அதிகக் கூலி தருவதாகச் சொல்லி ஏமாற்றி அழைத்துக்கொண்டு போய் அவர்கள் ஏமாற்றப்பட்டிருந்தாலும், தொழிலாளர்களின் பட்டினிச் சாவு நமது மாநிலத்தில் தவிர்க்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அவர்கள் அந்த மாநிலத்திற்குச் சென்று, பட்டினியாலும் பசியாலும் வாடி, நோய்வாய்ப்பட்டு இறந்தது உண்மைதான்.





ஆகவே, இறந்தவரின் குடும்பத்திற்கு இந்த அரசு அனுதாபத்தோடு உதவி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், பாதிக்கப்பட்டவர்களில் இன்னும் பலபேர் மருத்துவமனையிலே இருக்கிறார்கள். அவர்களும் உடனடியாக வேலைக்குச் சென்று வேலைசெய்ய முடியாதபடி உடல்நிலை கோளாறாக இருக்கின்ற காரணத்தால், அரசு அவர்களுக்கு உதவி செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் 'பாண்டட் லேபர்" ஆக இருப்பார்களேயானால் இதுகுறித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பை மாவட்ட ஆட்சியாளர் அவர்களிடத்திலும், அந்த மாவட்ட ரெவின்யூ ஆபீசர் இடத்திலும் ஒப்படைத்து இருக்கிறோம். அவர்கள் அதன்பேரில் நடவடிக்கை எடுத்து, அவர்கள் தருகின்ற விவரத்தை வைத்து, உண்மையிலேயே அவர்கள் கடத்தப்பட்டதாக இருக்குமானால், அவர்களிடமிருந்து பெறப்படுகின்ற அறிக்கையின்மீது, அரசு நடவடிக்கை எடுக்கும்.

(நண்பகல் 12-00)

## 5. அறிக்கை அளித்தல்.

### பொது நிறுவனங்கள் குழு.

**திரு. கே. குப்புசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கைகளைக் குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்:

"(அ) 1972-73 முதல் 1975-76 ஆம் ஆண்டுகள் வரையிலான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1985-86) அளித்த இருபத்தொன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த மேல்நடவடிக்கைபற்றிய மேற்படி குழுவின் ஐம்பத்தி ஐந்தாவது அறிக்கை;

(ஆ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970-71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான குறிப்புகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின்

[திரு. கே. குப்புசாமி] [1987 நவம்பர் 17

(1985-86) ஒன்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கைபற்றிய மேற்பாடி குழுவின் ஐம்பத்தாறாவது அறிக்கை".

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு கடன் நிவாரண (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".



1987 நவம்பர் 17]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை" அறிமுகம் செய்ய, ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

[1987 நவம்பர் 17

4. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

**(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.)**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவை" அறிமுகம் செய்ய, ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

**(எ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.**

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

**(உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (செல்லத்தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு, 1987.**

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :



1987 நவம்பர் 17] [திரு. த. இராமசாமி]

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (செல்லத்தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(எ) 1981-82 மற்றும் 1982-83 ஆம் ஆண்டுகளுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை மொழிவது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1981-82 மற்றும் 1982-83 ஆம் ஆண்டுகளுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையின் முன் மொழிவது குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றிருக்கிறது:

"In pursuance of Article 203 clause (3) of the Constitution of India, I, SUNDAR LAL KHURANA, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Grants for the Excess Expenditure for the years 1981-82 and 1982-83."

**7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1981-82 மற்றும் 1982—83, வாக்கெடுப்பு.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1981-82 மற்றும் 1982-83 ஆம் ஆண்டுகளுக்கான மிகைச் செலவிற்கான மானிய கோரிக்கைகள் அடங்கிய 16—11—1987 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 நவம்பர் 17

மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகை 1981-82 மற்றும் 1982-83 ஆம் ஆண்டுகளுக்கு அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற்றன.

**நிறைவேற்றப்பெற்ற 1981-82 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.**

| கோரிக்கை. | ரூபாய். |
|---|---|
| 1. நிலவரித் துறை | 15,87,769 |
| 2. மாநில ஆயத் தீர்வைத் துறை | 8,57,354 |
| 5. முத்திரைத் தாள்கள்—நிருவாகம் | 41,038 |
| 6. பத்திரப் பதிவு | 21,18,879 |
| 8. தேர்தல்கள் | 1,94,776 |
| 12. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிருவாகம் | 6,24,156 |
| 14. சிறைச்சாலைகள் | 8,04,777 |
| 35. நுகர்பொருள் வழங்கல் | 53,00,212 |
| 36. பாசனம் | 3,02,99,294 |
| 37. பொதுப் பணிகள்—கட்டிடங்கள் | 1,50,91,114 |
| 41. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 7,20,960 |
| 42. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 1,94,10,437 |
| 45. காட்டுவளத் துறை | 7,20,904 |
| 47. செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் | 7,32,516 |
| பெரு மொத்தம் | 7,85,04,186 |



1987 நவம்பர் 17] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

**நிறைவேற்றப்பெற்ற 1982-83 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.**

| கோரிக்கை. | ரூபாய். |
|---|---|
| 2. மாநில ஆயத் தீர்வைத் துறை | 2,81,197 |
| 8. தேர்தல்கள் | 62,292 |
| 9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 39,14,179 |
| 11. மாவட்ட நிர்வாகம் | 88,89,412 |
| 24. தொழில்கள் | 26,80,780 |
| 28. சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் | 5,04,811 |
| 41. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 11,13,859 |
| 42. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 3,88,22,306 |
| 47. தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 28,56,298 |
| 56. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 2,75,83,724 |
| பெரு மொத்தம் | 8,67,08,858 |

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (உ) நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஊ) நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(எ) நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(எ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1987 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1987) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஏ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

*** திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்த சட்ட முன்வடிவில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொலைபேசிக்காக கொடுக்கப்படும் தொகை

* 16—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ரூபாய் 350 என்பது இப்போது ரூபாய் 450 ஆக ஆக்கப்பட்டிருக்கிறது 1—4—1987 இல் இருந்து. தொகுதி காரியங்கள் ஆற்றும் போது தொலைபேசிக்கான செலவுகள் மிக அதிகமாக ஆகிறது. ஆகவே இந்தத் தொகை போதாது என்பது எங்களுடைய கருத்து. அதைப் போல இரயில் கூப்பனுக்கான தொகையை 4,600-இல் இருந்து 5,650 ஆக ஆக்கப்பட்டிருக்கிறது 1—4—1987 முதல். ஏற்கெனவே 1—10—1987 முதல் இரயில்வே கட்டணம் 10 சதவீதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதிலும் பற்றாக்குறை இருக்கிறது.

இன்னுமொன்று. மருத்துவ வசதி பெறுகிறவர்களுக்கு, வெளியே மருந்து வாங்குபவர்களுக்குப் பணம் கொடுப்பதாக அரசு சொல்லுகிறது. ஆனால் இந்தத் தொகையை எங்களால் வாங்க முடியாமல் இருக்கிறது. இதற்கான பில்லைக் கொடுத்தால் அந்த பில்லில் கடையின் சீல் வைக்க வேண்டும், அதை வசூலித்தவரின் கையெழுத்து இருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அதன் பிறகு அரசு டாக்டரிடம் சான்று வாங்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதன் பிறகு அதைத் துறையிலே கொடுத்தால் அதற்கான பணம் வர பல மாதங்கள் ஆகின்றன. இதிலே 3 மாதங்கள் ஆகிவிட்டால் 15 சதவீதம் தள்ளுபடி என்றும், ஒரு வருஷம் கழித்து பில் கொடுத்தால் முழுவதும் தள்ளுபடி என்றும் சொல்லுகிறார்கள். இப்படிப் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. இந்தக் காரணங்களால் அரசு ஒரு முடிவை எடுத்து, கடைகளில் வாங்கும் மருந்துகளுக்கு ஏதாவது ஒரு தொகையைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டு, அமைச்சர் அவர்கள் அதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை சட்டமன்ற உறுப்பினர்கள் கடுமையாக எதிர்ப்பார்கள் என்று



தான் நான் எதிர்பார்த்தேன். ஆனால் உறுப்பினர்கள் முழு ஆதரவையும் பெருந்தன்மையோடு தந்து இருக்கிறார்கள். இதை மேலும் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே நடைபெற்ற சட்டமன்றத் தொடர் கூட்டத்தின்போது, வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தின்போது, சட்டமன்ற மானியக் கோரிக்கைகள் வந்தபோது அறிவித்தவைகளுக்கு இப்போது சட்டம் வருகிறது. அப்போது அறிவித்தவைகளுக்கு இப்போது சட்டத்தை நிறைவேற்றி 1—4—1987-லிருந்து பாக்கிகளை எல்லாம் சேர்த்து ஒட்டு மொத்தமாகத் தருகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்கள் மீதி இருக்கிற மாதங்களுக்கு எல்லாம், ஒட்டுமொத்தமாக இப்போது வருகிற பணத்தை வைத்து சரிக்கட்டிக்கொள்ளலாம். அடுத்து வரும் சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது இருக்கிற சூழ்நிலைகளை எல்லாம் பார்த்து, அடிக்கடி நாம் சொல்லும் வறட்சி நிலைகளை நன்றாக அறிந்து, பற்றாக்குறையை ஆய்ந்து, ஆராய்ந்து, தக்க முடிவெடுக்கலாம். இப்போது இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றுவதன் மூலமாக இப்போதிருக்கும் சூழ்நிலையை ஒட்டி ஏற்கெனவே அறிவித்தவைகளைப் பெற முடியும். அதற்காக சட்ட முன்வடிவு இங்கே கொண்டுவரப் பட்டிருக்கிறது. இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

[1987 நவம்பர் 17

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 47/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(ஐ) தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1987.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

**திரு. மா. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த எதிர்பாராச் செலவு நீதி ஒதுக்கச் சட்ட முன்வடிவிலே எங்களுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக் களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முக்கியமாக இந்த ஆண்டு வறட்சியினுடைய கொடுமை நமது நாட்டைப் பாதித்தது போல, எங்களுடைய பகுதியாகிய தஞ்சாவூர், வேதாரண்யம் ஆகிய பகுதிகளும் மோசமாக வறட்சியால் பாதிக்கப்பட்டு, அங்கே குடி நீருக்கே சிரமப்படும் நிலைமை ஏற்பட்டு, அரசுக்கு அதை அவ்வப்போது தெரியப்படுத்தி, அரசும் ஓரளவுக்கு செய்தது என்றாலும், முழுவதுமாக குடிநீர் பிரச்சினையையும், வேலை வாய்ப்பு அளித்தலையும் செய்ய முடியவில்லை. அதற்குக்

* 13—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



காரணம், மத்திய அரசை எதிர்பார்த்து, மத்திய அரசு தருவ தாகச் சொல்லி, அந்த எதிர்பார்த்த அளவுக்கு மத்திய அரசு தரவில்லை என்று ஆளுங் கட்சியின் சார்பாகச் சொன்னாலும், நாமும் அதை மத்திய அரசுக்குத் தெரிவித்து, மேலும் நிவாரணத் தொகைகள் அதிகமாகக் கிடைக்க எல்லாக் கட்சிகளும் ஒருங் கிணைந்து போராடினால்தான் முடியுமென்ற அளவுக்குத்தான் இன்றைய நாட்டு நிலைமை இருக்கிறது. நிரந்தரமாகக் குடிநீர் இல்லை என்ற அளவுக்குச் சில கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக் கின்றன. வறட்சிக் காலத்திலே பல கிராமங்களிலே தொழிலா ளர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. மேலும் குடிநீருக்கும் அலையும் நிலைமை பல கிராமங்களில் நிரந்தரமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு பருவ மழை தவறியதாலும், வறட்சியாலும் தொழிலாளர்கள் மிக வேதனையோடு இருக்கிறார்கள். பட்டினிச் சாவு என்று சொல்லுமளவுக்கு இன்றைக்கு கீழத் தஞ்சை மாவட்டம் மிகவும் தத்தளித்துக்கொண்டிருக்கிறது என்பதை அரசு உணர வேண்டும். பல மாதங்களுக்கு முன்னாலே, பட்டினிச் சாவு என்ற தலைப்பிலே வாரப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருப்பதை இந்த அரசுக்குத் தெரியப்படுத்த விரும்பு கிறேன். அத்தோடு இந்த வேலைவாய்ப்பு இல்லாமல் இருக் கின்ற காலங்களிலே இப்போது மழை பெய்ததனால் அந்த வேலை களை நிறுத்த அரசு முன்வரக்கூடாது என்று கேட்டுக்கொள் கிறேன். இந்த ஆண்டு குறுவை அறுவடை இல்லாததனாலே விவசாயக் கூலிகள் வேலை செய்யமுடியாமல் பசியும் பட்டினியும் காரணமாக அங்கே உள்ள வள்ளிக்கிழங்கையும் மற்ற கிழங்கு களையும் சாப்பிட்டு வாழ்கின்ற நிலைமைகள் இருந்துகொண்டி ருக்கின்றன. அதனாலேயே விவசாயக் கூலிகள் சாகின்ற நிலைமைகள் இருக்கின்றன. அறுவடை இல்லாததால் வர இருக் கின்ற சம்பா அறுவடையைத்தான் நம்பி இருக்கிறார்கள். அதுவும் காலப்போக்கிலே எப்படி நடக்கப்போகிறதோ தெரி யாது. எனவே இந்த வறட்சியிலேயே திட்டமிட்டு மத்திய அரசிலேயிருந்து நிதிகளைப் பெற்று வருகின்ற ஆண்டிலே, இந்த ஆண்டு பாதிக்கப்பட்டதுபோல, நிச்சயமாக வறட்சியினால்

[திரு. மா. மீனாட்சிசுந்தரம்] [1987 நவம்பர் 17

பாதிப்பு ஏற்படக்கூடும் என்பதை அரசு கவனத்தில் கொண்டு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். நல்லமுறையிலே தொடர்ந்து வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மட்டுமல்லாமல், பொதுப் பணித்துறை மூலமாகவும், நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக வும் பல வேலைகளைச் செய்யவேண்டும். ஏரி, குளங்களை ஆழப்படுத்துகின்ற வேலையையும் கடலிலே சென்று நீர் வீணா கின்ற நிலைமைகளைத் தடுத்து நிறுத்தி தண்ணீர் தேக்கி வைக்கின்ற அளவுக்குப் பல திட்டங்களை அரசு செய்தால் அடுத்த ஆண்டு ஓரளவுக்கு பட்டினிச் சாவைத் தடுக்கமுடியும் என்பதை இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் நிரந்தரமாக வறட்சிக் காலங்களில் கூட நீர் கிடைக்கின்ற அளவுக்கு நீரைச் சேமிப்பதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு இந்த அரசு துணை மானியக் கோரிக்கையிலே நாங்கள் எல்லாம் ஒன்றை எதிர்பார்த்தோம். கன்னியாகுமரி மாவட்டம் மருத்துவ மனை வேண்டுமென்று நிலம் எல்லாம் ஒப்படைத்து, தற்காலிகக் கட்டிடங்கள் எல்லாம் கட்டி வைத்தோம். அந்த மருத்துவமனை ஆரம்பிக்கப்படவில்லை. அதற்கும் இந்த அரசு உடனடியாக ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

மக்கள் சென்ற ஆண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருக் கின்றார்கள். பல கிராமங்கள் கடல் அரிப்பு காரணமாகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மூனு ஆகி கமிஷன் வந்தபோது அவர்களிடம் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு அவர்களிடமிருந்து, அரசிடமிருந்து, அரசு செயலாளரிடமிருந்து ஆவன செய்வதாகப் பதில் சொல்லியிருக்கின்றார்கள். உடனடி யாக இந்த திட்டத்திலாவது அல்லது வருகிற திட்டத்திலாவது சிறந்த வேலைகளைச் செய்வதன் மூலமாக மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.



1987 நவம்பர் 17]

* திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு மீது நான் பேசு கின்றபோது இந்த எதிர்பாராச் செலவு நிதியிலே வறட்சி நிவாரணத்தைக் குறிப்பிட்டு மிக முக்கியமாகச் சொல்லப்பட்டி ருக்கிறது. இன்னொன்று எதிர்பாராச் செலவுகள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ரூ. 50 கோடியை ரூ. 100 கோடியாக அதிகரிக்க வேண்டும் என்றும், சட்டப் பேரவை அப்போது நடைபெறாத காரணத்தினால் அது ஆளுநர் அவர்களால் அவசரச் சட்டமாகப் பிறப்பிக்கப்பட்டது, இப்போது சட்ட மாக்க இருக்கிறோம் என்று சொல்கின்றார்கள். வறட்சி நிவார ணப் பணியிலே இந்த அரசு என்னென்ன செய்தது என்பதை நேற்று துறையினுடைய அறிக்கையிலே பார்த்தோம். இந்த அரசால். வறட்சி நிவாரணப் பணியின் காரணமாக மத்திய அரசுக்குப் பல்வேறு கோரிக்கைகள் விடப்பட்டன. நீங்கள் கேட்ட பணம் நூற்றுக்கணக்கான கோடி. ஆனால் மத்திய அரசு தந்தது இரண்டு ஸ்தானக் கணக்கிலே. நீங்கள் கேட்டதில் பத்தில் ஒரு பங்குதான் மத்திய அரசு வறட்சி நிவாரணப் பணிக்கு என்று பணம் கொடுத்திருக்கிறது.

நான் இதிலே சொல்லிக்கொள்ள விரும்புவது, ஒன்று நீங்கள் மதிப்பிட்டது தவறா அல்லது மத்திய அரசு வேண்டுமென்றே பாகுபாடு காட்டுகிறதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன். இன்னொன்று மத்திய அரசிலிருந்து துணை அமைச்சர் மாண்புமிகு திரு. அருணாசலம் அவர்கள் இந்த வறட்சி நிவாரணப் பணிகளை பார்வையிடுவதற்கு நியமிக்கப்பட்டு இருப்பதாக ஒரு செய்தி வந்தது. நான் கேட்க விரும்புவது, இந்தத் தமிழ்நாடு சர்க்கார் வறட்சி நிவாரணப் பணிகளை முறை யாகச் செய்யும் என்பதில் மத்திய அரசுக்கு நம்பிக்கை யில்லையா? இப்போது புதிதாகத் துணை அமைச்சரை வறட்சிப் பணிகளைப் பார்வையிடுவதற்கு அமர்த்துவது என்பது மிகமிக வேடிக்கையாக இருக்கிறது. இதற்கு முன்பு இல்லாத ஒரு செய்தி. இன்னொன்று நான் சொல்லிக்கொள்ள விரும்புவேன். அதாவது இந்தத் துறைகளிலே பல நேரங்களில் அறிக்கைகள் விட்டிருக்கின்றார்கள். வறட்சி நிவாரணம். . . (குறுக்கீடு)

(மணி அடிக்கப்பெற்றது)

(பிற்பகல் 12-20)

**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர் திரு. அருணாசலம் அவர்கள் தமிழகத்தினுடைய வறட்சியை மட்டும் கவனிக்க வரவில்லை. அதற்காக மத்திய அரசு அவரை நியமிக்கவும் இல்லை. தமிழகத்திலே மட்டுமல்ல, தென் பகுதியிலே இருக்கிற கேரளா, ஆந்திரா, மற்றும் எல்லா மாநிலங்களையும் கவனித்து ஒட்டுமொத்தமாக வறட்சியின் உண்மை நிலையைக் கண்டறிந்து எந்தவகையில் வறட்சியின் நிலைமை இருக்கிறது, எவ்வளவு நிவாரணத்திற்குச் செலவாகும் என்பதை எல்லாம் கவனிப்பதற் காக அவரைப் போட்டிருக்கிறார்கள். அதைவிட்டுவிட்டு தமிழகத்தை மட்டும் வேறுபடுத்திக் காட்டுவதற்காக இப்படி அவரை போட்டிருப்பதாகப் பொருள்பட இங்கே ஒரு கருத்தை உருவாக்குவது சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பும் தமிழகத்தில் பல தடவை வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அப்போதெல்லாம் மத்திய அரசு நிதியுதவி அளித்திருக்கிறது. ஆனால் அப்போதெல்லாம் இப்படி ஒரு மத்திய அமைச்சர் தமிழகத்திற்கு வந்து பார்வையிடுகின்ற வாய்ப்பில்லை, அப்படி ஒரு நியமனம் செய்யப்படவில்லையே, அது ஏன் என்பதுதான் என்னுடைய வாதம். (குறுக்கீடு) (மணி அடிக்கப்பெற்றது).

**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் மத்திய அரசிலேயிருந்து ஒரு குழு வரும், அது பரிசீலிக்கும், பிறகு மத்திய அரசுக்கு அறிக்கை கொடுக்கும். அதன்பிறகு தொகை கொடுப்பார்கள். ஆனால் இப்போதோ ஒரு அமைச்சரை அதிகபட்சமாக மத்திய அரசு போட்டதைத் தவறு என்று உறுப்பினர் கருதுகிறாரா?

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறு என்றுதான் நான் சொல்ல வருகிறேன். அதிகபட்சமாக அமைச்சரை போட்டதைப் பொறுத்தவரையில் ஒன்றைக் கேட்கிறேன். முதலில் ஒரு குழு வந்தது, பிறகு இரண்டாவது குழு வந்தது, அறிக்கை தந்தது, பிறகு மத்திய அமைச்சர் வந்தார். அப்படியும் எவ்வளவு பணம் தமிழகத்திற்கு கொடுத்தார்கள் என்பதுதான் என்னுடைய





கேள்வி. அதுமாத்திரமல்ல. பாரதப் பிரதமர் அவர்கள் கூட வந்தார்களே, அப்படியும் எவ்வளவு தொகை கொடுத்தார்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி. மாநில அரசு அறிக்கையை முறையாக வைக்கவில்லை என்று சொல்கிறது மத்திய அரசு, ஆனால் இவர்கள் வைத்ததாகச் சொல்கிறார்கள். எது சரி? இப்படி எல்லாம் வறட்சி நிவாரணச் செயல்பாடுகளில் குளறு படிகள் இருக்கின்றன. விழுப்புரம் பக்கத்திலே வந்தால் தெரியும் சாலைகளின் நிலைமை பற்றி. பல்வேறு இடங்களில் சாலை களில் பாலங்கள், இணைப்புச் சாலைகள் போடப்படுகின்றன. அதற்கெல்லாம் எவ்வளவு செலவு மாநில அரசுக்குத் தேவைப் படும்? இதெல்லாம்தான் எதிர்பாராச் செலவா? சென்ற சில மாதங்களுக்கு முன்பு பாலங்கள் தகர்க்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய சம்பவங்கள் ஏன் நடைபெற்றன என்பதைப்பற்றி எல்லாம் இங்கே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு
**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எதிர்
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமுன்வடிவைப்
பாராச் செலவு நிதி (இரண்டாம் திருத்த) விரும்புகிறேன்.
பொறுத்தவரையில் முதற்கண் ஒன்றை சொல்ல எப்போதும்
எதிர்பாராச் செலவு நிதியத்தில் 50 கோடி ரூபாய் இனங்களுடைய
இருப்பு இருக்கும். ஆனால் எதிர்பாராச் செலவு அளவுக்கு,
வகைகள் வளர்கின்றபோது நாம் 100 கோடி ரூபாய் குறிப்
75 கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்துவதும், பிறகு ஒரு கோடி
பிட்ட காலம் சென்ற பிறகு மறுபடியும் அதனை 50 அரசைப்
ரூபாயாக ஆக்குவது என்பதும் நீண்ட பெருங் காலமாக
பொறுத்தவரையில் கடைப்பிடித்து வரும் ஒரு முறைதான்.

போதாது
இந்த 50 கோடி ரூபாய் என்று இருந்த நிலைமை எதிர்பாராச்
என்று சொல்லி, 100 கோடி ரூபாய் அளவுக்கு இந்த வேண்டு
செலவு நிதிய வகைகளினுடைய நிதியளவை மேம்படுத்த காரியங்களை
மென்று சொல்லி அதற்கான அடிப்படைக் காரண அந்த
எல்லாம் சொல்லி தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. நாம்
வகையில் முதலாவதாக வறட்சி நிவாரணப் பணிகளை அதிக
மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாக மக்களுக்குக்
அளவில் நிதி தேவைப்பட்டது. அதுபோல மேற்கொண்டோம்.
குடிநீர் வழங்க பல்வேறு நடவடிக்கைகளை பணியினையும்,
ஆழ்துளைக் கிணறுகளை வெகுவாக போடுகின்ற

ஏற்கெனவே இருந்த கிணறுகளை ஆழப்படுத்த வேண்டிய அவசியமும் பல இடங்களில் புதிய கிணறுகளை உருவாக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. அதுமட்டுமல்ல. பல இடங்களில் தண்ணீர் கிடைக்காத நிலையில், தண்ணீர் கிடைக்கின்ற இடங்களிலிருந்து லாரிகள் மூலமாக கொண்டுவந்து குடிநீர் வழங்க வேண்டிய அவசர அவசியம் ஏற்பட்டது. அதுமாத்திரமல்ல. வேளாண்மைத் தொழிலை நம்பி வாழுகின்ற வேளாண் பெருங்குடி மக்களுக்கு பயிர் தொழில் நடைபெறாத காலங்களில், கூலியை மட்டுமே நம்பி வாழ்ந்து வந்த அவர்களுக்கு வேலையும், கூலியும் இல்லாத நிலையில் அவர்கள் வாழ்க்கை நடத்துவது கஷ்டம் என்பதால் அவர்களுக்கு ஏதாவது வேலைவாய்ப்பினை தந்து அதன்மூலம் வாய்ப்பளிப்பதற்காக சாலை போடுகின்ற பணி, குளங்களை தூர் வாருகின்ற பணி போன்றவைகளை தந்து அதற்கு ஈடாக அவர்களுடைய வாழ்க்கைக்கும் தேவையானதை தந்து, அந்த வகையில் அவர்களுடைய பணியைச் சமுதாயத்திற்கும், நாட்டுக்கும் பயன்படுத்தினோம். அந்தவகையில் அவர்களுடைய வேலைவாய்ப்புக்காகவும் விரைந்து ஒதுக்கீடு செய்ய வேண்டிய தன்மைகள் ஏற்பட்டன என்பதைப் பற்றி எல்லாம் நான் நேற்றையதினம் இங்கே விரிவாக எடுத்துச்சொன்னேன்.

அந்தவகையிலே அரசினுடைய கூடுதல் நிதி மட்டும் 55 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. ஆனால் திட்டச் செலவுகளுக்கு என்று கிட்டத்தட்ட 184 கோடி ரூபாய்க்குமேல் நாம் அனுமதி அளித்திருக்கிறோம். அது மட்டுமல்லாமல் 140 கோடி ரூபாய்க்கான பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்றும் நேற்று துணை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் சுருக்கமாக விளக்கம் அளிக்கும்போது சொன்னேன்.

ஆனால், மூன்று பருவ மழை தொடர்ந்து பொய்த்த காரணத்தால் தமிழ்நாடு மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அது மட்டுமல்ல. நான்காவது வடகிழக்குப் பருவக்காற்றினால் எதிர்பார்த்த அளவுக்கு நல்ல மழை பரவலாகப் பெய்திருப்பதால் ஓரளவுக்கு திருப்தி ஏற்பட்டிருக்கிறது; எதிர்காலத்தில் ஓரளவுக்கு இது சாதகமாக அமையும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பல்வேறு ஏரிகள், நீர்த் தேக்கங்கள் நிறைந்து காணப்படுகின்றன என்பது மன நிறைவு அளிக்கிறது. கிருஷ்ணகிரி



நீர்த்தேக்கம் நிரம்பி வழிகிறது; வேறு பல அணைக்கட்டுகளும் நிரம்பியிருக்கின்றன. சில அணைகளில் முக்கால் பங்கு நிரம்பியிருக்கிறது; சில அணைகளில் அரேயரைக்கால் அளவுக்கு நிரம்பியிருக்கிறது. நேற்றையதினம் பத்திரிகையிலே வீராணம் ஏரி நிரம்பி வழிகிறது என்று செய்தி வந்திருக்கிறது.

இப்படிப்பட்ட தன்மைகள் எல்லாம் இருந்தாலும், மழை பரவலாகப் பெய்திருந்தாலும், நம்பிக்கை ஊட்டுகின்ற வகையில் இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல குறுவைப் பயிரைச் சரியாக நடவு செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை.

இப்போதும் காலாகாலத்தில் தண்ணீர் விடமுடியாமல், சம்பாப் பருவம் சரியான நேரத்தில் நடைபெறாத நிலைமையில், அதனுடைய பயிரிடும் பரப்பளவு குறைந்திருந்தாலும், இரண்டு ஆண்டுக் காலமாக வறட்சி ஏற்பட்டிருந்ததால், இந்த ஆண்டு அறுவடை பலன் வழக்கத்தைவிட சற்றுக் கூடுதலாகக் கிடைக்கும் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். அதே நேரத்தில் இந்த ஆண்டு தாமதமாகப் பயிர் செய்யப்பட்டதால் அறுவடை தை மாதத்தில் நடைபெறாவிட்டாலும், மாசி மாதத்தில் நடைபெறும், நெல் கூடுதலாகக் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். இருந்தாலும், மொத்தத்தில் வழக்கமாகக் கிடைக்கிற அளவுக்குக் கிடைக்காவிட்டாலும், நாம் சமாளிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, மழை பெய்தவுடன் நாம் பணிகளை நிறுத்திவிடவில்லை. 140 கோடி ரூபாய்க்கான பணிகள் இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கின்றன: இன்னும் 44 கோடி ரூபாய்க்கான பணிகள் ஆங்காங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும், திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் அவர்களும் வறட்சியின் காரணமாக மத்திய அரசிடம் அதிக நிதியைக் கேட்டுப் பெற வேண்டும் என்று சொன்னார்கள். மத்திய அரசிடம் கேட்காமல் இல்லை, கேட்கிறோம். எந்த எந்த சமயத்தில் எவ்வளவு கேட்டோம் என்பதை இந்த அவைக்கு பலதடவை சொல்லி இருக்கிறோம். முதலிலே 360 கோடி ரூபாய் கேட்டோம்;

அதற்குப் பின்னாலே 92 கோடி ரூபாய் கேட்டோம். எல்லாவற்றையும் கணக்கிட்டு, இறுதியில் 400 கோடி ரூபாய் தரவேண்டுமென்று கேட்டோம். இருக்கின்ற தன்மைகளையொட்டி நாம் கேட்கின்றபோது அவர்கள் அந்த அளவுக்கு கொடுப்பதில்லை; கொடுக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். நாம் மத்திய அரசைக் கேட்கிறபோது எதிர்காலத் தேவையைச் சமாளிக்கின்ற நிலைமையையும் ஒட்டி கேட்டோம். அதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து, உடனடியாகத் தேவைப்படுகின்ற செலவினங்களுக்குத் தான் தருவோம், மற்ற மற்ற திட்டங்களை ஏற்பதற்கு இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள்.

இந்தியாவில் இருக்கிற 25 மாநிலங்களில் ஏறத்தாழ 17 மாநிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பாதிக்கப்பட்ட அந்த மாநிலங்களுக்கு எல்லாம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்கிறது; ஆகவே இதற்குமேல் ஒதுக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். அண்மையில் இரயில்வே கட்டணத்தை தூக்கி. வேறுபல கட்டணங்களை எல்லாம் தூக்கி இருந்தபோதிலும் இந்த அளவுக்குத்தான் முடியும் என்று சொல்லி இந்த அளவுக்குத் தந்திருக்கிறார்கள். அது நமக்கு திருப்தி அளிக்கக்கூடிய அளவுக்கு இல்லை. திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் அவர்களுக்கு இதிலே எவ்வளவு அதிருப்தி இருக்கிறதோ, திருமதி யசோதா அவர்களுக்கு எவ்வளவு அதிருப்தி இருக்கிறதோ—அவர்கள் திருப்தி என்கிறார்கள்—அந்த அளவுக்கு எங்களுக்கும் அதிருப்திதான். இன்னும் அதிகமாக நிதி பெற வேண்டுமென்று எல்லோரும் சொல்கிறார்கள். நாம் மத்தியிலே கேட்கிறபோது அவர்களுக்கு இருக்கிற சங்கடங்களை அவர்கள் நம்மிடம் சொல்கிறார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்முடைய மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கு நாம் பணம் கேட்கின்ற நேரத்தில், வளர்ச்சிப் பணிகள் மேம்பாடு காண வேண்டும் என்று எண்ணுகின்றபோது நிதி பெறுவதிலே தேக்கம் ஏற்படுகிறது; வெட்டு ஏற்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளையும் நாம் சமாளிக்க வேண்டியிருக்கிறது.



மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் அவர்கள் சொல்லும்போது மத்திய இணை அமைச்சர் திரு. அருணாசலம் அவர்களை இந்த மாநிலத்திற்கும் தென்னக மாநிலங்களுக்கும் போட்டிருக்கிறார்களே, அது சரிதானா; சரியல்ல என்று சொன்னார்கள்.

(பிற்பகல் 12-30)

அண்மையில் வறட்சிநிலை பல மாநிலங்களில் வந்ததன் காரணமாகவும், பல மாநிலங்களில் சூழ்நிலைகளை எல்லாம் ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாகவும், இந்தியாவைப் பொறுத்தவரையிலே இந்தியாவின் பிரதமர் மாண்புமிகு திரு. ராஜீவ் காந்தி அவர்களைத் தலைவராகக் கொண்ட முக்கியமான அமைச்சர்களையும், இணை அமைச்சர்களையும் கொண்ட ஒரு குழு மத்தியில் அமைக்கப்பட்டது. அதே மாதிரி அவர்கள் ஒரு தாக்கீது அனுப்பினார்கள்—எல்லா மாநிலங்களுக்கும். மாநில முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டு, முக்கியமான அமைச்சர்களையும், நிதியமைச்சரையும் வேளாண்மைத்துறை அமைச்சரையும், நீர்ப்பாசனத் துறை அமைச்சரையும், மின்சாரத் துறை அமைச்சரையும் இப்படிப் பொருத்தமுடைய, இதற்குத் தேவைப்படுகிற அமைச்சர்களை எல்லாம் கொண்ட, உரிய அதிகாரிகளை எல்லாம் கொண்ட குழுவை, மாநில அளவில் அமைக்கவேண்டும் என்று தெரிவித்தார்கள். வறட்சி நிவாரணப் பணிகளைப் போர்க்கால நடவடிக்கையாகக் கருதிச் செய்யவேண்டுமென்ற முறையிலேயும், மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் ஒரு தொடர்பு ஏற்படுத்துகிற வகையிலேயும் ஒரு அமைச்சரை அதிலே ஏற்படுத்துவது நல்லது என்று அந்தக் குழுவைச் சேர்ந்த ஒருவரை அனுப்பிய வகையில்தான் திரு. அருணாசலம் அவர்கள் இங்கே வந்தார்களே தவிர மேற்பார்வையிடவோ, கண்காணிக்கவோ அல்லது ஆணையிடவோ அல்ல. அப்படி வந்தால் நாங்கள் விட்டிருக்கவும் மாட்டோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முதலமைச்சர்களின் மாநாடு நடைபெற்றபோதுகூட, இந்தப் பிரச்சினை இந்தியாவின் பிரதமர் அவர்களிடத்தில் கிளப்பிய போது, மாண்புமிகு திரு. ராஜீவ் காந்தி அவர்கள் நாங்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] 1987 நவம்பர் 17]

இவ்வாறு ஒருவரை அனுப்பி வைத்திருப்பது கோ-ஆர்டினேட்டராகத்தானே தவிர வேறு எந்த வகையிலும் இல்லை; வேறு எந்த வகையிலும் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்றும் சொல்லுவார்கள். சில மாநிலங்கள்கூட இதை ஆட்சேபம் செய்தன, ஏன் அவர்களை அனுப்பினீர்கள் என்று கேட்டு. அப்படியே அனுப்பி இருந்தாலும், ஒரு இணை அமைச்சரை ஒரு மாநிலம் ஏற்றுக்கொள்ளாது. இணை அமைச்சர் என்பவர் ஒரு சாதாரண நிலைமையில் இருப்பவர். அவரால் மாண்புமிகு முதலமைச்சரை ஆணையிடவோ, கேட்கவோ முடியாது. அப்படி வரவேண்டுமென்றால் பிரதமர்தான் வரவேண்டுமே தவிர, வேறு யாரும் வந்து முதலமைச்சரைக் கேள்வி கேட்கவோ, ஆணையிடவோ உரிமை கிடையாது. ஆகவே அவர்கள் கண்காணிக்கவோ அல்லது வேறு வகையிலோ வரவில்லை. கோ-ஆர்டினேட்டர் என்ற முறையில் அங்கே இருக்கின்ற குழுவில் இங்கே இருக்கின்ற நிலைமைகளை உடனுக்குடன் எடுத்துச் சொல்வதற்கும், அவ்வப்போது நிலைமைகளை ஆராய்ந்து சொல்வதற்கும் என்றுதான் அனுப்பி இருந்தார்கள். நாம் என்ன விவரங்களை தருகிறோமோ, அந்த விவரங்களைத்தான் அவர் எடுத்துக்கொண்டு போக வேண்டுமே தவிர, மாதாமாதம் இங்கே வந்து, நாள்தோறும் இங்கே உட்கார்ந்து, 24 மணி நேரமும் ஆராய்கிற வகையில் இயலாது. அவ்வாறு ஆராய்ந்து அதன் மூலம் எங்களுக்குக் கிடைக்காத விவரங்கள் இரண்டு நாட்கள் இங்கே வந்துவிட்டுப்போகிற திரு. அருணாசலத்திற்கு எப்படிக் கிடைத்துவிட முடியும்? இங்கேயுள்ள குழு என்ன சொல்கிறதோ, அதை எடுத்துக்கொண்டுபோய் அந்தக் குழுவினிடத்திலே வைக்கின்ற வகையில், ஒரு கோ-ஆர்டினேஷன் செய்வதற்காகத்தான் வந்தாரே தவிர, வேறு வகையில் அச்சப்படத் தேவையில்லை என்பதற்காக நான் இதைக் கூறுகிறேன்.

அதைக்கூட முதலமைச்சர்களின் மாநாட்டிலே சொன்னார்கள். ஒரு சீனியர் மினிஸ்டரைப் போட்டால் இன்னும் நல்லது என்று சொன்னார்கள். இணை அமைச்சரை விட கேபினெட்டில் இருக்கிற ஒரு மினிஸ்டரைப் போட்டால் நன்றாக இருக்கும், பவர்புல்லாக இருப்பார்கள், அவர்கள் சொன்னால் மத்திய அரசிலே இருக்கிற அதிகாரிகள் கேட்பார்கள், எனவே அப்படிப்பட்டவர்களைப் போட்டிருக்கலாமே என்று மாநில



1987 நவம்பர் 17] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

முதலமைச்சர்கள் குறிப்பாக மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் திரு. சவான் அவர்கள்கூட வற்புறுத்தினார்கள். ஒரு சாதாரண அமைச்சராக இருப்பதைவிட, சீனியர் அமைச்சரை அனுப்புவது மிக மிக நல்லது என்று அவர்கள் சொன்னால் அங்கே இருக்கிற அதிகாரிகள் முறைப்படுத்திக் கொடுப்பார்கள் என்று சொன்னார்கள். ஆக இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் அடிப்படையில் தான் இந்தச் செலவுகள் எல்லாம் செய்யப்படுகின்றன. ஆகவே உடனடியாகத் தேவைப்படுகிற காரணத்தால்தான் அவசரச் சட்டம் போட வேண்டிய அவசியம் வந்தது. செப்டம்பர் 21 ஆம் தேதியிலிருந்து மார்ச் 31 ஆம் தேதி வரையில்தான் இதனை 100 கோடி ரூபாய்க்கு உயர்த்துகிறோம். இவ்வாறு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து எடுக்கிறோமே தவிர, இதில் என்னென்ன செலவுகளைச் செய்கிறோம் என்பதற்கு அவையின் அனுமதியைப் பின்னர் பெற்றுத்தான் தீர வேண்டும். அதைக் கொண்டு வந்து மறுபடியும் துணை மானியக் கோரிக்கையில் வைத்து, இந்த அவையினுடைய அனுமதியைப் பெற வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்பட்ட பின்னர்தான், அந்தச் செலவுகள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்படுமே தவிர, எதிர்பாராச் செலவுக்காக ஒதுக்கப்படுகிற பணம் இது என்பதால், நாங்கள் செய்கிற செலவு கனை எல்லாம் செய்துவிட முடியும் என்பதல்ல. அதனை மறுபடியும் இந்த அவைதான் ஆராய வேண்டும். ஏன் செலவு செய்தோம், எப்படிச் செய்தோம், அப்படிச் செய்யலாமா என்று எல்லாம் கேட்க இந்த அவைக்கு முழு உரிமை உண்டு. ஆனால் அங்கிருந்து எடுத்து செலவுகள் செய்கிறபோது, அந்த எதிர் பாராச் செலவு இருக்கவேண்டும் என்ற அந்த வகையில்தான் 50 கோடி-ஐ 100 கோடியாக ஆக்குவது என்று செய்கிறோமே தவிர இது புதிதல்ல. ஆண்டுதோறும் இதன் அளவை உயர்த்துவதும், அந்தக் குறிப்பிட்ட காலம் முடிந்ததற்குப் பிறகு மறுபடியும் 50 கோடியாக இறக்குவதும், பின்னர் தேவையான போது உயர்த்துவதும், தொடர்ந்து நடைபெறுகிற ஒன்று. எனவே, இதிலே அதிக விவாதத்திற்குக் கூட அவசியம் இல்லை என்றாலும், தெளிவு படுத்துவதற்காகத்தான் நான் இதைக் கூறினேன் என்பதைக் கூறி, பேரவையினுடைய உறுப்பினர்கள் இதனை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1987 நவம்பர் 17

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்** னுள்ள கேள்வி :—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## 8. அரசினர் தீர்மானம்.

### (அ) அலுவல் வரிசையில் மாற்றம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவையின் விதி 30 (3)-ன் கீழ் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 7, 'அரசினர் சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்தல்' என்ற தலைப்பின்கீழ், வரிசை எண் 7, " 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1987)"



1987 நவம்பர் 17] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்று உள்ளதை அதே இனத்தில் வரிசை எண் 2 "1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 45/1987)-க்குப் பின் எடுத்துக் கொள்ளலாம்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஒ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்ச வரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு 1987.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர் திருத்த சட்டங்களுடைய இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவு அதனுடைய காரண நோக்கங்களை விளக்கும்போது 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த, நில உச்சவரம்பு நிர்ணயம் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 58/1961, பிரிவுகள் 85 (1), 86, 87, 88, 89, 90 மற்றும் 91, மேற்கூறிய சட்டத்தின் கீழ் தண்டனைக் குரிய சில குற்றங்களின் பேரால் தண்டனைக்கான அபராதத் தொகை விதிக்க வழி வகை செய்கிற மேற்கண்ட பிரிவுகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அபராதத் தொகை குறைவாக உள்ளதால், அவற்றை உயர்த்தி உயர்ந்த அளவு ரூபாய் 2,000 வரை அதிகரிக் கலாம் என முடிவு செய்து, அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற் காக இந்தச் சட்ட முன்வடிவு மூன் வைக்கப்பட்டிருக்கிறது என்று காரண நோக்கங்களிலே விவரிக்கப்பட்டிருக்கிறது.

---

* 16—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. கோ. வீரய்யன்] [1987 நவம்பர் 17

அந்தச் சட்டத்திலே முன்னால் இருந்த மேற்சொன்ன பிரிவு களில் 200 ரூபாய் அபராதம் வரை விதிக்கலாம் என்று இருந் ததை 2,000 ரூபாய் ஆகவும் 500 ரூபாய் வரையில் அபராதம் விதிக்கலாம் என்று இருந்ததை ரூபாய் 2,000 ஆகவும், ஆயிரம் வரை அபராதம் விதிக்கலாம் என்று இருந்ததை ரூ. 2,000 ஆக வும் உயர்த்தி, இப்போது ஒரு திருத்தச் சட்ட முன்வடிவை இங்கே நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன் மொழிந்திருக்கிறார்கள்.

நான் தெரிந்து கொள்ள விரும்புவதெல்லாம் இந்த 200 ரூபாயை 2,000 ஆக்குவதன் மூலமாகவோ, அல்லது 500 ரூபாயை 2,000 ஆக்குவதன் மூலமாகவோ அல்லது ஆயிரம் ரூபாயை 2,000 ஆக்குவதன் மூலமாகவோ என்ன நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசு முயற்சிக்கிறது என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இப்படி உயர்த்தாமலேயே 200 ரூபாய் என்றோ 500 ரூபாய் என்றோ அல்லது ஆயிரம் ரூபாய் என்றோ தண்டனை விதிக்கலாம். ஆனால் உச்ச வரம்புக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்கள் கொடுக்கக்கூடிய கணக்கில் அல்லது புதிதாக உச்ச வரம்புக்கு மேல் நிலம் ஏற்பட்டு விட்டால் அதைப்பற்றிய தகவல் கொடுக்கும்போது அரசுக்கு உண்மையான தகவல்களைக் கொடுக்காமல் தவறான தகவல்களைக் கொடுத்து அல்லது சட்டத்திலே இருந்து தப்பிப்பதற்கு முயற்சிகளை எடுப்பவர்கள் மீது தண்டனை விதிப்பதற்காக இந்தப் பிரிவுகளிலே சொல்லப் பட்டிருக்கக்கூடிய அந்த தொகை வரைக்கும் அபராதம் விதிக்க லாம். ஆகவேதான் இப்போது அனைத்துப் பகுதிகளிலேயும் ரூபாய் 2,000 வரையில் அபராதம் விதிக்கலாம் என்று திருத்தத் தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

நான் கேட்டுக்கொள்ள விரும்புவது 1961 ஆம் ஆண்டிலே இருந்து இதுவரையிலும், 27 ஆண்டுகளில், 200 ரூபாய் இருந்த காலத்திலும் 500 ரூபாய் இருந்த காலத்திலும், 1000 ரூபாய் இருந்த காலத்திலும் கூட, 27 ஆண்டுகளில், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலோ அல்லது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலோ அல்லது அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வின் 10 ஆண்டு ஆட்சிக் காலத்திலோ, இந்த தவறான தகவல்களைக் கொடுப்பவர்களுக்குத் தண்டனை கொடுக்கலாம் என்ற பிரிவைப் பயன்படுத்தி, தமிழகத்தில் ஒரு ஆளுக்காவது தண்டனை விதித்



1987 நவம்பர் 17] [திரு. கோ. வீரய்யன்]

திருக்கக்கூடிய வரலாறு உண்டா என்று நான் அமைச்சர் அவர் களின் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன், இந்த 27 ஆண்டுக்காலத்தில் ஒரு கேஸ் கூட இந்த விதிமுறைகளை மீறிய தாகக் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டதாக இல்லை. அப்படியென்றால் கணக்குக் கொடுத்தவர்கள் அவ்வளவு பேரும். இந்த 27 ஆண்டுக்காலத்தில் ஒருவர்கூட தவறே செய்யா மல், சரியாகக் கணக்கு கொடுத்தார்கள் என்று அரசு கருது கிறதா, அப்படிக் கொடுத்திருக்கிறார்களா என்று கேட்க விரும்பு கிறேன். அவ்வளவு பரிசுத்தமாக தமிழகத்தில் உபரி நிலத்தை வைத்திருப்பவர்கள் எல்லாம் அரசுக்கு ஒரு தவறு கூட இல்லாமல் 27 ஆண்டுக்காலமாக கணக்கு கொடுத்த காரணத்தால்தான் இந்தப் பிரிவு ஒருவருக்குக்கூட பயன்படுத்தப்படாமல் இருக் கிறதென்று விளக்க விரும்புகிறீர்களா என்று கேட்க விரும்பு கிறேன். அதனால் இந்தப் பிரிவின் கீழ் அரசு இப்போது எதை சாதிக்க விரும்புகிறது?

(பிற்பகல் 12-40)

இந்தக் கணக்கு சரியா தவறா என்பது ஒரு பக்கம் இருக் கட்டும். ஒரு விளக்கத்தை அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த 27 ஆண்டுக்காலத்தில் உபரியாக எடுக்கப்பட்ட நிலம் விநியோகிக்கப்பட்டவர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. பட்டாவிற்குரிய பணம் நிர்மாணிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. ஆனால் நிலம் அவர்களுடைய கைக்கு இதுவரையில் போய்ச் சேரவில்லை. குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் வலங்கைமான் வட்டத்தில், பாபநாசம் வட்டத் தில், குடவாசல் வட்டத்தில், தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில், அதைப்போல குடவாசல் வட்டத்தில் குறிப்பாக சருகளத்தூர் கிராமத்தில், நாரணமங்கலம் கிராமத் தில் இப்படிப் பட்டா பெற்றவர்களுக்குப் பணம் அவர்களிட மிருந்து அந்த நிலத்திற்கான நஷ்டயீடு என்ற முறையில் வசூலிக்கப்படுகிறதே தவிர, நிலம் அவர்களுக்கு ஒப்படைக்கப் படாமல் இருக்கிறது. இருக்கிற சட்டத்தை நீங்கள் அமல் நடத்தும்போதும் இருக்கிற நிலைமை இது.

[திரு. கோ. வீரய்யன்] [1987 நவம்பர் 17

இன்னொன்றை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். முன்னாலே நம்முடைய உச்ச வரம்புச் சட்டத்திலிருந்த ஒரு பிரிவைத் திருத்தினீர்கள். மேய்ச்சல் நிலத்திற்கு இருந்த விதி விலக்கை நாங்கள் ரத்து செய்கிறோம், அதை உபரியாக எடுக் கிறோம் என்று நீங்கள் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி மேய்ச்சல் நிலத்திற்கு இருந்த விதிவிலக்கை ரத்து செய்தீர்கள். அப்படி ரத்து செய்ததன் மூலமாக ஏறத்தாழ எனக்குத் தெரிந்த வரையில் 2,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் பெரியார் மாவட்டத்திலிருந்து கையகப்படுத்துவதாக இருந்தது. அரசு அதனை கையகப்படுத்திவிட்டதா? விதிவிலக்கை ரத்து செய்ததற்குப் பிறகு 13 ஆண்டுகளுக்கு மேலாகியும் அரசு அந்த மேய்ச்சல் நிலத்தை உபரி நிலமாக எடுத்தது இதுவரையில் எவ்வளவு? அரசு கையகப்படுத்தியிருப்பது எவ்வளவு? எவ்வளவு எடுக்காமல் இருப்பது என்பதை அறிய விரும்புகிறேன்.

எனக்குத் தெரிந்தவரையில் இந்த மேய்ச்சல் நிலம் விதி விலக்கை ரத்து செய்ததே தவறு. ஒரு ஏக்கர் கூட அரசு கையகப்படுத்தவில்லை என்று அறிகிறேன். அரசுக்குச் சொந்த மான அந்த உபரி நிலத்தை, விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டு எடுத்த நிலத்தை முன்னாலே வைத்துக்கொண்டிருந்த நபர்கள் இன்றையதினம் பதிவு செய்யாமல் அன்-ரெஜிஸ்டர்ட் ரெக்கார்டை வைத்துக் கொண்டு விலைக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற தகவலை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன். உபரி நிலமாக எடுத்த நிலத்தை நில உடைமையாளர்கள் விட்டு விட மாட்டார்கள். விதிவிலக்கு ரத்து செய்யப்பட்ட நிலத்தைக் கூட அரசால் எடுக்க முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் தவறான கணக்கு கொடுப்பவர்களுக்கு 200 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக அபராதம் விதிக்கப் போகிறோம் என்று கொண்டு வந்திருப்பது எந்தப் பலனையும் அளிக்காது. இந்தச் சட்டம் என்பது ஒரு பொத்தல் வலையாக இருக்கிறது. ஒரு மீன் கூட 27 ஆண்டுக்காலத்தில் தமிழகத்தில் அகப்படவில்லை. இந்த அரசு பிடிக்கவில்லை, பிடிக்க முடியாது. அவர்கள் அகப்பட மாட்டார்கள் என்பது நமது அனுபவம். பார்த்தால் தலையில் தூக்கிக் கொண்டு போகிறபோது ஒரு வலை மாதிரி தெரியும். தண்ணீரில் போட்டு விரித்த பிறகு பார்த்தால் இருக்கிற மீன்கள் பூராவும் பொத்தலில் புகுந்து போய் விடும். ஒரு மீன் கூட



1987 நவம்பர் 17] [திரு. கோ. வீரய்யன்]

அந்த வலையில் இதுவரையில் அகப்படவில்லை. அப்படியிருக் கிறபோது இந்தப் பிரிவை திருத்தியிருப்பதால், 2,000 ரூபாய் என்று ஆக்குவதால் என்ன செய்யமுடியும் என்று கருதுகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். 27 ஆண்டுக்காலத்தில் ஒருவருக்கு ஒரு நூறு ரூபாய் கூட அபராதம் போடப்படவில்லை. வரப் போகிற காலத்தில் ஒரு மீன் கூட அகப்படாது. அதைப் பிடிக் கக்கூடிய வலையாக உங்கள் கையில் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையினாலே நீங்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய திருத்தத்திலே 2 ஆயிரம் ரூபாய் அபராதம், தவறினால் 6 மாதம் தண்டனை கொடுக்கப்படும் என்று சொல்லி, ஏன் திருத்தக்கூடாது? இதிலே ஒன்றும் நடக்கபோவதில்லை. அப்படி நடக்காததற்கு நீங்கள் அபராதம் மட்டும் என்று போடுவதோடு அல்லாமல், 6 மாதம் தண்டனை கொடுக்கப்படும் என்று திருத்தி வைத்தால் அது சட்டத்திலேயாவது இருக்கும். எனவே அந்த முறையிலே நீங்கள் இந்தச் சட்டத்தை திருத்து வீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்து, இந்த நில உச்சவரம்புச் சட்டத்திலே இருக்கக்கூடிய அந்த முழுமையான ஓட்டைகள் பூராவையும் அடைத்து, உபரி நிலங்கள் கிடைக்கக் கூடிய அளவிற்கு ஒரு முழுமையான நில உச்சவரம்புச் சட்டத்தை இந்த அரசு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்காமல், அடிக்கடி ஒவ்வொரு பிரிவையும் திருத்தம் செய்து கொண்டு இருப்பது, தோற்றத்திற்கு நன்றாக இருக்குமே தவிர, உண்மையிலே சரியாக இருக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெங்கோப ராவ் என்பவர் இந்த உச்சவரம்புச் சட்டத் தைப் பற்றி, சீலிங் ஆக்டைப் பற்றி ஒரு புத்தகத்தைப் பிரசுரித் திருக்கிறார். அதிலே, திருத்தம் வந்தபோதெல்லாம் அதை ஒட்டவைத்து இருக்கிறார். அதைப் பார்த்தால், தெருவிலே போகக்கூடிய எருமை மாட்டின் முதுகிலே போட்டிருக்கக்கூடிய தோணியிலே 108 கலரிலே ஒட்டுப்போட்டு தைத்திருக்குமே, அந்த மாதிரி, இந்தச் சட்டப் புத்தகத்திலே இருக்கிறது. எனவே அப்படி இருக்கக்கூடிய அந்த நிலையை மாற்றி முழுமையாக இந்த உச்ச வரம்புச் சட்டத்தைத் திருத்துவதற்கும், உபரி நிலங்களைப்

பெருமளவுக்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதைவிட்டு விட்டு, பிட்டு பிட்டாகத் திருத்தி, 200-ஐ இரண்டாயிரமாக ஆக்குவதாலே எதுவும் நடக்கப்போவதில்லை. 27 வருடமாக எதுவும் நடக்கவில்லை. எனவே நான் கடைசியாகக் கேட்டுக் கொள்வது, 2 ஆயிரம் ரூபாய் அபராதம் தவறினால் 6 மாதம் தண்டனை கொடுக்கவேண்டும் என்று சொல்லி, முழுமையான அளவில் இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கும், உபரி நிலங்கள் கிடைப்பதற்கும், அதை ஏழை எளியவர்களுக்குக் கொடுப்பதற்கும் வழி வகை செய்யக்கூடிய அளவில் நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த மேய்ச்சல் நிலத்தை அரசு கையகப்படுத்துவதற்கு முயற்சி எடுக்குமா என்பதையும், அதேபோல் பட்டா கொடுக்கப்பட்டவர்கள் அத்தனை பேர்களுக்கும் இந்த ஆண்டு இறுதிக்குள் நிலத்தை அவர்களுடைய கையில் ஒப்படைப்பதற்கு அரசு முன்வருமா என்பதையும் கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், நன்றி வணக்கம்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நில உச்சவரம்புச் சட்டம் சோசலிச மனோபாவமுடைய அத்தனை பேர்களாலும் வரவேற்கக்கூடிய ஒரு சட்டமாகும். வங்கக் கடலின் ஓரத்தில் உறங்கிக் கொண்டிருக்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொல்லியதைப் போல், திராவிட முன்னேற்றக் கழகம் தென்னாட்டினுடைய உண்மையான பொதுவுடைமைப் பூங்கா. அதற்கு இணங்க சோசலிச பாதையை நோக்கிச் செல்கிற சட்டங்கள் எல்லாம் வரவேற்கப்படவேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, நிலங்களை அதிகமாக வைத்திருப்பவர்களிடமிருந்து, உபரியாக வைத்திருப்பவர்களிடமிருந்து அவைகளை எடுக்கக்கூடிய முயற்சிகள் சட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு, அரசாங்க புள்ளிவிவரப்படி பல்வேறு நிலங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கான குறிப்புகள் அரசாங்கத்திடமே இருக்கின்றன. ஆட்சிப் பொறுப்புக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வந்ததற்குப்





பிறகு, சட்டத்திற்குப் புறம்பாக சட்டத்தை மீறி, நிலங்களை வைத்துக்கொண்டிருக்கக்கூடிய, பதுக்கிக்கொண்டு இருக்கக்கூடிய நிலத் திமிங்கலங்களிடமிருந்து கைப்பற்றிய நிலங்கள் எவ்வளவு என்ற புள்ளிவிவரத்தை, தன்னுடைய பதில் உரையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

இன்னும் சொல்லப்போனால், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் 'இருப்பவன் தரமாட்டான், இல்லாதவனும் விடமாட்டான்' என்று புரட்சிகரமான கருத்தைப் பாடினார்கள். எனவே இருப்பவன் தரமாட்டான் என்பதற்காகத்தான், நம்முடைய அமைச்சர் அவர்கள் அபராதம் செலுத்தினால் போதும், தவறான தகவலைக் கொடுத்திருந்தாலும் கூட, சட்டத்தை மீறியிருந்தாலும் கூட, அவர்கள் அபராதம் செலுத்தினால் போதும், அது சரியாகிவிடும் என்று அவர்கள் கொண்டு வந்திருப்பது சரியான கருத்தல்ல.

இங்கே பேசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் எடுத்துச் சொல்லியதைப் போல, இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே, சப்ரஸ்டு மெட்டீரியல் பேக்ட்ஸ், அடிப்படை உண்மைகளை மறைத்து, நில உச்சவரம்புச் சட்டத்திற்கு விரோதமாக நிலங்களைக் கையகப்படுத்தியிருப்பவர்கள் எந்தச் சட்டைக்குள் ஒளிந்து கொண்டிருந்தாலும் சரி, அவர்கள் எந்தப் பட்டினத்தில் இருந்துகொண்டு அதைச் செய்து கொண்டிருந்தாலும் சரி அல்லது எந்த முகமூடியின் கீழ் நின்று கொண்டு அவர்கள் மக்களை ஏமாற்றினாலும் சரி, அப்படிப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் மாளிகைக்குச் சொந்தக்காரர்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு பெரிய நபராக இருந்தாலும் சரி, அவர்களிடம் இருந்து அந்த நிலங்களை கைப்பற்றுவதற்கு, அபராதம் 2 ஆயிரம் ரூபாய் என்று சொன்னால், அவர்கள் 2 மூட்டை நெல்லை விற்று விட்டு அதைக் கட்டிவிட்டுப் போய்விடுவார்கள். அல்லது 5 மூட்டை நெல்லை விற்று விட்டு பணத்தைக் கட்டிவிட்டுப் போய்விடுவார்கள்.

எனவே கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல, இது ஒரு சமூக விரோதச் செயல் அல்லது சமூக விரோதமான காரியம். இன்னும் சொல்லப் போனால், அரசியல் சட்டத்தினுடைய டைரக்டிவ் பிரின்சிபல்ஸ், வழிநெறிக் கொள்கைக்கு விரோதமானது. நாம் ஒரு சோசலிச

[திரு. அ. ரகுமான்கான்] [1987 நவம்பர் 17

சமுதாயத்தை நோக்கி போகிறபோது, அதற்கு விரோதமாக இருப்பவர்கள் யாராக இருந்தாலும் சமூக விரோதிகள். அப்படிப்பட்ட சோசலிச நிலைக்கு விரோதமாக இருப்பவர்களை சிறையில் அடைத்தால்தான், தவறுகளை உணர்கின்ற கடமை ஏற்படும். ஒரு டெட்டரன்ட் பனிஷ்மெண்ட் இருந்தால் தான் குறைந்தபட்சம் இது அமுலுக்கு வருவதற்கு நன்றாக இருக்கும். ஆகையினாலே, 6 மாதம் சிறைத்தண்டனை என்று சட்டத்திலே கொண்டு வரவேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சொன்ன கருத்தை நானும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

அதோடு மாண்புமிகு அமைச்சருக்கு நான் ஒரு தகவலைத் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கு நிலங்கள் குவியக்கூடாது என்பதற்காக அண்ணா பாதையில், சோசலிச பாதையில் நடைபோடுவதாகச் சொல்லுகிற இந்த அரசு பினாமி நிலங்களை ஒழிப்பதற்கு ஒரு சட்ட மசோதாவை இந்தச் சட்டசபையிலே நிறைவேற்றியிருக்கிறது. நான் ஒப்புக்கொள்கிறேன். இந்திரா காங்கிரஸ் நண்பர்களோடு நீங்கள் கூட்டணியில் இருப்பது எனக்குப் புரிகிறது. அது வேறு விவகாரம். ஆனால் நான் கேட்பது எல்லாம் இதிலே இப்போது மத்திய அரசோடு நீங்கள் கூட்டணியில் இருக்கிறீர்கள். இன்னும் சொல்லப்போனால் பல தேசியத் தலைவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். நிலங்களை எல்லாம் உச்ச வரம்புக்கு மேல் வைக்கக்கூடாது என்ற கருத்து உடையவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியில் மிகப்பெரிய சோசிலிஸ்டுகள் எல்லாம் இருக்கிறார்கள். நேருவினுடைய பாதையில் போகிறவர்கள் எல்லாம் இருக்கிறார்கள்; நில உச்ச வரம்புச் சட்டத்தை ஆதரிப்பவர்கள் இருக்கிறார்கள். ஆக நான் கேட்க விரும்புகிறேன். அப்படிப்பட்ட அந்த மிகப்பெரிய காங்கிரஸ் நண்பர்கள், மிகப்பெரிய தேசியத் தலைவர்கள் ஆகிய இவர்களை எல்லாம் பயன்படுத்தி இதை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். இந்திரா காந்தி அம்மா அவர்கள் 20 அம்சத் திட்டத்திலே இதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒரு அம்சம் நில உச்ச வரம்புக்கு அதிகமாக வைத்துக் கொள்ளுவது, பினாமியாக வைத்துக்கொள்ளுவது எல்லாம் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே நீங்கள் மத்திய



1987 நவம்பர் 17] [திரு. அ. ரகுமான்கான்]

அரசை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறீர்கள். இந்திரா காங்கிரஸ் கரத்தைப் பலப்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். கூட்டணியில் இருக்கிறீர்கள். உங்களுடைய கொள்கைக்கு அந்தக் கட்சியில் சொற்பமும் ஆதரவு. பினாமி நிலம் வைத்துக்கொள்ளக் கூடாது என்று அதற்கு மசோதா கொண்டு வந்தோம். அதனுடைய கதி என்ன ஆயிற்று என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். எது எதற்கோ அவசரச் சட்டங்கள் கொண்டு வருகிற இந்த அரசு ஒரு அடிப்படைக் கொள்கை, அண்ணாவினுடைய கொள்கை, சோசலிசக் கொள்கைக்காகக் கொண்டுவந்த அந்த பினாமி சட்ட மசோதா என்ன ஆயிற்று? எப்போதாவது அதை வலியுறுத்தியிருக்கிறீர்களா? பொதுக் கூட்டங்களில், பொது மேடைகளில் பேசியிருக்கிறீர்களா? சட்ட சபையில் தீர்மானம் போட்டு இருக்கிறீர்களா அல்லது டெல்லியில் ஒரு பிரதிநிதி இருக்கிறாரே அவர் இதைப்பற்றி ஏதாவது பேசியிருக்கிறாரா? இதனுடைய மர்மம் என்ன? ஏன் இப்படி இருக்கிறீர்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்த அளவில் நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில சீர்திருத்த, நில உச்ச வரம்பு நிர்ணய சட்டத்தின் தமிழ்நாடு சட்டத்திலே உள்ள 91 வது பிரிவைத் திருத்துவதற்கு ஒரு சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அனேகமாக அதிகமாக அறிவிப்பது அவசரச் சட்டங்கள்தான். சட்டமன்றத்திற்கு வந்தாலே ஒரு சட்டத்தைத் திருத்துவதுதான் அதிகமான வேலையாக இருக்கிறதே தவிர, ஒரு சட்டத்தைக் கொண்டுவந்த பிறகு அதை எந்த அளவுக்கு நாம் நிறைவேற்றி இருக்கிறோம், எந்த அளவுக்கு நிறைவேற்றப் பட்டு இருக்கிறது, அதில் எந்த அளவுக்கு வெற்றிப் பெற்று இருக்கிறோம் என்பதைப் பற்றி எல்லாம் சொல்லவேண்டு மானால் நமது அமைச்சர் அவர்கள் அந்த அளவுக்கு எதுவும் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறார்கள். காரணம் இன்றைக்கு நிலச் சீர்திருத்தத்தைப்பற்றி சோசலிச நாட்டைப் பற்றி எல்லாம் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மேடையிலே பேசுகிறோம், வாக்குகளை பெறுவதற்கு

அள்ளி, அள்ளி வீசுகிறோம். ஆனால் ஆட்சிக்கு வந்த பிறகு பல்வேறு நிர்ப்பந்தங்கள் அல்லது பல்வேறு குழுக்களைக் கருத்து [illegible] தான சட்டங்கள் திருத்தப்படுகிறது [illegible] அது அமல் [illegible] கூடிய அளவுக்கு நிறைவேற்றப்படவில்லை என்று நான் குறையாக சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்தத் திருத்தத்திலே கூட இன்றைக்கு 2 ஆயிரம் ரூபாய் அபராதம் [illegible] போனதாக அறிவித்து இருக்கிறார்கள். இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட காலம் முதல் இந்த [illegible] சொல்லியிருக்கக்கூடிய சட்டப்படி. யார், யார் நிலங்களை கணக்கு கொடுத்தவர்கள். கணக்கு கொடுக்காதவர்கள் [illegible] போ, கொடுக்காமல் ஏமாற்றி வருவதால் அவர்களுக்கு இந்தத் தண்டனை உயர்த்தப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு புள்ளிவிவரத்தோடு சொல்லுவார்களானால் அது நல்லதாக அமையும். முன்பு இருந்து வரும் பிரிவிலே கூட, அந்த 91-வது பிரிவிலே அந்த நிலத்தின் பரப்பைக் குறைக்கக்கூடிய யாதொரு காரியத்தைச் செய்தாலும், செய்வித்தாலும் அவருக்கு ஓராண்டுக்கு மேற்படாத காவல் தண்டனையோ ஆயிரம் ரூபாய்களுக்கு மேற்படாத அபராதத் தண்டனையோ அல்லது இவ்விரண்டுமோ விதிக்கப்படத்தக்கதாகும் என்று 91-வது பிரிவிலே முன்பே இருந்து வருகிறது. அப்படியானால் இப்போது 2 ஆயிரம் ரூபாய் அபராதம் என்று பணத்தை மட்டும் கொண்டு வந்து இருக்கிறீர்கள். அப்படியானால் 2 ஆயிரம் ரூபாய் அபராதம் என்பதை வசதி படைத்தவர்கள் சுலபமாகக் கூட தப்பு செய்து விட்டு கட்டிவிட்டுப் போய் விடமுடியும். இன்றைக்கு நாட்டினுடைய நிலைமை அப்படி இருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுவது எல்லாம் யார் தவறு செய்தாலும் இந்த அபராத ரூபாய் என்பதற்குப் பதிலாக ஒரு ஆண்டு காலம் காவல் தண்டனையும் சேர்த்து இந்தக் குற்றத்திற்குக் கொடுக்கப்படும் என்று திருத்தம் கொண்டு வந்தால் நல்லதாக அமையும்.

இந்த நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி பேசுகிறபோது, இன்றைக்கு நிலச் சீர்திருத்தம் என்பது ஒரு கேலிக் கூத்தாக மாறி வருகிறது. ஆனால் இன்றைக்கு பெரிய நிலப்பிரபுக்கள்





இந்தக் கொள்கை இன்றைக்கு எப்படியிருக்கிறது? நிலப் பிரபுக்களைப் பார்த்தால், இந்தச் சட்டத்தையே வளைத்து தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தக் கூடிய அளவிற்கு இந்தச் சட்டம் கேலிக் கூத்தாக மாறி வருகிறது. சமீபத்தில் கூட, தமிழகத்திற்கு வந்த மத்திய அமைச்சர் சொல்கிறார். தமிழகத்தில்தான் நிலச் சீர்திருத்தம் சரியாக அமல்படுத்தப்படவில்லை என்று ஒரு அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இது பத்திரிகை மூலமாகத்தான் வந்திருக்கிறது. அப்படிச் சொன்னதை மாநில அரசும் இதுவரை மறுக்கவில்லை. இப்படி மத்திய அமைச்சர் திடீரென்று வருவதும், தமிழகத்தில் இருக்கின்ற சட்டங்களைச் சரியாக அமல்படுத்தவில்லை என்று சொல்லுவதுமான மத்திய அரசைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன். நில உச்சவரம்புச் சட்டம் உண்மையிலேயே அமல்படுத்தப்பட வேண்டுமென்றால், மத்திய அரசு மாநில அரசு அனுப்பிய சட்டத்தை ஏன் திரும்ப அனுப்பவேண்டும்? திருத்தி அனுப்புங்கள் என்று ஏன் சொல்ல வேண்டும்? அந்தச் சட்டத்தை நிறைவேற்றியிருந்தால் நன்றாக இருக்கும்.

சட்டத்தை ஏமாற்றி வைத்து இருக்கக்கூடிய இப்படிப்பட்ட நிலங்களை நில உச்சவரம்பு மூலமாக எடுத்து நிலம் அற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த நில உச்சவரம்பு சட்ட கொள்கை கொண்டுவரப்பட்டது. ஆனால்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு தஞ்சாவூர் மாவட்டத்தில், பாபநாசம், வலங்கைமான், ஆடுதுறை, கும்பகோணம் தாலுகாக்களில் 4000 ஏக்கர் நிலம் இருப்பதாக கணக்கு அரசாங்கத்திடம் இருக்கிறது. நான் அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரிலும், திருத்துவோம், திருத்துவோம் என்று சொல்வதற்குப் பதிலாக, இது கடைசியாக இருக்கட்டும், இனிமேல் தமிழகத்தில் நிறைவேற்றப்படுகின்ற நில உச்சவரம்புச் சட்டம் எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவரப்படுகிறதோ, அந்த நோக்கத்தின் அடிப்படையில் அமுலாக்கப்பட்டிருக்கக் கூடிய கிராம விவசாயத் தொழிலாளர்களுக்கு மிச்ச நிலம் கிடைக்கக் கூடிய அளவிற்கு அமைச்சரவர்கள் இந்தச் சட்டத்தில் வாக்குறுதி

(திரு. பொ. உத்திராபதி) [1987 நவம்பர் 17

கொடுத்து, வரக் கூடிய பட்ஜெட் கூட்டத் தொடரிலே பினாமி நிலங்களை ஆராய்ந்து எடுப்பதற்கு நல்ல சட்டத்தைக் கொண்டு வருகின்ற விவரம் சொல்லவேண்டுமென்று கேட்டு, அமர்கின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நிலச் சீர் திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண் டாம் திருத்தச் சட்டத்தின்படி சில பல பிரிவுகளுக்கு கிட்டத் தட்ட 7 பிரிவுகளுக்குத் திருத்தங்கள் கொண்டுவந்து, ஏற்கெனவே விதிக்கப்பட்ட, அபராத தண்டனையுடைய பண மதிப்பீட்டுத் தொகை குறைவாகயிருக்கிறது என்ற காரணத்தால் அதை உயர்த்தவேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் உயர்த்தப் பட்டிருக்கிறது. அதற்குச் சட்ட வடிவம் கொடுப்பதற்காகத்தான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் வீரய்யன், ரகுமான்கான், உத்திராபதி ஆகியவர்கள் இங்கே குறிப்பிட் டார்கள். ஆக இது டில்லியிலே நடைபெற்ற மாநில முதலமைச்சர் களுடைய மாநாட்டில் இந்தத் தொகை மிக மிகக் குறைவாக இருக்கிறதென்று எல்லோரும் எடுத்துச் சொல்லி, உயர்த்தப்பட வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலேதான் இது ஆராயப் பட்டு, கொண்டுவரப்பட்டிருக்கிறது.

ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரய்யன் அவர்கள் சொன்னதுபோல், இந்த அபராதத் தொகையை உயர்த்தி விட்டதனால், இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடுமா என்று கேட்டார்கள். தீர்ந்துவிடும் என்று நான் சொல்லவில்லை தீர்ந்து விடுகின்ற சூழ்நிலையிலும் இல்லை. ஆகவே அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல் உள்ளபடியே தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். 1961-ஆம் ஆண்டு இந்த சமய நோக்கத்தினுடைய அடிப்படையில், நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவந்து, அதிலே விதிமுறைகள், சட்ட திட்டங்கள் எல்லாம் வகுத்த பிறகு, 1971-72-லும் திருத்தங்கள் கொண்டுவந்து, பிறகு 1985-லும் திருத்தங்கள் கொண்டுவந்து, இப்போது அண்மையிலேகூட திருத்தங்கள் கொண்டு வந்தாலும் கூட, கிட்டத்தட்ட 26 ஆண்டுகளாகியும்கூட இந்தப் பிரச்சினை



1987 நவம்பர் 17] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

இன்னும் தீர்க்கப்படாமலேயே இருந்து, பல்வேறு சங்கடங்கள், மற்றவைகள் எல்லாம் உருவாகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருப்பது உள்ளபடியே வருந்துதற்குரிய ஒன்றுதான். நான் அண்மையிலே தான் இந்தப் பிரச்சினை பற்றி ஓரளவிற்கு ஆராயத் தொடங்கிய தற்குப் பிறகு, இதுகூட முதலமைச்சர்கள் மாநாட்டில் 1976-ல் முடிவு செய்து, இவ்வளவு நாள் ஆயிற்று. சட்டத்துறைக்கு எல்லாம் போய்விட்டு, இங்கே கொண்டுவந்து சட்டத்தைப் புகுத்துவதற்கு இவ்வளவு நாள் ஆயிற்று. இதற்கே இவ்வளவு காலம் தேவையில்லைதான். ஆனாலும்கூட, இதனால் முழுப் பிரச்சினையும் தீர்ந்துவிடும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் இந்த அபராதம் போடுவது ரூ. 2,000 வரையில் என்று சொன்னாலும்கூட, வழக்குமன்றம் போய், வசூலிக்கவேண்டு மென்ற உடனே, ரூ. 2,000 போடுகிறார்களா என்றால் இல்லை. ரூ. 200 என்று சொல்கிறபோது கூட ரூ. 10, 15, 20 என்று அபராதம் போடுவார்கள். ரூ. 2,000-க்குள் அல்லது ரூ. 200-க்குள் என்று இருக்கும்போது, அதற்குள்ளாகப் போடும்போது, அதைக் கட்டு வதிலே இப்படிப்பட்ட மிகை வெற்று நிலம் வைத்திருப்பவர் களுக்கு எந்தவிதக் கஷ்டமும், நஷ்டமும் இருப்பதாகத் தெரிய வில்லை.

(பிற்பகல் 1-00)

ஆகவேதான் அண்மையில் குறிப்பிட்டேன். ஒரு வழக்கிற்கு நாம் நீதி மன்றம் சென்று, நீதி மன்றத்தின் மூலமாகத் தீர்ப்பு வழங்குகின்றபோது பல சிக்கல்கள் வருகின்றன. மாண்பு மிகு உறுப்பினர் திரு. வீரய்யன் சொல்கின்றபோது, 26 ஆண்டுகள் ஆகியும் கூட, முதலிலே காங்கிரஸ் ஆட்சி ஆண்ட போதும் சரி, பின்னர் திராவிட முன்னேற்றக் கட்சி ஆண்ட போதும் சரி. இப் போது அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கட்சி ஆளுகின்ற போதும் சரி எவ்வளவு வழக்குகள் போடப் பட்டன, எவ்வளவு வெற்றி பெற்றன, எவ்வளவு இடங்கள் பிடிக்கப்பட்டன என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். குறைவான வழக்குகள்தான் போடப்பட்டன. குறைவான வழக்குகள் போடப்பட்ட நிலையிலே, கோர்ட்டுகளில் அவைகள் நிற்கவில்லை. நிற்க முடியாத அளவிற்கு, இதிலே சிக்கல்களும் வேறு பல நிலைமைகளும் வருகின்ற அளவிற்கு இருக்கிறது.

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1987 நவம்பர் 17

உதாரணமாக வரதப்பன் என்பவர் மீது நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டது. மிகை வெற்று நிலம் வைத்திருக்கிறார் என்பதற்காக. நீதி மன்றம் என்ன சொல்லிற்று என்றால் வேண்டுமென்றே வைத்திருக்கிறார் என்று சொல்ல முடியாது. ஆகவே இந்த வழக்கை நாங்கள் தள்ளிவிடுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுபோன்று மேய்ச்சல் நிலம். பெரியார் மாவட்டத்தை பொறுத்த வரையிலும் சர்க்கரை மன்றாடியாரைப் பொறுத்து இருக்கின்ற மேய்ச்சல் நிலம். உயர் நீதி மன்றத்திலே அந்த வழக்கு இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப் பல நிலைமைகள் இருக்கின்றபோது நானே வருவாய்த் துறையினையும், சட்டத்துறையினையும் ஆலோசித்து, உள்ள படியே வருவாய்த்துறையினின் மூலமாக உடனடியாக கையகப் படுத்துவதற்கும், நாமே மேலிட்டு விடுப்பதற்கும் வழக்கு மன்றத்திற்குப் போய் விசாரித்து அவர்களிடத்தில் 200, 300, 250 என்று தண்டனை வாங்கித்தருவது என்ற நிலைமையில் பார்க் கின்றபோது மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல், அவர்கள் சரிப்பட்டு வராததன் காரணமாகத்தான், இதிலே மறுபடியும் நாம் உட்கார்ந்து ஆராய்ந்து தீவிரமாக நடைமுறைப்படுத்த வேண்டும். மிகை வெற்று நிலத்தை நாம் பயன்படுத்துவதற்கு, இப்போது கிட்டத்தட்ட மூவர் குழு ஒன்று அமைக்கப்பட்டு நானும், உணவுத்துறை அமைச்சர் அவர்களும், சட்டத்துறை அமைச்சர் அவர்களும் ஏறக்குறைய கிட்டத்தட்ட 200 வழக்குகள் மேலே வைத்து, இப்போது இரண்டு மாத காலத்திலே மிகை வெற்று நிலத்தை எடுத்துத் தர வேண்டும். உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றெல்லாம் எடுத்துச் சொல் கிறோம்.

எதற்கு நாங்கள் அனுமதி அளிக்க வேண்டும் என்று கருது கிறோம் என்று சொன்னால், அந்த மிகை வெற்று நிலத்தை ஒரு தொழிலுக்குப் பயன்படுத்துகிறார்கள். அதன் மூலம் தொழில் உற்பத்தி பெருகும், அதன் மூலம் தொழில் விரிவாக்கம் நடை பெறும். அதன் மூலம் சில பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக் கும். அதன் மூலம் பொருளாதார நிலை உயரும் என்ற அளவிற்கு, அதற்கும் இரண்டு ஆண்டுக்காலம் அவர்களுக்குத் தவணை கொடுத்து, இரண்டு ஆண்டு காலத்திற்குள் தொழில் துவக்கா விட்டால் அந்த வெற்று நிலம் எடுக்கப்படும். அதில்லாமல் வேறு



1987 நவம்பர் 17] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

சாக்கு போக்கு சொல்லி வேறுவிதமான காரியங்களுக்கு, வீடு கட்டவோ அல்லது வேறு வகையிலோ பயன்படுத்துகின்ற சூழ் நிலை இருந்தால் இந்தக் குழு விசாரித்து அவைகளுக்கு கொடுக்க வேண்டாம், அதை எடுக்க வேண்டும் என்ற அளவிற்குத் தான் இப்போது தீவிரமான முயற்சி எடுக்க வேண்டும் என்ற அளவிற்கு இப்போது முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம்.

ஆகவே இதனுடைய நோக்கம் முழுவதும் நிறைவேற்றப்பட்டு பாதிக்கப்படாமல் இதனுடைய பயனை மற்றவர்கள் நுகர்தல் வேண்டும். நேற்று நான் சொல்கின்றபோது குத்து மதிப் பாகச் சொன்னேன். தெளிவாக நான் எடுத்துச் சொல்ல முடியும். கிட்டத்தட்ட தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் கையகப்படுத்தப்படுகின்ற 1,60,000-க்கு மேற்பட்ட நிலங்கள் மிகை வெற்று நிலங்கள் என்றும், அதிலே 1,20,000-த்துச் சில்லறை கையகப்படுத்தப்பட்டு எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், மீதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது என்றும் நேற்று நான் சொன்னேன். ஏற்கெனவே பட்டா வழங்கப்பட்டும் அவர்கள் ஆண்டு தோறும் பணம் கட்டி வந்தும் அவர்களுக்கு நிலங்கள் ஒப்படைக்கப்படாத சூழ்நிலை சில இடங் களில் இருக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார்கள். அப்படிப் பட்ட ஒரு இரங்கத்தக்க நிலை இருக்குமானால் அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு, வருவாய்த் துறையின் மூலமாகவும், வருவாய்த்துறை அதிகாரிகள் மூலமாகவும் தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். ஏனென்றால் எப்போது அவர்கள் பணம் கட்ட ஆரம்பித்து விட்டார்களோ, எப்போது பட்டா அவர்கள் மேல் வந்துவிட்டதோ, அதனுடைய பொஸஷன், அதனுடைய இருப்பும் அவர்கள் கைக்குப் போக வேண்டும். அப்படிப்பட்ட நிலைமைகள் நடைபெறாமல் இருக்குமானால் அதற்கான ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பினாமி நிலத்தைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். உறுப் பினர் திரு. ரகுமான்கான் அவர்களும் குறிப்பிட்டார். தேர்தல் காலத்திலே, தேர்தலைப் பொறுத்த வரையிலும், கூட்டணி கட்சிக்கு கட்சி தேர்தல் உடன்பாடு ஏற்படுவதும், அரசியலிலே கட்சிகள் பகை கட்சிகளாக இருப் பதும், நட்பு கட்சிகளாக இருப்பதும்—அரசியலிலே எல்லா கட்சி

களும் எல்லா கட்சிகளுக்கும் பகை கட்சிகளாகவும் இருந்திருக்கின்றன, எல்லா கட்சிகளும் எல்லா கட்சிகளுக்கும் நட்புக் கட்சிகளாகவும் இருந்திருக்கின்றன—உண்டு. ஆகவே காங்கிரஸோடு கூட்டு இருந்ததன் காரணமாகத்தான் பினாமி என்பது இல்லை. திராவிட முன்னேற்றக் கழகமே 1980 ஆம் ஆண்டில் காங்கிரஸோடு நல்ல கூட்டோடும் இருந்தது.

ஆகவே, பினாமியை அவர்கள் ஆதரித்தார்கள் என்று அதற்குப் பொருள் அல்ல. நானும் ஒப்புக் கொள்ளவில்லை. அது அப்போது எப்படி அந்தப் பொருள் ஆகாதோ, இப்போதும் அந்தப் பொருள்படாது. ஆனால், பினாமி நிலத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று சட்டம் அமைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் கொண்டு வந்து, அச்சட்டத்தைத் தூய்மையான எண்ணத்தோடு அவையின் அனைத்துப் பேருடைய ஒத்துழைப்போடு நிறைவேற்றினோம். அதற்குப் பிறகு, டெல்லியிலே பல்லாண்டுக் காலமாக காத்து, பிறகு குடியரசுத் தலைவர் அனுமதி இல்லை என்று திருப்பி அனுப்பி விடப்பட்டது என்ற செய்தியை சென்ற தடவை நான் குறிப்பிட்டேன்.

மறுபடியும், சட்டத்துறையின் மூலமாக ஆராய்ந்து, எந்த வகையில் அதற்கு மீண்டும் உயிர் கொடுத்து அதை நடைமுறைப் படுத்துவதற்கு சட்டப்படி இடம் இருக்கிறதோ அல்லது வேறு பல மாநிலங்களில் அதற்கு ஏதாவது வழிவகைகள் ஏற்பட்டிருக்கின்றனவா, சட்டங்களை இயற்றியிருக்கிறார்களா என்று ஒப்பிட்டுப் பார்த்து அந்த அளவிற்கு சட்டத்துறை யோசனை சொல்லவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

வேறு எந்த மாநிலங்களிலேயாவது பினாமி நிலத்தை எடுக்க சட்டத்தை நிறைவேற்றி, அதை நடைமுறைப்படுத்தி, வெற்றி கண்டு இருப்பார்களானால், அதை நாம் எடுத்துக்காட்டாகக் கொண்டு அதையே சான்றாகவும், முன்னுதாரணமாகவும் வைத்து நம்முடைய சட்டத்தைக் கொண்டு வந்து மறுபடியும் வற்புறுத்து வதற்கு என்ன செய்யலாம் என்று சட்டத்துறையை ஆராயும்படியாகச் சொல்லியிருக்கிறோம்.





திருப்பி அனுப்பி விட்டார்கள் என்றாலும், மறுபடியும் அதிலே கவனம் செலுத்தவேண்டும் என்பதுதான் நோக்கம். ஆகவே, இதிலே யாரையும் தப்பிக்க விடவேண்டும் என்ற எண்ணம் இல்லை. ஒரு கொள்கை என்று ஒரு முடிவு எடுத்ததற்குப் பிறகு, அந்தக் கொள்கையை நிறைவேற்றுவதில் அத்தனை பேரும் ஈடுபடத்தான் வேண்டும். அந்தக் கொள்கையிலிருந்து, அதை நிறைவேற்றாமல் இருப்பதற்கு—வசதி படைத்தவர்களும், நிலப்பிரபுக்களும், நிலம் வைத்திருப்பவர்களும், தப்பிப்பதற்கும், காலம் கடத்துவதற்கும், வழக்குமன்றங்களின் மூலமாக நீடித்துச் செல்வதற்கும் வழக்கு மன்றத்திலே கொண்டு போய் ஒரு வழக்கைப் போட்டுவிட்டால் 8 ஆண்டு ஆகும், அல்லது 10 ஆண்டு ஆகும்; விரைவிலே முடிவதாக இருந்தாலும்கூட, வழக்கறிஞர்கள் மூலமாக அதைத் தள்ளிக் கொண்டேபோவதற்கு என்னென்ன செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்யலாம். அப்படியே ஓரளவுக்குத் தள்ளி 7, 8 ஆண்டுக்காலம் ஆனாலும் கூட, சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனால் அதில் ஒரு 15 ஆண்டுகளாவது ஆகும் என்பதையெல்லாம், இந்த நாட்டினுடைய அப்படிப்பட்ட தன்மைகளையெல்லாம் தெரிந்து வைத்திருப்பதன் காரணமாக, அந்தத் தந்திர முறைகளையெல்லாம் கையாள்வதன் காரணமாக ஏற்படுகிற இடர்ப்பாடுகள் ஆகியவற்றையெல்லாம் சீர்படுத்தி, செம்மைப்படுத்தி, எந்த நோக்கத்தினுடைய அடிப்படையில் அகில இந்தியா முழுவதும் இந்தச் சட்டம் நிறைவேற்றப் பட்டதோ, எல்லா மாநிலங்களிலும் உச்சவரம்புச் சட்டம் கொண்டு வரவேண்டும் என்று மத்திய அரசு எண்ணிற்றோ, எந்த நோக்கத்தினுடைய அடிப்படையில் இங்கும் கொண்டு வரப் பட்டதோ, எந்த நோக்கத்தை அத்தனை பேரும் ஏற்றுக்கொண்டு அதை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று எண்ணினோமோ அதை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய அரசு ஒத்துழைக்க வேண்டும், மத்திய அரசினுடைய சட்டத்துறையும் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

ஆகவே, இங்கே இருக்கிற சமுதாய நீதியை வழக்கு மன்றங்களும்—உச்ச நீதிமன்றமும், உயர்நீதிமன்றமும்—உணர்ந்து கொண்டு, செய்யவேண்டும். எந்த நோக்கத்தினுடைய அடிப் படையில் சட்டமன்றமும், பாராளுமன்றமும் அந்தக் கருத்துக்

களை, மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் ஆக்கச் சட்டத்தை நிறைவேற்றித் தருகிறார்கள் என்ற உணர்வோடு செய்யவேண்டும். இதைத்தான் அமெரிக்காவிலோ, பிற நாடுகளிலோ எல்லாம் கூட, 'கோர்ட் ஆஃப் லா' என்று இருந்தாலுங்கூட, அதிலே உட்கார்ந்திருக்கிறவர்களுக்குத் தான் 'ஜஸ்டிஸ்' என்று பெயர். ஆகவே, வழக்குமன்றத்திற்கு நீதிமன்றங்கள் என்றுதான் சொல்கிறோமே தவிர, சட்டமன்றத்திற்குத்தான் அப்படிச் சொல்லவேண்டும். 'கோர்ட் ஆஃப் லா' என்றுதான் சொல்வார்கள். 'கோர்ட் ஆஃப் ஜஸ்டிஸ்' என்று யாரும் சொல்வதில்லை. அங்கே இருக்கிற நீதிபதிக்குத்தான் ஜஸ்டிஸ் என்று பெயர். ஏனென்றால் அவர் ஜஸ்டிஸ் கொடுக்கவேண்டும்.

உலகத்திலேயே முறைகள் மாறியிருக்கின்றன. மாறியிருக்கின்றபோது, சமுதாய நீதி தரவேண்டும். பொருளாதார நீதி தரவேண்டும். அரசியல் நீதி தரவேண்டும் என்ற தன்மையினுடைய அடிப்படையில் மக்களுடைய பிரதிநிதிகளாக இருப்பவர்கள், சட்டமன்றம், பாராளுமன்றத்தில் எந்த உணர்வினுடைய அடிப்படையிலே நாட்டின் நலன் கருதி, பொது நலன் கருதி, ஏழை எளிய விவசாயிகளுடைய நலன் கருதி செய்கிறார்களோ, அதை உணர்ந்து தீர்ப்பளிக்கிற சூழ்நிலை வந்தால், தப்பிப்பவர்களுக்கோ, மற்றவர்களுக்கோகூட இடம் ஏற்படாது. அதையெல்லாம் உணர்ந்து செய்கிற சூழ்நிலைக்கு மத்திய அரசு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும்.

மத்திய அரசினுடைய சட்டத்துறையும் அதற்குத் தூண்டுகோல் போடவேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகிற உணர்வுகளை நாங்கள் பாராட்டுகிறோம். அந்த உணர்வினுடைய அடிப்படையிலேதான் இந்தச் சட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும் என்பதிலே இந்த அரசு முனைப்புள்ளத்தோடு இருக்கிறது.

மாநாட்டிலே நிறைவேற்றியதன் காரணமாக அபராதத் தொகை என்று கொண்டு வருகிறோமே தவிர, இதனால் முழுப் பிரச்சினையும் தீர்ந்துவிடும் என்று நானும் ஒப்புக்கொள்ளவில்லை. ரூ. 2,000 என்று போட்டோமே தவிர, 20 ரூபாய்தான் போட்டால் யார் கேட்க முடியும்? 2,000 ரூபாய் வரையில் போட்



லாம் என்று இருக்கிறதே தவிர, 40 ரூபாய் என்று போட்டாலும் யாரும் கேட்கமுடியாது. அப்படியே போனால்கூட, வழக்குகள் தள்ளுபடியாகின்றன, வேறு பல காரணங்களை வைத்து. இதில் இருக்கிற இடர்பாடுகள், குறைபாடுகள் ஆகியவற்றையெல்லாம் அகற்றுவதற்கான முயற்சிகளை இந்தத் துறையும், இந்த அரசும் முறைப்படி மேற்கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் இருக்கிற உணர்வையும், மற்றவற்றையும் மதித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லி, இப்போதைக்கு இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## (ஓ) பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொது அறக் கட்டளைகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவையும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 50/1987) விவாதத் திற்கு எடுத்துக்கொள்ளலாம். உறுப்பினர்கள் விவாதத்தில் தங்களின் கருத்துக்களைச் சொல்லும்போது, இரண்டு சட்டமுன் வடிவுகளின் மீதும் சொல்லலாம்.

**டாக்டர் கே. சமரசம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்திலே வைத்திருக் கின்ற பச்சையப்பன் அறக்கட்டளை (மேலாண்மையை மேற் கொள்ளுதல்) குறித்த இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, தமிழ்நாட்டு மக்களின் உணர்வினை இந்த மன்றத்திலே பதிய வைப்பதிலே நான் பெருமைப்படுகிறேன். உலகம் உள்ள வரை, தமது உணர்வு, எண்ணம், குறிக்கோள், செயல் இவைக ளெல்லாம் நிலைத்து நின்று நீடூழி வாழ வழி வகுப்பதே அறக் கட்டளை ஏற்படுத்தியவர்களுடைய நோக்கமாகும். சமய நெறிகளைப் பாதுகாத்து, சமூக நெறி மேம்பாடுகளை உரியவகை

* 16—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





யிலே போற்றிவருத்து, அதன்மூலமாகத் தம்முடைய உணர்வுகள் எப்போதும் நிலைத்து நிற்கத்தக்க வகையில், இந்த அறக் கட்டளையை சம்பந்தப்பட்டவர்கள் நிறுவி இருக்கிறார்கள்.

பச்சையப்பன் அறக் கட்டளை என்பது மிகப்பெரிய பெருமை வாய்ந்த ஒன்றாகும். சுமார் 146 ஆண்டுகளாக நிலைத்து நிற்கக் கூடிய இந்த அறக்கட்டளையின் மீது, இந்தச் சட்டமுன்வடிவின் மீது சில கருத்துக்களைச் சொல்வதில் நான் மகிழ்ச்சி அடை கிறேன். இந்த பச்சையப்பன் அறக்கட்டளைதான் தமிழ் நாட்டிலே பல்வேறு அறிஞர்கள், மேதைகள், அரசியல் விற்பன் னர்கள், கலை வல்லுனர்களையெல்லாம் உருவாக்கியிருக்கிறது என்பதிலே நான் பெருமை அடைகிறேன். அதுமட்டுமல்லாமல், இந்த பச்சையப்பன் அறக்கட்டளை என்பது, மிக அருமையாக, திறமையாக, சிறப்பாக நடத்துகின்ற காரணத்தினால் இந்தப் பச்சையப்பன் அறக்கட்டளை, 1841 ஆம் ஆண்டிலே நிறுவப்பட்ட இந்தப் பழம்பெரும் நிறுவனத்தில், இதற்கு ஈடாக இதோடு இணைந்து செயலாற்றவேண்டும், நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்கிற நோக்கத்தின் அடிப்படையில், பச்சையப்பன் அறக்கட்டளையின் பழமையும் பெருமையும் கண்டு, வள்ளல் செங்கல்வராய நாயக்கரும், தமது சொத்துக்களை பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகமே நிர்வகிக்க விடுப்புறுதியை எழுதி வைத் திருக்கிறார். அதுமட்டுமல்ல, பச்சையப்பன் அறக்கட்டளை யைப் பின்பற்றி, ஆரணி கோவிந்தன் நாயக்கர், அரங்கநாயகி அம்மையார், செல்லம்மாள் அம்மையார், ஜி. சண்முகசுந்தர முதலியார், பி. கே. வித்தியாசாகரம், இராசாத்தி அம்மாள் போன்ற பெருமக்களெல்லாம் தம்முடைய செல்வங்களை பச்சை யப்பன் அறக்கட்டளையோடு இணைத்து நிறுவனம் செய்ய அவர் களெல்லாம் உயில் எழுதி வைத்து செல்லக் கூடிய அளவிற்கு, உயர்ந்த நிலையில், மிகச் சிறந்த வகையில் இந்த நிறுவனம் இயங்கவேண்டுமென்பதனை எண்ணுகின்றபோது நான் பெருமைப்படுகிறேன். ஆனாலும்கூட இப்படிப்பட்ட பெருமக் குரிய இந்த நிறுவனத்தை நிர்வகிக்காத காரணத்தினால், அதனை ஏற்படுத்தியவர்கள் பல்வேறு வகையிலே, அது என்ன நோக்கத்திற்காக நிறுவப்பட்டதோ அந்த நோக்கம் ஈடேறாத

வகையிலே நடைபெற்ற காரணத்தினால் அரசாங்கமே அதை
எடுத்த நடத்த வேண்டிய அவசியத்திற்கு உள்ளாகியது என்பதை
நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறைந்த வாடகை, நீண்டநாள் குத்தகை, தகுதி பெறாத
ஊழியர்களுக்குப் பதவி உயர்வு, தகுதி அற்ற ஊழியர்கள்
நியமனம், தாறுமாறான நிர்வாகம், பலன் அளிக்காத தன்மைகள்
இவைகள்தான் பச்சையப்பன் அறக்கட்டளையை அரசே ஏற்று
நடத்த வேண்டிய அவசியத்திற்குக் காரணமாக இருந்தன
என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே
நேரத்தில் பச்சையப்பன் அறக்கட்டளையின் கீழ் பல கல்லூரி
கள், தொழில்கல்வி நிறுவனங்கள், மேல்நிலைப் பள்ளிகள், இடை
நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் ஆகியவை துவக்கப்
பட்டு இவ்வாறு 17-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இன்றைக்கு
மிக அருமையாக நடத்தப்பட்டு வருகின்றன என்பதைச் சொல்
வதிலும் நான் பெருமைப்படுகிறேன்.

இந்த அறக்கட்டளையை அரசாங்கமே ஏற்று நடத்தக்கூடிய
நிலைமையில், இதன் நிர்வாகம் மற்ற அறக்கட்டளைகளுக்கு
எல்லாம் ஒரு முன்னுதாரணமாக "இப்படிப்பட்ட வகையில்தான்
அறக்கட்டளைகள் இயங்கவேண்டும்" என்று சொல்லத் தக்க
வகையில்—தமிழ்நாட்டில் இருக்கிற அறக்கட்டளைகள் மட்டு
மல்லாமல், இந்தியாவில் இருக்கிற அறக்கட்டளைகளுக்கே ஒரு
முன்னுதாரணமாகச் செயல்படுகிறது என்பதைச் சொல்வதிலும்
நான் பெருமையடைகிறேன். அதுமட்டுமல்ல. பச்சையப்பன்
அறக்கட்டளையின்கீழ் கோயில்களுக்கெல்லாம் இந்த வகையில்
உதவி செய்ய வேண்டுமென்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.
அவர்கள் எந்த நோக்கத்தின் விருப்பத்தின் அடிப்படையில்
கோயில்களுக்கு இந்த அறக்கட்டளைகளை ஏற்படுத்தினார்
களோ அதையெல்லாம் மாதம் தவறாமல் அனுப்பிவிட்டு அவர்க
எங்கே இருந்தாலும் அவர்களின் உணர்வு இன்றைக்கு நிறை
வேற்றப்படுகிறது. அதன் மூலம் அவர்கள் உணர்வு இங்
வாழ்கிறது, நிலவுகிறது, நீடிக்கிறது என்பதற்கேற்ப நிர்வாக
இன்றைக்கு சிதம்பரம் தில்லை நடராசர் கோயிலுக்கும், சென்ன
திருமுல்லைவாயிலில் உள்ள மாசிலாமணிஸ்வரர் கோ





திருவல்லிக்கேணியிலுள்ள திரு. பார்த்தசாரதிப் பெருமான்
கோயில் மற்றும் இராமேஸ்வரம் திருக்கோயில் போன்றவற்றிற்
கெல்லாம் இந்த அறக்கட்டளை மூலம் அனுப்பி வைக்கப்படுகிற
தொகையிலிருந்து அறக்கட்டளைப் பணிகள் செயல்படுத்தப்படு
கின்றன என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

அதே நோக்கில் இந்த அறக்கட்டளையில் பல்வேறு பிரச்
சினைகள் ஏற்கெனவே இருந்ததையும் மறந்துவிட முடியாது.
ஒரு கட்டளையை நிறுவி அதை நிர்வகிப்பது என்பது
சாதாரணம். ஆனால் பழைய அறக்கட்டளையை—நீண்ட
நெடுங்காலமாக இருக்கிற அறக்கட்டளையை—நிர்வாகத்தின்
காரணமாகப் பல கோளாறுகள் ஏற்பட்டிருக்கிற கட்டளையை
எடுத்து நிர்வகித்து நிலைநிறுத்துவது என்பது மிகப் பெரிய
விஷயமாகும். புதிதாக ஒரு வீட்டை எளிதாகக் கட்டிவிடலாம்.
ஆனால் பழைய வீட்டைப் பழுதுபார்த்து சரிசெய்வது என்பது
எவ்வளவு சிரமமான காரியம் என்பது அனுபவப்பட்டவர்களுக்குத்
தான் தெரியும். அந்த அடிப்படையில் இந்த அறக்கட்டளையை
அரசு ஏற்று ஊழியர்களுக்கு ஒழுங்காக சம்பளம் கூட கொடுக்
காத நிலைமையை மாற்றி அறக்கட்டளையை நிறுவியவர்கள்
எதிர்பார்த்த—அவர்களின் விருப்பத்திற்கேற்ப இன்றைக்கு
நிர்வாகம் மிக அருமையாக நடத்தப்பட்டு வருகிறது என்பதை
நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. இந்த அறக்கட்டளைக்கு ஏற்கெனவே அளித்
திருந்த மானியம் ரூ. 1.3 இலட்சம் தொகையைத் திருப்பிச்
செலுத்தாத காரணத்தால் கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட
வாங்கினம் காரணமாகப் பல்கலைக் கழகத்தின் நிதியைக்கூட
பெற முடியாத நிலைமை இருந்தது. கடன் பெற்ற இடத்தில்
ஒழுங்காக தவணை முறையில் பணத்தைக் கட்டாத காரணத்
தால் வகைகள் எல்லாம் தடைப்பட்டிருந்தன. அப்படிப்
பட்ட நிலையில், கொடுக்க வேண்டிய பாக்கித் தவணைகளையும்
செலுத்தி 6 வது திட்டத்தில் ரூ. 9 லட்சம் மானியம் பெறத் தக்க
வகையில் இன்றைய நிர்வாகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது
என்பதை எண்ணிப் பார்த்து நான் பெருமைப்படுகிறேன்.

[டாக்டர் கே. சமரசம்] [1987 நவம்பர் 17

இன்றைக்குப் புதிதாகப் பதவிகள் தோற்றுவிக்கப்படுகின்றன. கண்காணிப்பாளர்கள், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் போன்ற ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கும் பணியாளர்களைப் போடுகிறபோதுங்கூட ஏற்கெனவே பணியில் இருந்து அகற்றப்பட்டவர்களில் தகுதி உள்ளவர்களுக்கு மீண்டும் பணி அளிக்கப்படுகிறது. வீட்டுக்கு அனுப்பி வைத்து விட்டார்களே என்ற வேதனை ஏற்படாத வகையில் அவரவர்களின் தகுதிக்கு ஏற்ப அவர்களுக்கு மீண்டும் பணி அளிக்கப்படுகிறது. இந்த வகையில் அவர்கள் வாழ்வில் மீண்டும் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கி அதன் நிர்வாகம் செயல்படுவதென்பது உண்மையிலேயே பாராட்டுக்குரிய ஒன்றாகும். இந்த அரசாங்கம் பல்வேறு நிபந்தனைகளை விதித்திருக்கிறது. பிற்பட்டவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்றெல்லாம் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும். ஏற்கெனவே இருந்த நிர்வாகத்தில் அப்படிப்பட்ட நியமன முறை உண்டா என்றால் இல்லை.

(பிற்பகல் 1-20)

ஆனால் இன்றைய தினம் அது மிக அருமையாக, முறையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது, இட ஒதுக்கீடுகள் விஷயத்தில் சரியாக செயல்பட்டு வருகிறது என்ற நல்ல பெயரை இந்த அறக்கட்டளை பெற்றிருக்கிறது. தமிழக அரசு எடுத்துக் கொண்ட பிறகு நல்ல முறையில் நிறைவேற்றி வருகிறது என்ற பெயரை பெற்றிருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. தனியாக ஒருவர் கல்லூரியை நடத்துகிறார்கள், கழகம் நடத்துகிறார்கள் அல்லது அறக்கட்டளையை நடத்துகிறார்கள் என்றால் அதிலே மேனேஜ்மெண்ட் கோட்டா என்று இருக்கும். அந்த மேனேஜ்மெண்ட் கோட்டாவை அவர்கள் தங்கள் இஷ்டப்படி தேவையானவர்களுக்குக் கொடுத்து உதவுவது என்பது சாதாரணமாக நடைமுறையில் இருக்கக் கூடிய ஒன்று. ஆனால் இந்த நிர்வாகம் அந்த மேனேஜ்மெண்ட் கோட்டாவையும் எடுத்துக்கொள்ளாமல் இந்த அறக்கட்டளை நிர்வாகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மற்றும் பணிபுரிந்து வருபவர்களுடைய குழந்தைகளுக்கு அளித்து வருகிறது. இது மிகப் பெரிய வித்தியாசமாக இருக்கின்ற சீர்திருத்த அமைப்பு முறை என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 நவம்பர் 17] [டாக்டர் கே. சமரசம்]

அறக்கட்டளை என்று வந்துவிட்டப் பிறகு யார் வீட்டுப்
பணமோ என்று இல்லாமல்—அடுத்த வீட்டு நெய்யே அதிலே வை
கையே என்று இல்லாமல்—சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.
தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலே இருக்க வேண்டும்,
செயல் திறன் அமைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்
படையில் ஏற்கெனவே கொடுக்க வேண்டிய 10.54 இலட்சம்
ரூபாயைப் பல்கலைக் கழகத்திலே செலுத்தியுள்ளது. மேலும்
புதிதாகத் தொடங்கப்பட உள்ள வகுப்புகளுக்கு 7 இலட்சம்
ரூபாயைக் கட்டியுள்ளது. ஒரு வகுப்பை ஏற்படுத்த வேண்டு
மானால், அரசாங்கம் நிர்ணயிக்கிற தொகையைக் கட்ட வேண்டும்.
அதைக் கூட கட்டாமல் இருந்தார்கள் முன்பு இருந்த நிர்வாகத்
தினர். ஆனால் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அரசு
நிர்வாகத்தினர் 10.54 இலட்சம் ரூபாயைக் கட்டி பழைய
கணக்கைத் தீர்த்து, புதிதாக தொடங்கப்படவிருக்கிற வகுப்பு
களுக்காக 7 இலட்சம் ரூபாயைக் கட்டி இன்றைய தினம் மிக
நல்ல முறையிலே செயல் திறனைக் காட்டியிருக்கிறார்கள்
என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் புதிய பயிற்சிக்காக புதிய புதிய படிப்பு
வழிவகை
களை உருவாக்கி மாணவர்களைப் பெருக்கக் கூடிய
களை ஏற்படுத்தி ஆண்டு தோறும் புதிதாக 500 மாணவ, மாணவி
யர்கள் பயன்பெறத்தக்க வகையில் புதிய படிப்புகளை உருவாக்கி
யிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்வதில் நான் பெருமைப்
படுகிறேன்

சென்னை அண்ணா சாலையில் ஒரு கட்டிடம் கட்டியிருந்தார்
கள். அதற்கு வாங்கிய கடன் 52 இலட்சம் ரூபாய். கட்ட
வேண்டிய தொகையை ஒழுங்காக கட்டாத காரணத்தால் 1980
ஆம் ஆண்டு நிலுவைப்படி நிலுவையாக இருந்த தொகை ரூ. 33.70
இலட்சமாகும். இந்த நிர்வாகம் 1983—84 ஆம் ஆண்டு வரை
அசல் வட்டியும் சேர்த்து 68.41 இலட்சம் ரூபாய் தொகையை
கட்டக் காலக்கெடு முடிவதற்கு 6 மாதங்களுக்கு முன்பே கட்டி
முடிக்க அந்தக் கட்டிடத்தை முழுமையாக அறக்கட்டளைக்கே
சொந்தமாக ஆக்கியிருக்கிறது. எதாவது சேவை செய்தே தீர
வேண்டும் என்ற முயற்சியின் அடிப்படையில் இதைச் செய்து

காட்டியிருக்கிறது இப்போதுள்ள நிர்வாகம் என்பது நாம் எல்லாம் பெருமைப்படத்தக்க வகையிலே இருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. இந்த நிர்வாகம் பல்வேறு இடங்களில் கடன் பட்டிருக்கிறது. வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாத காரணத்தால் இருக்கின்ற பல்வேறு உரிமைகளை இழக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இதற்கு முன்பு இருந்த நிர்வாகத்தினர் அவர்களுக்காகவும், அவர்களுடைய சொந்த பந்துக்களுக்காகவும், அவர்களுடைய காழ்ப்புணர்ச்சியை நிறைவேற்றவும் இதை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார்கள். பச்சையப்பன் எந்த நோக்கத்திற்காக அறக்கட்டளையை நிறுவினாரோ, செங்கல்வராயன் எந்த நோக்கத்திற்காக அறக்கட்டளையை நிறுவினாரோ அந்த நோக்கங்கள், எண்ணங்கள் நிறைவேறும் வகையில் அவர்கள் நடைமுறைப்படுத்தவில்லை. ஆனால் புதிய நிர்வாகம் மிக அருமையாக அவர்களுடைய நோக்கங்களையும், எண்ணங்களையும், உணர்வுகளையும் எந்தெந்த வகையிலே நிறைவேற்ற முடியுமோ அந்த வகையிலே செயல்பட்டிருக்கிறது. கடன்படாத நிலை இருக்க வேண்டும், தவணை தவறிய நிலை இருக்கக் கூடாது என்பதை மனதிலே வைத்து 1987 சனவரி திங்கள் வரை அசல் மற்றும் வட்டி உட்பட மொத்தம் 12.14 இலட்சம் ரூபாயை திருப்பிச் செலுத்தி நல்ல முறையிலே சுதந்திர உணர்வோடு இப்போது அந்த நிர்வாகம் இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

யார் ஒருவர் இதுபோன்ற அறக்கட்டளைகளை நிறுவுகிறார்களோ அவர்களுடைய நோக்கங்களும், எண்ணங்களும் நிறைவேறும் வகையில் ஆண்டுதோறும் ஆண்டு விழா நடத்துவது என்பது அவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்துவதைப் போலாகும்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்று சொல்லுகிறோம்.



ஆனால் இந்த நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருந்தவர்கள் இதில் உள்ள நன்மை தீமைகளைப் புரிந்துகொண்டு எந்தெந்த வகையிலே அவற்றை நிறைவேற்ற முடியுமோ அப்படிச் செய்வதன் மூலம் அந்த நிர்வாகத்தை ஒழுங்காக நடத்தி, அதற்குப் பெருமை சேர்க்கக்கூடிய வகையிலே, அதிலே சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினரும் மற்றவர்களும் எண்ணிப் பார்க்கக்கூடிய வகையிலே அந்தக் கொடை வள்ளலுக்கு நினைவுநாள் கொண்டாடினார்களா என்றால், இல்லை. அதைக்கூட இந்த நிர்வாகம் வந்த பிறகு தான், ஆண்டுக் கணக்குகளை அவ்வப்போது தணிக்கை செய்து, இன்றைய தினம் பல்வேறு விழாக்களைக் கொண்டாடி, வருகிற டிசம்பர் மாதத்திலே 145 ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்குரிய வழிவகைகளை உருவாக்கி இருக்கிறது என்பது பெருமைக்குரிய ஒன்றாகும்.

அதுமட்டுமல்ல, எந்த நோக்கத்திற்காக இந்த நிறுவனம் செயல்படுகிறதோ, அது ஊருக்கும், உலகுக்கும் தெரிந்தாக வேண்டும். அப்போதுதான் இருப்பு அதிகமாக உள்ளவர்கள் மற்றவர்களுக்கு அதைப் பகிர்ந்து கொடுக்கவும் இதுபோன்ற நிறுவனங்கள் நாட்டுக்குத் தேவை, அறக்கட்டளைகள் உலகுக்குத் தேவை, நாம் மறைந்தாலும், பெயர் மறையாமல் உலகத்தோடு வாழ இது அவசியம் என்ற எண்ணத்தை உண்டாக்கவும், நடைமுறைப்படுத்தவும் வசதியாக இருக்கிறது. ஆகவே இந்த நிறுவனம் பற்றி தமிழில் எழுதி, அதை ஆங்கிலத்திலும் அச்சிட்டு வெளியிட்ட பெரு முயற்சியைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன், பாராட்டுகிறேன்.

அதுமட்டுமல்ல, கல்லூரிகளுக்கு பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்து நிதி உதவி பெற வாய்ப்பு இருக்கிறது. எந்தெந்த வகையில் கல்விக்கூடங்கள் இருக்கின்றனவோ, அதற்கேற்ற வகையில் அரசாங்கம் நிதி உதவி செய்கிறது. பல்கலைக் கழக மானியக் குழு நிதி உதவி செய்கிறது. அந்த வகையில் சென்னை கிண்டியிலுள்ள செல்லம்மாள் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரி, சென்னை சி. கந்தசாமி [illegible] ஆடவர் கல்லூரி ஆகியவற்றிற்கு பல்கலைக் கழக மானியக்

குழு நிதியுதவி பெற, அதன் வாழ்வுக்குக் கீழே கொண்டுவரத் தேவையான பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது நான் பெருமைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, கல்லூரிகளுக்கு தற்காலிக இடம்கூட ஏற்பாடு செய்துவிடுவார்கள். அதை அரசாங்கம் கொடுத்துவிடும். ஆனால் அங்கீகாரம் தேவை என்றால் அதற்கு அடிப்படை இடம் தேவை என்ற நிலை இருக்கிறது. அந்த முறையில் கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரிக்குத் தேவையான இடத்தை வாங்க, அதற் குரியவர்களிடம், வீட்டு வசதி வாரியத் தலைவரிடம் பேசி, எந் தெந்த வகையில் பணத்தைக் கட்ட முடியும், எத்தனை சதவிகிதம் கட்ட வேண்டும் என்றெல்லாம் பேச்சு வார்த்தைகளின் மூலம் பேசி முடித்து, இன்றையதினம் 13.49 இலட்சம் ரூபாய் தவணை முறையில் வீட்டு வசதி வாரியத்திற்குச் செலுத்தப்பட்டிருக் கிறது. அந்தக் கல்லூரிக்குச் சொந்தமாக இடத்தைப் பெற்று, அந்த அறக்கட்டளையை உருவாக்கியவர்களின் ஆன்மா சாந்தி அடையுமளவுக்கு, இந்தப் பணி நடந்து வருகிறது என்பதை எண்ணிப் பெருடைப்படுகிறேன்.

அதோடு புதிய நிர்வாகம் பொறுப்பேற்ற பிறகு கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரிக்குக் கட்டிடம் 7.56 இலட்சம் ரூபாய் மதிப்பிலும், செல்லம்மாள் மகளிர் கல்லூரிக்கு 7 இலட்சம் ரூபாய் மதிப்பில் 1986-87-ல் கட்டிடமும், கடலூர் சி. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரிக்கு 1984-85-ல் ரூ. 5 இலட்சம் செலவில் கட்டிடமும், 1973 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரிக்கு புதியதாகக் கட்டிடம் கட்டிய வகையில் ஒப்பந்தக்காரர்களுக்குச் சேர வேண்டிய பாக்கித் தொகை ரூ. 1.35 இலட்சத்தை செலுத்தி, 1982-ல் கட்டிடமும் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல் 30 இலட்சம் ரூபாய்க்கு மேலாக கல்லூரிகளுக்கு ஆய்வுக்கூடம் அமைக்கவும் உபகரணம் வாங்கவும் செலவழித்தி ருக்கிறது. சென்னையிலுள்ள செங்கல்வராய நாயக்கர் அச்சகத்தை நல்லமுறையிலே இயக்க ரூ. 1.40 இலட்சம் செலவு செய்திருக்கிறார்கள்.

இப்படி பல்வேறு வகைகளிலே அறக்கட்டளை எந்தெந்த வகையில், எந்தெந்த நோக்கத்திற்காக நிறுவப்பட்டதோ, அவை அழிந்துபோன காரணத்தால், எப்படி மெய்வழிச் சாலைகள்



மெய்வழிச் சாமியார்களின் புகலிடமானதோ, அப்படிப்பட்ட விபரீத விளைவுகள் ஏற்படாதிருக்க—அந்த அறக்கட்டளை மூலமாக இந்த உலகம் உள்ளவரை கல்வி மேம்பாடு, சமுதாய சீர்திருத்தம், சமய நிலை நல்ல முறையில் இயங்க வேண்டுமென்ற நோக்கத்தில் செய்தார்களோ—அவையெல்லாம் நல்ல முறையில் இயங்கக்கூடிய வகையில் இன்றையதினம் தொடர்ந்து அவை நிலைநிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, இங்கே இருக்கின்ற ஊழியர்கள், 17 கல்வி ஸ்தாபனங்களிலே உள்ள ஊழியர்களுக்கெல்லாம் முறைப்படி, நியாயப்படி, தேவையை உணர்ந்து அவர்களுக்கு வேண்டிய பல்வேறு சலுகை களை வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-30)

வாடகை ஒரு ரூபாய்க்கு நாலணா வாங்கிக்கொண்டிருப்பது, பத்தில் ஒரு பங்கு, ஐந்தில் ஒரு பங்கு என்று தேவைப்படுகின்றவர் களுக்கு எல்லாம் சலுகை என்ற நிலையை மாற்றி ரூ. 22.7 லட்சம் என்று இருந்த வருவாயை ரூ. 36.72 லட்சம் என்ற அளவிற்கு ஆண்டுதோறும் சிறுகச் சிறுக நிலைமையை உணர்ந்து நல்ல முறையிலே அந்த வாடகையைச் சீரமைத்து இன்று நல்ல வருவாயைப் பெற்றிருக்கிறது என்பதனை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த விவாதம் மாலை தொடரும். பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாலை 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

[1987 நவம்பர் 17

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1987—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் தொடர்ந்து பேசுவார்கள்.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இவ்வாறு பல்வேறு வகைகளிலே தொடர்ந்து நிர்வாகம் மிகச் சிறப்பான முறையிலே இன்றைய தினம் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் பச்சையப்பர் அவர்களுடைய எண்ணம் ஈடேறக்கூடிய வகையில், இந்த உலகில் நிலைத்து நிற்கக்கூடிய வகையில் இருக்கிறது என்பதனைச் சொல்வதிலே நான் பெருமைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, தேச பக்தியும், தெய்வ பக்தியும்தான் தியாக சீலத்தை வளர்க்கும் என்று சொல்வார்கள். அந்த அறக் கட்டளையில் ஏற்கெனவே பொறுப்பிலிருந்தவர்கள் இந்தத் தெய்வ பக்தியையே அடியோடு அழித்து விட்டார்கள் என்று கூடச் சொல்லலாம். அந்த அளவிற்கு அது வரைமுறையாக இருந்தது. அதனை மாற்றியமைக்கக்கூடிய வகையில் இதை உருவாக்கிய அடிப்படைக் காரணகர்த்தாவாக இருக்கின்ற அந்த வள்ளலினுடைய எண்ணத்தை ஈடேற்றக்கூடிய வகையில், அவர் களுடைய எண்ணம் இந்த உலகில் நிலைத்து நிற்கக்கூடிய வகையில் சிதம்பரம் ஸ்ரீசபாநாயகர் ஆலயத்தில் ஆண்டுதோறும் ஆருத்ரா தரிசனம் மற்றும் ஆனித் திருமஞ்சனம் உற்சவங்கள் பச்சையப்பன் அறக்கட்டளையால் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படக்கூடிய வகையிலே இப்பொழுது நடைபெற்றுக் கொண்டு வருவது பாராட்டுதலுக்கு உரியது ஆகும்.

அதுமட்டுமல்லாமல், இந்தக் கோயில் சுவாமி தேர்ச் சக்கரங்கள் பழுதான நான்கினை அகற்றி புதிய சக்கரங்களை ரூபாய் ஒரு இலட்சம் செலவில் பொருத்த ஏற்பாடு செய்து, தடாரத் தேரையும் ஓட்டக்கூடிய வகையிலே நல்ல முறையிலே உருவாக்கியிருக்



கிறார்கள். அம்மன் தேர்ச் சக்கரங்கள் நான்கினையும் அகற்றி 52,100 ரூபாய் செலவில் புதிய சக்கரங்கள் செய்து முடிக்கப் பெற்றுள்ளதாக நான் அறிகின்றேன்.

ஆகவே, அவர்கள் என்னென்ன நோக்கத்தின் அடிப்படையில் அதைச் செய்தார்களோ அவைகளையெல்லாம் நிறைவேற்றக் கூடிய வகையில், இப்பொழுது இருக்கின்ற நிர்வாகம் மிக நல்ல முறையில் இயங்கி வருகிறது என்பதைச் சொல்வதோடு, புதிய திட்டங்களாக என்னென்ன உருவாக்க வேண்டுமென்று நாம் எண்ணிக்கொண்டிருக்கிறோமோ, என்ன வேண்டுமென்று மக்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்களோ அதனை வேகமாக நிறைவேற்ற வேண்டுமென்ற வேண்டுகோளையும் இந்த நேரத்திலே நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை கிண்டியிலுள்ள செல்லம்மாள் மகளிர் கல்லூரியில் 6 வகுப்புகள் கூரை வேய்ந்த வகுப்பறையில் நடைபெறுகின்றன. மேலும் சில கட்டிடங்கள் அதற்குத் தேவை.

காஞ்சீபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரியில் நான்கு வகுப்பு அறைகள் கூரை வேய்ந்த கட்டிடத்தில் நடைபெறுகின்றன. அதற்குப் புதிய கட்டிடங்கள், நிலையான வகையிலே இருக்கின்ற ளாம் அமைக்கக்கூடிய வகையிலே தேவை.

சென்னை அண்ணா நகரிலுள்ள கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரியில் இப்பொழுது சில வகுப்பறைகள் கூரை வேய்ந்த கட்டிடத்தில் நடைபெறுகின்றன. அதற்குப் புதிய கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும். மேலும் பெண்களுக்காகத் தொழில்நுட்ப நிலையமாக அதை மாற்றியமைக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடலூர் சி. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரியில் 6 வகுப்புகள் கூரை வேய்ந்த கட்டிடத்தில் நடைபெறுகின்றன. அதற்கும் மிக நல்ல முறையிலே கட்டிடத்தை உருவாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[டாக்டர் கே. சமரசம்] [1987 நவம்பர் 17

செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, காஞ்சீபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரி ஆகிய மூன்று பெண்கள் கல்லூரிகளையும் தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகளாக மாற்ற ; திட்டங்கள் வகுத்து நிறைவேற்ற வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செங்கல்வராய நாயக்கர் தொழிற்பள்ளியைப் பொறியியல் கல்லூரியாக மாற்றியமைக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் இங்கே வைக்க நான் விரும்புகிறேன்.

தமிழிலே அந்த அறக்கட்டளையினுடைய நிறுவனங்களுடைய செயல் திட்டங்களைப் புத்தகமாக அச்சிட்டு, ஒவ்வொருவரும் தெளிவு பெறத்தக்க வகையில் விநியோகம் செய்ய வேண்டும் என்றும் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இதுபோன்ற பல்வேறு வகைகளிலேயும் தேவையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து செய்வதற்கு, தொய்வில்லாமல் நடைமுறைப்படுத்துவதற்கு, இப்பொழுது இருக்கின்ற நிர்வாகத்திற்கு இரண்டு அல்லது மூன்று ஆண்டுக் காலம் வாய்ப்பு கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் நாம் எதிர்பார்க்கின்ற, அரசாங்கம் விரும்புகின்ற இந்த அறக்கட்டளையை உருவாக்கிய நிறுவனர்களுடைய எண்ணத்தை ஈடேற்றக்கூடிய வகையிலே இருக்கும். ஆகவே, அந்த அடிப்படையில் இவைகளை நிறைவேற்றித் தர, இப்பொழுது இருக்கின்ற நிர்வாகத்திற்கு மேலும் இரண்டு மூன்று ஆண்டுகள் கொடுக்க வேண்டுமென்று அரசை வேண்டி விரும்பிக் கேட்டு அமர்கின்றேன்.

**திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவுமீது என்னுடைய கருத்துக்களை வைக்க விரும்புகிறேன். பச்சையப்பா அறக்கட்டளை குறித்து மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் புள்ளிவிவரத்தோடு பல விவரங்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். பச்சையப்பாவினுடைய விருப்பம் இந்த அறக்கட்டளையை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்று



1987 நவம்பர் 17] [திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா]

இருக்காது என்று கருதுகிறேன். 19 அறக்கட்டளைகள் இருக்கின்றன. உயில் சாசனம் மூலம், தனிப் பத்திரம் மூலம் இந்த அறக்கட்டளைகளுக்குப் பல்வேறு சொத்துக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அறக்கட்டளையும் இப்படி இருக்கவேண்டுமென்று கட்டளைகள் இடப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு நாம் எடுத்துக் கொண்டிருக்கிற நிலையில், அந்தக் கட்டளைகளுக்குட்பட்டு நிர்வாகம் நடத்தப்படுகிறதா? நிர்வாகக் கோளாறுகளுக்காக அந்த அறக்கட்டளை எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் 1 வருடம், 2 வருடம் என்றால் பரவாயில்லை. 7 வருடங்கள் முடிந்து 8-வது வருடம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது நீட்டிப்பு தேவைதானா? ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்தான் இந்த நிறுவனத்திற்கு உகந்தவர்களா? அவர்கள்தான் நிர்வாகம் செய்ய முடியுமா? 1958-ல் இருந்து இந்த அறக்கட்டளை பற்றி எனக்குத் தெரியும். நல்ல முறையில் நிர்வகிக்கப்பட்ட காலம் எல்லாம் இல்லையா? இன்றைக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தவிர, இந்த அறக்கட்டளையை தமிழகத்திலே சிறந்த முறையில் நிர்வகிக்க மனிதர்களே இல்லையா என்று நான் கேள்வியாக கேட்க விரும்புகிறேன்.

இன்றைக்கு உயர்நீதிமன்றத்திலே உள்ள வழக்கிலே ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவின் ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸில் கூறியிருக்கிறார்கள். ஏற்கனவே உயர்நீதிமன்றத்திலே ஒரு மனு போட்டிருக்கிறார்கள். அது உயர்நீதிமன்றத்திலே நம்பர் ஆகியிருக்கிறதா என்று தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரையில், ஒரு அறக்கட்டளை சரியான முறையில் நடக்கவில்லையென்றால், அது எடுத்துக் கொள்ளப்பட்டாலும், உடனடியாக ஒரு ஸ்கீம் அமைத்து—ஏற்கெனவே, அந்த அறக்கட்டளையினுடைய ஸ்கீமிலே தவறு இருந்தால் திருத்தி அமைத்து—டிரஸ்டிகளிடம் ஒப்படைப்பதுதான் முறையாக இருக்கும். இப்படி நீட்டித்துக் கொண்டு செல்வதாலே இன்றையதினம் எதுவும் நடைபெறாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இங்கே சொல்லப்பட்ட காரணங்களில், எதற்காக 8 வருடங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன என்று காரணம் சொல்லப்படவில்லை. நம்முடைய நண்பர் சமரசம் அவர்கள் 7 ஆண்டுக் காலத்திலே நிர்வாகம் நல்லமுறையிலே நடைபெற்று பல்வேறு காரியங்களைச் செய்திருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள்.

அதை மறுப்பதற்கு நான் தயாராக இல்லை. நல்ல காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதனாலே ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று சொல்வது நீதியும் அல்ல, நியாயமும் அல்ல. அந்த அறக்கட்டளைகளுக்கு என்ன சொல்லியிருக்கிறார்களோ, அதற்கு இணங்க, அவற்றை நிறுவியவர்கள் எந்த நோக்கத்திற்காக உருவாக்கியிருக்கிறார்களோ, அந்த நிலையிலே நாம் ஸ்கீம் அமைத்து செயல்படுத்துவதுதான் முறையாக இருக்கும். 8 ஆண்டுக் காலம் ஆகிவிட்டது. இதோடு முடித்துக் கொண்டு, ஒரு புதிய ஸ்கீம் உருவாக்கி, மீண்டும் மக்கள் மத்தியிலே ஒப்படைக்க வேண்டுமென்று சொல்லி, என்னுடைய கருத்தினை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் அறக்கட்டளையை, நீண்ட—7 வருட—காலமாக இந்த அரசாங்கம் தொடர்ந்து தன்னுடைய நிர்வாகத்திலே வைத்துக் கொண்டிருக்கிறது. அதற்கென்று அதிகாரிகள் அடங்கிய ஒரு குழுவைப் போட்டு தொடர்ந்து இந்த நிர்வாகத்தை நடத்திக் கொண்டு வந்திருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். இப்பொழுது 7 ஆண்டுக் காலம் நிர்வகித்ததற்கான காலம் காலாவதியாகி விட்ட காரணத்தாலே, மேலும் ஓராண்டுக் காலம் நீட்டிப்பதற்காக ஒரு மசோதாவை அமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். அதிலே முக்கியமான பிரச்சினை என்னவென்றால், இந்தப் பச்சையப்பன் அறக்கட்டளையைப் பொறுத்த மட்டில் அரசாங்கம் தன்னுடைய நிர்வாகத்தில் வைத்துக் கொண்டிருப்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் கடுமையாக எதிர்க்கிறேன். போர்ட் ஆப் டிரஸ்டீஸ் ஏற்படுத்தப்பட்டு, அதனுடைய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்று, அவர்கள்தான் நிர்வாகத்தை நடத்த வேண்டும். தேர்தலை முறையாக நடத்தினால்தான் ஜனநாயகம். ஆனால் அதை விட்டு விட்டு அரசாங்கமே நிர்வாகத்தை ஏற்றுக் கொள்வது என்பது ஜனநாயக விரோதப் போக்கு என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

(மாலை 4-10)

பச்சையப்ப அறக்கட்டளை நிர்வாகத்தை ஏற்றுக்கொள்வதற்கான மசோதாவை இங்கே கொண்டு வந்து நிறைவேற்றிய பிறகு மத்திய சர்க்காரினுடைய அனுமதியைப் பெற்று சட்ட வடிவம்



பெறுவதற்காக அனுப்பப்பட்ட நேரத்தில் மத்திய சர்க்கார் ஒன்றை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள், இரண்டு வருடத்திற்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசாங்கமே நிர்வாகத்தை நடத்துவதை மத்திய சர்க்கார் விரும்பவில்லை. ஆகவே தான் மத்திய சர்க்கார் ஒப்புதல் வழங்குகின்ற நேரத்திலேயே இரண்டு வருடங்களுக்குள் நீங்கள் போர்ட் ஆப் டிரஸ்டீசை அமைக்க வேண்டும். தேர்தலை நடத்த வேண்டும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய சர்க்காருடைய டைரக்ஷனை, நிபந்தனைகளை மாநில அரசு நீக்கியிருக்கிறது, பணிய மறுத்திருக்கிறது, ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கிறது. மத்திய சர்க்காருடைய உத்தரவுகளை, கட்டளைகளை மாநில அரசு ஏற்கத் தவறினால் அரசியல் சட்டப்படி ஒரு மாநில அரசை டிஸ்மிஸ் பண்ணலாம். அந்த அடிப்படையில் மத்திய சர்க்காருடைய டைரக்ஷன் இந்த விஷயத்திலே மீறப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே போர்ட் ஆப் டிரஸ்டீசுக்கான தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும். அதற்கு என்ன காரணம் என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் பேசும் போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அரசாங்கம் நிர்வாகத்தை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதற்கான காரணத்தை அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். பச்சையப்ப அறக்கட்டளை பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை வைத்திருக்கிறது. அதைச் சில பேர் தவறாகப் பயன்படுத்துகிறார்கள், அதிலே தவறு செய்கிறார்கள், லஞ்ச லாவண்யங்கள் அங்கே நடைபெறுகின்றன. தவறான வழியில் செயல்படுகிறார்கள். மிஸ்மானேஜ்மென்ட் மிஸ்யூஸ் ஆப் பவர் பண்ணுகிறார்கள். இதையெல்லாம் பார்த்துக் கொண்டு ஒரு அரசு சும்மா இருக்க முடியாது. எனவே நல்ல நோக்கோடு அந்த மானேஜ்மெண்டை அரசு மேற்கொள்கிறது என்று அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இங்கே அவருக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் க. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் என்னுடைய நோக்கத்தைப் புரிந்து கொண்டதற்கு மிக மிக நன்றி.

[1987 நவம்பர் 17

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் இப்போது குறிப்பிட்ட வார்த்தைகள் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அது நல்ல பேச்சல்ல.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு ஆக்கப்பட்ட பொருள்கள் எல்லாம் ஆண்டவனுக்குச் சொந்தம். ஆனால் இந்த நேரத்தில் ஆக்கப்பட்ட பொருள் எல்லாம் அரசாங்கத்துக்குச் சொந்தம் என்பதை நான் எடுத்துச் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது?

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விஷயத்தைச் சொல்லி, அதை நான் புரிந்து கொண்டதற்கு நன்றி என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். புரியாதவன் என்பதைப் போல என்னைச் சொல்லி, அறிவற்றவன், ஆற்றலற்றவன் என்று சொல்வதுபோல சட்டப்படி உள்ள ஒன்றை அவர் தவறாகச் சொன்னதால்தான் நானும் அதே வேகத்தில் பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பச்சையப்ப அறக்கட்டளையைப் பொறுத்தவரையில் நீங்கள் எதைத் தவறு என்று சொல்கிறீர்களோ, எந்தக் குற்றச்சாட்டைச் சொல்கிறீர்களோ அதே குற்றத்தை நீங்கள் நியமிக்கிற குழுவானது, அதாவது அரசாங்க அதிகாரிகள் செய்ய மாட்டார்களா? அதற்கு என்ன உத்தரவாதம்? அரசாங்கமும், அதிகாரிகளும் செய்துள்ள பல தவறுகளை இதே அவையில் இதற்கு முன்பு நாங்கள் சொல்லியிருக்கிறோம். நேற்று கூட இங்கே பேசுகிற போது ஹவுசிங் போர்ட் நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிராகத் தவறு செய்ததால் 2,500 ரூபாய் அபராதம் கட்டியிருப்பதைப் பற்றி பேசியிருக்கிறோம். அதுபோல மருத்துவத் துறையிலுள்ள அதிகாரிகள் மீது, ரெக்கார்டில் மாற்றம் செய்ததனால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அதிகாரிகள் எல்லாம் ஆண்டவனின் தூதர்கள் அல்ல. தேவதூதர்கள் அல்ல. அரசாங்கம் தப்பு செய்கிறது. அதிகாரிகள் தப்பு செய்கிறார்கள் என்று பல காரியங்களைக்

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1987 நவம்பர் 17] [திரு. அ. ரகுமான்கான்]

குறிப்பிட்டு இங்கே எதிர்த்தரப்பிலிருந்து நாங்கள் கடந்த 10 ஆண்டுகளாகப் பேசி வெளிச்சத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். அதிகாரிகள் மட்டத்தில் மட்டும்தான் தவறு நடைபெறுகிறது என்று சொல்வதும் சரியல்ல. பஞ்சாயத்து அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்பதற்காக அரசாங்கம் எடுத்துக் கொள்ளும். மாநகராட்சி தப்பு செய்தால் உடனே அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். ஏதாவது டிரஸ்ட் தப்பு செய்தால் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். ஆனால் நீங்களே தப்பு செய்தால் உங்களை யார் எடுத்துக்கொள்வார்கள்? ஜனநாயக அமைப்பில் யாராவது தப்பு செய்தால் நடவடிக்கை எடுங்கள். ஆனால் அதற்கு மாறாக, ஜனநாயக அமைப்புக்கு மாறாக, போர்டுக்குத் தேர்தல் நடையாது, 7 வருடத்திற்கு மேலும் ஒரு வருடம் நீட்டிப்பு கேட்போம் என்கிற வகையில் காலத்தை நீட்டித்துக்கொண்டே போனால் அது ஜனநாயக விரோதப் போக்கு என்பதை நான் இங்கே மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்கிறேன், நீங்கள் அனுமதித்தால். சென்னையில் [illegible] தெருவில் 90 இலட்சம் ரூபாயில் பல மாடிக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. விரைவிலே கட்டி முடிக்கப்படும் நிலையில் இருக்கிறது. அது சம்பந்தமான வரவு-செலவை யார் பார்ப்பது? கட்டி முடிந்தவுடன் வாடகைக்கு விடப்பட வேண்டும். வாடகைக்கு விடும்போது யார், யாருக்கு விடுவது? டெண்டர் பண்ணுவது யார்? இவற்றை எல்லாம் யார் முடிவு செய்வது? அங்கே இருக்கிற அதிகாரிகள் தீர்மானிக்க வேண்டும் அல்லது அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவறு செய்தால், யார் கண்டிப்பது? மக்கள் பிரதிநிதிகள் லஞ்சம் வாங்குவது தவறு என்று சொல்கிறபோது அதிகாரத்தில், பொறுப்பில் இருக்கிற அந்த அதிகாரிகள் தவறு செய்ய மாட்டார்களா? லஞ்சம் வாங்கமாட்டார்களா? அவர்கள் செய்தால் அது தவறு ஆகாதா? 90 இலட்சம் ரூபாயில் கட்டிக்கொண்டிருக்கின்ற அந்தக் கட்டடத்தை வாடகைக்கு விடுகிறபோது இப்படிப்பட்ட தவறுகள் வாராதா? மக்கள் பிரதிநிதிகள் நிர்வாகத்தைப் பார்க்கின்ற நிலைமை இருந்தால் அதிகாரிகள் செய்கின்ற தவறுகளைத் தடுக்க முடியும். ஆகவே, விரைவிலே அந்த நிர்வாக போர்டுக்குத் தேர்தல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1987 நவம்பர் 17

இன்னொரு உண்மையையும் இங்கே சொல்ல விரும்புகிறேன். அவர்கள் சொல்ல மறுக்கிறார்களா அல்லது சொல்ல வேண்டாமென்று நினைக்கிறார்களா என்பது தெரியவில்லை. இந்த பச்சையப்பன் அறக்கட்டளை சம்பந்தமாக ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. 1909-ம் ஆண்டில் மெட்ராஸ் ஹைகோர்ட்டில் நிர்வாகம் எப்படி இருக்க வேண்டுமென்று ஒரு ஸ்கீம் கான்ஸ்டிட்யூட் பண்ணியிருக்கிறார்கள். ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. 1909-ல் மெட்ராஸ் ஹைகோர்ட் தயாரித்த ஸ்கீம் என்ன சொல்லுகிறது? மானேஜ்மென்ட் அட்மினிஸ்ட்ரேஷன் தர்மகர்த்தாக்களிடம் இருக்க வேண்டும் என்பது ஒன்று. இரண்டாவதாக தேர்தல் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருக்க வேண்டும் 'போர்டு ஆப் ட்ரஸ்டுக்கு' 'மோட் ஆஃப் அப்பாயின்ட் மென்ட்' தேர்தல் எப்படி நடக்க வேண்டும். யாரை எப்படி தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது குறித்து அந்த ஸ்கீமில்தான் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் ஏதாவது பிரச்சினை வந்தால் மெட்ராஸ் ஹைகோர்ட் தான் அந்த ஸ்கீமை ஒழுங்குபடுத்திக் கொடுக்க வேண்டும். ஸ்கீமில் ஏதாவது 'மாடிஃபிகேஷன்' தேவை என்றால் அதையும் மெட்ராஸ் ஹைகோர்ட் தான் செய்ய வேண்டும்; அந்த அதிகாரம் அவர்களுக்குத்தான் இருக்கிறது.

இதிலே மிக முக்கியமான பிரச்சினை என்னவென்றால், இந்தச் சபையைப் பொறுத்த மட்டில் அல்லது அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் இந்த பச்சையப்பன் நிர்வாகம் சம்பந்தமாக, மானேஜ்மென்ட் சம்பந்தமாக, அறக்கட்டளை சம்பந்தமாக சட்டங்களை உருவாக்க அதிகாரம் இல்லை. அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது; மெட்ராஸ் ஹைகோர்ட்டுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒருவேளை இந்த பச்சையப்பன் அறக்கட்டளை போர்ட் அப் ட்ரஸ்டீஸ் தப்பு செய்தால், தவறு செய்தால். அவர்கள் தப்பு செய்திருக்கிறார்களா, தவறு செய்திருக்கிறார்களா என்று தீர்மானிக்கிற அதிகாரம் மெட்ராஸ் ஹைகோர்ட்டுக்குதான் இருக்கிறதே தவிர இந்த சபைக்கோ அல்லது நம்முடைய அரசாங்கத்திற்கோ இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1987 நவம்பர் 17] [திரு. அ. ரகுமான்கான்]

இன்னொன்றையும் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) இரண்டு பில்லிலும் சேர்த்து பேச வேண்டியிருக்கிறது. ஆகவே, கொஞ்சம் கூடுதல் நேரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்மையில் மெட்ராஸ் ஹைகோர்ட்டில் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதில் அந்த நிர்வாகத்தை, அட்மினிஸ்ட்ரேஷனை தமிழ்நாடு சர்க்கார் நடத்திவருவது கண்டிக்கத் தக்கது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்று தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் இந்த அரசாங்கத்தைக் கண்டித்து தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் போர்ட் ஆப் டிரஸ்டீஸுக்கு இருப்பதற்குப் பதிலாக ஆர்டினன்ஸ் போட்டு, அவசரச் சட்டம், அவசரச் சட்டம் என்று கொண்டுவந்து ஏழு வருடங்களாக அந்த நிர்வாகத்தைக் கைவசப்படுத்தியிருப்பது கண்டிக்கத்தக்கது, தவறானது, இது உள்நோக்கம் உடையது என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள்.

மேலும் அந்தத் தீர்ப்பிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் ஒரு வருடத்திற்குள் தேர்தல் நடத்த வேண்டும்; நிரந்தர தர்மகர்த்தாக்களிடம் அந்த நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும்; நிரந்தர தர்மகர்த்தாக்களை கோர்ட்டு மூலமாக ஒரு மாதத்திற்குள் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது நடைபெறுவது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படித் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும்போது, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு வழக்கறிஞர் என்பதால் உங்களைக் கேட்கிறேன். அமைச்சர் அவர்களுடைய 'ரெடி மேட் சிப்ளை' என்ன என்பது எனக்குத் தெரியும். அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்று சொன்ன பிறகு, இங்கே இந்த மசோதாவைக் கொண்டுவந்து பேசுவதற்குத் தார்மீக உரிமை இல்லை என்று கருதுகிறேன். நாங்கள் 'ஸ்டே' வாங்கியிருக்கிறோம்; ஆகையால் அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது என்று சொல்லலாம்.

(மாலை 4-20)

நாளைக்கே இந்த மனுவை ஹைக்கோர்ட்டிலே போட்டு இருக்கிற நபர் அந்த ஸ்டேயை வெகேட் பண்ணினால் உங்களுடைய சட்டம் நாளை மறுநாளே செத்துப் போகும்.

[திரு. அ. ரகுமான்கான்] [1987 நவம்பர் 17

ஆகவே நான் கேட்கிறேன், அவசரம் அவசரமாக இன்றைக்கு ம்ண்டும், மீண்டும் அரசாங்கமே கமிட்டி போட்டு வைத்துக் கொள்வது என்றால் என்ன அர்த்தம்? ஒரு முக்கியமான பிரச்சினை இது. போர்ட் ஆப் ட்ரஸ்டீஸ்க்குத் தேர்தல் நடத்த வேண்டும்.

இரண்டாவது சட்டம் பற்றி ஒரு வார்த்தை. செங்கல்வராய நாயக்கர் பப்ளிக் டிரஸ்ட், மற்ற டிரஸ்ட்களுக்கு இந்தச் சட்டம் அப்ளிக்கபிள் ஆகாது, இந்தச் சட்டத்தின்படி நிர்வாகத்தை அரசாங்கம் நடத்த முடியாது, ஆகவே இந்த மசோதாவைக் கொண்டு வருகிறோம் என்று சொன்னால் நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். எவ்வளவு பெரிய சட்டத்துறை? இன்னும் சொல்லப்போனால் போன சட்டம் கொண்டு வந்த போது இதற்கும் பொருந்தும் என்ற வாசகத்தைச் சேர்த்து விட்டால் இந்தச் சட்டம் இப்போது புதிதாகக் கொண்டுவர வேண்டிய அவசியமே இல்லை. இதற்கு அரசாங்கத்தின் பணம் எவ்வளவு செலவு? சட்டசபையின் நேரம் எவ்வளவு வீணாகிறது? சட்டத்துறையை நான் ஒன்று கேட்கிறேன். அமைச்சர் மூலமாக செங்கல்வராயன் ட்ரஸ்ட்டுக்கும் பொருந்தும என்று ஒரு வாசகத்தைப் போட்டிருந்தால் இந்த மசோதா தேவையா? * *

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகு மான்கான் அவர்கள் கடைசியில் பேசியதை அவைக் குறிப் பிலிருந்து நீக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பில்லுக்குச் சம்பந்தம் இல்லாமல் கடைசியில் * * பற்றிப் பேசியதை நீக்க உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் பேசுகிறபோது, திரு. ரகு மான்கான் அவர்கள் எந்த அளவிற்குச் சட்ட அறிவு இல்லாமல் பேசுகிறார் என்பதைப்பற்றி விளக்க இருக்கிறேன். எனவே அவர் பேசியதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டு கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.



1987 நவம்பர் 17]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு தடவை டிபேட் பண்ணி அதற்கு அமைச்சர் ரிப்ளை பண்ணியதைத் திரும்பவும் பேசுவதற்கு அனுமதிக்க முடியாது விதிப்படி. ஒரே விஷயத்தை ஒரு வருஷத்தில் பத்து தடவை அனுமதிக்க முடியாது. ஆகவே டிபேட் பண்ணி ரிப்ளை ஆனதைப் பற்றித் திரும்பவும் பேசக்கூடாது. ஆகவே அதை அனுமதிக்க முடியாது.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற பச்சையப்பன் அறக்கட்டளை மேலாண் மையை மேற்கொள்வது குறித்த சட்டமுன் வடிவின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் ஒரே ஒரு கருத்தை மட்டும் முக்கியத்துவம் கருதி வலியுறுத்த விரும்புகிறேன். இங்கே அமைச்சர் அவர்களுக்கு நான் குறிப்பாக ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பச்சையப்பா அறக்கட்டளையை நிறுவியவர்களின் நோக்கம் இந்த அறக்கட்டளை என்பது முழுக்க முழுக்க கல்விப் பணிக்காகப் பயன் படவேண்டும் என்பது. அவ்வாறு பெரிதும் கல்விப் பணிக்குப் பயன்படவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இதனை நிறுவினார்கள். ஆனால் அந்த அறக்கட்டளைக்குப் பொறுப்பாளிகளாக வந்தவர்களே அந்த மெய்யான நோக்கத்தை அழிக்கிற முறையில் தங்களுடைய நடவடிக்கைகளை மேற்கொண்ட காலத்தில்தான் அரசு தலையிட வேண்டிய அவசியம் வந்தது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். நடைமுறை அனுபவத்தில் கோடிக் கணக்கான ரூபாய் மதிப் புள்ள சொத்துக்களைப் பயன்படுத்துகிற அந்த அறக்கட்டளை யில் பல வருட காலமாக ருசி கண்டு சுவைத்தவர்கள் நிச்சயமாக அரசாங்கத்தைச் சுலபமாக விட்டுவிட மாட்டார்கள். தொடர்ந்து நீதிமன்றங்களை நாடி சட்டத்தின் சந்து பொந்துகளைப் பயன் படுத்தி மீண்டும் அறக்கட்டளையைத் தாங்களே பெற்றுக்கொள் ளலாம் என்றெண்ணி தாங்களே அதை சுவைத்துக்கொள்வதற் குரிய சகல முயற்சிகளையும் அவர்கள் மேற்கொள்வார்கள். அப்படி அவர்கள் பல முயற்சிகளை மேற்கொள்வார்கள். எனவே மிகுந்த விழிப்புணர்வோடு மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத்தான் நான் இங்கே வலியுறுத்த விரும்பு கிறேன். இதற்காக வருடம் ஒரு முறை திரும்பத் திரும்ப அறக்

[திரு. கே. சுப்பராயன்] [1987 நவம்பர் 17

கட்டளையின் மேலாண்மையை மேற்கொள்வதற்காக சட்ட முன்
வடிவு ஒன் கொண்டுவரவேண்டும்? ஏன் அவர்கள் நடைமுறை
தட்டிக்கொண்டு இருக்கிறார்கள். நீதிமன்றத்தின் ஆணை
யைப் பயன்படுத்தி, பொது நலனில் அக்கறை கொண்டு பொது
மக்களின் பொதுவான சொத்தைப் பாதுகாப்பதற்கு, அதனைச்
சூறையாட முயல்கிற வெஸ்டட் இன்டரஸ்டிடமிருந்து கைப்பற்ற
எடுக்கின்ற முயற்சியைத் தடுக்க முயற்சிப்பவர்களுக்கு ஏன் அனுப்
பேரவைக் கொடுத்திருக்கிறீர்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன்.
எனவே நான் என்னுடைய முழு வலிமையைக் கொண்டு இந்த
மாநில அரசினிடத்தில் வலியுறுத்த விரும்புவது என்னவென்
றால், பெர்மனன்ட் டேக் ஓவர் செய்தால்தான் ஒரு முடிவு
ஏற்படும். அவ்வாறு பெர்மனன்ட் டேக் ஓவர் செய்வதில்
அரசாங்கம் கொஞ்சம் கூட பின்வாங்கக்கூடாது. மத்திய அரசு
அனுமதிக்கவில்லை என்றால் மத்திய அரசினிடத்தில் உரியபடி
போராடவேண்டும். அப்படி போராடி பச்சையப்பன் அறக்
கட்டளையைப் பெர்மனன்ட் டேக் ஓவர் செய்வதற்குரிய கூர்மை
யான, பொருத்தமான வழிமுறைகளில் ஈடுபடவேண்டும். ஆனால்
அவர்கள் பல வழிமுறைகளைக் கண்ட புலிகள். அவர்கள்
உங்களைச் சுலபமாக விட்டு விட மாட்டார்கள் என்று நான்
முன்பே குறிப்பிட்டேன். மீண்டும் அவர்கள் சட்டத்தின்
துணையை வலுவோடு நாடுவார்கள். ஆகவே அத்தகைய சட்ட
சந்துகளை வழங்காத வகையில் பொருத்தமான ஒரு சட்ட முன்
வடிவை வரும் கூட்டத் தொடரிலாவது கொண்டு வர வேண்டும்
என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேபோல அறக்கட்டளை என்ற பெயராலே, இந்தப்
பச்சையப்ப அறக்கட்டளை மட்டும் அல்ல, நாட்டில் பல்வேறு
பகுதிகளில் அரசை ஏமாற்றுவதற்கும், சட்டத்திலே இருந்து
தப்பித்துக் கொள்வதற்கும், பொதுப் பணத்தை சூறையாடு
வதற்கும் உரிய ஒரு வாய்ப்பாக இருக்கும் ஒரு நிலையைத்
தொடர்ந்து நீடிப்பதைத் தடுக்க வேண்டுமானால், இந்த அறக்
கட்டளையை நடத்திக் கொண்டிருக்கிற பல்வேறு நிறுவனங்
களை அரசாங்கம் ஏற்கவேண்டும் என்பது காலத்தின்
தேவை என்பதைத் தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.
இதில் சட்ட இடையூறு இருக்கிறது. கோர்ட் தலையிடும் நிலை
இருக்கிறது என்றால், சட்டமன்றம் கோர்ட்டிடமும் சண்டையிட



1987 நவம்பர் 17] [திரு. கே. சுப்பராயன்]

வேண்டிய அவசியம் ஏற்படலாம். சட்டமன்றத்தைப் பொறுத்த வரைக்கும் மக்களின் வளர்ந்து வருகிற தேவைகளுக்கு ஏற்ப, ஒரு சிறப்பான கருவியாகத் தேர்ந்து எடுக்கப்பட்ட அமைப்புகள் நடைமுறையில் இயங்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும். ஆகவே தனிப்பட்ட நபர்கள் சிலர் கூடி இத்தகைய நிறுவனத்தை நடத்துவது என்பது பொருத்த மாகாது. எனவே அரசாங்கமே முழுக்க மேற்கொள்வதுதான் பொருத்தமான தீர்வு என்பதையும், அமைச்சர் அவர்கள் இறுதி யான பதில் அளிக்கிற நேரத்தில் இதற்குப் பொருத்தமான முறையில் பதில் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வ தோடு, இதுபோன்ற பல சிறு அறக்கட்டளைகளைக் கவனத்தில் கொண்டு முடிவு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. மா. சின்னராசு**: மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகத்தை மேற்கொள்ளுகின்ற சட்டத்தின்மீது என்னுடைய சில கருத்துக்களை இங்கே முன் வைக்க விரும்புகிறேன். பச்சை யப்பன் அறக்கட்டளை கல்வியை வளர்க்க, கல்வி வளர்ந்த ஒரு குடும்பத்திலிருந்து அறப்பணிக்கு காலம் காலமாக அது இருக்க வேண்டும் என்று அது வளர்ந்து வருவதற்கு அந்தக் குடும்பத் தினர் பலர் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பதற்காக இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிற நேரத்தில், அந்த வள்ளல் குடும்பத்தினருக்கு நாம் அனைவரும் நன்றியையும், நம்முடைய பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறோம் என்று நான் கருதுகிறேன்.

ஆனால் எந்த நோக்கிற்காக, அந்த அரும்பெரும் மனிதர் கொடை வள்ளல் இந்த மாபெரும் அறக்கட்டளையை நிறுவி சாசனத்தில் பிற்படுத்தப்பட்ட மக்கள் பயன் பெற வேண்டும் என்று கருதினார்களோ அந்தப் பயனை உரியவர்கள் அடைய விடாமல் ஒரு கூட்டம் பல காலம் முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறது என்பதை இங்கே நாம் மறந்து விடக் கூடாது. தொடர்ந்து ஒரே கூட்டம், அந்த அறக்கட்டளையைத் தன்னுடைய சுய நலத்திற்காக தொடர்ந்து பயன்படுத்தி வந்த

அந்தக் கூட்டம், மீண்டும் அதைக் கைப்பற்ற, அதிலே தங்கள் சுயநலத்திற்காக எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் சுருட்ட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது என்பதால் நம்முடைய மதிப்பிற்குரிய திரு. சுப்பராயன் அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல நாம் அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை நானும் இந்த நேரத்திலே நினைவு படுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். அதிலே உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், இதில் மீண்டும் தேர்தல் நடத்தி, தனியார்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று துடிக்கின்றவர்கள் சட்டமன்றத்திலானாலும், அதேநேரத்தில் நீதிமன்றத்திலானாலும், அதற்கான வாதங்களை எழுப்புகிறபோது எனக்கு ஒரு அச்சம்தான் ஏற்படுகிறது.

இதை அரசாங்கம் எடுப்பதற்கு முன்னால் இருந்த நிலை என்ன? எடுத்த பின்னால் இருக்கிற நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன். எடுப்பதற்கு முன்னால் இதில் நடந்த தவறுகளை எல்லாம் கணக்கிலே எடுக்காமல் இருக்க முடியாது. பலமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே, இந்த அறக்கட்டளையில் நடந்துவிட்ட தவறுகளையும், அதைத் தடுக்க முயற்சிகள் எடுத்ததையும், அதிலே எப்படி தப்பித்துக் கொண்டார்கள் என்பதை எல்லாம் எடுத்து விளக்கி இருக்கிறார்கள். அரசாங்கம் மேற்கொண்டதற்குப் பின்னால் தவறுகள் களையப்பட்டு, பல வளர்ச்சிகளை நாம் கண்டு விட்டதற்குப் பின்னால், எந்த நோக்கத்திற்காக இந்த அறக் கட்டளை ஏற்படுத்தப்பட்டதோ; அந்த நோக்கங்கள் இன்றுதான் நிறைவேற்றப்படுகின்றன என்று தெரிந்த பின்னால், அதை நிறைவேற்றுகின்ற முறையிலே அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலே இருக்க வேண்டும் என்று வாதாட வேண்டிய நாம், ஏதோ அந்த தனியார்களுக்காக வாதாட வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம் என்று நினைக்கிற போது உள்ளபடியே நான் வருந்துகிறேன்.

இன்னொன்றையும் இங்கே சுட்டிக் காட்டினார்கள். உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கி விட்டது என்று சொன்னார்கள். மரியாதைக்குரிய நீதிபதி இராமசாமி அவர்கள் நம்முடைய மாநிலத்திலேயிருந்து மாறுதலாகி பெரியானா உயர்நீதிமன்றத்திற்கு தலைமை நீதிபதியாக பொறுப்பு ஏற்றிருக்கிறார்கள். பொறுப்பு





ஏற்பதற்கு முன்னால் அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. நான் அதற்கு உள்நோக்கம் கற்பிக்க வரவில்லை. ஏனென்றால் மனு செய்திருப்பவர்கள் யாராக இருந்தாலும் உரிய தீர்ப்பை நீதிமன்றம் வழங்க வேண்டும். ஆனால் தீர்ப்பு வழங்குவதற்கு முன்னால் அரசாங்க வழக்கறிஞருக்கு உரிய அவகாசம் கொடுக்கப்பட்டதா என்று அரசாங்கம் ஆய்ந்து பார்க்க வேண்டும். அதோடல்லாமல், நம்முடைய 81-வது சட்டத்தினை உருவாக்குகிறபோது 'கான்ஸ்டிட்யூஷனல் வலிடிட்டி'-ஐ அறுதியிட்டுக் காட்டித் தான் நம்முடைய அரசாங்கம் சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறது. இது மீண்டும் உயர்நீதிமன்ற ஸ்கீமுக்குப் போய் அனுமதி வாங்க வேண்டியதில்லை என்று சட்டத்தின் 7-வது ஷரத்தில் நம்முடைய அரசு சி.பி.சி.-யின்கீழ் கோடிட்டுக் காட்டுவதற்காக ஓவர்-ரைடிங் எபக்ட் என்ற முறையில் ஒரு பிரிவை சேர்த்திருக்கிறது. நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"The provision of the Act shall have effect notwithstanding anything inconsistant therewith contained in Section 92 of the C.P.C."

என்று தெளிவாகக் கொடுக்கப்பட்ட பின்னால், இதை மற்ற சட்டங்களால் கட்டுப்படுத்த முடியாது என்ற அளவிற்குத் தெளிவான ஒரு சட்டத்தை நாம் இங்கே நடைமுறைப்படுத்தி இருக்கிறோம் என்பதை அருள்கூர்ந்து குறை கூறுபவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

(மாலை 4-30)

அதோடு மட்டுமல்லாமல், இது அரசியல் சட்டத்தையோ, மற்ற சட்டத்தையோ புறக்கணிப்பதாகவோ அல்லது சட்டங்களுக்குப் புறம்பாக இருக்கிறது என்றோ வாதிட முடியாது. நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை நிச்சயமாக அரசாங்கம் மேல் முறையீட்டிற்கு எடுத்துச் சென்றிருக்கும் என்பதை நாம் உணர்ந்து இருக்கிறோம். ஆகவே அதனுடைய பயன் நமக்குக் கிடைக்கவேண்டுமென்றால் இந்தச் சட்டம் எப்படியும் பாதுகாக்கப்பட வேண்டும். அந்த வகையில் அரசாங்கம் முயற்சியெடுத்து தொடர்ந்து மூன்று அல்ல, இரண்டு ஆண்டுகளுக்கும் நிறுவனத்தை அதிகாரிகளை வைத்து இன்னும் சிறப்பான முறையில் நிர்வகித்து அதனுடைய பயன் உரியவர்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆர்டிகில் 31-ஏ நமக்கு முழு அளவிற்குப் பாதுகாப்பு கொடுக்கிறது. அரசியல் சட்டத்திற்கு மீறிய ஒரு சட்டம் இந்த நாட்டிலே இருக்க முடியாது. ஆகவே 31-எ-ல் ஒரு தனிச் சொத்தை அல்லது ஒரு நிறுவனத்திற்குச் சேர்ந்த சொத்தை முழு அளவிற்கு அரசாங்கம் எடுத்துக்கொள்வதற்கு வழிவகை செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே எத்தனையோ துறைகளை அரசாங்கத்திற்கு உரியதாக ஆக்கி ஒரு சோஷலிச சமுதாயத்தை உருவாக்கிட எண்ணியிருக்கிற நாம், ஒரு தனிப்பட்ட பெருமகனார் சொத்து, பொதுமக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட சொத்து சில தனியார்களுக்குச் சொந்தமாவதைத் தடுப்பதற்கு, தனியாருடைய கரங்களுக்கு ஆளாவதைத் தடுப்பதற்கு இந்தச் சட்டம் நீடிக்க வேண்டும். இந்த அறக்கட்டளையின் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இதனுடைய நோக்கங்கள் இன்னும் நிறைவேறி அரசாங்கத்தின் முழுப் பாதுகாப்போடு மாணவ சமுதாயத்திற்கும், ஏழை எளியவர்களுக்கும் பயன்பட வேண்டுமென்று என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்து, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1980-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் 1987-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் வரையில் பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகத்தை அரசு மேற்கொண்டு பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது என்பது அரசாங்கத்தினுடைய வாதம். அது சம்பந்தமான விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக அந்த விவரங்கள் கொடுக்கப்படவில்லை.

ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படி ஒவ்வொரு வருடமும் இந்த முறையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்குப் பதிலாக 1980-ம் ஆண்டில் எந்த நோக்கத்தோடு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, இன்றைக்கு அதிலே அபிவிருத்தி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று அரசு வாதிடுகிறதோ, அதற்குப் பிறகு இந்த நிறுவனத்தை திருப்பித் தனியாருக்கு விட்டுவிடுவது என்பதை நிச்சயமாக எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை, வரவேற்க முடியவில்லை. நான் இந்த நேரத்தில் ஒன்றைத் தெள்ளத்தெளி



வாகச் சுட்டிக்காட்ட விரும்புவது, 10 ஆண்டுகள் அல்லது 7 ஆண்டுகள் அரசு அந்த அறக்கட்டளையை நிர்வகித்து நல்லமுறையில் நிலைமையைக் கொண்டு வந்ததற்குப் பின்னால், மீண்டும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இரண்டு நாட்களுக்கு முன்னால் பத்திரிகையில் வந்திருக்கிறது. நாங்கள் எல்லாம் அதைப் படித்தோம். அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் அரசு இந்த நிர்வாகத்தை நடத்துவதற்கு உரிமையில்லையென்றும், ஒரு ஸ்கீமை உயர்நீதிமன்றமே தயார் செய்திருக்கிறது, அந்த ஸ்கீம்படி அந்தப் பிரச்சினையை மீண்டும் உயர்நீதிமன்றத்திற்குத்தான் கொண்டு வரவேண்டுமே தவிர, அரசு இந்த முறையில் நடவடிக்கை எடுத்தது சரியல்ல என்றும் சுட்டிக் காட்டியிருக்கிறது. நான் இந்த நேரத்திலே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறை சொல்லவேண்டும் என்ற நோக்கத்திற்காக நான் இதைச் சொல்லவில்லை. உச்ச நீதிமன்றம் சமீபத்திலே நேஷனலைசேஷன் ஆப் டிரான்ஸ்போர்ட் சம்பந்தமாக ஒரு தீர்ப்பு கொடுத்திருக்கிறது. அதிலே எங்களுக்குக் கருத்து வேறுபாடு இருக்கலாம். நீங்கள் அதிலே உங்களுடைய லட்சியத்தை நிறைவேற்றுவதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். ஏன் இந்த விஷயத்திலே Permenent take-over of the entire property என்ற முறையிலே ஒரு சட்டம் கொண்டு வருவதற்கு இந்த அரசு முன்வரவில்லை?

இந்த நேரத்திலே நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புவது, இந்த நிர்வாகத்தை ஆண்டுக்காண்டு ஏற்று நடத்துவதற்கு உரிமை வழங்குவதற்காக வேண்டி உள்ள ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதைவிட, நிரந்தரமாகவே அரசு இந்த அறக்கட்டளையை, நல்லமுறையில் நடத்தக்கூடிய முறையில், அதற்கு அதிகாரம் வழங்கக்கூடிய முறையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேநேரத்தில் நான் ஒருசில விஷயங்களைக்கூட சுட்டிக் காட்ட விரும்புகிறேன் இங்கே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்

[திரு. ஜெ. ஹேமச்சந்திரன்] [1987 நவம்பர் 17

'At present an Official Committee consisting of Government Officials constitutes the Committee of management.''

அப்படி அரசு அதிகாரிகளை மட்டும் கொண்ட ஒரு குழுவாக இன்றைக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. எனவே நான்-அபிஷியல்களையும் சேர்த்து இந்தக் கமிட்டியை மாற்றியமைப்பது ஒரு நல்ல முறையாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. இன்றைக்கு யூனிவர்சிட்டி மற்றும் உள்ள நிர்வாக சமிதிகளிலே சட்டமன்ற உறுப்பினர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. எனவே அந்த முறையிலே இந்த நிர்வாகத்திலேயும் அரசு ஊழியர்களை மட்டும் வைப்பது என்பதற்குப் பதிலாக, கல்வித்துறையிலே சிறந்த நிபுணர்களாக இருப்பவர்களையும் சட்டமன்ற உறுப்பினர்களையும் கொண்டு நான்-அபிஷியல்ஸ்களைக் கொண்ட ஒரு நிர்வாக சமிதியை இது சம்பந்தமாக ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து.

இன்னொன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், உயர்நீதி மன்றம் என்ன தீர்ப்பு கொடுத்திருந்தாலும், அந்தத் தீர்ப்பு நாளைய தினம் அரசைப் பொறுத்தவரையில் இடைஞ்சல் கொடுக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்குவதற்கு இடம் கொடுக்காமல், எவ்வளவு விரைவிலே இது சம்பந்தமாக பெர்மனென்ட் டேக்-ஓவருக்கு இடம் கொடுக்கக்கூடிய முறையில் உள்ள ஒரு சட்டத்தை உருவாக்க முடியுமோ, அந்த முறையில் உள்ள நடவடிக்கைகளை இந்த அரசு விரைவிலே அதிவேகமாக எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த நேரத்திலே நான் இன்னொன்றையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த அறக்கட்டளை அரசினுடைய நிர்வாகத்திற்கு வந்ததற்குப் பிறகு, ஊழியர்களைப் பொறுத்தவரையிலும் சில விஷயங்கள் செய்யப்பட்டு இருக்கின்றன என்று அரசு தரப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. இது சம்பந்தமாக நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். அதாவது சமீபத்திலே கல்லூரி ஆசிரியர்கள் அவர்களுடைய உரிமைக்காக வேண்டி ஒரு வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அந்தப் போராட்டம் முடிந்த பிறகு, மந்திரி அரசினுடைய தலையீட்டின் பிறகு, மந்திரி அரசினுடைய பிரதிநிதிகளும் இருந்தது, யுனிவர்சிட்டி கிரான்ட்ஸ் கமிஷனுடைய பிரதிநிதிகளும் இருந்தது. அதற்கு ஒரு



1987 நவம்பர் 17] [திரு. ஜெ. ஹேமச்சந்திரன்]

முடிவு ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. ஆனால் அதிலே உள்ள ஷரத்துக்களை இன்றைக்கு இந்த அரசு அமல்படுத்துவதற்கு மறுக்கிறது என்ற ஒரு எண்ணம் கல்லூரி ஆசிரியர்களுடைய மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. எனவே இதை மாற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

* திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற பச்சையப்பா அறக் கட்டளைச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான இரண்டு சட்ட முன்வடிவுகளையும் நான் முதலிலே வரவேற்று ஆளுகின்ற பொறுப் பிலேயிருக்கிற கட்சியின் சார்பில் பேசிய மாண்புமிகு உறுப்பி னர்கள் திருவாளர்கள் சமரசம், சின்னராசு ஆகியவர்களுடைய கருத்துக்களோடு என்னுடைய கருத்துக்கள் ஒன்றிரண்டையும் இணைத்து என்னுடைய பேச்சை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்பு மிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்போது, உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை இங்கே சுட்டிக்காட்டி, இதை மேலும் அரசாங்கம் எடுத்துக்கொள்வது முறைதானா, கால நீட்டிப்பு அவசியம்தானா என்றெல்லாம் கேட்டார்கள்.

(மாலை 4-40)

உயர்நீதிமன்ற நீதிபதிகூட பதவி உயர்வு பெற்று வேறு மாநிலங் களுக்கு மாற்றப்படுவதுபோல் அவர்களால் வழங்கப்பட்ட தீர்ப்பு களும் மேல் முறையீட்டின் காரணமாக திருத்தப்படலாம், தீர்ப்புகள் திருத்தப்படலாம் என்று அவருடைய பாணியிலேயே நான் அவருக்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். ஒரே ஒரு கருத்தை அவருக்கு நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அந்த நீதிபதியின் தீர்ப்பில் கூட அரசாங்கம் நியமித்த இந்த பொறுப்புக் குழுவின் மீது, நிர்வாகக் குழுவின் மீது எந்தவகை யான மாறுபட்ட கருத்தையும் 'அட்வர்ஸ் ரிமார்க்ஸ்'ஸையும் அந்த நீதிபதி கொடுக்கவில்லை என்பதை அவருடைய மேலான கவனத் திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆனந்தகிருஷ்ணா அவர்கள் பேசுகிறபோது பச்சையப்பன் போன்ற தர்ம சிந்தனை யாளர்கள் இப்படிப்பட்ட தர்ம காரியத்தைச் செய்கிறபோது

[திரு. செ. செம்மலை] [1987 நவம்பர் 17

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இதை நிர்வகிக்க வேண்டும் என்று
அவர்கள் விரும்பி இருக்க மாட்டார்கள் என்று அவர்கள் சொன்
னார்கள். நான் அவருக்குப் பதிலாக சொல்ல விரும்புகிறேன்,
ஆனால் அதே சமயத்தில் இந்த டிரஸ்ட்டில் இருக்கிற உறுப்பி
னர்கள் இப்படிப்பட்ட தவறுகளைத் தொடர்ந்து செய்துகொண்டு
இருக்கவேண்டும் என்று அந்த தர்ம சிந்தனையாளர் அவர்கள்
நிச்சயமாக விரும்பி இருக்க மாட்டார்கள். நல்ல முறையில்
இந்தச் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும், அந்தச் சொத்
துக்களின் மூலமாகப் பல தர்ம காரியங்கள் நிறைவேற்றப்பட
வேண்டும் என்றுதான் அந்த தர்ம சிந்தனையாளர்கள் எண்ணி
இருப்பார்கள். அந்த எண்ணம் நிறைவேற வேண்டும் என்று அர
சாங்கம் இந்த அவசர நடவடிக்கையை எடுத்து இருக்கிறது
என்பதை நான் அவருக்குச் சுட்டிககாட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இன்
னொரு கருத்தைச் சொன்னார்கள். நீங்கள் போட்டிருக்கிற
அதிகாரிகள் அதே தவறைச் செய்ய மாட்டார்களா?
என்ன உத்தரவாதம் இருக்கிறது என்று கேட்டார்கள். அதற்கு
தான் நான் சொன்னேன், அந்த தீர்ப்பு சொன்ன நீதிபதிகூட
அந்தக் குழுவின் மீது எந்தவிதமான 'அட்வர்ஸ் ரிமார்க்கை'யும்
சொல்லவில்லை. அதைத்தான் நான் வலியுறுத்திச் சொல்ல
வேண்டும் என்று கருதுகிறேன்.

இதிலேகூட ஒரு கருத்தைச் சொல்லுவது பொருத்தமாக
இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஒரு வீட்டை வாடகைக்கு
விடுகிறோம். குடியிருப்பவர் அந்த வீட்டை பாழ்படுத்தியிருக்
கிறார் என்று சொன்னால் அந்த வீட்டுச் சொந்தக்காரர் என்ன
செய்வார்? அந்த வீட்டில் குடியிருக்கிற அந்த வாடகைதாரரை
வெளியேற்றிவிட்டு வீட்டை ரிப்பேர் செய்து மீண்டும் புதிய
வருக்கு அந்த வீட்டை வாடகைக்கு விடுவார். இதுதான் நடை
முறையில் இருக்கிற முறை. அதைத்தான் இன்றைக்கு இந்த
அரசும் செய்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே நிர்வாகப்
பொறுப்பில் இருந்த அந்த பொறுப்பற்றவர்கள் செய்த தவறைக்
களைந்து, அதைச் சீர் செய்து, சரி செய்து இன்றைக்கு அரசு
ஒரு நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்து இருக்கிறது.



1987 நவம்பர் 17] [திரு. செ. செம்மலை]

கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கூட சொன்னார்கள், ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு தேவையில்லை பர்மனென்ட் டேக் ஓவர் என்று சொன்னார்கள். அந்த அளவுக்குக்கூட அரசாங்கம் போக வில்லை. ஒரு ஆண்டு கால அவகாசம் கேட்டு இருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன், ஒரு ஆண்டு என்று சொல்லி அடுத்த ஆண்டு ஒரு சட்டத் திருத்தத்தை கொண்டு வந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுக்கு இன்னொரு முறை பேச வாய்ப்பை தயவுசெய்து அளிக்காதீர்கள். இரண்டு ஆண்டோ, மூன்று ஆண்டோ எப்போது முடியுமோ 2 ஆண்டு, 3 ஆண்டு என்றுகூட நீங்கள் நீட்டித்துக்கொள்ளுங்கள். அந்த அளவுக்கு அவகாசம் எடுத்துக் கொள்ளுங்கள். நமக்கு அவசரம்கூடத் தேவையில்லை. நிதானமாக காரியங்களை செய்யலாம் என்று நான் கூறிக்கொள்ளுகிறேன்.

நான் இன்னொரு கருத்தை வலியுறுத்துகிறேன். ஏதோ நம்மு டைய அரசாங்கம் நியமித்த இந்த நிர்வாகக் குழுதான் தவறு செய்துவிட்டது என்று பேசுகிறார்கள். ஆனால் 1980 ஆம் ஆண்டு எப்ரல் திங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்த நிர்வாகக் குழு அன்றைக்கு பொறுப்பில் இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருக்கிற மரியாதைக்குரிய திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் அன்றைய தினம் ஆளுநர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் வைத்து இருக்கிறார்கள். இந்த போர்டை 'ரீ-கான்ஸ்ட்டிட்யூட்' செய்ய வேண்டும் என்று சொல்லி யிருக்கிறார்கள். அவரே சொல்லியிருக்கிறார்.

"It will take a number of years to repair the damage caused by the Board of Trustees" என்று சொல்லுகிறார். அப்படி என்றால் என்ன அர்த்தம்? இதைச் சரி செய்ய 1 ஆண்டு காலம் போதாது என்று அவரே கவர்னருக்கு மனு கொடுத்து அது சரி செய்யப்படவேண்டும். எனவே அந்தப் போர்டை நீங்கள் 'ரீ-கான்ஸ்ட்டிட்யூட்' செய்யுங்கள் என்று அவரே அன்றைக்கு சொல்லியிருக்கிறார் அதையும் இந்த நோக்கில் நான் வலியுறுத் திக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. செ. செம்மலை] [1987 நவம்பர் 17

இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். உயர்நீதிமன்றம் போட்ட ஸ்கீமில் நீங்கள் ஏன் குறுக்கிட்டீர்கள், 1909 ஆம் ஆண்டில் அந்த ஸ்கீமில் மாற்றம் செய்ததால்தான் இந்தத் தீர்ப்பு வந்தது என்று எல்லாம் சொன்னார்கள். அவருக்கு நான் என்னுடைய பதிலாகச் சொல்லுகிறேன். அந்தத் தீர்ப்பு திருத்தப்படவேண்டும் என்று சொன்னால், அதில் தலையிட வேண்டும் என்று சொன்னால் அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை. மீண்டும் அதிலே மாற்றம் செய்யவேண்டும் என்று சொன்னால் உயர்நீதிமன்றம் தான் மாற்றம் செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் அதே உயர்நீதிமன்றம் இந்து சமய அறநிலையத் துறை சட்டத்திலே இப்படிப்பட்ட ஒரு ஸ்கீமை அறிவித்திருக்கிறது. அந்த ஸ்கீமில் ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமென்று சொன்னால், துணை ஆணையர், டி. சி. செய்யலாம் என்று ஒரு வழிவகை செய்திருக்கிறது. எனவே ஹைக்கோர்ட் போட்ட ஸ்கீமை ஹைக்கோர்ட் தான் மாற்றவேண்டுமென்று சொல்கிற வாதம் நிச்சயமாகப் பொருந்தாது என்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட திருத்தங்களை—இன்னும் சொல்லப் போனால், அந்தத் தீர்ப்பிலேகூட, அறக் கட்டளைகளை அரசு ஏற்புச் சட்டம் 11/81-ல் கூட அவர் தீர்ப்பு எப்படி சொல்லியிருக்கிறார்? இந்த பச்சையப்பா அறக்கட்டளையைப் பொறுத்தவரையில், நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்டம், செங்கல்வராய நாயக்கருடைய பொது அறக் கட்டளைக்கு பொருந்தாது என்றுதான் சொல்லியிருக்கிறார்களே தவிர, வேறு ஒன்று மில்லை. எனவே அப்படிப்பட்ட ஒரு நிலைமையில் இந்தத் தீர்ப்பினுடைய அடிப்படையில், சில மாற்றங்களைச் செய்து, அந்த சீர்கெட்ட நிர்வாகத்தைச் சீர்செய்து, அந்த நிர்வாகக் குழுவைப் புதியதாக அமைத்து, அதை ஒப்படைப்பதற்குத்தான் இந்தக் கால அவகாசத்தை கேட்டிருக்கிறார்கள் அமைச்சரவர்கள். அந்த அடிப்படையில் இந்த 2 சட்ட முன்வடிவுகளை நான் நிச்சயமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் மாண்புமிகு அமைச்சரவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம் இந்தத் திருத்தத்தை ஒரு ஆண்டு என்று அல்ல, இரண்டு ஆண்டுகால அவகாசம் எடுத்துக் கூட, அந்தத் தீர்ப்பினுடைய அடிப்படையில் என்னென்ன மாற்றங்களைச் செய்யவேண்டுமோ அதைப்பற்றிக் கவனிக்க வேண்டும். இதிலே



1987 நவம்பர் 17] [திரு. செ. செம்மலை]

கூட சொல்லப்பட்டிருக்கிறது. 'மாடிஃபைடு ஸ்கீம்' கொடுத்து இருக்கிறோம் என்று, அந்த ஸ்கீம் அப்ரூவ் செய்யப்பட்ட பிறகு, நிர்வாகக் குழுவிற்கு ஒப்படைப்போம் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறீர்கள்—அதை நிதானமாக, அவசரப்படாமல் 2 ஆண்டுகால அவகாசம் கூட எடுத்துக்கொண்டு அதைச் செய்ய லாம் என்று சொல்லி, இதிலே தவறு இல்லை என்று சொல்லி, இங்கே பேசிய உறுப்பினர்களுக்கு நான் சொல்வேன். அரசாங் கத்தால் அமைக்கப்பட்ட அந்தக் குழு எந்த அளவிற்கு இந்த அறக்கட்டளைகளை நிர்வகித்து வருகிறது என்பதை மட்டும் தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் சொன்னதைப் போல், அன்றைக்கு ரூ. 25 இலட்சம்தான் வருமானம் வந்தது என்ற அந்த நிலைமையை மாற்றி, இன்றைக்கு ரூ. 45 இலட்சம் என்ற அளவிற்கு உயர்ந்து, ஒரு கட்டிடத்திற்கு மட்டும் ரூ. 20 இலட்சம் வருமானம் வருகிற ஒரு வாய்ப்பை உருவாக்கி இருக் கிறார்கள். அதைத்தான் அந்த தர்மவான்கள் எண்ணினார்கள். இந்தச் சொத்து பாதுகாக்கப்பட்டு, வருமானம் உயர்த்தப்பட்டு, அந்த வருமானத்தின் மூலம் தர்ம காரியங்கள், அதிலும் நல்ல காரியங்கள் நடக்கவேண்டுமென்று சொன்னார்கள். மருத்துவ மனைகள் கட்டப்படவேண்டும். இன்னும் சொல்லப்போனால், மருத்துவமனைகள் மட்டுமல்ல, அநாதை இல்லங்கள் எல்லாம் கட்டப்படவேண்டுமென்று அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தத் தர்மவான்களுடைய கனவு நினைவாக வேண்டுமென்று சொன்னால், அவர்களுடைய ஆத்மா சாந்தி யடையவேண்டுமென்று சொன்னால், அரசாங்கம் எடுத்திருக் கின்ற முடிவு நிச்சயமாக வரவேற்கத்தக்க ஒன்றாகும் என்று சொல்லி, இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளையும் வரவேற்று, அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த நோக்கத்தோடு, இந்தச் சட்டமுன்வடிவுகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்பதைப் பேசிய பெரும்பான்மையான மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்து இதனை வரவேற்றுப் பேசியமைக்காக அரசின் சார்பிலே நான் முதற்கண் என்னுடைய நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [1987 நவம்பர் 17

கடந்த காலத்தில் உன்னதமான நோக்கோடு அமைக்கப்பட்ட அறக்கட்டளைகள் செயலிழந்த நிலையில் இருந்த காரணத்தால், அந்த நிலைக்கு இழுத்துச் செல்லப்பட்ட காரணத்தால், இந்த அறக் கட்டளைகளை அரசு நிர்வாகக் குழுவின் பொறுப்பிற்குக் கொண்டுவரக் கூடிய சூழல் உருவானது பற்றி ஏற்கனவே தெளிவாக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கனவே எடுத்தியம்பியதைப் போல் பல்கலைக் கழகத்திற்குக் கொடுக்கவேண்டிய பிணையத் தொகையைக் கூட கொடுக்காத அளவிற்கு முறைகேடுகளும், ஒழுங்கீனங்களும் கடந்த காலத்தில் நிர்வாகக் குழுவின் பொறுப்பிலேயுள்ள காலத்தில் இருந்த காரணத்தினால், பல்கலைக் கழகத்திற்குடைய மானியம்கூட பச்சையப்பன் அறக் கட்டளைக்குட்பட்ட கல்லூரிகளுக்குக் கிட்டாத ஒரு வேதனையான நிலை உருவாகியது. அந்த அளவிற்கு முறைகேடுகள், ஒழுங்கீனங்கள் அன்றிருந்த நிர்வாகக் குழுவால் மேற்கொள்ளப்பட்டது. இதுபோன்ற பல்வேறு குறைபாடுகளின் காரணமாகத்தான் பச்சையப்ப முதலியார் அவர்களும், அதைப் போலவே செங்கல்வராய நாயக்கர் அவர்களும், அதுபோன்ற பல அருள் உள்ளம் கொண்ட நல்லோர்களும் உருவாக்கிய அறக் கட்டளைகளுடைய எண்ணங்களை ஈடேற்ற செம்மைப்படுத்த, நிர்வாகக் குறைபாடுகளைச் சரிப்படுத்த, முறைகேடுகளையும், ஒழுங்கீனங்களையும் அறவே நீக்க அரசு நிர்வாகக் குழுவிற்கு வர வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது. எத்தகைய முறைகேடுகள் நடந்தன என்பன பற்றியெல்லாம் ஏற்கனவே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் சமரசம் அவர்களும், திரு. சின்னராசு அவர்களும், திரு. சொர்மலை அவர்களும் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்ற காரணத்தால் அதன் உள்ளே நான் செல்ல வேண்டியதில்லை என்று கருதுகிறேன். இந்தச் சட்டத்தை கொண்டு வருகின்றபோது சில சட்டப் பிரச்சினைகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது குறிப்பிட்டார்கள். அதற்கு நான் விளக்கத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 நவம்பர் 17] [திரு. சி. பொன்னையன்]

(மாலை 4-50)

பச்சையப்பன் அறக்கட்டளை ஆங்கு நடந்த முறைகேடுகள் காரணமாக அரசு நிர்வாகக் குழுவினுடைய பொறுப்பிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அதிர்ச்சியைத் தந்திருப்பதில் நான் ஆச்சரியப்படவில்லை அரசு ஆச்சரியப்படவில்லை. ஒருவேளை அந்த காலத்திலே அத்தகைய நிர்வாகக் குழுவிலே இடம் பெற்றிருந்த உறுப்பினர்களான மரியாதைக்குரிய என். வி. என். சோமு, என். வீராசாமி, முரசொலி மாறன் போன்றவர்கள் தற்போது இந்தக் குழுவில் இடம் பெறாத நிலை இருக்கிறது என்ற ஆதங்கத்தின் காரணமாக உணர்ச்சி வசப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசினாரோ என்று கூட அச்சப்படுகிறேன். எண்ணற்ற குறைபாடுகள். மிகக் குறைந்த வாடகைக்கு பாரீஸ் கார்னரிலே, ரட்டன் பஸாரிலே, அண்ணா சாலையிலே, பூந்தமல்லி ஹைரோடிலே மற்றும் சென்னை மாநகரத்தின் மிக முக்கிய கேந்திரப் பகுதிகளில் இருக்கின்ற பல கோடி ரூபாய் மதிப்புள்ள கட்டிடங்கள் எல்லாம், சில நூறு ரூபாய்களுக்கு வாடகைக்கு விடக்கூடிய ஒரு துர்பாக்கியமான நிலையை அன்று அந்த நிர்வாகத்தின் பொறுப்பிலே இருந்தவர்கள் உருவாக்கிய காரணத்தால், ஆண்டுக்கு ஆண்டு இழப்பு தொடர்ந்து ஏற்பட்டு, நட்டம் ஆண்டுக்கு ஆண்டு தொடர்ந்து ஏற்பட்டு, பல்கலைக் கழகம் அறப்பணி கல்விப் பணிக்காக பச்சையப்ப முதலியார், செங்கல்வராய நாயக்கர் போன்றவர்கள் எல்லாம் உருவாக்கிய அந்த அறக் கட்டளையினுடைய உன்னத நோக்கமான மேல் கல்வி நிலையைப் பொறுத்தவரைக்கும் அது ஈடேறாத முறைக்கு, பல்கலைக் கழகத்திற்குக் கட்ட வேண்டிய மானியத்தைக்கூட கட்டாத ஒரு கேவலமான நிலையை உருவாக்கி, எந்த அறப் பணியை, பச்சையப்ப முதலியார் அவர்கள் ஈடேற்ற வேண்டுமென்று விரும்பினாரோ, எந்த கல்வி அறப்பணியை. . . .
(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் முடித்தவுடன் சொல்லுங்கள். நினைத்தவுடன் நீங்கள் பதில் சொல்ல முடியாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** துணைத் தலைவர் அவர்களே, எந்தக் கல்வி அறப்பணியை ஈடேற்ற வேண்டுமென்று செங்கல்வராய நாயக்கர் அவர்கள் எண்ணினார்களோ, ஏனைய

[திரு. சி. பொன்னையன்] [1987 நவம்பர் 17

உறுப்பினர்கள் எல்லாம் எண்ணினார்களோ அந்த உன்னத நோக்கத்தை, நிறைவேற்றும் வகையில் பொன்மனச் செம்மல் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் "எங்கள் தங்கம்" படத்தை எடுத்து, நடித்துக் கொடுத்து, வாழ்வுக்கு வழி தந்தார். அது கோப்பிலே இருக்கின்ற உண்மை உங்களுக்குத் தெரியும். இப்படி உன்னத நோக்கோடு பச்சையப்ப முதலியாரால் 1909 ஆம் ஆண்டு ஒரு அறக்கட்டளை கொணரப்பட்டது. ஒரு நன்நோக்கோடு கோடிக்கணக்கான மதிப்புள்ள சொத்து சென்னை நகரத் திலே, பல்வேறு பகுதியிலே இருக்கின்ற பல எக்கர் நிலங்கள், கட்டிடங்கள், அந்த காலத்திலே கட்டப்பட்ட மாடி கட்டிடங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டன. அந்த உன்னதமான அறக்கட் டளையினுடைய எண்ணங்களை, அறப்பணி, கல்விப் பணிகளை ஈடேற்றுவதற்கு இவர்களைப் போன்றவர்கள்தான் அந்த அறக் கட்டளையினுடைய பொறுப்பாளராக வரவேண்டுமென்று ஒரு காலத்திலும், பச்சையப்ப முதலியாரோ, செங்கல்வராய நாயக் கரோ எண்ணியிருக்க மாட்டார்கள் என்பதை நாடு உணரும், அவை உணரும் என்று நான் நம்புகிறேன். அப்படி இந்த நிர்வாகம் தவறான முறைக்குச் சென்றபோது ஆட்சி இயந் திரத்தைப் பயன்படுத்தி, அதிகார பலத்தைப் பயன்படுத்தி, பல கோடி ரூபாய்க்குச் சொந்தமான பச்சையப்பன் அறக்கட்டளை, பிற அறக்கட்டளைக்குச் சொந்தமான சொத்துக்களுடைய லாபத்தை சுயநலத்தோடு ஒரு கும்பல், ஒரு குடும்பம் அனுபவிக்க வேண்டுமென்ற நோக்கோடு அரசு இயந்திரம் பயன்படுத்தப்பட்ட போதுதான் அன்று ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் பச்சை யப்பன் அறக்கட்டளைக்கே, அதைப்போலவே பிற அறக் கட்டளைக்கு பொறுப்பாளர்களாக வரக்கூடிய ஒரு விபரீதமான நிலை. பச்சையப்ப முதலியார், செங்கல்வராய நாயக்கர் போன்றவர்கள் எல்லாம் எண்ணிய எண்ணக் கோட்பாடுகள் ஈடேற முடியாத வேதனையான நிலை உருவானது.

அதன் காரணமாகத்தான், இந்த அறக்கட்டளைகளை அரசுக் குழு எடுக்கவேண்டிய ஒரு சூழல் உருவாகி; அதை அரசு நிர்வாகக் குழுவினுடைய பொறுப்பிற்கு நாம் கொண்டு வந்தோம். ஆனால் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து நடைமுறைக் குக் கொண்டு வரப்பட்டு பச்சையப்பன் அறக்கட்டளையினுடைய டேக்-ஓவர்-நிர்வாகப் பொறுப்பை ஏற்கின்ற சட்டத்தைப் பொறுத்



1987 நவம்பர் 17] [திரு. சி. பொன்னையன்]

தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சட்டச் செயலர் அதற்குப் பொறுப்பு என்று கூறுகிறார். அவர் சற்று பொறுப்போடு உணர்ந்து பேசவேண்டும் என்பதற்காக இதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு— திரு. அ. ரகுமான்கான் எழுந்து நின்றார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் பதில் சொன்ன பிறகு உங்களுக்கு அனுமதி தருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தவறான தகவலைச் சொல்கிறபோது அதற்குத் தக்க பதில் வருகிறபோது அதைத் தாங்குகிற உளச் சக்தியும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான் கான் அவர்களுக்கு இப்பதுதான் அரசியல் நாகரீகம், அரசியல் பண்பு. எனவே தயவுசெய்து, விளக்கம் சொல்கிறபோது பொறுமை இழக்காமல் அமைதியான முறையில் விளக்கத்தைக் கேட்க நான் பணிவோடு வேண்டுகிறேன்.

எந்த ஒரு துறையாக இருந்தாலும்—மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் அரசு நிர்வாகம் என்ன என்பது பற்றியும் தெரிந்து கொள்வது அவருக்கும் நன்றாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன்.

எந்த ஒரு சட்டத்திற்கும் கொள்கையை வகுப்பது சட்டத் துறை அல்ல. காரணம், அந்தந்த இலாகா—அதாவது கல்வி இலாகா என்றால் கல்வித் துறை தான் கொள்கையை வகுத்து, கொள்கை முடிவு எடுக்கப்பட்ட பிறகு அந்தக் கொள்கைக்கு வடிவு கொடுக்கவேண்டும் என்று பணிக்கப்படுவதுதான் அந்தத் துறை, சட்டத்துறை. நீங்கள் கொள்கை முடிவைத் தவறாக எடுத்திருக்கிறீர்கள், இப்படிக் கொள்கை முடிவை மாற்றி எடுங்கள் என்று சட்டத்துறை செய்வதில்லை—இந்த மாநிலத்தில் அல்ல, எந்த ஒரு மாநிலத்திலும், கல்வித்துறையாக இருந்தாலும், பொதுப் பணித் துறையாக இருந்தாலும், வீட்டு வசதித் துறையாக இருந்தாலும், வருவாய்த் துறையாக இருந்தாலும் கொள்கை முடிவு எடுக்கின்ற துறை வேறு. சட்ட வடிவைத் தருகின்ற துறை வேறு. கொள்கை முடிவு என்று ஒன்று எடுக்கப் படுகிறபோது—அது சம்பந்தப்பட்ட துறை அமைச்சரும்,

[திரு. சி. பொன்னையன்] [1987 நவம்பர் 17

அமைச்சரவையும், முதலமைச்சரும் கலந்து கொள்கை முடிவு எடுத்துவிட்டு, பிறகு சட்ட வடிவைத் தரவேண்டும் என்று பணிக்கப்படுகிறபோது, சட்டத்துறை வருகிறது.

அந்தக் குறிப்பிட்ட சட்டத்துறைப் பொறுப்பினைக்கூட—இது ஏதோ தமிழகத்தில் மட்டும் இருப்பதல்ல; இந்தியத் துணைக் கண்டத்திலே ஒவ்வொரு மாநிலத்திலும், மத்திய அரசிலும் இருக்கிற யதார்த்தமான நிலை இதுதான். கொள்கை முடிவு எடுக்கின்ற துறை வேறு. எடுக்கப்பட்ட கொள்கைக்கு சட்ட அமைப்பை, வடிவைத் தரக்கூடிய பணி வேறு. கொள்கை மாற்றப்படுகிறபோது அதற்கேற்ற முறையில் மீண்டும் திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றன. இதுதான் நாட்டில் நடக்கின்ற யதார்த்தமான உண்மை நிலை.

ஆனால் பச்சையப்பன் அறக்கட்டளை அரசு நிர்வாகக் குழுவினுடைய பொறுப்பிற்கு வரவேண்டும் என்று அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்தபோது—மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இதைக் கவனிக்கவேண்டும் என்று கோருகிறேன்—1980 ஆம் ஆண்டு அரசினுடைய நிர்வாகக் குழுவினுடைய பொறுப்பிற்கு பச்சையப்பன் அறக்கட்டளை மட்டும் தான் வரவேண்டும் என்றுதான் கொள்கை முடிவு எடுக்கப்பட்டது. அதையொட்டித்தான், 1980 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்திருக்கிற 81-வது ஆண்டு சட்டத்தின்படி, பச்சையப்பன் அறக்கட்டளையினுடைய நிர்வாகத்தை நிர்வகிக்க குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு அன்று நடைமுறைக்கு வந்தது.

ஆனால், அந்தக் குழு பொறுப்பேற்ற பிறகு, பச்சையப்பன் அறக்கட்டளை சம்பந்தப்பட்ட நிர்வாகத்தை மட்டுமே கவனிப் பதற்காக அந்தக் குழு பொறுப்பினை ஏற்ற பிறகுதான் பச்சையப்பன் அறக்கட்டளையினுடைய முன்பிருந்த குழுவினுடைய பணிகள் என்ன என்பதை ஆயக்கூடிய வாய்ப்பு அரசினுடைய நிர்வாகக் குழுவிற்குக் கிடைத்தது. அப்படி ஆய்ந்தபோதுதான் பி.டி.லீ. செங்கல்வராய நாயக்கர் டிரஸ்ட் என்ன கூறுகிறது என்பதை ஆய்ந்து அதிலே அவர்கள் எழுதியிருக்கிறார்கள். 4—10—1870-ல் திரு. செங்கல்வராய நாயக்கர் அவர்கள்,



1987 நவம்பர் 17] [திரு. சி. பொன்னையன்]

"It is provided in the will, dated 4th October 1870 as follows: With regard to the properties that may remain after my death, all the Trustees who are administering the charities of the benevolent man, Maa. Raa. Sri Pachaiyappa Mudaliar should add to themselves four persons from among those who may be respectful and well-educated in the Vaniya caste, people who are may caste people, and after departing his life; the aforesaid Trustees should take charge of all my properties and conduct the matters according to this Will . . . . "

என்று எழுதியிருக்கிறார்கள். இன்னும்கூட ஒரு படி அதிகமாகச் சென்று, அதற்குப் பிறகு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

under the Codicil, dated 30 4 1873 executed by Sir Chengalvaraya Naicker it is provided as follows: That in case the Pachaiyappa Mudaliar Trustees being unwilling to admit my own caste people, they should be expunged and Pachaiyappa Mudaliar Trustees themselves should look after the property . . .

என்று அவர்கள் ஒரு 'வில்'-லிலே எழுதி வைத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு மீண்டும் எழுதுகிறார்—அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்—எந்தப் பணிக்காக செங்கல்வராயர் அறக்கட்டளை,

That is a separate Trust, no doubt. But, as our Hon'ble Member Mr. Rahmankhan is well aware,

சட்டரீதியாக ஒரு 'வில்'-லை எழுதி வைத்து இந்தச் சொத்துக் களைப் பராமரிக்கக்கூடிய அதிகாரத்தையும் பச்சையப்பன் அறக்கட்டளையினுடைய நிர்வாகத்திற்கு அன்று அவர் எழுதி வைத்திருக்கிறார். அதிலே மீண்டும் எழுதுகிறார்.

(மாலை 5-00)

" . . . . Further, although I have made arrangements with regard to the schools with regard to the hospitals and with regard to the matter of the pension to be directed to be given to poor people, still, should the Trustees wish to conduct any other and more important Charities than this charity they are at liberty to do so. Further, should the fund be insufficient to conduct these four charities, viz. the Orphan Schools, the Industrial School, the Charity hospital and Pensions to poor people, simultaneously they should be conducted accordingly by reducing the list by one or two and conduct other charities. . . ."

என்று தெளிவுபடுத்தியிருக்கிறார். அதையொட்டித்தான்,

[திரு. சி. பொன்னையன்] [1987 நவம்பர் 17

பச்சையப்பன் அறக்கட்டளைக்கு அரசால் நியமிக்கப்பட்ட குழு, 1980 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் தேதியிலிருந்து பொறுப்புக்கு வந்து, அந்த 'பில்'-படி அவர்களுக்குக் கிடைத்திருக்கிற அதிகாரத்தை வைத்து, இந்தச் செங்கல்வராயன் டிரஸ்ட் போன்றவற்றுக்கு, எங்கெங்கு இந்த அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதோ அவற்றை அந்த 'பில்'-படி நடத்தக்கூடிய பொறுப்பை எடுத்தார்கள். அதற்குத்தான், சட்டரீதியான ஒரு நிலையைக் கொண்டுவரவேண்டுமென்ற நோக்கோடு, பிறகு கோர்ட்டுக்குச் சென்றார்கள்.

செங்கல்வராயன் அறக்கட்டளையை பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வகிக்கக்கூடிய அதிகாரமே இல்லையென்று நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அதைப்பற்றி நான் அதிகமாக, விவரமாகப் பேச விரும்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. செம்மலை அவர்களும், திரு. சின்னராசு அவர்களும் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நான் இதுபற்றித் தெளிவாகச் சொல்ல விரும்புவது, செங்கல்வராயன் அறக்கட்டளையைப் பொறுத்தவரைக்கும், பச்சையப்பன் அறக்கட்டளையினுடைய நிர்வாகக் குழுவின்கீழ் இந்த 'பில்'-லினுடைய அடிப்படையில் தான் வந்திருக்கிறது; சட்டத்தின் அடிப்படையில் அல்ல. அதற்குப்பிறகு, அப்படி செங்கல்வராயன் அறக்கட்டளையில் இருக்கிற பணத்தை, சொத்தை அல்லது அதனுடைய பகுதிகளையெல்லாம் பொதுவாகப் போட்டு செய்யக்கூடாது என்ற ஒரு தீர்ப்பை உயர்நீதி மன்றம் வழங்கியபிறகு, உச்சநீதி மன்றம் அதற்குத் தடை ஆணை வழங்கி இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். அதே நேரத்திலே இன்னும் ஒன்றைச் சொன்னார்கள், 1909 ஆம் ஆண்டில் "Advice by the Supreme Court being in vogue" எப்படி இதை மாற்றக்கூடிய அதிகாரம் அரசுக்கு கிடைத்தது, அது சரியா என்ற ஒரு வினாவை எழுப்பினார்கள். அதற்கு நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் தேதியிலே நடைமுறைக்கு வந்த சட்டத்திலேயே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் எடுத்தியம்பியதுபோல், அதிலே மிகத் தெளிவாகக் காட்டப்படுகிறது. 7-வது பிரிவை நீங்கள் எடுத்துப் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**Over-riding effect of the Act is provided in Section 7.**



1987 நவம்பர் 17] [திரு. சி. பொன்னையன்]

சிவில் புரொசிஜர் கோட் 92 ஆவது செக்ஷன் பிரகாரம், "The provisions of the Act shall have effect notwith sianding anything contained in Section 92 of the Code of Civil Procedure."

அந்த சிவில் புரொசிஜர் கோடினுடைய 92-ஆவது பிரிவையொட்டி உயர்நீதிமன்றம் எவால்வ் செய்யக்கூடிய அந்த ஸ்கீமைப் பொறுத்தவரைக்கும், அதற்கே ஓவர்-ரைடிங் எபக்ட் இந்தச் சட்டத்திற்கு வேண்டுமென்ற முறையிலேதான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டு, இந்தச் சட்டத்திலே அந்தப் பிரிவு சேர்க்கப்பட்டு, . . the provisions of the Act shall have effect notwithstanding anything inconsistant therewith' என்று கொண்டு வந்து,

"Section 92 of the Code of Civil Procedure of 1908 or any other law for the time being in force or the Pachaiyappa's Trust Scheme or any other scheme for the time being in force"

என்று தெளிவாக்கப்பட்டு இருக்கிறது. இந்தப் பிரிவினை உயர்நீதிமன்றம், ஒரு ஸ்கீமை கொண்டு வந்தபிறகு, ஹைகோர்ட் தான் அந்த ஸ்கீமை மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கூறியதை உயர்நீதி மன்றமும் ஒரு கட்டத்திலே கூறியது. அது தவறு என்ற நிலையை எடுத்து, அது சட்ட விதிகளுக்கு உட்பட்டது அல்ல. செக்ஷன் 7 என்று இருப்பதை உயர்நீதிமன்றம் கவனிக்கவில்லை. அதற்குத் தக்க விளக்கத்தைத் தரவேண்டுமென்பதற்காக அரசு வாய்ப்பு வேண்டுமென்று கேட்டது. அரசுக்கு வாய்ப்புகூட தரப்படாத நிலையிலே அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்ட காரணத்தால்தான் நாங்கள் மேல் முறையீட்டுக்குச் சென்று, மேல் முறையீட்டிலே இந்த 7-வது பிரிவு விளக்கமாகச் சுட்டிக் காட்டப்பட்டு அட்வகேட் ஜெனரல் அவர்களால் வாதிடப்பட்டு அதற்குத் தடையாணை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போலவே, இன்னும் ஒரு வகையில் அரசுக்கு இருக்கின்ற அதிகாரத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். செக்ஷன் 7 ஆப் தி ஆக்ட் 1981-ன்படி மட்டுமல்ல, அரசியல் சட்டத்தின் ஆர்ட்டிகிள் 31-ஏ பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாக அறிவார்கள் என்று நான் கருதுகிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [1987 நவம்பர் 17

அதாவது செம்மையான முறையில் ஒரு நிர்வாகம் இல்லை என்று வருகிறபோது—அங்கே சீர்கேடுகள் இருக்கிறபோது—அதைத் தற்காலிகமாக for a temporary period எடுக்கலாம் என்று அதிலே தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

Article 31-A of the Constitution reads as follows :

"31-A : Saving of laws providing for acquisition of estates, etc

(1) Notwithstanding anything contained in article 13 no law providing for

(b) the taking over of the management of any property by the State for a limited period either in the public interest or in order to secure the proper management of the property shall be deemed to be void on the ground that it is inconsistent with, or takes away or abridges any of the rights conferred by Article 1, 4, 19 or Article 31

என்று தெளிவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த டேக்-ஓவரைப் பொறுத்தவரையில் அரசியல் சட்டத்தின் ஆர்ட்டிகிள் 31-ஏ ரெட் வித் செக்ஷன் 7 ஆப் தி 1981 ஆக்ட் என்ற இரண்டின் அடிப்படையில் தற்போது அரசு மேற்கொண்டிருக்கிற நடவடிக்கை சட்டப்படியாகச் செல்லுபடியாகக்கூடிய நடவடிக்கை என்று உயர்நீதிமன்றத்தின் மேல்முறையீட்டிலும், உச்ச நீதி மன்றத்திலும் எடுத்து இயம்பிய பிறகுதான் இந்த இரண்டு மன்றங்களும் அரசின் இந்த வாதம் சரியான வாதம் என்று ஏற்று அரசின் சார்பில் தற்போது தடை ஆணை வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுக்குத் தெளிவுபடுத்த நான் விரும்புகிறேன்.

அடுத்து அவர் இன்னொரு கருத்தையும் சொன்னார். இரண்டு வருஷத்திற்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்று மத்திய அரசு ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறதே அதை ஏன் செய்யவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கேட்டார்கள். அது ஒரு தவறான தகவல். இரண்டு வருஷத்திற்குள் தேர்தலை நடத்துங்கள் என்று மத்திய அரசு எந்தக் காலத்திலும் எங்களுக்குத் தாக்கீது அனுப்பவில்லை. ஒரே ஒரு முறை

"... the temporary taking over of he management of the affairs of the Pachaivappa's Trust, when sent for the President's assent it was indicated ...."

இந்தத் தேர்தல் முடிந்த பிறகு அடுத்த முறை எப்போது தேர்தல் என்ற வினா எழுந்தபோது அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.



1987 நவம்பர் 17] [திரு. சி. பொன்னையன்]

மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்—உங்கள் இயக்கத்தைச் சார்ந்தவர்—திரு. வீராசாமி அவர்கள் ஆளுநரிடம் போய் மனு தந்து கேட்டபோது

" . .the reparis, he damages raused to the property of the Pachaiyappa's Trust are so grave that it takes more time for setting right the entire thing . . ."

என்று தெளிவுபடுத்தியிருக்கிற நிலையில் அதிலே பல்வேறு பிரச்சினைகள், கோளாறுகள் இருந்த காரணத்தால்தான் அந்த அறக்கட்டளை பல நட்டத்தையும் தாங்க வேண்டிய நிலைமை இருந்தது. ஒரு ஆண்டுக்கு ஒரு லட்சம் அல்ல, இரண்டு லட்சம் அல்ல, ரூ. 10 இலட்சம் வருமானம் வருகிற இடங்களையெல்லாம் ஆயிரம் ரூபாய்க்கும், ஆயிரத்து ஐநூறு ரூபாய்க்கும், 2,000 ரூபாய்க்கும் விட்டு இருந்த காரணத்தால் நீதிமன்றத்திற்குச் சென்று பிறகு நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலும் செட்டில்மெண்டின் அடிப்படையிலும் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இப்படி கடந்த எட்டு ஆண்டுகளாக நிர்வாகத்தைச் செம்மையான முறையில், நேர்மையான முறையில் அரசு அதிகாரிகளாக இருக்கிற மரியாதைக்குரிய திரு. கருப்பண்ணன் அவர்களும், திரு. காசிராஜன் அவர்களும் மேலும் மூன்று அங்கத்தினர்களும் நடத்திய காரணத்தால்தான் பன்னெடுங்காலமாக ஏற்பட்டு வந்த இழப்புகள் தடுத்து நிறுத்தப்பட்டன.

திரு. வீராசாமி அவர்கள் ஆளுநர் இடத்தில் மனுகொடுத்து அவரால் சுட்டிக் காட்டப்பட்ட பல்வேறு இழப்புகளைக் களைவதற்காக ஒவ்வொரு ஆண்டும் நடவடிக்கை எடுத்து, இன்றைக்கு இந்த நிலைமையை எய்தி இருக்கிறோம் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசும் இதை ஏற்றுக்கொண்டுதான் ஒவ்வொரு முறையும் இதற்கு அசென்ட் தந்திருக்கிறது என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். இப்படி ஆண்டுக்காண்டு நீட்டிப்பு என்று கொண்டு வந்து பலகோடி ரூபாய் மதிப்புள்ள பச்சையப்பன் அறக்கட்டளைக்குச் சொந்தமான சொத்துக்களை நிர்வகிப்பதற்கான அரசின் குழுவிற்கு

[திரு. சி. பொன்னையன்] [1987 நவம்பர் 17

நீட்டிப்புத் தருவதைவிட அரசே நிரந்தரமாக அந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டு அந்த உன்னதமான அருட்செல்வர்கள் எல்லாம் எண்ணிய எண்ணக் கோட்பாடுகளை ஈடேற்றக்கூடிய நடவடிக்கையை எடுக்க அரசு முன்வர வேண்டும் என்று வலியுறுத்திக் கூறினார்கள்.

(மாலை 5-10)

நல்ல ஆலோசனையைச் சொல்லியிருக்கிறார். இது ஒரு கொள்கை முடிவு. கட்டாயம் அரசு இதற்கு முடிவெடுக்கும். சட்ட ரீதியாக இருக்கின்ற நிலை—மைய அரசு இதற்கு சட்டத்தைக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. These are all properties belonging to the public trust எனவே மாநில அரசு மைய அரசுக்கு இதை எடுத்துச் சென்று மைய அரசு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரலாம். அப்படிக் கொண்டு வர வகை இருக்கிறது. பொதுமக்களின் நலன் கருதி, அருட்செல்வர் பச்சையப்பா முதலியார், செங்கல்வராய நாயக்கர் ஆகியவர்களின் எண்ணக் கோட்பாடுகள் எல்லாம் மக்கள் நலம் கருதி ஈடேற வேண்டும், அந்த நல்ல எண்ணங்கள் நடைமுறைக்கு வர வேண்டும் என்ற நோக்கத்தோடு மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் கோரிக்கையை அரசு கட்டாயம் ஏற்று பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை இங்கு நான் அரசின் சார்பிலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் உயர்திரு. ஹேமச்சந்திரன் பேசும்போது இடையே ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். கல்லூரி ஆசிரியர்களுக்காக மைய அரசிலே, யூ.ஜி.சி.-யிலே எடுக்கப்பட்டுள்ள முடிவுக்கு மாநில அரசு இணக்கம் தரவில்லையே என்ற எண்ணம் இருப்பதாகச் சொன்னார்கள். அது தவறான எண்ணம். இந்தியத் துணைக் கண்டத்திலே முதன் முறையாக, முதற் கட்டமாக யூ.ஜி.சி. அறிவித்த சம்பள விகிதத்தைத் தருவோம் என்று அறிவித்த ஒரே அரசு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அரசுதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இதுகாறும் இந்தியத் துணைக் கண்டத்திலேயே காங்கிரஸ் ஆள்கிற மாநிலங்களில் எந்த ஒரு மாநிலமும் புதிய சம்பள விகிதத்தை நடைமுறைப்படுத்துவோம் என்று வெளிப்படையாகச் சொல்லவில்லை, மறைமுகமாகவும்



1987 நவம்பர் 17] [திரு. சி. பொன்னையன்]

நடவடிக்கை எடுக்கவில்லை. நாம் மட்டும் சொல்லியிருக்கிறோம். மேற்கு வங்கம், திரிபுரா, கேரளம் ஆகிய அரசுகள்கூட இந்த திட்டத்தை மாநில அரசு செலவிலேயே ஈடேற்றுவோம் என்று வரவில்லை, சொல்லவில்லை.

இதிலே முக்கியமானதொரு பிரச்சினை இருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவிற்கும் இதற்கும் நேரிடை சம்பந்தம் இல்லையென்றாலும், பச்சையப்பன் அறக்கட்டளை, செங்கல்வராயன் அறக்கட்டளை ஆகியவற்றுக்கு உட்பட்டு பல பள்ளிகள், கல்லூரிகள் இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் இந்தப் பிரச்சினையை எழுப்பினார் என்று கருதுகிறேன். யூ.ஜி.சி. ஸ்கேல்சைப் பொறுத்தவரையிலும் மைய அரசின் அரசு ஊழியர்களுக்குச் சமமாக சம்பள விகிதத்தை கல்லூரி ஆசிரியர்களுக்குத் தர வேண்டும் என்ற முறையிலே அந்தச் சம்பள விகிதத்தை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். மைய அரசு இன்னுமொரு கோட்பாட்டைச் சொல்லுகிறது. ரிசர்ச் அண்டு டெவலப்மெண்ட் என்று சொல்லக்கூடிய ஆய்வுப் பணியில் ஆசிரியர்கள் அதிக நேரம் செலவழிக்க வேண்டும் என்றும் அப்படிப்பட்ட உடன்பாட்டோடு இந்த அதிகப்படியான சம்பளத்தைத் தர வேண்டும் என்றும் சொல்லுகிறது. மைய அரசு சம்பள விகிதத்திற்குச் சமமாக மாநிலங்களில் பணியாற்றுகிற கல்லூரி ஆசிரியர்களுக்கு அந்த அளவிற்கு உயர்ந்த சம்பளம் தர வேண்டுமென்று சொல்லுவதற்குக் காரணம், நாட்டினுடைய அறிவியல், விஞ்ஞான தொழில்நுட்ப மேம்பாட்டிற்குத் தேவையான ஆராய்ச்சி அணுகுமுறைகளில் அவர்களை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும், ஊக்கப்படுத்த வேண்டும், உற்சாகப்படுத்த வேண்டும் என்ற அடிப்படைதான். இந்த அதிகப்படியான சம்பளத்தைத் தரலாம் என்ற தாக்கீதை மாநிலங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். தமிழக அரசு அதை ஒத்துக்கொண்டது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு ஒத்துக்கொண்டு அந்த சம்பள விகிதத்தை நடைமுறைக்குக் கொண்டு வரலாம் என்று சொன்னோம். தமிழக அரசு அறிவித்தபோதிலும், அகில இந்திய அளவிலே போராட்டக் குழு எடுத்த முடிவு—மற்ற மாநிலங்களில் உள்ள நிலைமைகளையொட்டி போராட்டம் பல நாட்கள் தொடர்ந்த காரணத்தால் மைய அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி ஏற்கெனவே ஒத்துக்கொண்ட முடிவுகளில் மாற்றத்தை ஏற்படுத்தி அந்த மாற்றத்தின் அடிப்படையில் பிரச்சினைகளை

[திரு. சி. பொன்னையன்] [1987 நவம்பர் 17

அணுக வேண்டுமென்று மைய அரசு மாநில அரசுகளுக்கு தாக்கீது தந்திருக்கிறது. மாநில அரசுக்கு அந்த தாக்கீது வரப்பெற்றிருக்கிறது. தற்போது தீவிரமாக அதை ஆய்ந்து கொண்டிருக்கிறோம். எந்தக் கட்டத்திலும் சுணக்கம் கூடாது என்று சொல்லியிருக்கிறோம்.

இதிலே இன்னும் சில பிரச்சினைகள் வருகின்றன. மாநில அரசு ஊழியர்களாக இருக்கின்ற கல்லூரி ஆசிரியர்களுக்கு மைய அரசு அதிகாரிகளுக்குச் சமமாக, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்குச் சமமாக சம்பளத்தைத் தருகிறபோது, அதைப்போல பள்ளிகளில் பணியாற்றுகின்ற மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற, உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற நடுநிலைப் பள்ளி களில் பணியாற்றுகின்ற, தொடக்க நிலைப் பள்ளிகளில் பணி யாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும்—ஹையர் எஜுகேஷனுக்கு வேண்டிய அடிப்படை அஸ்திவாரமே ஸ்கூல் எஜுகேஷன் என்ற முறையில் எங்களுக்கும்—அதே சம்பள விகிதத்தைத் தர வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள். அவர் களுக்கும் அந்தச் சம்பளத்தைத் தர மைய அரசு தயாரா என்று கேட்டிருக்கிறோம். காரணம், ஐந்தாண்டுகளுக்கு மட்டுமே கல்லூரி ஆசிரியர்களுக்குத் தருகிற யூ.ஜி.சி. கூறுகிற உயர்ந்த ஊதியத்தை டில்லி அரசு தர இசைவு தந்திருக்கிறது. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு மாநில அரசின் தலை மீதுதான் பெரிய சுமையாக சுமத்தப் படும். பல கோடி ரூபாய் உயர்வு ஏற்படும். கல்லூரி ஆசிரியர் களின் எண்ணிக்கை குறைவு, பரவாயில்லை. பள்ளி ஆசிரியர்கள் 4 இலட்சம், 5 இலட்சம் ஆசிரியர்களுக்கு மைய அரசின் ஊதிய விகிதத்தைத் தருகிறபோது, மைய அரசு இந்த நிதியை ஏற்க மறுக்கிறபோது, மாநில அரசே அந்தச் சுமையை தாங்க முடியாத நிலை உருவாகும் என்பதால் இதற்கு என்ன கூறுகிறார்கள் என்பதை தமிழக அரசு, மேற்கு வங்காள அரசு, திரிபுரா அரசு, கேரளா அரசு கேட்டிருக்கின்றன. நாமும் கேட்டிருக்கிறோம். மத்திய அரசிடத்திலிருந்து இதற்குத் தக்க விடையில்லை. இதைவிட மிக முக்கியமானது சில காங்கிரஸ் ஆளுகிற மாநிலங்களே கேட்டிருக்கிறார்கள், கேட்கின்றன. மேற்கு வங்கம், தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்கள், மத்திய அரசு ஊழியர்கள் என்ற முறையில் உள்ள கல்லூரி ஆசிரியர்களுக்கு உயர்ந்த சம்பளம் தந்து, பள்ளி ஆசிரியர்களுக்கும் மத்திய அரசு அதிகாரி



1987 நவம்பர் 17] [திரு. சி. பொன்னையன்]

களுக்குச் சமமான, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்குச் சமமாக சம்பளம் தந்துவிட்டால், மீதமுள்ள 16,000 என்.ஜி.ஜி.ஓ.-வினர் தமிழகத்திலே அரசு ஊழியர்களாக இருக்கிறார்களே, அவர்களும் ஊதிய உயர்வு கேட்கும் சூழல் கட்டாயம் உருவாகும். பே கமிஷன் வரையறையைப் பொறுத்தவரைக்கும், They are all treated in equal parity. ஒரு அரசால் ஒதுக்கப்படுகிற நிதியிலே 80 சதவிகிதம், 90 சதவிகிதம் அரசு ஊழியர்களுக்கு ஊதியமாகச் சென்றுவிடும் நிலை உருவாக இருக்கிறது, இதை மத்திய அரசு ஏற்கத் தயாராக இருக்கிறதா என்றும், இதை ஏற்க வேண்டு மென்றும் கேட்டிருக்கிறோம். இதுதான் இருக்கின்ற நிலை. இதற்கும் விளக்கம் கிடைத்தவுடன் விரைவிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிய எண்ணம் ஈடேறும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். பல மாநிலங்களில் தரப்பட்டிருக்கிறது என்பது தவறு. நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன், வெளியிலும் சொல்லி இருக்கிறேன். அந்தப் போராட்டக் குழுவிடமும் சொன்னேன். இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் ஊதியத்தை ஈடேற்றுகிறோம், உங்கள் கொள்கை ரீதியாக உங்கள் எதிர்ப்பை தெரிவியுங்கள், அது வேறு; ஆனால் பள்ளிக்கும் கல்லூரிக்கும் செல்லாமல் இருக்காதீர்கள்; காரணம் உங்கள் கோரிக்கையை அப்படியே ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னேன். காரணம், மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்; பிற மாநிலங்கள் குரல் எழுப்ப வேண்டுமென்பதற்காக. ஆனால் நமது பிள்ளைகளுக்குச் சோதனை தருவது முறையாகாது என்று அரசு கருதி, 'நோ ஒர்க், நோ பே' என்ற முடிவை எடுத்து, அவர்களுக்கு அறிவிப்பு தந்திருக்கிறது. இந்த நிலையில் மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவரவர்களே, பச்சையப்பன் அறக்கட்டளை, பிற இரு அறக்கட்டளைகள் சார்பாகக் கொண்டு வரப்பட்டிருக்கிற 2 சட்ட முன்வடிவுகளுக்கும் அவையினுடைய ஏற்பை வழங்குமாறு வேண்டுகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு **பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுடைய இடத்திலிருந்து பேசுங்கள். சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களிடத்தில் நல்ல நோக்கத்தோடு சில விளக்கங்கள் பெற விரும்புகிறேன். இங்கே அவர்கள் சொல்கிறபோது, பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகத்தையும், செங்கல்வராய

1987 நவம்பர் 17] [திரு. அ. ரகுமான்கான்]

நாயக்கருடைய பப்ளிக் டிரஸ்ட் நிர்வாகத்தையும் அரசாங்கம்
ஏற்று நடத்த வேண்டுமென்ற முடிவுக்கு வந்துவிட்டது. "பாலிசி
டிசிஷன் ஹேஸ் பீன் டேக்கன்"—முடிவாகிவிட்டது. எனவே
இந்தச் சட்டம் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது
என்று சொல்லும்போது தெளிவாகச் சொல்லுகிறார்கள்.

It is expedient and necessary to make it clear
that the Act shall apply and shall be deemed to have applied to all
public trusts (including P.T. Lee Chengalvaraya Naicker's Public
Trust and endowments) . . . .

என்று அவர்கள் சொல்கிறபோது, சந்தேகங்கள் வருகின்றன.
அதாவது செங்கல்வராய நாயக்கர் டிரஸ்டுக்கும் இது
பொருந்துமா, பொருந்தாதா என்ற சந்தேகம் வருவதால்தான்
இந்தச் சட்டமே வருகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, சந்தேகம் என்பதே இல்லை. உயர்
நீதி மன்றத்தினுடைய நீதிபதி ஒரு தீர்ப்பை வழங்கினார்கள்.
அரசுக்கு வாய்தா வேண்டுமென்று கேட்டபோது, வாய்தாகூட
மறுக்கப்பட்டுவிட்டது. இந்தநிலையில் விபரீதங்கள் வந்துவிடக்
கூடாது என்று உடனடியாக அவசரச் சட்டம் கொண்டுவரும்
சூழல் ஏற்பட்டது. செங்கல்வராய நாயக்கரும், பிற கொடை
வள்ளல்களும், 7, 8 பேர்கள் தெளிவாக 'வில்' எழுதி,
பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகக் குழுவே பிற அறக்
கட்டளைகளின் நிர்வாகங்களையும் தொடர்ந்து நிர்வகிக்கலாம்
என்று ஆணித்தரமாக எழுதி வைத்த அடிப்படையில், எந்த ஒரு
நிர்வாகக் குழு பச்சையப்பன் அறக்கட்டளைக்கு தேர்தல்
மூலமாக அல்லது அரசு சட்டத்தின் மூலமாக நியமிக்கப்
படுகிறதோ, அந்த நிர்வாகக் குழுவினுடைய தலையிலே இந்த
சுமை போடப்படுகிறது, அந்த வில்லின் அடிப்படையிலே.
அரசுக்கும் அதற்கும் தொடர்பில்லை. நிர்வாகக் குழு அமைக்கப்
பட்டு விட்டது, பச்சையப்பன் அறக்கட்டளைக்கு.

Once the Managing Trustees take over the charge of manage-
ment, automatically the responsibility of managing and main-
taining the Trust properties belonging to the Chengalvaraya Naicker
Trust and other Trusts devolves on the Trustees without any
Government direction and without any interference by the Govern-
ment because of the provisions of the Will.



1987 நவம்பர் 17] [திரு. சி. பொன்னையன்]

உயர்நீதி மன்றத்திலே சட்டத்திலே உங்களுக்கு அதிகாரம்
இல்லை. 909-லே உள்ள அந்த ஸ்கீம் பிரகாரம்தான் உயர்நீதி
மன்றத்திற்குத்தான் அந்த பொறுப்பு இருக்கிறது என்று
அவர்கள் முடிவு எடுத்து, வாய்தா கேட்ட நேரத்தில் வாய்தாகூட
அரசுக்கு கொடுக்காமல் தீர்ப்பு வழங்கப்பட்டபோது உடனடியாக
அவசரச்சட்டத்தைக் கொண்டு வந்து உச்சநீதி மன்றத்திலேயே
தடையாணை பெறப்பட்டிருக்கிறதேயொழிய இது சந்தேகத்தின்
அடிப்படையிலே எழுந்ததேயொழிய, உயர்நீதி மன்றத்தின் ஒரு
தீர்ப்பு வந்து, அந்த தீர்ப்பின் காரணமாக எழுந்ததே தவிர
வேறல்ல. அந்த தீர்ப்பே தவறு என்ற நிலையை நாங்கள்
எடுத்தோம். ஆனால் உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்புக்கு மேல்
உச்சநீதி மன்றத்திற்கு அரசு சென்று தடை ஆணை வாங்கு
வதற்கு இடைக்காலத்திலே விபரீதங்கள் வளர்ந்து விடக்கூடாதே
என்பதற்காகத்தான் அவசரச்சட்டம் கொண்டு வரப்பட்டது.

(மாலை 5-20)

**திரு. அ. ரகுமான்கான் :** இன்னொரு சந்தேகம் கேட்க
விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு சந்தேகம்
போதும். நிறைய சந்தேகம் வரக்கூடாது. இவ்வளவு சொல்லியும்,
ஒரு சந்தேகம் அனுமதித்தேன். அமைச்சர் அவர்கள் மீண்டும்
விளக்கம் சொல்லிவிட்டார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை
முன்னுள்ள கேள்வி :

"1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை
(மேலாண்மையை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்த சட்ட
முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1987)
ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு
எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை பேரவையின் முடிவிற்கு விடப்
பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின்
முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

[1987 நவம்பர் 17

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1987) நிறைவேற்றப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(ஔ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொது அறக்கட்டளைகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொது அறக்கட்டளைகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 50/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

* 16—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1987 நவம்பர் 17]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொது அறக்கட்டளைகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(அஅ) தமிழ்நாடு மாநில வீட்டுவசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.**

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டுவசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

**திரு. கு. ரமணி :** மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1961 ஆம் வருடத்திய இந்த சட்டத்திற்கு ஒரு திருத்தம் இப்போது முன் வைத்துள்ளதன் மூலம் a full time managing Director -ஐ', போர்ட்-னுடைய மெம்பராகவும் இருந்து அதனுடைய முழு நேர ஊழியராக இருந்து; அரசினுடைய பல்வேறு வீட்டுவசதிகள் முழுவதையும் நிர்வகிப்பதற்கும், அதற்கான நிதி நிலைகளையும், நிதி செலவுகளையும் கூட நிர்வகிப்பதற்கான நோக்கத்தோடு ஒரு a full time managing Director -ஐ நியமிக்கக்கூடிய இந்த திருத்தம் ஒரு நல்ல திருத்தம்தான். இந்தத் திருத்தத்தைப் பற்றி நமக்கு ஒன்றும் ஆட்சேபணையோ அல்லது மற்ற பிரச்சினைகளோ இல்லை. ஆனால் வீட்டு வசதி வாரியத்தினுடைய நடவடிக்கைகள் பற்றி ஒரு குறை. சரியான நிர்வாக நடவடிக்கைகள் அங்கே இல்லாத காரணத்தால் பெரும் குறைகள் இன்றையதினம்

* 12—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

இருப்பதைப் பற்றி நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இந்த விஷயம் சம்பந்தமாக, இதே மன்றத்தில் பல சந்தர்ப்பங்களில் பேசியிருக்கிறேன். சாதாரணமான ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையில் வீட்டு வசதி வாரியம் கோடிக் கணக்கான, மக்களுடைய பணத்தைக் கொண்டு வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறது. இப்படி கோடிக்கணக்கில் வீடுகளை நிர்மாணிக்க செலவு செய்த பிறகு அந்த மக்கள் வீடுகளில் குடியிருந்து அனுபவிக்கும் காலத்தில் அவர்களுக்கு ஏற்படுகிற பலவிதமான குறைபாடுகளை நீக்குவதற்கு அங்கே நிரந்தரமான ஒரு பராமரிப்பு அமைப்பு கிடையாது. இப்படிப்பட்ட ஒரு பராமரிப்பு அமைப்பு அங்கே இல்லாதது மிக மிக பலவீனம். ஏராளமான வீடுகளைக் கட்டியிருப்பது ஒரு நல்ல அம்சம்தான். குறிப்பாக குடிசை மாற்று வாரிய வீடுகளில் அன்றாடம் கூலி வேலை செய்துவருகிற ஏழை எளிய சாதாரண மக்கள் குடியிருந்து வருகிறார்கள். மிகக் குறைந்த வாடகையில் அவர்கள் குடியிருந்து வருகிறார்கள். அப்படிப்பட்ட வீடுகளிலும் சரி. அரசு ஊழியர்களாக, ஓரளவு மத்தியதர நிலையில் இருக்கிறவர்கள் குடியிருக்கும் வீடுகளிலும் சரி, குடியிருக்கிறவர்களுக்கு சொந்தமாக்கிக் கொடுப்பதற்காக தவணை முறையில் பணம் கட்டி குடியிருக்கிறவர்கள் வீடுகளிலும் சரி, அங்கேயெல்லாம் சரியான பராமரிப்பு இல்லாததால், மிகுந்த துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை நான் அண்மையில் எடுத்துக்கூறி, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் அது சம்பந்தமாக ஒரு மகஜர் கொடுத்திருக்கிறேன் என்பதை எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நிர்வாகத்தில் இருப்பவர்கள் பராமரிப்புக்குரிய அமைப்பினை முறையாக ஏற்படுத்தாமல், நிர்வாகம் செய்வதால் அங்கே குடியிருக்கிற ஏழையெளிய மக்களுக்கு எவ்வளவு கெடுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதை சற்று எண்ணிப்பார்க்க வேண்டும்.

உதாரணமாக சுகாதாரம் மிக மிக குறைவாக இருக்கிறது. பிரதானமாக சொல்ல வேண்டுமென்றால் முனிசிபாலிட்டி, கார்ப்பரேசன் போன்ற அமைப்புக்களிடம் இந்த வீட்டுவசதி வாரிய வீடுகளை அவைகளினுடைய சுகாதார பராமரிப்புகளுக்காக ஒப்படைக்காத நிலைமை பல இடங்களில் இருக்கிறது. குறிப்பாக கோவை நகராட்சியை எடுத்துக்கொண்டால்





செல்வபுரம் பகுதியில் வடக்குப் பகுதியை ஒப்படைத்திருக்கிறார்கள். ஆனால் தெற்கு பகுதியில் இருக்கிற வீடுகளை அந்த மாதிரி ஒப்படைக்கவில்லை. அதேமாதிரி அறிஞர் அண்ணா ஹட்கோ காலனி என்று சொல்கிற பகுதி மற்றும் காந்திபுரம் பகுதியில் ஒரு சின்ன தெரு தகராறு காரணமாக, அப்ரோச் ரோடு பக்கத்திலே இருக்கிறது, அந்த ரோடுகளில் ஆக்கிரமிப்பு இருக்கிற காரணத்திற்காக அந்தப் பகுதியிலுள்ள இரு தரப்பு அதிகாரிகளிடையே, அதாவது உள்ளாட்சித் துறை அதிகாரிகள் மற்றும் வீட்டு வசதி வாரிய அதிகாரிகளிடையே இருக்கிற தகராறு காரணமாக அந்தப் பகுதியும் ஒப்படைக்கப்படாமல் இருந்து வருகிறது. அதுபோல டி.டி.கே. மேனன் ரோடு என்று சொல்கிற முதல் வார்டு, பாப்பாநாயக்கன் பாளையம் பகுதியில் இருக்கிற வீடுகளை ஒப்படைத்திருப்பதாக சொல்லியிருக்கிறார்களே தவிர எந்தவிதமான சுகாதாரப் பணிகளையும் அங்கே வந்து யாரும் செய்வதில்லை. அந்தமாதிரி அரசு ஊழியர்களுக்காக கலெக்டர் கேம்ப் ஆபீஸ் பகுதியில் கட்டப்பட்டிருக்கிற சுமார் 3,000 வீடுகள், டி.எப்.ஓ. ஆபீஸ் பகுதி வீடுகள், தாமஸ் பார்க் பகுதி வீடுகள் இப்படி அந்தப் பகுதி முழுவதும் உள்ள பல வீடுகளில் உடைந்த கதவுகள், உடைந்த நிலைகள் காணப்படுகின்றன. மேலேயிருந்து கீழே வருகிற கழிவுநீர் குழாய்கள் உடைந்து காணப்படுகின்றன. அங்கேயுள்ள மெயின்ரோடு கூட உடைந்திருந்தும் இதுவரை ரிப்பேர் பார்க்கப்படவில்லை. அங்கேயுள்ள காலனிகளுக்குள் செல்லகூட நல்ல ரோடு போடப்படவில்லை, வெறும் மண்தரைதான் அங்கே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எம்.டி. பதவி ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், அவருக்குப் பவர் கொடுக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் மட்டும் பேசுங்கள். பழைய பில்டிங்குகளில் உள்ள ரிப்பேர் பற்றி எல்லாம் பேசினால் நேரம் போய்க்கொண்டேயிருக்கும். உறுப்பினர்கள் பேசிய பிறகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

(மாலை 5-30)

**திரு. கு. ரமணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் பாயின்ட்டைப் புரிந்து கொண்டேன். நான் எதற்காகப் பேசுகிறேன் என்று நீங்கள் புரிந்து கொண்டால் நல்லது. ஒரு எம்.டி. பதவியை ஏற்படுத்தவேண்டிய அவசியம் ஏன் வந்தது? நிர்வாகத்தில் இருக்கும்படியான குறைபாடுகள்

[திரு. கு. ரமணி] [1987 நவம்பர் 17

காரணமாகத்தான் இதெல்லாம் தேவையாக இருக்கிறது. அந்தக் குறைபாடுகள் மக்களைப் பாதித்து இருக்கின்றன. நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ளப் போவதில்லை. சுருக்கமாக முடித்து விடுகிறேன். முறையாக நிர்வகிப்பதில்லை. சாக்கடை வசதிகள் சரியாக செய்யாததினால் கழிவுநீர் சரிவர வெளியே போவதில்லை. இதைப்பற்றி நாங்கள் பல விண்ணப்பங்களை அங்கே இருக்கிற அதிகாரிகளுக்கு நேரில் கொடுத்திருக்கிறோம். அவர்கள் அவைகளை நிவர்த்திச் செய்ய தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதில்லை. ஒரே ஒரு பதிலைத்தான் அவர்கள் தருகிறார்கள், எங்களிடம் பணம் இல்லை என்று. பணம் இல்லை என்று சொன்னால், அதனால் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால், அந்த வீடுகளில் எப்படி மக்கள் குடியிருக்க முடியும்? மாடியில் குடியிருப்பவர்கள் குறிப்பாக மிகவும் கஷ்டப் படுகிறார்கள். மாடியிலிருந்து கழிவுநீர் கசிகின்ற காரணத்தால், சுவர்கள் நனைந்து, கீழே இருப்பவர்கள் நரக வேதனைப்படக் கூடிய ஒரு நிலைமை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். இந்த அதிகாரியை நியமிப்பது மூலம், இந்த மாதிரியாக இருக்கக் கூடிய நிலைமைகளைப் போக்குகின்ற நடவடிக்கைகளுக்குப் பொறுப் பேற்று, அந்த முறையில் அவர்கள் செயல்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, உதாரணமாக 500, 1,000 அல்லது 2,000 வீடுகள் இருக்கக்கூடிய வளாகங்களிலே சமூகக் கூடங்கள் கட்டப்படாமல் இருந்து வருகின்றன. அவைகள் கட்டப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. மேலும் மின்சார விளக்குகள் போட்டுக் கொடுக்கிறார்கள், கார்ப்பரேஷனிலிருந்து. ஆனால் சரியான விளக்குக் கம்பங்கள் போடாமல், மரக் கம்பங்களில் நட்டுவிடுகிறார்கள். எப்படி மின் வாரியத்தில் இரும்புக் கம்பங்கள் போட்டு விளக்குகளை நன்கு பராமரிக்கிறார்களோ, அந்த மாதிரி முறையாகப் பராமரிப்பதில்லை. அந்த மாதிரி மரக் கம்பங்கள் போடுவதினால், பல சந்தர்ப்பங்களில் விளக்குகள் எரியாமல் போய், தகராறு ஏற்படுகிறது. அந்த நிலைமையை மாற்ற வேண்டும்.

அடுத்தபடியாக, மின் கட்டணத்தைக் கட்டுவதற்கான காரியாலயங்களை வெகு தூரத்தில் அமைத்திருக்கிறார்கள். வீடுகளில் உள்ள ஆண்கள் பல வேலைகளுக்காக வெளியே



1987 நவம்பர் 17] [திரு. கு. ரமணி]

போகும்போது, வீட்டில் இருக்கக்கூடிய பெண்கள் வெகுதூரம் சென்று அந்தக் காரியாலயங்களில் பணம் கட்ட முடியாது. இவைகளைப் பற்றியெல்லாம் அங்கே இருக்கக் கூடிய அதிகாரி களிடம் எடுத்துச்சொல்லியும், ஒன்றும் நடைபெறாமல் இருக்கிறது.

இன்னொரு முக்கியமான விஷயம், குடிசை மாற்று வாரியத்திலே அநேகமாக ரூ. 10,000 வரை பணம் கொடுத்து, வேறு ஆட்களுக்கு ரூ. 3, ரூ. 5 என்று . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த சட்ட முன் வடிவு வீட்டுவசதி வாரிய எம்.டி.-ஐப் பற்றியது. நீங்கள் ஸ்லம் கிளியரன்ஸ் போர்டுக்குப் போகிறீர்கள். டைம் ஆகிறது. ஐந்து பேர் பேசுவதற்குத் தங்கள் பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. கு. ரமணி :** துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவில் சாதாரணமாக ஒரு அதிகாரியைப் போடுவது மாத்திரம் காரணம் அல்ல. அதிலே ஒரு நோக்கம் இருக்கிறது. அந்த நோக்கத்தை அந்த அதிகாரி நிறைவேற்ற வேண்டும். அதற்காக இதைப் பற்றிப் பேசுவதற்கு ஒரு மணியோ, இரண்டு மணியோ வைக்கவில்லை. மாலையிலே கூட்டம் எதற்காக வைத்திருக்கிறோம்? இதிலே இருக்கக் கூடிய விவரங்களைச் சொல்லவேண்டாமா? நான் சொல்லக் கூடிய விவரங்கள் அநேகமாக உங்களுக்குத் தெரிந்திருக்காது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியாது. விவரங்களைச் சொல்லி நாம் இதிலே ஒரு முடிவுக்கு வரவேண்டும். (மணி அடிக்கப் பெற்றது). சீக்கிரமாக முடித்து விடுகிறேன். அதிகமாகப் பேச வில்லை. ஐந்து நிமிடங்களிலே முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பட்ஜெட், கவன ஈர்ப்புகள், கேள்வி நேரம் என்று பல வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. இன்னும் 8 சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன. எனவே சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, ஏன் இப்படி என் தொண்டையைப் பிடிக்கிறீர்கள்?

[1987 நவம்பர் 17

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரம் என் தொண்டையைப் பிடிக்கிறது. எனவே, நான் உங்கள் தொண்டையைப் பிடிக்கவேண்டியிருக்கிறது. வேறு வழியில்லை.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, நாங்கள் இந்தச் சட்ட முன்வடிவை எதிர்க்கவில்லை. நான் இந்த விஷயங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகப் பேசுகிறேன். இந்தச் சட்ட முன்வடிவிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஏன் என்னுடைய கவனத்தை டைவர்ட் பண்ணுகிறீர்கள்? இப்படிப் பட்ட நிலைமைகளையெல்லாம் மாற்றுவதற்காக ஒரு தகுந்த ஏற்பாட்டைச் செய்யவேண்டும். எங்களுக்கு மட்டும் பதில் சொன்னால் போதாது. இதை நாங்கள் ஜனங்களுக்குச் சொல்ல முடியாத நிலைமை இருக்கிறது. நிர்வாகத்தை முறையாக நடத்துவதற்கு இந்த அதிகாரி பொறுப்போடு காரியங்களைச் செய்ய வேண்டும். கீழே இருக்கிற அதிகாரிகளுக்குச் சரியான தாக்கீது கொடுக்கப்படவேண்டும். அவர்கள் வரக்கூடிய விண்ணப்பங்களை அவ்வப்போது பரிசீலித்து, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக எப்படியோ வீடுகளுக்கு முத்திரை கடிதங்கள் எழுதி கொடுத்து 5 அல்லது 7 வருடங்கள் கழித்து, முதல் அல்லாடி விற்றுவிட்டுப் போகிறார். அப்படிப்பட்ட நிலைமையை நாம் எப்படி அனுமதிக்கமுடியும்? இந்த விஷயத்தைப் பற்றி நான் சட்டமன்றத்திலே கிளப்பி இருக்கிறேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். பல பேர்கள் இன்றைக்கு அங்கே பினாமியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது குடிசை மாற்று வாரிய வீடுகளை சொந்தமாக்கப்போகிறோம் என்று சொல்கிறீர்கள். அதிலே பெரிய பிரச்சினைகள் வரும். இன்றைக்கு அதிலே குடியிருக்கிறவர்களுக்கே அவற்றைச் சொந்தமாக்க வேண்டும். வீடுகளை விற்றுவிட்டுப் போனவர்களுக்கு சொந்தமாக்கக் கூடாது. இப்படி நடவடிக்கை எடுத்து, சுகாதாரத்தைப் பாதுகாத்து, அவர்களுக்கு குறைந்தபட்ச தேவைகளைச் செய்து கொடுக்கக் கூடிய நடவடிக்கைகளை எடுத்து இந்த ஸ்தலத்திலே இருக்கக்கூடிய அதிகாரிகள் பொறுப்போடு செயல்படச் செய்ய வேண்டும். அந்தப் பொறுப்பு நீங்கள் மேனேஜிங் டைரக்டராக



1987 நவம்பர் 17] [திரு. கு. ரமணி]

நியமிக்கிறவருக்கு வரவேண்டும். இந்த வீடுகளை பினாமிகளாகப் பெற்றவர்களுக்குச் சொந்தமாக்காமல் இன்றைக்கு அந்த வீடுகளிலே இருக்கிறவர்களுக்கே சொந்தமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன் வைத்து அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) ஒரு மேனேஜிங் டைரக்டரை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நியமிக்கலாமா என்பது பற்றியது இந்த சட்டமுன்வடிவு. இதை இவ்வளவு நேரம் விவாதிப்பது சட்டமுன்வடிவை விவாதிப்பது போல மாதிரி இல்லை. மானியக்கோரிக்கையை விவாதிப்பது போல இருக்கிறது. இதிலே 6 பேர் பேசுவதா? (குறுக்கீடுகள்) பில்லை ஒட்டித்தான் பேசமுடியும், ஒட்டுமொத்தமாக மானியக் கோரிக்கை மாதிரி பேச முடியாது.

**திரு. கு. ரமணி :** மசோதாவிற்கு அப்பால் என்ன பேசினேன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் பேசிவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் அதிகம்தான். (குறுக்கீடு) மீறவில்லை. Confine yourself to the objects and reasons' of the bill. Dont' go beyond that. மசோதாவைப் பற்றி மட்டும் இரண்டு நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

***திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் :** பேசுவது எங்கள் உரிமை. அதற்குத்தான் வந்திருக்கிறோம். நீங்கள்தான் எங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். 2 நிமிடத்தில் என்ன பேசுவது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வீட்டு வசதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டமுன்வடிவு, வீட்டு வசதி வாரியத்திற்கு ஒரு மேலாண்மை இயக்குநரை நியமிப்பதைப்பற்றியதாகும். அதற்கு என்ன காரணம் சொல்லப்பட்டு இருக்கிறது என்றால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் உருவாக்கப்படும் பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களை திறம்படவும் வேகமாகவும் நிறைவேற்றுவதற்கு, ஒரு முழுநேர மேலாண்மை இயக்குநரை நியமிக்கிறோம் என்று. அப்படியானால் இதுவரை வீட்டுவசதி வாரியத்தில் நடைபெற்று வருவது எல்லாம் திறம்பட நடைபெறவில்லை, அதே போல், விரைவாக நடைபெறவில்லை என்று அர்த்தம்.

[1987 நவம்பர் 17

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திறம்பட நடைபெற' என்று சொன்னால் 'இன்னும் திறம்பட நடைபெற' என்று பொருள்.

அதேபோல, 'வேகமாக நடைபெற' என்று சொன்னால் 'இன்னும் வேகமாக நடைபெற' என்று பொருள். இதுதான் பொருளே தவிர, இதுவரை திறம்பட நடைபெறவில்லை, இது வரை வேகமாக நடைபெறவில்லை என்று அர்த்தம் இல்லை.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** 'மேலும்' என்று சேர்த்து இருந் தால் இந்தச் சந்தேகம் வந்திருக்காது. அதிலே அப்படி இல்லாததால்தான் நான் வேகமாக நடைபெறவில்லை என்று சொல்கிறேன்.

இந்த வீட்டு வசதித் துறை எந்தக் காலத்திலும் முறையாக வேகமாகச் செயலாற்றவில்லை என்பதுதான் உண்மை. இவர்கள் செய்திருப்பதெல்லாம், சாலைகளில், 'ஆளுக்கு ஒரு வீடு" '3 வருடத்தில் 30 இலட்சம் வீடுகள்' என்று போர்டு தான் போட்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதைத்தான் நான் சொன் னேன். நீங்கள் முதலில் பேசியதோடு முடித்து விடுங்கள். இந்த 'பில்'-லில் இதற்கு மேல் பேச முடியாது. இதற்கு மேலே விவாதித்துக் கொண்டே போனால் இன்றைக்கு இந்த ஒரு பில்லோடு முடிந்து விடும். ஒவ்வொரு விதியைப் பற்றியும், ஒவ்வொரு ஊரில் இருக்கும் வீட்டு வசதி வாரிய பணியைப் பற்றியும் பேச முடியாது. அதனால்தான் உங்களுக்கு நேரம் அதிகம் ஆகிறது.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் பேசிய அந்தப் பகுதியை அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

(மாலை 5-40)

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** இங்கே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் என்னை எதைப் பேசச் சொல்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. * *

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1987 நவம்பர் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பில்லுக்கு சம்பந்தம் இல்லாதது. ஆகையால் நீக்கப்படுகிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, * * கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை ஏற்கெனவே நீக்கி விட்டேன். பில் சம்பந்தமாக மட்டும் பேசும்படி கேட்டுக்கொள் கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக 1981 ஆம் ஆண்டில் விருதுநகரில் 150 ஏக்கர் நிலத்தில் வீடுகள் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். 6 வருடம் ஆகி விட்டது; இன்றுவரையில் எந்தவிதமான வேலையும் நடக்க வில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, நீங்கள் அறிவுரை வழங்கியதைப்போல—இந்த சட்ட முன்வடிவு வீட்டுவசதி வாரியத்திலே மேலாண்மை இயக்குநராக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமிப்பது பற்றியது. அதுகுறித்த சாதக பாதகங்களைத் தெரிவித்தால் நான் பதில் சொல்ல வசதியாக இருக்கும். மானியக் கோரிக்கையில் பேசுவதுபோல வீட்டு வசதி வாரியம், குடிசைமாற்று வாரியம், எம்.எம்.டி.ஏ., பற்றி எல்லாம் பேசுவதாக இருந்தால் அவர்கள் பேசியது மட்டும்தான் குறிப்பில் இருக்கும். அவை பற்றிய விவரங்கள், ஆதாரங்கள் தற்போது என்னிடம் இல்லாததால், நான் பதில் சொல்ல முடியாது. ஆகவே இந்த சட்ட முன்வடிவுக்குப் பொருத்த மானவை பற்றி மட்டும் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** வீட்டுவசதி வாரியத்தைப்பற்றி பேசச் சொன்னீர்கள்; அதைப்பற்றிப் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதை எல்லாம் மாலை நேரத்தில், உங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற சட்டமன்ற அலுவல கத்தில் அமர்ந்து படித்துவிட்டு இங்கே வந்து பேசினால் இப்படிப் பட்ட நிலைமை உருவாகாது.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** அதை எல்லாம் படித்துவிட்டு தான் இங்கே வந்து பேசுகிறேன். தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? எல்லாவற்றையும் படித்துவிட்டுதான் இங்கே வந்து ஒரு கட்சித் தலைவராக உட்கார்ந்திருக்கிறேன். நேற்றைக்கு 'டியூஷன்' படித்துவிட்டு வாருங்கள் என்று சொன்னீர்கள்; இன்றைக்கு உட்கார்ந்து படித்துவிட்டு வந்து பேசவேண்டும் என்று சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரம்பு மீறி போகக் கூடாது. இந்த பில் சம்பந்தமான கருத்துக்களை மட்டும் சொல்லவேண்டும். வீட்டுவசதி வாரியத்திற்கு ஒரு எம்.டி. தேவை என்பதுதான் பில். இதிலே வீட்டுவசதி வாரியம், அட்மினிஸ்ட்ரேஷன் பற்றிய பிரச்சனைகளை எல்லாம் பேச முடியாது. (குறுக்கீடு) அதிகம் பேசுவதால்தான் சில விவகாரங்கள் உங்களுக்கே தெரியாமல் வந்துவிடுகிறது.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** * * இத்துடன் முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் இப்போது சொன்ன வார்த்தைகளை நீக்கிவிடுகிறேன். அடுத்து திரு. கே. சுப்பராயன் அவர்கள்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** * * நான் வெளிநடப்பு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எந்தப் பிரச்சினையிலும் சரியாகப் பேசாத காரணத்தால், படித்துவிட்டு பேசாத காரணத்தால், புரியாத காரணத்தால் உங்களை அமரச் சொல்கிறேன்.

(திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் வெளிநடப்பு செய்தார்)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சட்டமுன்வடிவைச் சட்டமாக நிறைவேற்றுவது என்பதைப் பொறுத்தவரையில் அவசரப்பட்டு ஒரு சட்ட முன்வடிவைச் சட்டமாக நிறைவேற்றக்கூடாது என்பது நடை

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





முறை மரபு. இங்கே வீட்டுவசதி வாரியத்தைப் பொறுத்த மட்டில் ஒரு மேலாண்மை இயக்குநர் நியமிக்கப்படுகிற விஷயம் என்றாலும் சட்டத்தினுடைய நோக்கக் காரணம் என்று குறிப்பிடும்போது ஒரு மேலாண்மை இயக்குநரை என் நியமிக்க வேண்டிய அவசியம், நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றுவதைப் பற்றி கூறுகிறபோது, இந்த நோக்கக் காரணத்திலே கூறப்பட்டிருப்பது வேலைகள் விரைவாக நடக்க மேலாண்மை இயக்குநரை போடவேண்டிய நிலைமை வீட்டுவசதி வாரியத்தில் இருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அதைத்தான் எனக்கு முன்னாலே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள்.

பல்வேறு வீட்டுவசதி வாரியத் திட்டங்களை விரைவாக நிறைவேற்ற முடியாத சூழ்நிலை நிலவியிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றியமைப்பதற்காக ஒரு மேலாண்மை இயக்குநர் போடப்படுகிறார் என்றால், அதை நியாயப்படுத்த நடைமுறை விஷயங்களைச் சுட்டிக்காட்டி விவாதத்தின்போது சொல்லுகின்ற முழு உரிமை உண்டு என்பதால் சில விஷயங்களைக் குறிப்பாக குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே எத்தனையோ நிலைமைகள். மிக முக்கியமான ஒரு அரசுத் துறையில், வரம்பற்ற அதிகாரம் உள்ள ஒரு துறையில் மேலாண்மை இயக்குநர் இல்லாத நிலைமை ஏற்பட்ட நிலையை அதிலே ஒப்புக்கொண்டு இருப்பதால் நான் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் வலியுறுத்த விரும்புகிறேன். மேலாண்மை இயக்குநர் இல்லாத காலங்களில், அச்சடிக்கப்பட்டு கொடுக்கப்பட்ட அடிப்படையிலேயே விரைவான வேலைகள் இல்லை என்பது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கக்கூடிய உண்மையாகும். அவ்வாறு ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிற . . .

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது சொன்னேன். வீட்டுவசதி வாரியத்தினுடைய பணிகள் 8 ஆண்டு, 10 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த அளவை விட இப்போது பல மடங்கு அதிகமாகி இருக்கின்றன. மேலும் உலக வங்கி ஒரு எம்.டி. போட வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. இதுபோன்ற மற்ற திட்டங்களிலே எல்லாம் எம்.டி.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1987 நவம்பர் 17.

பல்வேறு காரணங்களால் போட்டிருக்கிறோம். ஒழுங்கீனங்கள்
நடந்தது போலவும், தவறுகள் நடந்தது போலவும் அதற்காகத்
தான் எம்.டி. போட்டிருக்கிறார்கள் என்பதைப் போலவும்
அவர்களே ஏதோ தனியாக கற்பனை செய்து கொண்டு அந்தக்
கற்பனையின் அடிப்படையில் வாதிப்பது சரியல்ல.

**திரு. கே. சுப்பராயன் :** தலைவர் அவர்களே, நான் கற்பனை
யைத் துணைக்கு அழைக்கவில்லை. அரசாங்கத்தால் கொடுக்
கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டிருக்கிற
இந்தச் சட்ட முன்வடிவுக்கான காரண நோக்கங்களின் அடிப்
படையில்தான் நான் சொல்கிறேன். இதற்கு ஏதாவது 'மேலும்'
என்று திருத்தங்கள் இந்த நிமிடம் வரையில் கொடுக்கவில்லை.
மேலும் என்று ஒரு திருத்தம் கொடுத்திருந்தால் இந்த வாதத்தை
நாங்கள் முன்வைத்திருக்கவேண்டிய வாய்ப்பே ஏற்பட்டு இருக்
காது. அதிலே மேலும் ஒரு நிலை என்பதுதான். . . .

Mr. SPEAKER : There is a ruling by the Chair in 1975 as under :

"When an amending Bill is discussed, the debate should be within the scope of the amendment. Practical difficulties, if any, should be referred to only during the discussion on voting on Demands for Grants."

(1975—LXXI—340)

**திரு. கே. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே,
மேலாண்மை இயக்குநர் போடுகிற நிலைமையில் இப்போது அது
பற்றி வாதிப்பதற்கு அனுமதிக்கின்ற வாய்ப்பு இல்லை என்ற
காரணத்தினால் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்ல விரும்பு
கிறேன். * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்
இப்போது குறிப்பிட்டது நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அந்த
வார்த்தை எல்லாம் வேண்டாம். இதற்குத் தேவையில்லாதவை
அவை. நாட்டிலே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அதிகாரிகளைப்

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.



1987 நவம்பர் 17] [பேரவைத் தலைவர்]

போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அதிகாரிகள் அதிகமாக்கப்
படுகிற காரணத்தால் நிர்வாகம் குறைபாடாக இருக்கிறது என்றா
நாம் பேசுகிறோம்? (குறுக்கீடு) இது முழுமையான
ஜனநாயகம். (குறுக்கீடு) * * பற்றிப் பேசுகிறீர்கள்
விளம்பரத்திற்காக. (குறுக்கீடு) தயவுசெய்து அமருங்கள்.
(குறுக்கீடு) * * என்று ஏன் சொல்கிறீர்கள்? அது தவறு.
* * என்று சொல்கிறீர்கள்? இப்போது என்ன நடந்தது?
உட்காருங்கள். (குறுக்கீடு) * * என்ற வார்த்தையைச்
சொல்வது விளம்பரத்திற்காகத்தான். (குறுக்கீடு) நீங்கள்
பேசுவது முறையல்ல.

**திரு. கே. சுப்பராயன் :** நான் வெளிநடப்பு செய்கிறேன்.
(திரு. கே. சுப்பராயன் வெளிநடப்பு செய்தார்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது முறையல்ல. தெருவில்
நின்று பேசுவது போல் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நான்
இங்கே ஒரு ஆலோசனையாகச் சொல்ல விரும்புகிறேன்.
பல புதிய உறுப்பினர்கள் எல்லாம் வந்திருக்கிறார்கள். வாசித்து
பார்த்து விட்டு வந்து சட்ட முன்வடிவுகளைப் பற்றிப் பேச
வேண்டும். அப்படிப் பேசினால் விவாதமே உருவாகாது. படிக்
காத காரணத்தால்தான். பிரச்சினையே உருவாகிறது. அதைத்
தவிர்க்க வேண்டுமென்று எல்லோரையும் நான் கேட்டுக்
கொள்கிறேன். புதிய உறுப்பினர்கள் பலர் வந்திருக்கிறார்கள்.
அனைவருக்காகவும்தான் கேட்டுக்கொள்கிறேன். தேவையில்
லாத விவாதங்களைத் தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

(மாலை 5-50)

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
ஒரு ஆலோசனை கேட்க விரும்புகிறேன். இங்கே நாங்கள்
பேசுவதில் தவறு இருந்தால் நீங்கள் சுட்டிக் காட்டலாம். இங்கே
கொண்டு வந்திருப்பது அமெண்ட்மெண்ட்தான். இந்த அமெண்ட்
மெண்ட் வந்ததற்கு ஒரு காரணம் இருக்கிறது. அது இதிலே
குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு உட்பட்டுத்தான் நாங்கள்
பேசுகிறோம். சில நிமிடங்கள் அதிகமாகப் பேசி இருக்கலாம்.
அதற்காக விளம்பரத்திற்காகப் பேசுகிறோம் என்று சொல்வது
சரியல்ல.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

[1987 நவம்பர் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்
திரு. சுப்பாராயன் பேசும்போது விளம்பரத்திற்காக சிலவற்றை
சேர்த்துக் கூறினார்கள். அவற்றை நான் நீக்கியிருக்கிறேன்.
அதனால் திரும்பவும் சொல்லவிரும்பவில்லை. அதைத்தான்
விளம்பரம் என்று நான் சொன்னேனே தவிர, திரு. சுப்பரா
யனைச் சொல்லவில்லை. அவருடைய பேச்சின் தன்மையைத்
தான் சொன்னேன். அவர் பேசியதை நீக்கி விடச் சொல்லியிருக்
கிறேன்.

**திரு. கு. ரமணி :** நீக்கியதைப்பற்றி நான் கேட்கவில்லை.
விளம்பரத்திற்காக நாங்கள் பேசுகிறோம் என்று நீங்கள்
சொல்வது எப்படி சரியாகும் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு பில்லிலே பேசும்போது
அதன் ஸ்கோப் தவறி பேசக் கூடாது. அமைச்சரும் ஒரு உறுப்
பினர்தான், அவரையும் நான் பாதுகாக்க வேண்டும்.

**திரு. கு. ரமணி :** இந்தச் சட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம்
அதை ஆதரிக்கிறோம். அதிலே மாறுபாடு இல்லை. ஆனால்
விளம்பரத்திற்காக நாங்கள் பேசுகிறோம் என்று நீங்கள்
சொல்வது நியாயம் அல்ல. அதோடு படித்து விட்டு பேசுங்கள்
என்றால் ஏதோ நாங்கள் படிக்காமல் இங்கே பேசுகிறோம் என்று
பொருளாகிறது. உங்களுக்கிருக்கிற அறிவு எங்களுக்கு இல்லா
மல் இருக்கலாம் ; ஆனால் படிக்காமல் பேசுகிறோம் என்று நீங்கள்
சொல்ல முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சிலர் படிக்காமல்தான் பேசு
கிறார்கள். அதைச் சொல்ல வேண்டி தான் இருக்கிறது.
அப்படிப் படிக்காமலே பேசுவதினால்தான் சில விவகாரங்களே
இங்கே வருகின்றன. அதைத் தவிர்க்கலாம் என்று சொன்னேன்.
திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களாலே
கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதாவை ஆதரித்து ஒரு
சில கருத்துக்களை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். காரணம்
பல திட்டங்கள் நாம் தீட்ட வேண்டி இருக்கிறது. பல லட்சக்
கணக்கான வீடுகள் கட்ட வேண்டிய சூழ்நிலையில் திட்டங்கள்
போட்டுக் கொண்டிருக்கிறோம். ஏழை எளிய மக்களுக்கு



1987 நவம்பர் 17] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

**வாழ்வு** கொடுப்பதற்காக, ஏழை எளிய மக்களுக்கு நல்ல வசதி
யான வீடுகளை கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதற்காக அந்த
நிர்வாகத்தின் பொறுப்பிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற
காரணத்தாலே தான் அங்கே நிர்வாக இயக்குநரை நியமிப்
பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைக்
கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகையினால் ஏற்கனவே நாம்
போட்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். அத்தோடு
இன்னும் பல திட்டங்கள் போட வேண்டி இருக்கிறது. பல
கோடிக்கணக்கான பேர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டிய
சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். ஆகவே ஒரு யூனிட்டை
போய்ப் பார்க்க வேண்டுமென்றால் செயலாளரோ அமைச்சரோ
சென்று பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆகவேதான் ஒரு
நிர்வாக இயக்குநரை நியமித்து ஆங்காங்கே ஓடோடிச் சென்று
அந்த வேலைகளைப் பார்ப்பதற்காக அந்த நிர்வாக இயக்கு
நரைப் போடுவதை எங்களுடைய கட்சியின் சார்பிலே முழு மன
தோடு ஆதரித்து இந்த பில்லை வரவேற்று என்னுடைய உரையை
முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, இந்த சட்டமுன்வடிவின் மீது ஒரு சில கருத்துக்களை
எடுத்து வைக்க விரும்புகிறேன். இங்கே மேலாண்மை இயக்கு
நரை நியமிக்க வேண்டும் என்ற சட்ட முன்வடிவைக் கொண்டு
வந்திருக்கிறார்கள். வண்டியை யார் ஓட்டுவது என்பது அல்ல
பிரச்சினை. வண்டியை முறையாக ஓட்ட வேண்டும் என்பது
தான் இப்போது இருக்கிற பிரச்சினை. யார் எம்.டி. யாக
வருகிறார்கள் என்பதைக் காட்டிலும், வருகிறவர்கள் ஒழுங்காக
நிர்வாகத்தை செய்வார்களா என்பதை நான் சொல்ல வருகிற
போது கடந்த காலத்திலே இருந்த பிரச்சினைகளை சுட்டிக்
காட்டுவது என்னுடைய கடமையாக இருக்கிறது. என்னுடைய
தொகுதியைப் பொறுத்தவரையில் ஒன்றிரண்டு பிரச்சினைகளைச்
சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

தலைவர் அவர்களே இந்தத் துறையைப் பொறுத்தவரையில்
மேலும் விரைவாக, வேகமாகச் செயல்படுவதற்காக எம்.டி. அவர்
களை நியமிப்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நான்
ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல எம்.டி.-க்கள் பல
நிர்வாகங்களில் இருந்து வருகின்றார்கள். அவர்களால்

[திரு. ஆ. நடராசன்] [1987 நவம்பர் 17

நிர்வாகம் சீர்குழிகிற நிலைமையை நாம் பார்க்கிறோம். ஆகவே இந்த வாரியத்தைப் பொறுத்த வரையில் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப்போல என்னுடைய தொகுதியில் பல் வேறு வீட்டுவசதி வாரிய வீடுகள் மிகவும் மோசமான நிலையில் இருந்து வருவதைப்பற்றி காலையில் கேள்வி நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொண்டேன். அதேபோல வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படுகிற வீடுகளுக் குக் கொடுக்கப்படுகிற ரிசர்வ் சைட்டுகளில் பள்ளிக்கூடம் கட்டு வதற்குக் கூட பணம் கேட்கிற நிலைமை இருந்து வருகிறது. ரிசர்வ் சைட் என்று விடப்படுகிற இடத்தில் பள்ளிக்கூடம் கட்டு வதற்கு லட்சக்கணக்கான ரூபாய் கேட்கப்படுகிற நிலைமை இருக்கிறது. உதாரணமாக கோவைப்புதூர் என்று ஒரு பகுதி என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அங்கே உயர்நிலைப் பள்ளிக்கூடம் கட்டுவதற்கும், அதேபோல குறிச்சி ஹவுசிங் யூனிட்டில் ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதற்கும் ரிசர்வ் சைட் என்று ஒதுக்கப்பட்டும், அதற்கு லட்சக் கணக்கான ரூபாய் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கேட்கப்படுகிறது. எனவே இவற்றை யெல்லாம் மாற்றுவதற்கு எம்.டி.-யை நியமித்தாலும் சரி, யாரை வைத்தாலும் சரி, பணிகளை முறையாகச் செயல்படுத்துவதற்கு ஆக்கப்பூர்வமான காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் நினைக்கிறேன்; இன்றைக்கு வந்திருக்கிற சட்டத் திருத்தங்களில் மிக எளிமையானதும், மிகவும் குறைந்த அளவு திருத்தத்தோடு வந்திருக்கிறதுமான சட்ட திருத்தமாகும் இது. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சுப்பராயன் அவர்களும், திரு. ஆறுமுகம் அவர்களும் ஏன் இதற்கு கோபித்துக் கொண்டு போகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இந்த சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறபோது இதிலே காரண காரிய விளக்கத்திலே சொல்லியிருப்பதைப்போல, 1978-ம் ஆண்டு வரையில் இதிலே ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பொறுப்பிலே இருந்தார் கள். அதற்குப் பின்னாலே அரசு அலுவல் சார்பற்றவர்கள் தலைவ ராக நியமிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் அவர்களுக்குத் துணை நிற்பதற்கும், முன்பு இருந்ததை விட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏறக்குறைய 30 லட்சம்



1987 நவம்பர் 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

வீடுகள் மூன்று ஆண்டுகளில் கட்ட வேண்டுமென்று அறிவித்து இருப்பதை ஒட்டியும், ஆண்டிற்காண்டு தேவையின் அடிப்படை யில் அரசு அலுவலர் குடியிருப்புகள், அதைப்போல பொது மக்களுக்காகக் கட்டப்படுகிற வீடுகள் முன்பு இருந்ததை விட அதிகமாக வேண்டுமென்று பணிகள் நடக்கிற காரணத்தாலும், உலக வங்கியின் குழுவும் ஒரு மேலாண்மை இயக்குநரை நியமிக்க வேண்டுமென்று ஆலோசனை கூறியிருக்கிற அடிப்படையிலும், மற்ற வாரியங்களில் இதுபோன்று மேலாண்மை இயக்குநர் இருப் பதை மனதிலே கொண்டும், இங்கே வீட்டு வசதி வாரியத்திலும் ஒரு மேலாண்மை இயக்குநர் நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே இருக்கிற 1961-ம் ஆண்டு சட்டத்திலே இந்தத் திருத்தத்தை கொண்டு வருகிறோம். அவ்வளவுதான். இதை ஏற்றுக்கொண்டு ஆதரித்த, அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் மற்ற குறைபாடுகளைப் பேசுவ தாக இருந்தால், தொகுதியில் நடைபெறவேண்டிய வீட்டு வசதி வாரியப் பணிகளாக இருந்தாலும் சரி, அல்லது வீட்டு வசதி வாரியப் பணிகளில் ஏதாவது குறைபாடுகள் இருந்தாலும் சரி, அவற்றைக் கூறவேண்டுமென்று நினைப்பார்களானால் அதற்கு ஏராளமான வழிமுறைகள் இருக்கின்றன. கேள்விகள் மூலமாக பதில் பெறலாம். ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் போன்றவற்றில் பேசலாம். அதைப்போல மானியக் கோரிக்கையில் கருத்துக்களைத் தெரிவிக்கலாம். இப்படிப் பல்வேறு வாய்ப்புகள் மூலமாகத் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னால அரசாங்கத்தின் பதிலை தாங்கள் சொல்லவும் வாய்ப் பாக இருக்கும். சட்டமுன்வடிவில் தாங்கள் சொன்னதைப் போல வேறு விவாதங்களுக்கு வாய்ப்பில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறதைப் போல ஏதாவது குறைபாடுகள் இருக்குமானால் அவர்கள் தெரிவித் திருக்கிற அடிப்படையில் அவற்றையெல்லாம் நிவர்த்தி செய்ய நடவடிக்கையெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்று; நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : "1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டுவசதி வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 43/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

[பேரவைத் தலைவர்] [1987 நவம்பர் 17

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 47 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டுவசதி வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 43/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

(மாலை 6-00)

**(ஆஆ) தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.**

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்துதல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 1987 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1987)-ம் 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொளிப்

* 12—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1987 நவம்பர் 17] [பேரவைத் துணைத் தலைவர்]

(வீடியோ) பேழைப் பதிவுக் கருவிகள் V.C.R. மூலமாக தொலைக் காட்சித் திரையில் திரைப்படங்கள் திரையிடப்படுவதை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1987)-ம் சேர்த்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறுகின்றன. உறுப்பினர்கள் இரண்டு சட்ட முன்வடிவுகளின் மீதும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் திரைப்படத் துறை, கலைத் துறை பாதிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையில் அதைப் பாது காக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு கொண்டு வரப்பட் டிருக்கிற சட்டத் திருத்தமாகும் இந்தத் திருத்தம். 1984 ஆம் ஆண்டு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபோதே, தமிழகத்தி னுடைய முதல்வர், தமிழக மக்களின் நம்பிக்கையைப் பெற் றிருக்கிற சரித்திர நாயகன், புரட்சித் தலைவர் அவர்கள், இந்த நாட்டின் பண்பாட்டையும், கலாசாரத்தையும், நாகரீகத்தையும், மொழி வளர்ச்சியையும் கலைத்துறையின் மூலமாக நாட்டுக்குச் சொல்வதுதான் சாலச்சிறந்த ஒன்றாகும் என்ற அடிப்படையிலே இந்தக் கலைத்துறைக்கு என்னென்ன சங்கடங்கள் ஏற்பட்டாலும் அந்தச் சங்கடங்களைத் தீர்த்து வைப்பதிலே தலையானவராக இருந்து செயல்படுகிறார் என்ற நம்பிக்கையிலேதான் இந்தியத் துணைக் கண்டத்திற்கு வழிகாட்டுகிற விதத்தில், 1984 ஆம் ஆண்டு இந்தச் சட்டத்தை முதன் முறையாகக் கொண்டுவந் தார்கள். அதிலேயிருக்கிற கடுமை போதாது என்று, இன்றைக்கு மூன்றாண்டுக்காலம் கழித்து—தமிழ்நாட்டில் இந்தச் சட்டத்தின் மூலமாக எடுக்கப்பட்டு இருக்கிற நடவடிக்கைகளின் மூலமாக ஓரளவிற்கு வீடியோ திருட்டுகள் குறைக்கப்பட்டு இருந்தாலும் முழுமையாகத் திரைப்படத்துறைக்கு பாதுகாப்பு ஏற்படவில்லை என்பதை உணர்ந்துதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக் கிறார்கள். என்னதான் சட்டத்தைக் கொண்டு வந்தாலும், இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகிற அதிகாரிகள் அதிலே கடுமை குறைவாக நடந்து கொள்வதாலும் அதிலே இருக்கக்

கூடிய சலுகைகளைப் பயன்படுத்திக்கொண்டு, சட்டத்தை உடைப்பதுபோல் உடைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

கடந்த மூன்றாண்டுக் காலத்தில் இப்போதுதான் தூக்குக் குடியில் ஒருவர் கைது செய்யப்பட்டு, இதனால் அவர்கள் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறார்கள். இதனால் திரைப்படத் துறைக்கு ஒரு வலுவான ஆதரவு கிடைத்திருக்கிறது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்துதான் தமிழக முதல்வர் அவர்கள் இதிலே திருத்தங்களைக் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

இன்றைக்கு இந்தத் திருத்தங்களோடு கூடிய இந்தச் சட்டத்தை நான் ஏன் முழுமையாக ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன் என்றால், இன்றைக்கு திரைப்படத்துறையில் பல லட்சக் கணக்கான ரூபாய்களைப் போட்டு திரைப்படம் எடுப்பவர்கள், அது வெளியே வந்து நாட்டு மக்களுக்குச் சென்று அடைவதற்கு முன்னால், திரைப்படத்துறையிலே உள்ளவர்களுக்குச் சேர வேண்டிய பணம் சேருவதற்கு முன்னால், வீடியோ மூலமாக மக்களுக்குச் சென்றடைகிற காரணத்தால், மிகப் பெரிய இழப்பிற்கு அவர்கள் உள்ளாகிறார்கள். அதனால் திரைப்படத்துறையிலே பணியாற்றுகிற தொழில் நுட்ப வல்லுநர்கள், பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதைத்தான் ஃபிலிம் சேம்பர் கூட்டத்திலேகூட இயக்குநர் பாக்கியராஜ் போன்றவர்கள் எல்லாம் கூறியிருக்கிறார்கள்.

இன்றைக்கு கர்நாடக மாநிலத்திலே இருப்பதைப்போல சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். கர்நாடக மாநிலத்திலே எப்படியிருக்கிறது என்றால் பிறமொழிப் படங்களை வீடியோ மூலம் நாட்டு மக்களுக்குக் காட்டலாம், வீடியோ வைத்துக் கொள்ளலாம், ஆனால் கன்னட மொழிப் படத்தை மட்டும் வீடியோ மூலம் வைத்துக்கொள்ளக் கூடாது, வீடியோ மூலம் அந்தப் படத்தை எடுக்க உரிமையாளர்களுக்குக் கூட உரிமை தரக்கூடாது என்று சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.



இதனால் ஒட்டுமொத்தமாக கர்நாடக மாநிலத்திலே கன்னட மொழிப் படம் வீடியோ கேசட் மூலமாக பதிவு செய்யப்பட்டு தரப்படுவதில்லை, காட்டப்படுவதில்லை. இதனால் அந்த மாநில மொழிப் படங்களுக்கு முழுப் பாதுகாப்பு ஏற்படுகிறது. அதைப் போல இந்தியிலே எடுக்கப்படுகிற படமாக இருந்தாலும் சரி, ஆங்கிலத்திலே எடுக்கப்படுகிற படமாக இருந்தாலும் சரி, அந்தப் படங்கள் எல்லாம், அந்தந்த மாநிலங்களிலே ஓடி, அவர்களுக்குப் போதுமான நிதியைப் பெற்றுத் தந்ததற்குப் பின்னாலேதான், நமக்கு வந்து சேருகின்றன. இப்படிப்பட்ட படங்கள் நம்முடைய மாநிலத்திற்கு வந்து ஓடுவதால், அவைகள் எந்தப் பெரிய பாதிப்பையும் இந்தத் திரைப்படத் துறையில் ஏற்படுத்திவிட முடியவில்லை. ஆனால் இந்த மாநிலத்திலே, இந்த மாநில மொழியிலே எடுக்கப்படுகிற படங்கள் வீடியோ மூலம் போகிற போது, இந்தப் படத்தை எடுத்த உரிமையாளர்களுக்கும், படவினியோகஸ்தர்களுக்கும் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்திவிடுகிற காரணத்தால், இந்தச் சட்டத்தைக் கடுமையாக ஆக்குவதைவிட, முழுமையான ஒரு சட்டமாக, முழுமை பெற்ற ஒரு சட்டமாகக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும், தமிழ்நாட்டில் தமிழில் எடுத்து வெளியிடப்படுகிற படங்களை வீடியோ மூலம் காட்ட உரிமை தரக்கூடாது, காட்டவும் கூடாது என்று சொல்லி, ஒரு நிர்ணயமான சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் மூலமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதனாலே ஒட்டுமொத்தமாக வீடியோவுக்கு நான் எதிரி என்று சொல்ல விரும்பவில்லை. வீடியோ கேசட் வைத்து நடத்துபவர்கள் ஒட்டுமொத்தமாக இந்த நாட்டுக்கு சேவை செய்யவில்லை என்று நான் சொல்லமாட்டேன். 1984 ஆம் ஆண்டு நாட்டு மக்கள் மத்தியில் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் அமெரிக்காவில் இருந்தபோது அவர் எப்படி இருக்கிறார் என்பதைப்பற்றி மிகத் தவறான தகவல்களை எல்லாம் தந்தார்கள். இந்த நாட்டு மக்கள் மத்தியில் மிகப் பெரிய விளம்பரத்தைச் செய்தார்கள். அவர் நன்றாக இல்லை, நாட்டுக்குத் திரும்பமாட்டார் என்ற அளவுக்கு எல்லாம் செய்திகளைச் சொன்னார்கள். இல்லை, இல்லை மிக நன்றாக இருக்கிறார்

நாயகர் திரும்புவார், நலமோடு வருவார் என்று அன்றைக்கு செய்தித் துறை அமைச்சராக இருந்த அண்ணன் திரு. ஆர்.எம்.வீ. அவர்கள் வீடியோ கேசட் மூலமாக நாட்டு மக்கள் மத்தியில் அதைப் பரப்பி தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களைப் பற்றி ஒரு உண்மையான தகவலைத் தருவதற்காக இந்த வீடியோ கேசட்டுகள் பயன்படுத்தப்பட்டன. * * வீடியோ, வெளி நாட்டிலே நடைபெறுகிற நிகழ்ச்சிகளை நம் நாட்டுக்குத் தகவலாக தெரிவிப்பதற்குப் பயன்படுகின்றன. ஆகவே அதை எல்லாம் வரவேற்கலாம்.

ஆனால் அதே நேரத்தில் இன்றைக்கு இந்தச் சட்டத்திற்கு உள்ளிட்டப் பகுதியாக இல்லாவிட்டாலும்கூட இதோடு ஒன்றி இருக்கிற பகுதியாக இருக்கிற காரணத்தால் பேசுகிறேன். ஒவ்வொரு மாநிலத்திலும் தொலைக்காட்சி நிலையத்தால் 2-வது சானலை ஆரம்பிக்கிறபோது அதை அந்த அந்த மாநில சர்க்காரின் உரிமைக்கு விட வேண்டும். மாநில சர்க்கார் நிர்வாகத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று மாநில சர்க்கார்கள் எல்லாம் கேட்டதை எல்லாம் மத்திய அரசு நிராகரித்து இருக்கிறது. அதை அருள்கூர்ந்து வாபஸ் வாங்கிக்கொண்டு அந்த அந்த மாநிலத்திற்கு அந்த 2-வது சானலை ஒதுக்கவேண்டும். அதற்கு என்று, மாநிலத்திற்கு என்று தனியாக ஒரு நிர்வாகக் குழுவை ஏற்படுத்தி அதன் மூலமாக . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டி.வி. தரும் தகவல் என்று பேசியதை நீக்கிவிடும்படி உத்திரவிடுகிறேன். வீடியோவைப்பற்றி மட்டும் பேசுங்கள்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** காரணம் வீடியோவைப்பற்றித் தான் சொல்லுகிறேன். தொலைக்காட்சி நிலையத்தின் மூலமாக மத்திய அரசாங்கம், அவர் மட்டும்தான், அவருடைய ஆட்சியினுடைய திட்டங்கள், அவருடைய ஆட்சியினுடைய தன்மைகள் பற்றி மட்டும்தான் சொல்ல முடியும் என்ற நிலை இருக்கும்போது மாநில அரசுக்கு உரிமை இல்லாமல், மாநில அரசினுடைய எண்ணத்திற்கு 2-வது சானலை விடுமாறு அனைத்து மாநில முதலமைச்சர்களும் . . . . (குறுக்கீடு) வீடியோ மூலம் செய்திப் படமாக ஆக்க வேண்டும் என்று சொல்லுவதற்காக வருகிறேன். முழுமையும் கேட்டுவிட்டு அதிலே பொருள் இருக்கிறதா

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



என்பதைப் புரிந்துகொண்ட பின்னால் அதைப்பற்றிப் பேசலாம். (குறுக்கீடு) ஏன் வீடியோ தேவை என்பதைப் பற்றி பேசுகிறேன். (குறுக்கீடு) வீடியோ எதற்காகத் தேவை என்றால் மத்திய அரசு அதிகாரத்திலுள்ள தொலைக்காட்சியின் மூலமாக மாநிலத்தி னுடைய திட்டங்கள், அதனுடைய ஆட்சியின் தன்மைகளை வெளிப்படுத்துவதற்கு, பரப்புவதற்கு வழி இல்லாத நிலையில் இரண்டாவது சானலையும் அனுமதிக்காதபோது வீடியோ மூலமாக தமிழக அரசும் அந்த அந்த மாநில அரசுகளும் தனியாக அவர்கள் வீடியோ கேசட் மூலமாக ஆட்சியின் திட்டங்களையும், மொழியின் தன்மைகளையும் இந்த நாட்டின் வளத்தைப் பற்றியும் நாட்டுக்குச் சொல்லுவதற்குப் பயன்படுத்தலாம் இந்த வீடியோ மூலம் என்று சொல்ல விரும்புகிறேன். அதற்காகத்தான் சொல்ல வந்தேன். முழுமையாகக் கேட்ட பின்னால்தான் அதிலே நியாயம் . . . . (குறுக்கீடு) ஆக அந்த அளவுக்குப் பயன்படுத்து வதற்கு உதவியாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கோ. வீரய்யன்:** பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டி.வி.யினுடைய 2-வது சானல் மாநிலத்திற்கு வேண்டும் என்று கேட்கிறாரா? வீடியோவினுடைய 2-வது சானல் வேண்டும் என்று கேட்கிறாரா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கவனிக்க வேண்டும். சொன்னால் நீங்கள் கோபித்துக்கொள்கிறீர்கள். அவர்களே நல்ல விளக்கமாகப் பேசிவிட்டார்கள். அதை அவர் களும் ஒத்துக்கொண்டார்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) டி.வி.யில் அனுமதிக்கவில்லை என்பது பேக்ட். அதனால் வீடியோ மூலம் ஸ்டேட் கவர்ன்மெண்டு புரோகிராமை எல்லாம் போட வேண்டும் என்று அரசாங்கத்திற்கு ஒரு ஆலோசனையாகச் சொல்லுகிறார். நீங்கள் முதலில் சொன்னது கரெக்ட். அதை ஏன் சொல்லுகிறேன் என்பதை மிகவும் தெளிவாக விளக்கமாக விளக்கிவிட்டார் திரு. இராமலிங்கம். ஆகவே திரு. இராமலிங்கம் அவர்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீடியோவை நடத்துகிறவர்கள் வீடியோவை எடுத்து நாட்டுக்குத் தருகிறவர்கள் சினிமாட்

படத்தை மட்டும்தான் எடுத்து நாட்டிற்குத் தந்து சம்பாதிக்க வேண்டும் என்ற அவசியத்தில் இல்லாமல் குழந்தைகளுக்குப் படிப்பை சொல்லிக் கொடுப்பதற்கு அல்லது கல்லூரிக் கல்வியைக் கொண்டு வந்து சொல்லுவதற்கு, அன்றாட விஞ்ஞானத் துறையில் ஏற்படுகிற மாற்றங்களை எல்லாம் நாட்டு மக்களுக்குச் சொல்லுவதற்காகப் பயன்படுத்துவதற்காக அந்த வழி முறைகளில் செய்வதற்காக உதவ வேண்டும். அதற்கு அரசாங்கமே அவர்களுக்கு நிதியினைத் தந்து அதைச் செயல் ஆக்கலாம். இன்றைக்குத் தொலைக்காட்சி நமக்கு உதவாதபோது, தொலைக் காட்சி நம்முடைய நாட்டிற்கு, நம்முடைய மொழிக்கு நம்முடைய இனத்திற்கு, நம்முடைய அரசாங்கத்திற்கு உதவிகரமாக இல்லாதபோது இந்த வீடியோ மூலமாக பல்வேறு உண்மைச் செய்திகளை வெளிநாட்டிலிருந்து வருகிற செய்திகளை, வீர இளைஞர்கள் பற்றியும், அவர்கள் ஆற்றியிருக்கிற செயல்கள் பற்றியும் மக்களுக்குச் சொல்லுவதற்கும், அதைத் தலைமை தாங்குகிற ஒரு தன்னலம் அற்ற தியாகிகளைப் பற்றியும் ஒழுங்கான பிரச்சாரத்தைச் செய்வதற்கு இந்த வீடியோவைப் பயன் படுத்தலாம் என்று சொல்லி இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

(இரவு 6-10)

**திரு. எம். செல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு .... (குறுக்கீடு).

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் செல்லமுத்து அவர்கள் பேச்சைத் துவங்கியதற்குப் பிறகு நான் இடையில் பேசுகின்ற நிலை ஏற்பட்டதற்காக வருந்துகிறேன். ஆனாலும் முறைப்படி பேசுவதற்கு தங்கள் அனுமதி பெற்றுப் பேசுகிறேன். இங்கே நம்முடைய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சகோதரர் திரு. இராமலிங்கம் அவர்கள் பேசுகின்றபோது இந்த விஞ்ஞான யுகத்திலே வீடியோ எந்த அளவிற்கு இன்றியமையாதது; தவிர்க்க முடியாதது என்பதை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். * * என்று நம்முடைய மாண்புமிகு

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது வரவேற்கத் தகுந்த கருத்துத்தான். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னொரு உறுப்பினர் பேசியதற்கு நீங்கள் நோக்கம் கற்பிக்கக் கூடாது. அவர் அப்படிப்பட்ட நோக்கத்தில் பேசவில்லை என்று சொல்கிறார். அப்படி இருந்தால், அந்த நோக்கத்தில் அவர் பேசினார் என்ற அந்த ஒரு வரியை எடுத்து விடலாம்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, ஒரு அரசாங்கத்தினுடைய ஆதரவாக ஆளும் கட்சிக்காரர்கள் வீடியோவை, கருத்துக்களைச் சொல்லப் பயன்படுத்தலாம். ஒரு அரசாங்கத்தினுடைய தவறுகளைச் சுட்டிக்காட்டி மக்கள் மத்தியிலே ஒரு எழுச்சியை ஏற்படுத்துவதற்கு எதிர்க்கட்சிக்காரர்கள் வீடியோவைப் பயன் படுத்தலாம். சமூக சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வீடியோவைப் பயன் படுத்தலாம். விஞ்ஞானக் கருத்துக்கள், அதுபோன்ற பல்வேறு கருத்துக்களின்மூலம் அறிவு வளர்ச்சிக்கு வீடியோ துணையாக இருப்பதை இந்த யுகத்திலே யாரும் தவறு என்று வாதிட மாட்டார்கள். எனவே அந்த அடிப்படையில் நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன். இங்கேகூட நம்முடைய அரசாங்கம் ஒரு சட்டம் போட்டிருக்கிறது. வீடியோ படம் காட்டவேண்டுமென்று சொன்னால், அதற்கு என்னென்ன இருக்க வேண்டுமென்ற விதிகளை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். Copyrights from the Owne அதாவது எந்தப் படம் எடுக்கப்படுகிறதோ, அந்தப் படத்தினுடைய 'காப்பிரைட்டை' ப்ரொட்யூசரிடமிருந்து வாங்க வேண்டும். அவருடைய consent letter' அதாவது சம்மதக் கடிதம் பெற்றிருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் அது 'சென்சார்' செய்யப்பட்டதாக இருக்கவேண்டும்; தணிக்கை செய்யப்பட்டதாக இருக்கவேண்டும்.

அதுமட்டுமல்லாமல். அரசு அதைக் காட்டுவதற்கு அனுமதிக்க வேண்டும். உதாரணமாக இந்தத் துறையின் அமைச்சரவர்கள் இருக்கிறார்கள். சிலர் படம் எடுத்து அதைப் போடுகிறார்கள். பொது அமைதிக்கு ஆபத்தானது, அதைப் போடக்கூடாது, தணிக்கை கிடையாது என்று சொல்லிவிட்டால், அது சரி என்று ஒருவர் எடுக்கிற படத்தை அமைச்சர் அவர்கள் விருப்பு வெறுப்

[திரு. அ. ரகுமான்கான்] [1987 நவம்பர் 17

புக்கு உட்பட்டு, அவருடைய கருத்திலே அது பொது அமைதிக்கு
ஆபத்து என்று சொல்வார்களேயானால், அதைச் சட்டப்படி
வீடியோவில் போட முடியாது. ஆகவே இவைகள் எல்லாம் சட்ட
மீறல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது எற்கெனவே இந்த
அவையில் விவாதிக்கப்பட்டது. நான் அந்த சர்ச்சைக்குள்
போக விரும்பவில்லை. ஆக சட்டபூர்வமாக வீடியோ காட்டு
வதிலே தப்பில்லை என்று சொல்லப்படுகிறது நான் பேசுகிற
போது இதே சபையில் சொன்னேன். 'கன்சென்ட்' லெட்டர்
வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இங்கிலீஷ் படம் இங்கே
போடுகிறார்கள். இதற்குப் போய் எப்படி 'கன்சென்ட்'
வாங்குவது என்று கேட்டேன்.

அதுபோலவே பல்வேறு பிரச்சினைகளை எல்லாம் இப்போது
திரும்பவும் பேச வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன்.
ஆனாலும் மொத்தத்தில் சட்டப்பூர்வமாக வீடியோ காட்டப்படு
வதை யாருமே எதிர்க்கவில்லை. சட்டப்படி வீடியோ லைப்ரரி
நடத்தப்படுவதை யாரும் தப்பு என்று சொல்லவில்லை. ஆனால்
இப்போது பிரச்சினை என்பது இந்த மசோதாவைக் கொண்டு
வருவதற்கு அடிப்படைக் காரணமே, திருட்டு வீடியோக்கள் இன்
றைக்கு நாடு முழுவதும் இருக்கின்றன. அது ஒழிக்கப்பட
வேண்டும். குறிப்பாக சினிமாத் துறை. நம்முடைய சினிமாத்
துறையைப் பொறுத்தவரையில், படத் தயாரிப்பாளர்கள் மட்டும்
இந்தத் திருட்டு வீடியோக்களினால் பாதிக்கப்படுகிறார்கள் என்று
கருத முடியாது. பல இலட்சம் போட்டு அவர்கள் படம் எடுக்கி
றார்கள். அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். நடிகர்கள்,
நடிகைகள் பாதிக்கப்படுகிறார்கள். அது மட்டுமல்ல, அதே
நேரத்தில் இந்த சினிமா இண்டஸ்ட்ரீசில் ஆயிரக்கணக்கான
தொழிலாளர்கள் பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த
படம் எடுக்கக்கூடிய சினிமா, இங்கே இந்த திருட்டு வீடியோக்களி
னாலே மிகப் பெரிய நஷ்டத்திற்கு உள்ளாகிறது. கலைத் துறை
மிக முக்கியமான துறை. ஒருமுறை பேரறிஞர் அண்ணா
அவர்கள் சொன்னார்கள், 2, 3 சினிமாப் படங்களுக்கு கதை
வசனம் எழுதினால் நன் திராவிட நாடே வாங்க முடியும் என்று
சொன்னார்கள். அந்த அளவிற்கு அது ஒரு மாஸ் மீடியா,
மக்களிடத்திலே கருத்துக்கள் போய்ச் சேருகின்ற இடம். அதை
சினிமாத்துறை பாதிக்கப்படாமல் திருட்டு வீடியோ ஒழிக்கப்பட
வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க
முடியாது.



1987 நவம்பர் 17] [திரு. அ. ரகுமான்கான்]

இரண்டாவது சினிமா தியேட்டர்கள் இன்றைக்கு மிகப் பெரிய
அபாயகரமான கட்டத்திலே இருக்கின்றன. திருட்டு வீடியோக்கள்
உலவுகின்ற காரணத்தினாலே பல தியேட்டர்கள் இன்றைக்கு
மூடப்படுகின்ற நிலைமைகளை நாம் பார்த்துக்கொண்டிருக்
கிறோம். உதாரணமாக கோலாலம்பூர், சிங்கப்பூர் போன்ற நாடு
களுக்குப் போய் வருபவர்களுக்குத் தெரியும். அங்கே அதிகமாக
சினிமா தியேட்டர்களே கிடையாது. சினிமாவே பார்க்க
முடியாது தியேட்டர்களில். காரணம் அவர்கள் இந்தத் திருட்டு
வீடியோக்கள் மூலமாக அவர்கள் வீடுகளிலே பார்க்கிறார்கள்.
சிங்கப்பூரிலே 4, 5 தியேட்டர்கள்தான் நான் பார்த்தேன். கோலா
லம்பூர், மலேசியா முழுவதும் தியேட்டர்களே கிடையாது.
பெரும் அளவிற்குக் கிடையாது. எல்லாம் மூடிக் கிடக்கின்றன.
ஆகவே இதற்குக் காரணம் திருட்டு வீடியோக்கள்தான். சிங்கப்
பூரில் என்ன நிலைமையோ, மலேசியாவில் என்ன நிலைமையோ
அதேபோன்ற நிலைமை இங்கே தமிழ்நாட்டிலே வந்துவிடுகின்ற
அபாயம் இருக்கிறது. காரணம் இந்த திருட்டு வீடியோக்களி
னால். எனவே இந்த அரசாங்கம் திருட்டு வீடியோக்களை
ஒழிக்க வேண்டும் என்பதற்காகக் கொண்டு வருகின்ற சட்டம்
சரியாக இருக்க வேண்டும். நடைமுறையிலே அமுல்படுத்தப்பட
வேண்டியதாக இருக்க வேண்டும். ஆனால் இதுவரைக்கும்
அரசாங்கம் இதிலே சரியான கவனம் செலுத்தியிருக்கிறதா
என்றால் கிடையாது. அன்றாடம் திருட்டு வீடியோப் படம்
ஓடிக்கொண்டுதான் இருக்கிறது.

அண்மையிலே மனிதன் என்ற ஒரு படம். அதை எப்படி
திருட்டு வீடியோவாக எடுத்தார்கள் என்பதை எல்லாம் அந்த
படத் தயாரிப்பாளரே கண்டு பிடித்தார். அரசாங்கம் கண்டு
பிடிக்கவில்லை. அரசாங்கத்தின் சட்டமும் கண்டுபிடிக்கவில்லை.
அமைச்சரிடத்திலே புள்ளிவிவரம் இருக்கும். நான் தெரிந்து
கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே சட்டம் கொண்டு வந்த
தற்குப் பிறகு எத்தனை திருட்டு வீடியோக்களை கண்டுபிடித்
திருக்கிறார்கள்? அந்தப் புள்ளிவிவரம் இருந்தால் சொல்லுங்கள்.
எத்தனை திருட்டு லைப்ரரிகளை நீங்கள் கண்டு பிடித்து வழக்கு
போட்டு இருக்கிறீர்கள்? அதிலே தண்டனை அடைந்தவர்கள்
எத்தனை பேர்கள்? நீங்கள் ஏற்கனவே கொண்டு வந்த சட்டம்
உண்மையான நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட சட்டமாக—
எஃபக்ட்டிவ் என்போர்ஸ்மெண்ட்டாக இருக்குமானால் நிச்சய

மாக இந்த அளவிற்கு எண்ணிக்கையில் திருட்டு வீடியோக்கள்
வளர்ந்து கொண்டே இருக்காது. எனவே அதை செக்-அப்
செய்வதற்கு ஒரு சட்டம் கொண்டுவர வேண்டும். சகோதரர்
இராமலிங்கம் அவர்கள் பெங்களூரைச் சுட்டிக்காட்டினார்கள்.
கர்நாடகத்திலே திருட்டு வீடியோக்கள் கிடையாது. மி[illegible]
பெர்சன்ட்டேஜ் வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் எனக்குத்
தெரிந்த அளவிலே, திருட்டு வீடியோக்கள் அங்கே இல்லாத
அளவிலே சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அதுபோன்ற
சட்ட சீர்திருத்தத்தை நீங்கள் ஆராய்ந்து கொண்டுவர வேண்டும்.
இதற்கு முன்பு ஒரு வீட்டிலே திருட்டு வீடியோ இருக்கிறதா
இல்லையா என்று பார்க்கின்ற அதிகாரத்தை அசிஸ்டெண்ட்
கமிஷனரிடம் கொடுத்திருந்தீர்கள். கிராமங்களிலே டி.எஸ்.பி.,
கையிலே கொடுத்திருந்தீர்கள். ஆனால் இப்போது அந்த
அதிகாரத்தை யாரிடம் கொடுக்கிறீர்கள் என்றால் இன்ஸ்பெக்டர்
ஆஃப் போலீஸ்—ஒரு இன்ஸ்பெக்டரிடம் கொடுக்கிறீர்கள்.

உதாரணமாக சென்னையிலே இருக்கும் பெரும்பான்மையினர்
டி.வி. வைத்திருக்கிறார்கள். அதில் குடும்பத்தைச் சார்ந்தவர்
களும் இருக்கிறார்கள். திடீரென்று எத்தனை மணிக்கு வேண்டு
மானாலும் இந்த இன்ஸ்பெக்டர், வீட்டுக் கதவைத் தட்டி, உங்கள்
வீட்டிலே திருட்டு வீடியோ இருக்கிறதாமே, வீ. சி. ஆரிலே
சட்டவிரோதமாக நீங்கள் படம் பார்க்கிறீர்களாமே, எனவே
உங்களை நான் கைது செய்கிறேன் என்று சொல்லி, அவர்களை
மிரட்டி, அதற்கு ஏதாவது லஞ்சமாகக் கொடுங்கள் என்று கேட்டு
பயமுறுத்துகின்ற வாய்ப்பு இருக்கிறது. இது போன்ற தவறான
காரியங்களில் இரவு ஒரு மணிக்கோ அல்லது இரண்டு மணிக்கோ
குடும்பம் உள்ள வீடுகளில் அத்துமீறி போலீஸ்காரர்கள் உள்ளே
நுழைவதற்கு வாய்ப்பு இருக்கிறது; லஞ்சம் வாங்குவதற்கு
வாய்ப்பு இருக்கிறது; அவர்களை மிரட்டுவதற்கு வாய்ப்பு இருக்
கிறது. எனவே கரப்ஷன் அண்டு மிஸ்யூஸ் ஆஃப் பவர் என்பது
ஏ.சி. அல்லது டி.சி. கையிலே இல்லாமல் அதை காவல் துறையிலே
உள்ள இன்ஸ்பெக்டர்கள் கையிலே நீங்கள் கொடுப்பதினால்—நான்
காவல்துறையைச் சேர்ந்த எல்லா இன்ஸ்பெக்டர்களையும் தவறா
னவர்கள், குற்றவாளிகள் என்று சொல்லவில்லை, நான் அவர்
களுடைய உரிமைக்காக இந்த அவையிலே குரல் கொடுக்கக்கூடிய
ஒரு இயக்கத்தைச் சார்ந்தவன் — அந்த அபாயம் இருக்கிறது
என்பதை நாம் கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது.





ஆகையினால் அந்த அபாயத்திலிருந்து மக்களுக்கு பாதுகாப்பு
வேண்டும். அதே நேரத்தில் திருட்டு வீடியோக்கள் ஒழிக்கப்பட
வேண்டும். அதற்கு அரசாங்கம் நல்ல ஆலோசனையை மேற்
கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே இன்னும் ஒன்றை நான் தெரிவித்துக்கொள்
கிறேன். அஃபென்ஸ் என்று சொல்லி இந்த குற்றம் செய்பவர்
களுக்கு இரண்டாண்டு சிறைத்தண்டனை, 5,000 ரூபாய் அபராதம்
என்று கொடுத்து இருக்கிறீர்கள். ஆனால் ஒன்றை மட்டும் நான்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். துணைத் தலைவர் அவர்
களே, சட்டம் போட்டுவிட்டதனால், திருட்டு வீடியோக்களை
ஒழித்துவிட்டோம் என்ற முடிவிற்கு வந்து நீங்கள் பாராட்டு
பெற முடியாது. சட்டத்தின் மூலமாகவே எல்லா காரியங்களை
யும் சாதித்துவிட முடியாது. இன்னும் சொல்லப்போனால்,
இந்த நாட்டிலே பலர் பத்தினிகளாக இருப்பதற்குக் காரணம், பல
தாய்மார்கள் கற்புக்கரசிகளாக இருப்பதற்குக் காரணம், போலீஸ்
காரர்களுக்குப் பயந்து கொண்டு அல்ல. சட்டத்திற்குப் பயந்து
கொண்டு அல்ல. ஒழுக்கமாக, கற்புக்கரசியாக வாழ்வது ஒரு
ஒழுக்கம் என்ற காரணத்தினால்தான். அதேபோல்தான், சட்டத்
தினால் மட்டும்தான்—சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம்
தடுத்துக் கொண்டே இருக்கிறது என்று சொல்வதைப் போல,
ஒரு புறத்திலே சட்டத்தினைப் போட்டுவிட்டு, அந்தச் சட்டத்தை
சரியாக அமல்படுத்தாமல், உங்களுடைய அதிகாரிகள் சரியாக
அமல்படுத்தாமல். அரசாங்கம் சரியாக அமல்படுத்தாமல் இருக்
குமேயானால், எதிர்பார்க்கிற பலன் கிடைக்காமல் போய்விடும்.

(இரவு 6-20)

ஆகவே, திருட்டு வீடியோக்கள் ஒழிக்கப்படுகின்ற முயற்சியில்
கொண்டு வரப்படுகிற இந்தச் சட்டம் மனப்பூர்வமாக நடக்க
வேண்டும், முறையாக நடக்கவேண்டும், அதிகார துஷ்பிரயோகத்
திற்கு இடம் கொடுக்கக்கூடாது. திருட்டு வீடியோக்கள் ஒழிக்
கப்பட வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்
தின் கருத்து. இந்தக் கலைத்துறையிலே ஒரு காலத்திலே மிகச்
சிறப்பு பெற்று விளங்கியவர் நமது முதலமைச்சராக இருக்

கிறார். கலைத்துறை இப்படி சீரழிந்து போவதை அவர் அனுமதிக்கக்கூடாது. நாம்தான் இல்லையே, எக்கேடு கெட்டும் போகட்டும். . .

(மணியடிக்கப்பெற்று, அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப் பெற்றார்.)

* **திரு. எம். செல்லமுத்து :** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்த சினிமா, வீடியோக்கள் திருத்தச் சட்டத்தின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்றைய தினம் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டத்தில், சினிமா பார்ப்பவர்களுக்கும், மற்றைய பொதுமக்களுக்கும் நன்மை பயக்கக்கூடிய முறையில், இந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வரப்படுவதாகவும் அதேபோல் உரிமை மாற்றம் செய்கிறபோது, இரு சாராரும் சேர்ந்து மனுச் செய்யவேண்டும் என்ற வகையில் திருத்தம் கொண்டு வரப்படுவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த வகையிலே இந்தத் திருத்தங்களைக் கொண்டு வந்தாலும், இன்றைக்கு சினிமா பார்க்கக்கூடிய மக்களுக்கு, படம் பார்க்கின்றபோது, நல்ல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. அதன் காரணமாகத் தான் இந்தத் திருத்தச் சட்டம் இப்போது கொண்டு வரப்பட்டதாக, இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் கூறுகின்றது. குறிப்பாக, இன்றைக்கு சினிமா பார்ப்பவர்களுக்கு நல்ல இட வசதி கிடையாது. நகரங்களிலே, பெரிய, பெரிய தியேட்டர்களிலேதான் ஓரளவு வசதிகள் இருக்கின்றனவே தவிர, கிராமப் புறங்களானாலும் சரி, சிறு நகரங்களானாலும் சரி, பேரூராட்சிகளானாலும் சரி, அங்குள்ள திரையரங்கங்களுக்குச் சென்றால், அங்கு இருக்கிற இருக்கைகளை எல்லாம் பார்க்கிறபோது, மூட்டைப்பூச்சித் தொல்லை இருக்கிறது. அங்கே உள்ளபடியே இடவசதிகளுக்கான நல்ல இருக்கைகள் இல்லை. அது மட்டுமல்ல, தரையிலே உட்கார்ந்து பார்க்கிறபோது, அங்கே கிராமங்களிலே இருக்கக்கூடிய திரையரங்குகளில் தரைகள் எல்லாம் புழுதியாக இருக்கின்றன. அதிலே முதல் ஷோ பார்க்கிறவர்கள் எச்சில் துப்புகிறார்கள். . .





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வீடியோக்களைப் பற்றிய பில் இது. நீங்கள் சொல்லுகின்றவைகளை, கலெக்டரிடம் எழுதிக் கொடுத்தால் நடவடிக்கை எடுப்பார். பில்லின் மீது பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. எம். செல்லமுத்து :** 3-வது திருத்தச் சட்டத்திலே, பொது மக்களுக்கு வசதி கொடுப்பதற்கும் என்றுதான் திருத்தமே சொல்கிறது. வீடியோக்களுக்கு வேறு. இந்தத் திருத்தச் சட்டத்திலே மக்களுக்கு வசதி இல்லை என்று சொல்கிறபோது, நம்முடைய வணிகவரித்துறை அமைச்சர், "இரண்டாயிரம் திரையரங்குகளுக்கு மேல் தமிழகத்தில் இருக்கிறது, ஏறத்தாழ 5 இலட்சம் மக்களுக்கு மேல் ஷோ பார்க்கிறார்கள்" என்று சொன்னார்கள். ஆனாலும் இன்றைக்கு திரையரங்குகளிலே பார்க்கிறபோது புழுதியாகவும், இருக்கைகள் சரியானபடி இல்லாமலும், சுகாதாரக் கேடுகள் உள்ளதாகவும், மிகவும் மோசமான அளவில் இருக்கின்றன. அவைகளை எல்லாம் கண்காணிக்கக்கூடிய முறையில் இந்தச் சட்டம் பயன்படவேண்டும்.

அதைப்போல், குடிதண்ணீர் வசதி கூட இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அதையெல்லாம் கவனித்து பொதுமக்கள், படம் பார்க்க வரக்கூடியவர்கள் வசதியோடு அமர்ந்து படம் பார்ப்பதற்கு நல்ல காற்றோட்டமாக, இட வசதிகளும், சுகாதார வசதிகளும் செய்து கொடுக்கக்கூடிய காரியத்தை, இதுவரையிலும் இல்லை என்ற காரணத்தால் இது திருத்தப்படுகிறது ; எனவே, அதைச் செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். அது மட்டுமல்ல. இன்றைக்கு திரையரங்குகளிலே பல தவறான படங்கள் காட்டப்படுகின்றன. அந்தத் திரைப்படக் கருவி என்பதை ஒரு விஞ்ஞான வளர்ச்சியை மக்களுக்குப் போதிக்கக் கூடிய கருவியாகப் பயன்படுத்துவதன் மூலமாகத்தான் சமுதாயம் செம்மையடையச் செய்யமுடியும். ஆனால், சமுதாயத்தைக் கெடுக்கக்கூடிய நோக்கத்தில், சமுதாயத்தில் நல்ல சிந்தனைகள் வரவேண்டாம் என்ற நோக்கத்தில் உருவாக்கி, தீய கருத்துள்ள படங்களைத் திரையரங்குகளில் காட்டுகிறார்கள்.

அதுமட்டுமல்ல, தஞ்சாவூரில் இருக்கின்ற திருவள்ளுவர் திரையரங்கத்தில் ஆபாசப் படங்களைக் காட்டுகிறார்கள் என்று சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் நான் பேசினேன். 4, 5 நாள் அல்லது ஒரு வாரம் பக்திப் படங்களைக் காட்டினார்கள்,

[திரு. ஜி. கே. ஜெ. பாரதி] [1987 நவம்பர் 17

மீண்டும் ஆபாசப் படங்களைக் காட்டுகிறார்கள் என்று என்னிடம் தகவல் சொல்கிறார்கள். இப்படி சினிமா திரையரங்குகளில் ஆபாசத் திரைப்படங்களைக் காட்டி மக்களைத் தவறான திசையில் அழைத்துச் செல்லக்கூடிய நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அளவுக்கு மீறி சீட்டுகளைக் கொடுத்து, சினிமா திரையரங்குகளில் இருக்கை வசதிகளில் ஏதோ மூட்டைகளை அடுக்குவதுபோல் அடைக்கின்ற சூழ்நிலை கூட இருக்கின்றது. குறிப்பிட்ட அளவிற்கு அங்கே அனுமதிக்கப்பட்ட சீட்டுகள் மட்டும் தரப்படுகிறதா என்றால் தரப்படவில்லை. அதற்குப் பதிலாக என்னென்னவோ நடைபெறுகின்றன. இன்றைக்கு அரசியல் எல்லாம் சினிமா திரையரங்குகளில் தான் நடத்தப்படுகின்றன. ரசிகர் மன்றங்கள் வைத்துக்கொள்ளலாம், எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் திரையரங்குகளிலே சினிமா பார்க்கிறபோது, இத்தகைய ரசிகர்கள், திரைப்படம் ஓடிக்கொண்டிருக்கும்போது அங்கே ஏராளமான பூக்களையும் காகிதத் துண்டுகளையும் கொண்டு வந்து, பார்த்துக்கொண்டிருக்கக்கூடிய பொதுமக்கள்மீது தூவுகிறார்கள். அதனால் பொதுமக்கள் எரிச்சல் அடையக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதையெல்லாம் கண்காணிக்கக்கூடிய அளவிலே, திரையரங்குகளில் இவைகளையெல்லாம் கண்காணிப்பதற்கு, உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, வீடியோக்களைப்பற்றி இங்கே பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டன. இன்றையதினம், வீடியோக்கள் மூலமாகத் திரைப்படங்கள் மறைமுகமாக எடுக்கப்பட்டு காட்டப்படுவதன் மூலம் சினிமா தொழில் பாதிக்கப்படுகிறது என்று சில திரையரங்கு உரிமையாளர்கள்கூட சொல்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட திருட்டு வீடியோக்களைக் கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, இந்த வீடியோ திருட்டுக்களைக் கண்டுபிடிப்பதற்கான அதிகாரம் டி.எஸ்.பி., அவர்களுக்கு அளிக்கப்பட்டு இருந்ததாகச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது வந்திருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம், காவல்துறை ஆய்வாளருக்கு அந்த அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. அதிகாரம் கொண்டிருந்த டி.எஸ்.பி. அவர்களால், எத்தனை திருட்டுத்தனமாக பதிவுசெய்யப்பட்ட வீடியோக்கள் கைப்பற்றப்பட்-



1987 நவம்பர் 17] [திரு. எம். செல்லமுத்து]

டுள்ளன, அதன்மீது அவர்கள் எடுத்த நடவடிக்கை என்ன, நடவடிக்கை எடுக்கப்பட்டு அமல் நடத்தாமல் இருந்ததற்கான சூழ்நிலை என்ன, இப்போது அந்த அதிகாரத்தை காவல்துறை ஆய்வாளருக்கு கொடுப்பதன் மூலம் என்ன நன்மைகள் எதிர்பார்க்கப்படுகின்றன என்ற விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தரவேண்டும். இப்படிப்பட்ட திருட்டு வீடியோக்கள் எடுப்பதைக் கட்டுப்படுத்தி திரையரங்கு உரிமையாளர்களுடைய தொழிலையும் பாதுகாப்பதோடு, திரையரங்குகளிலே பணிபுரியக் கூடிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் சொல்கிறார்கள், இப்படிப்பட்ட திருட்டு வீடியோக்கள் வருவதன் மூலம், திரையரங்குகளுக்கு வருகின்ற கூட்டம் குறைவதால் அவர்களுக்கும் வேலைவாய்ப்புகள் குறைகின்றன என்று சொல்கிறார்கள். ஆகவே, திருட்டு வீடியோக்களை கட்டுப்படுத்தக்கூடிய வகையிலே, இதற்கென்று விதிக்கப்பட்டுள்ள தண்டனையான 5,000 ரூபாய் அபராதம் மற்றும் 2 வருடங்கள் தண்டனையை கறாராக அமல் படுத்தவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். சிலருடைய நலன்களுக்காக அல்லது துஷ்பிரயோகப்படுத்தக்கூடிய அல்லது இந்தச் சட்டத்தைக் காட்டி தங்களுடைய காரியங்களை நிவர்த்தி செய்துகொள்வதற்கு பயன்படுத்தப்படாமல் இருப்பதற்கான விதிகளை உருவாக்கி, இந்தச் சட்டத்தை கறாராக அமல் நடத்தி, சினிமா பார்க்கக்கூடிய பொதுமக்களுடைய நலனையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன், வணக்கம்.

**திரு. ஜே. முகம்மது கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் காலையிலே பேசும்போது இந்த மைக்கின் மூலமாகப் பேசுகிறார்; மதியம் பேசும்போது அந்த மைக்கின் மூலமாகப் பேசுகிறார். அவருக்கு ஒதுக்கப்பட்ட இடம் எது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்போதே சொல்லியாகிவிட்டது, இருக்கின்ற இடத்திலேயிருந்து பேசினால்தான் அனுமதிப்போம் என்று. வேறு இடத்திலிருந்து பேசினால் ரெக்கார்ட் ஆகாது.

* **திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு பேரவையின் துணை [illegible] அவர்களே, தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்கள்

[திரு. எம். செல்லமுத்து] [1987 நவம்பர் 17

திரையிடப்படுவதை முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன் வடிவின்மீது நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் இயக்கத்தினுடைய சார்பாக என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விழை கிறேன். திரைப்படங்கள் என்கின்ற பொதுவான நிலையை எடுத்துக்கொள்கிறபோது, திரைப்படங்களைப் பார்க்க வருகின்ற பொதுமக்களுடைய நலனையும், அவர்களுடைய சிந்தனை கெடாமல் இருக்கின்ற வகையில் படத்தினை உருவாக்குகின்ற தன்மையிலும் எடுக்கின்றவர்களும், தொடுக்கின்றவர்களும் உருவாக்கவேண்டுமென்பதில் எந்தவிதமான மாறுபாடும் இல்லை. ஆனால் மனித சமுதாய வளர்ச்சியில், மாணவர்கள், இளைஞர்கள், பல்வேறு சமுதாய மக்களுடைய உணர்வுகளை பிரதிபலிக்கின்ற எண்ணமும், நிகழ்ச்சியும் படைத்த திரைப்படங்களை உருவாக்கு கின்ற தன்மையைப் பெற்றாக வேண்டுமென்று இந்தச் சட்டத் தின் மூலமாக நாம் வழிவகுக்கின்றோமா என்று சொன்னால், இல்லையென்றுதான் சொல்லவேண்டும். இந்த சட்டமுன்வடிவிலே உரிமங்கள் வழங்குகின்ற உரிமையும், பார்க்கின்ற மனிதனுடைய நலத்தையும் குறிப்பிடவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

அடுத்து, வி.சி.ஆர். என்கின்ற ஒரு சிறப்பான நிலையைச் சொல்கின்றபோது, இந்த வி.சி.ஆர். வீடியோக்கள் குற்றங்கள் தடுக்கப்படவேண்டுமென்ற உணர்வினால், இங்கே இந்தச் சட்டத் திருத்தத்தை வைத்திருக்கிறார்கள். எனக்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதைப்போன்று, இந்த வீடியோ லைப்ரரி என்ற சொல்லப்படுகின்றவைகளை சோதனை செய்வதற்காக, முன்பு மாநகரங்களிலே ஏ.சி. அவர்களுக்கும், புற நகரங்களிலே, மாவட்டங்களிலே டி.எஸ்.பி. போன்றவர்களுக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டு, அவர்கள் குற்றவாளிகளா இல்லையா என்று சோதிக்கின்ற உரிமை பெற்றிருந்த சூழ்நிலை இன்றையதினம் காவல்துறை ஆய்வாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் காவல்துறையைப் பொறுத்தவரையில் பல்வேறு மக்களிட மிருந்து கப்பங்கள் வாங்குகின்ற இடமாக மாறிவிட்டதே என்ற அச்ச உணர்வு இருந்த நேரத்திலும், மேலும் கப்பங்கள் கட்டு வதற்கு இது உடந்தையாக மாறிவிடுமோ என்ற உணர்வுகள் ஏற்படக்கூடாது என்பதை இந்த மன்றத்தின் வாயிலாக அமைச்சர் அவர்கள் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆக, வீடியோக்கள் மூலமாக பல்வேறு செயல் திட்டங்களைப் பார்த்து மகிழ்கின்ற இந்தச் செயல்கள் வரவேற்கத்தக்க செயல்கள்தான்,



1987 நவம்பர் 17] திரு. ஜி. கே. ஜெ. பாரதி]

இன்னும் சொல்லப்போனால் மிக நல்ல இலங்கை—இந்திய ஒப்பந்தத்தைத் தந்திருக்கிற என்னுடைய வணக்கத்திற்குரிய இந்திய அரசின் தலைவர், மாண்புமிகு பிரதமர் அவர்கள்கூட இலங்கையில் ஒப்பந்தத்தை உருவாக்கிவிட்டு வருகிறபோது அங்கே விஜயமுனி என்ற ஒருவனால் தாக்கப்படுகிற காட்சியை யும்கூட இந்த வீடியோவின் மூலமாகத்தான் பார்த்து துடிக்க முடிந்தது. அதைப் போலவே எந்த நிகழ்ச்சியை வேண்டுமா னாலும் இந்த வீடியோ மூலமாக அறிய முடிகிறது. அன்னை இந்திரா காந்தி அவர்களைக்கூட கொடியவர்கள் சுட்டு வீழ்த்திய அந்தக் கொடிய செயலைக்கூட வீடியோ இருக்கிற இந்த விஞ்ஞான உலகத்தின் மூலமாகத்தான் அறிந்து கொள்ளுகிற வாய்ப்பு ஏற்பட்டது.

(இரவு 6-30)

மேலும் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் நோய்வாய்ப் பட்டு இருக்கிறபோது அவர் நலமாகத்தான் இருக்கிறார் என்று வீடியோ சுருளைப் பார்த்துதான் அறிந்து கொள்கிற சூழ்நிலை இருந்தது. வீடியோ மூலமாக நல்ல அறிவியல் பூர்வமான சிந்தனையையும், வளர்ச்சியையும் அதே நேரத்தில் பார்க்க முடியாத காட்சிகளையும் பார்ப்பதற்கு வாய்ப்பு ஏற்படுவது குறித்து மகிழ்ச்சிதான். ஆனால் சமுதாயத்தில் மாணவர்களை, பிஞ்சு உள்ளங்களை, மாணவியர்களை மற்றும் சமுதாய மக்க ளைத் தவறான எண்ணத்திற்கு அழைத்துச் செல்கிற, அறிவீ னத்தை ஏற்படுத்துகிற நிலையிலிருந்து எப்படியும் காப்பாற்றி யாக வேண்டும் என்ற உணர்வை ஆணித்தரமாக நாம் பெற்றாக வேண்டும்.

அடுத்து, வீடியோவின் மூலமாக, திருட்டுத் தொழிலை சிலர் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒவ்வொரு முறையும் தண்டனை கொடுத்துக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அவர்கள் தவறே செய்யாத வகையில் எந்தெந்த வகையில் தண்டிப்பீர்களோ அதைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் திரைப்படத் துறையில், கடந்த கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும் போது, 6 முனை வரி இருப்பதாகவும், அதை ஒருமுனை வரியாக

அறிவிக்கப் போவதாகவும் குறிப்பிட்டார்கள். அப்படி ஒருமுனை வரியாக அறிவிக்கப் போகிறீர்களா என்ற உணர்வைக்கூட நீங்கள் வெளிப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் வீடியோ மூலமாகத் திரைப்படங்கள் வாழ்வு சற்று குறைந்திருக்கிறது என்று திரைப்படம் எடுப்பவர்களும், விநியோ வர்களும் குறைபட்டுக் கொள்கிறார்கள். ஒரு படம் 100 நாள் ஓட வேண்டும் அல்லது 20 நாள் ஓட வேண்டும் என்ற சூழ்நிலை தற்போது மாறி வருகிறது. காரணம் இந்த வீடியோக்கள் மூல மாக மக்கள் மத்தியில் உணர்வு மாற்றம் அடைந்திருக்கிறது. ஆகவே, பொருளாதாரத்தின் எல்லையில் நாங்கள் தொல்லைப்படு கிறோம் என்ற உணர்வில் சிலர் வேதனைப்படுகிற காட்சியையும் நாம் பார்க்கிறோம்.

இந்தியாவிலேயே முதன் முதலாக வீடியோ திருட்டு சம்பந்த மாக திருத்தச் சட்டத்தை நம் தமிழக அரசுதான் கொண்டு வந்திருக்கிறது. அதை நான் வரவேற்றுப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அப்படிப் பாராட்டுகிற நேரத்திலும் இந்த அதிகாரம் ஆய்வாளர்களுக்குக் கொடுக்கப்படுகிறபோது அந்தச் செயலானது சற்று மாறுபாடு உண்டாக்கும் உணர்வோடு, பழி வாங்கும் மனோபாவத்தோடு, யார் வீட்டில் வேண்டுமானாலும் நுழையலாம் என்ற உணர்வில் சென்றுவிடக் கூடாது என்ற அச்சமும் ஆதங்கமும் இருக்கிற காரணத்தால் அத்தகைய நிலைமைகளை மாற்றியமைக்கும் செயலை உருவாக்க வேண்டும் என்றும் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து வீடியோ கேசட்டுகளை வாங்குகிறபோது அதற்கு சேல்ஸ் டாக்ஸ் வாங்க வேண்டும் என்ற வரையறை இருக்கிறது. இதுவரை அந்த சேல்ஸ் டாக்ஸ் வாங்குகிற வரையறை இல்லை. ஆகவே இதைக் கண்டிப்பாக வாங்க வேண்டும் என்ற உணர்வையும் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் "பியர் பொசஷன் ஆப் வீடியோ கேசட்" பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் குறிப்பிட்டார்கள். அந்த வீடியோ கேசட்டை வைத்திருப்பவர்கள் அதன் உரிமையாள ரிடம் அனுமதி பெற்றிருக்கிறார்களா, அவர்கள் வைத்திருக்கும் வீடியோ கேசட் சென்சார் செய்யப்பட்டிருக்கிறதா, அந்தப் படம் சமுதாய நலனை உருவாக்குகிற படமா [illegible]



படமா என்பதைத் தெரிந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட உணர்வே இல்லாமல் பல்வேறு வீடியோ லைப்ரரிகள் தமிழகம் முழுவதும் இயங்கிக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே அவற்றையெல்லாம் அப்புறப்படுத்துவதோடல்லாமல் தமிழகத்தினுடைய அறநெறி, இந்திய நாகரீகம், தமிழனுடைய வளர்ச்சி, தமிழ் என்ற உணர்வுகளைக் காப்பாற்றுகிற உணர் வோடு இருக்க வேண்டும். இவற்றிற்கு மாறுபாடான படங்களை யெல்லாம் அறவே ஒழித்துவிடுகிற நிலைமையை நாம் உருவாக்க வேண்டும். மேலும் கடல் கடந்து படங்களை இங்கே இறக்குமதி செய்யும்போது அதில் நீலப் படங்களையெல்லாம் நிச்சயமாகத் தமிழகத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற உணர்வையும் நாம் ஏற்படுத்த வேண்டும். மேலும் வீடியோ பற்றி வந்துள்ள இந்த எழுச்சிமிகு சட்டத்தை வரவேற்கிற அதே நேரத்தில்—தண்டனை அளிப்பதற்கு வகை செய்யப்பட்டிருப்பதை வரவேற் கிற அதே நேரத்தில்—இந்தச் சட்டம் உண்மையிலேயே சமுதாய மக்களுக்கு நலம் பயக்கிற சட்டமாக மாற வேண்டும் என்று நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் தொலைக்காட்சி வசதி எவ்வளவு பெரிய உதவியை மக்களுக்கு அளிக்கிறது என்று சொல்லுகிறபோது இன்னொன் றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப் பினர் திரு. இராமலிங்கம் அவர்கள்கூட இங்கே பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர் திருத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன். நம் தமிழகத்தின் தலைமையமைச்சர் மாண்புமிகு திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அமெரிக்காவில் மருத்துவ மனையில் நோயுற்று இருந்தபோது தொலைக்காட்சி நிலையம் தவறாகச் செய்தியை வெளியிட்டது என்று சொன்னார்கள். தொலைக்காட்சி நிலையம் எந்த செய்தி யையும் தவறாக எப்போதுமே வெளியிட்டதில்லை. வெளியிடாது. (மணியடிக்கப்பெற்றது) ஒரு [illegible] முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் வேறு ஒரு நிகழ்ச்சியைச் சொன்னார். அவர் அமெரிக்க மருத்துவ மனை யைப்பற்றி சொல்லவில்லை. இதை நீங்களாகவே சொல்லிக் கொண்டு அதற்குப் பதில் சொல்கிறீர்கள். அதை அதோடு

விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) இரண்டு பேருமே அதைப்பற்றி பேச
வேண்டாம் (குறுக்கீடு) அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
. . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள்
(முறைப்படுத்துதல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட
மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1987) சம்பந்தமாக
மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

திரைப்பட அரங்குகளில் இட வசதி, சுகாதாரம் இல்லாமல்
இருக்கிறது என்றும், போதிய காற்றோட்ட வசதி இல்லை
யென்றும் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே திரைப்பட அரங்கு
களில் எவ்வளவு அனுமதிக்கப்பட்ட இடங்கள் இருக்கிறதோ
அதைவிட அதிகமாக சினிமா பார்க்க நபர்களை அனுமதித்திருந்
தாலும், சுகாதார வசதி குன்றியிருந்தாலும் குளிர்சாதன வசதி
யுள்ள தியேட்டர்களில் குளிர்சாதன வசதி குறைவாக இருந்
தாலும் அதன் காரணமாகத் திரைப்பட அரங்கின் உரிமை
யாளர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். இன்னும் சொல்லப்
போனால் சி—படிவம், அந்த உரிமம், சஸ்பண்ட் செய்யப்படுகிறது.
ஆபாசப் படங்களை தமிழ்நாட்டில் காட்டிய இரண்டு திரைப்பட
அரங்குகளுக்கு 3 மாதத்திற்குக் குறையாமல் சி—படிவம் ரத்து
செய்யப்பட்டிருக்கிறது. சினிமாவிற்குப் போகிறவர்களுடைய
வசதிகளைக் கவனிக்கும் பொருட்டு தமிழ்நாடு திரைப்படங்கள்
மூன்றாம் திருத்த சட்டம் கொண்டு வரப்படுகிறது. திரைப்பட
அரங்குகளுக்கு உரிமம் கொடுப்பதிலேயும், உரிமம் மாற்றப்படுவதி
லேயும் உரிமம் அசைன்மெண்ட் செய்வதிலேயும் சில வார்த்தை
களைப் புதியதாகச் சேர்க்க வேண்டுமென்பதால் அந்த வார்த்தை
களைச் சேர்த்திருக்கிறோம். ஏற்கெனவே திரைப்படங்களுக்குச்
செல்லுபவர்களுக்கு என்று பொதுவாக இருந்ததை மாற்றி குறிப்
பாக சினிமா படம் பார்ப்பவர்களுக்கு என்ற முறையிலே திருத்தம்
செய்திருக்கிறோம். இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவை
முதலிலே நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்
னுள்ள கேள்வி :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்
படுத்துதல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப்
பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1987) ஆய்வுக்கு எடுத்துக்
கொள்ளப்பெற வேண்டும்".



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## 8. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி.

### (ஆ) அலுவல் வரிசையில் மாற்றம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவையின் விதி 30 (3)-ன் கீழ் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 7—அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) என்ற தலைப்பின் கீழ் வரிசை எண் (11) 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொளிப் (வீடியோ) பேழைப் பதிவுக் கருவிகள் (V.C.R.) மூலமாக தொலைக் காட்சித் திரையில் திரைப்படங்கள் திரையிடப்படுவதை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 53/1987) என்று உள்ளதை அதே இனத்தில் வரிசை எண் (6)—1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) மூன்றாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1987) என்று உள்ளதற்குப் பின் எடுத்துக்கொள்ளலாம்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

**6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.**

**(இஇ) தமிழ் நாடு காணொளிப் (வீடியோ) பேழைப் பதிவுக் கருவிகள் (V.C.R.) மூலமாக தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்கள் திரையிடப்படுவதை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.**

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொளிப் (வீடியோ) பேழைப் பதிவுக் கருவிகள் (V.C.R.) மூலமாக தொலைக் காட்சித் திரையில் திரைப்படங்கள் திரையிடப்படுவதை (முறைப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 53/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

**மாண்புமிகு திரு. வி. வி. சாமிநாதன்:** மாண்புமிகு உறுப்பி னர்கள் நான் முன்மொழிவதற்கு முன்பே, இந்தச் சட்ட முன் வடிவு குறித்து அபிப்பிராயங்கள் தெரிவித்திருக்கிறார்கள். அது பற்றி என் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வாய்ப்பு தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 6-40)

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, அமைச்சரவர்கள் நாங்கள் பேசிய பேச்சுக்கு விளக்கம் கொடுப்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் முறை என்ன என்று கேட்டால், தீர்மானத்தை முன்மொழிந்துவிட்டதால், அதைத் திரும்பப் பெற்று, அமைச்சர் பேசி, நிறைவேற்றுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் முதலிலேயே கருத்து சொன்னதால், இப்போது அமைச்சரவர்கள் பதில் சொல்லுகிறார்கள்.

---

* 16—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதல் மசோதா விவாதத்திற்கு எடுத்துக் கொள்கிறபோது அடுத்த மசோதா பற்றி மாண்புமிகு உறுப்பி னர்கள் கருத்துக்களைச் சொல்லலாம் என்று சொன்னீர்கள். அப்போது நான் இந்தச் சட்ட முன்வடிவை முன்மொழியவில்லை. அதனால்தான் இப்போது முன்மொழிந்தேன். எனவே மாண்பு மிகு உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் திரைப்படங்கள் திருட்டுத்தன மாக வீடியோ கேசட்டுகளாக எடுக்கப்பட்டு, நாட்டிலே உலாவு கின்றன. அதனால் திரைப்பட உரிமையாளர்கள், தயாரிப்பா ளர்கள், விநியோகஸ்தர்கள், அரசு, உள்ளாட்சி நிறுவனங்கள் பாதிக்கப்படுகின்றனர். இப்படிப்பட்ட திருட்டு கேசட்டுகளால் நாட்டிலுள்ள திரை அரங்குகள் வளர்வது குன்றியிருக்கிறதென்று சொன்னார்கள். இதற்கு மலேசியா, சிங்கப்பூர் போக வேண்டிய தில்லை. இந்தியாவிலேயே குஜராத்திலே, கர்நாடகாவிலேகூட பல திரைப்பட அரங்குகள் சிமெண்ட் மூட்டை அடுக்குகிற கோட வுன்களாக, நெல், கோதுமை அடுக்குகிற கோடவுன்களாக மாறி இருக்கின்றன. எனவே இந்தத் திருட்டு வீடியோ கேசட்டுகளை எப்படிப் பிடிப்பது என்பதுதான் கேள்வி.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரதி அவர்கள் சொன்னது போல், இந்தியாவுக்கு வழி காட்டுகிற வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசுதான் வீடியோ கேசட் பற்றிய சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. திரைப்பட தயாரிப்பா ளர்கள் தங்களுடைய படத்தை நகல் எடுக்கும்போது, ஒரு நகலை அயல் நாட்டுக்குக் கொடுக்கிறார்கள். அயல் நாட்டுக்குக் கொடுப்பது என்று சொல்லும்போது, இந்தியாவில் அந்தத் திரைப் படம் வெளியிடுவதற்கு முன்பு, முதல் நாள் கொடுக்கிறார்கள். முதல் நாள் உலக விநியோகம், பாரின் ரைட்ஸ், ஓர்ல்ட் ரைட்ஸ் என்று கொடுக்கப்பட்ட திரைப்படங்கள், காலையிலே விமா னத்தில் போய், மாலையிலே திருட்டு வீடியோ கேசட்டுகளாக எடுக்கப்பட்டு, திரும்ப இந்தியாவுக்கு வந்துவிடுகின்றன. அதைத் தடுக்க வேண்டுமென்று அவர்களுக்குப் பல தடவை சொன்னேன். அந்த வகையில் 'மனிதன்' படத்தை எடுத்த ஏ.வி.எம். உரிமை யாளர்கள் யாருக்கும் தெரியாமல், ஒவ்வொரு நகலிலும் ரகசிய அடையாளம் வைத்திருந்தார்கள். அந்த வீடியோ கேசட் வந்தால், அதைக் கைப்பற்றி, அந்த வீடியோ கேசட்டைப்

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 நவம்பர் 17

போட்டுப் பார்த்தால், எந்தத் திரைப்பட விநியோகஸ்தருக்குக் கொடுக்கப்பட்ட திரைப்படம் இப்படி திருட்டுத்தனமாக வீடியோ கேசட்டாக எடுக்கப்பட்டிருக்கிறது என்று கண்டுபிடிக்க முடியும். அதைத் திறமையாகச் செய்தார்கள். சர்க்காருக்குப் பங்கு இல்லாமல், அவர்களே கண்டுபிடித்தார்கள் என்று திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் என்னை அழைத்து, திருட்டுத்தனமாக எடுக்கப்படுகிற வீடியோ கேசட்டுகளைத் தடுக்கும் சட்டத்தின் பற்களைக் கொஞ்சம் கூர்மையாக்க வேண்டும், தண்டனை குறைவாக இருக்கிறது; அதை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அந்த முறையில் சென்னையிலுள்ள சி.ஐ.டி. கிரைம்ஸ் அவர்களுடைய உதவியினால் இந்த மாதிரி திருட்டுப் படங்கள் எடுக்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

தூத்துக்குடியில் பாலகிருஷ்ணா திரை அரங்கில் காட்டப்படுகிற திரைப்படம், மனிதன் என்ற படம், திருட்டுத்தனமாக கேசட்டுகள் எடுக்க உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று தெரிந்தவுடன், பாலகிருஷ்ணா திரை அரங்கிலிருந்து அந்தப் படத்தைக் கைப்பற்ற வேண்டும். அது தெரிந்தவுடன், அதைச் செய்ய முடியாது. இதற்கு என்று தனி நகல் எடுத்து, பிரிண்ட் எடுத்து, இங்கிருந்து கொண்டு போய், பின்பு அந்தப் படத்தைக் கைப்பற்றி, உரிமையாளர், மேனேஜர், ஆப்பரேட்டர் ஆகிய மூன்று பேர்களையும் கைது செய்திருக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல. தென் ஆற்காடு மாவட்டத்தில், இரண்டு பேர்கள், வட ஆற்காடு மாவட்டத்தில் இரண்டு பேர்கள், இந்த 'மனிதன்' என்ற திரைப்படத்தை அவர்கள் தெரியாமல் திருட்டுத்தனமாக வீடியோ கேசட் எடுத்துக் காட்டியதற்காக கைது செய்யப்பட்டுள்ளார்கள். இன்று காலையில் கூட வள்ளியூரில் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இதுமாதிரி திருட்டு வீடியோ கேசட்டுகளைக் கண்டுபிடிப்பதற்காக போலீசுக்கு உதவியாக படத் தயாரிப்பாளர்கள் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். போலீஸ்காரர்கள் இருக்கின்றார்கள் என்பதற்காக தமிழ்நாட்டில் எல்லோரும் கற்பாக இருக்கிறார்கள் என்று பொருள் அல்ல. அவர்களே முன்வந்து கற்புக்கரசிகளாக வாழவேண்டும் என்ற முடிவினால்தான் அப்படி இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால்



1987 நவம்பர் 17] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

அதை நாம் எவ்வளவு தூரம் ஒத்துக்கொள்ள முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் உண்மையில் படத் தயாரிப்பாளர்கள் ஒரு முடிவுக்கு வரவேண்டும். தங்களுடைய படத்தை அயல்நாட்டுக்கு உரிமை விற்கிற அந்த மரபை மாற்றிக் கொள்ளலாம். அல்லது தமிழ்நாட்டில் வீடியோ படத்திற்கு என்று தமிழ் படங்களையே அனுமதிக்கக்கூடாது என்று சர்க்கார் சட்டம் போடுவதைவிட, தயாரிப்பாளர்களே எந்த ரைட்ஸ்-ஐயும் வீடியோவிற்குக் கொடுப்பதில்லை என்று அவர்களே முன்வர வேண்டும். அவர்கள் தயாரிக்கின்ற படத்திற்கு அந்த உரிமை கிடையாது என்று சொல்கின்ற முடிவிற்கு வருவார்களானால், அது அரசுக்கும் உதவியாக இருக்கும். போலீசுக்கும் உதவியாக இருக்கும். போலீசாருக்குத் தகவல் தெரிந்து வீடியோ கேசட்டு லைப்ரரியிலே சோதனைக்குப் போனால் அவர்கள் படம் வைத்திருக்கின்ற ஒவ்வொரு மேல் மூடியிலும், கவரிலும் சம்பந்தப்பட்ட அந்தப் படத்தின் பெயரை வைப்பது இல்லை வேறு படத்தின் பெயரை வைத்திருக்கின்றார்கள் அல்லது சோதனைக்கு வருகிறார்கள் என்று தெரிந்தவுடனே எப்படியாவது மாற்றிவிடுகிறார்கள். அதனால் போலீசாருக்குக் கஷ்டமான சங்கடங்கள் ஏற்படுகின்றன.

ஒருவிதத்திலே சொல்கின்றார்கள். நூறு நாட்கள் ஓடுகின்ற படங்கள் ஒரு காலத்திலே ஆண்டுக்குச் சுமார் 20 படங்கள் ஓடின. ஆனால் அது இப்போது 4, 5 படங்களாகக் குறைந்து போய் விட்டன. கடந்த ஆண்டுகூட 107 திரைப்படங்கள்தான் உற்பத்தியாகியிருக்கின்றன. ஆனால் இதுவரையில் ஆகஸ்ட் மாதம் வரையில் 98 படங்கள்தான் வந்திருக்கின்றன என்று சொல்கின்றார்கள். இதுமாதிரி படங்கள் குறைவதற்குக் காரணம் திருட்டுத்தனமான வீடியோ கேசட்டுகள்தான். அப்படி எடுப்பவர்களைத் தண்டிக்கத்தான், தண்டனையைக் கடுமையாக ஆக்குவதற்காகத்தான் இந்தச் சட்டம் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மலேசியாவில்கூட அங்கு இந்த காபி ரைட் ஆக்ட்-னுடைய தண்டனை மிகக் கடுமையானது. மலேசியாவில் உள்ள ஒருவர் 'மனிதன்' திரைப்படத்தை தங்களுக்கு வீடியோ கேசட் செய்வதற்கு உரிமை தர வேண்டும் என்று கேட்டு, நல்லவேளையாக 'மனிதன்' படத் தயாரிப்பாளர் அந்த உரிமையைத் தர மறுத்துவிட்டார். ஆனால் எந்த நாளன்று வெளியிடுவதற்காக

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 நவம்பர் 17

இருந்ததோ அன்றைய தினமே மலேசியாவில் தினமணி என்ற நாளிதழில் இதுபோன்ற 'மனிதன்' படம் வீடியோ கேசட் படம் கிடைக்கும் என்று ஒருவர் அறிவிப்பு செய்தார்.

நம்முடைய அரசு, நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இங்கு மாத்திரம் அல்ல மலேசியா அரசுக்கும் திருட்டுத் தனமாக தயாரிக்கப்பட்ட அந்த வீடியோ கேசட்டு படத்தை மலேசியா அரசு கைப்பற்றி திருட்டுத்தனமாக அந்த வீடியோ கேசட்டைத் தயாரித்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள்.

ஏற்கெனவே உள்ள சட்டத்தில் செக்ஷன் 15, 1-வது செக்ஷனில், செக்ஷன் 10-ன் கீழ் உள்ள தண்டனை மூன்று மாதம் அல்லது அபராதம் ஆயிரம் ரூபாய் வரை என்று இருந்தது குறைந்தது இரண்டு மாதம் என்றும் மூன்று மாதமாக இருந்த தண்டனை ஆறு மாதம் வரை உயர்த்தலாம் என்றும் திருத்தப்பட்டு இருக்கின்றது. தொடர்ந்து இதே குற்றத்தைச் செய்வார்களானால், அதற்கு தினம் ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை மாற்றி ரூ. 1,500 என்று உயர்த்தி இருக்கின்றார்கள். ஆயிரம் ரூபாய் வரையில் அபராதம் போடலாம் என்பதை ரூ. 3,000 வரை அபராதம் போடலாம் என்று இந்த சட்டத்தில் தண்டனை கொடுப்பதற்கு அதிகாரப் படுத்தப்பட்டிருக்கிறது. அதைப்போலவே விதி 15, உப விதி 2-ல், செக்ஷன் 10 அல்லாத, மற்ற விதிகளின் கீழ் தண்டனை வருகிற போது, அந்த தண்டனையை குறைந்தபட்சம் 6 மாதம் அதிக பட்சமாக இரண்டு வருடமாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைப்போலவே அபராதம் குறைந்தபட்சமாக ரூ. 2 ஆயிரமாகவும், அதிகபட்சம் ரூ. 5 ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே வீடியோ தயாரிப்பவர்களுக்குக் கடுமையான எச்சரிக்கை செய்கின்ற முறையில்தான் இன்றையதினம் இந்தச் சட்டம் வந்திருக்கிறது.

புரட்சித் தலைவர் அவர்கள் திரைப்படத்தில் நடித்தாலும், நடிக்காவிட்டாலும் இன்றையதினம் அவருடைய படங்கள் 'பாக்ஸ்' படமாகத்தான் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஒரு நாள் ஒரு ஆய்வே செய்தார்கள். இன்றையதினம் சென்னை திரை அரங்குகளில் ஏன் படம் சரியாக ஓடவில்லை என்று ஆய்வு செய்த போது, அன்றையதினம் டி.வி.யில் மாண்புமிகு திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்த படம் வந்ததுதான் காரணம் என்றுகூட அந்த



1987 நவம்பர் 17] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

ஆய்விலே கண்டுபிடித்திருக்கின்றார்கள். ஆகவே மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் புரட்சித் தலைவர் திரைப்படத் துறையில் இல்லை என்பதால் அலட்சியமாக இருக்கிறார் என்று நினைக்க வேண்டாம். அவர்களுடைய ஆலோசனையின் பேரிலே, அறிவுரையின் பேரிலேதான் இந்தச் சட்டம் கடுமையான சட்ட மாக, பல் கூர்மையாக உள்ள சட்டமாக தண்டனை விதிகளைக் கொண்டு வந்து இருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பி னர்கள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 6-50)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: பேரவை முன்னுள்ள கேள்வி :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொளிப் (வீடியோ) பேழைப் பதிவுக் கருவிகள் (V.C.R.) மூலமாக தொலைக் காட்சித் திரையில் திரைப்படங்கள் திரையிடப்படுவதை (முறைப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொளிப் (வீடியோ) பேழைப் பதிவுக் கருவிகள் (V.C.R.) மூலமாக தொலைக் காட்சித் திரையில் திரைப்படங்கள் திரையிடப்படுவதை (முறைப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(அ) பேரவை அலுவல்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ் நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1987) மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக் கிணங்க நாளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(ஏ) தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதியச் சட்ட முன்வடிவு, 1987.

(ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதியச் சட்ட முன்வடிவை * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதியச் சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதியச் சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

**திரு. பொன் முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதியச் சட்ட முன்வடிவின் மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த வழக்குரைஞர் நல நிதியச் சட்டத் தினுடைய நோக்கம் பற்றி மாற்று கருத்துக் கூறுவதற்கு நான்

* 16—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



தயாராக இல்லை. மாறாக இந்தச் சட்டம் இப்படி இருந் திருக்குமேயானால் இன்னும் பயனுள்ளதாக இருக்கும் என்கின்ற அடிப்படையில் சில பூர்வாங்கமான ஆலோசனைகளை மட்டும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தமட்டில், ஒரு காலத்திலே வழக்குரைஞர்கள் எல்லாம் மேட்டுக்குடியிலேயுள்ளவர்களிலிருந்து சட்டம் படித்து வழக்குரைஞர்களாக வந்துகொண்டிருந்த காலத்தில் இதுபோன்ற சட்டம் தேவையில்லாமல் இருந்தது. ஆனால் இப்போது பல்வேறு இடங்களில் பல சட்டக் கல்லூரிகள் திறக்கப்பட்டு, ஆயிரக் கணக்கானவர்கள் சட்டக் கல்லூரிகளிலே சட்டம் பயின்று, பல்வேறு தரப்பு மக்கள் வெளியே வருகின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு எல்லாம் வழக்குரைஞர் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற நேரத்தில் ஒரு பாதுகாப்பு வேண்டும் என்பதற்காக இந்த வழக்குரைஞர் நல நிதியச் சட்டம் உருவாக்கப்பட்டிருப்பது உள்ளபடியே வரவேற்கத்தக்கது.

ஆனால் இங்கே இச்சட்டத்தைப் பொறுத்தமட்டிலும், அனெக்ஷர் என்கின்ற பின் இணைப்பிலே ஒன்றைக் குறிப்பிட் டிருக்கிறார்கள். ஆண்டுதோறும் இவ்வளவு தொகை என்று ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஓராண்டுக்கு ஆயிரம் ரூபாய் என்று வைத்துக்கொண்டால், ஒரு வழக்குரைஞர் 30 ஆண்டுக் காலம் பணியாற்றினால் அவருக்கு 30 ஆயிரம் ரூபாய் வழக்குரைஞர் நல நிதியச் சட்டத்தின்கீழ் வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் தொகையைப் பொறுத்த வரையிலும் குறைந்த தொகையாக நான் கருதுகிறேன். அது மாத்திரமல்ல, 5 ஆண்டுக்காலம் குறைந்தபட்சம் ஒருவர் பணியாற்றியிருந்தால்தான் இந்த வழக்குரைஞர் நல நிதி யிலிருந்து அவர் உதவி பெற முடியும் என்று சட்ட ஷரத்து சொல்கிறது. அதிலே விதிவிலக்காக, 5 ஆண்டுகளுக்கு உள்ளாக பணியாற்றிவிட்டு, பிறகு பணியாற்ற முடியாத பிரத்தியேக காரணங்கள் இருக்குமேயானால் அப்படிப்பட்டவர்களுக்கும் இந்த வழக்குரைஞர் நல நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் 5 ஆண்டுக்காலம் வழக்குரைஞராக பணியாற்றிவிட்டு பிறகு பணியாற்ற முடியாத சூழ்நிலையில் பணியாற்றுவதை விட்டு விடுகிறவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் அளிப்பது என்பது மிகக் குறைவு என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. பொன் முத்துராமலிங்கம்] [1987 நவம்பர் 17

இந்த நல நிதி எவ்வாறு சேர்க்கப்படுகிறது என்று சட்ட ஷரத்துக்களைப் பார்க்கிறபோது, அதிலே ஒன்று 'கிராண்ட் ஃப்ரம் கவர்ன்மென்ட்'—அரசாங்கத்திலிருந்து பெறுகிற மானியம் என்று இருக்கிறது. அதற்குப் பதிலாக இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒரு ஆலோசனையைத் தெரிவிக்க விரும்புகிறேன். 'கோர்ட் ஃபீஸ் ஸ்டாம்ப்' என்று ஒட்டுகிறபோது அதிலே ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை இந்த வழக்கறிஞர் நல நிதியிலே சேர்க்க வேண்டு மென்று அரசாங்கம் ஆணை பிறப்பித்தால் அரசாங்கத்தின் மானியம் இல்லாமலேயே இந்த நல நிதிக்குப் பெரும் நிதி சேரும் வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பிரிவு 23-ல் வக்காலத்து நாமா அல்லது மெமோ ஆஃப் அப்பியரன்ஸ் என்பதிலே ஒரு ரூபாய் அளவுக்கான வில்லையை சம்பந்தப்பட்ட வழக்கறிஞர் ஒட்ட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. ஒரு சீனியர் அட்வகேட், நன்கு பயிற்சி பெற்ற ஒரு வழக்கறிஞர் அவருக்குக் கீழே பத்து ஜூனியர்களை வைத்திருக் கிறார் என்றால் அந்த ஜூனியர்கள் கையெழுத்திடும் வக்காலத்து நாமா அல்லது மெம்மோ ஆஃப் அப்பியரன்ஸில் ஒவ்வொருவரும் தனித்தனியாக ஒரு ரூபாய் வில்லை ஒட்ட வேண்டுமா அல்லது அந்த சீனியர் மட்டும் ஒரு ரூபாய் வில்லை ஒட்டினால் போதுமா என்பது தெளிவாக இல்லை. விளக்கம் இருந்தால் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

அது மட்டுமல்ல. இந்த வழக்கறிஞர் நல நிதி சேர்க்கின்ற அடிப்படையில் பெரிய, பெரிய விளம்பரங்களை உள்ளடக்கி பல்வேறு 'கான்டீன்' வசதிகள் இருக்கின்றன; அந்த கான்டீன் வசதிகள் மூலம் பெறப்படுகிற பணம் யாருக்குச் செல்கிறது? அதை இந்த நல நிதியில் சேர்க்கலாம். அதைப்போன்று கார் பார்க்கிங், சைக்கிள் ஸ்டான்ட் போன்றவை மூலமாக வருகின்ற வருமானத்தையும் இந்த நல நிதியில் சேர்த்தால் வழக்கறிஞர் நல நிதி அரசாங்கத்தின் உதவி பெறாமலேயே பெருமளவில் வளர்ந்துவிடும்; மேலும் மேலும் தொகை பெருக வாய்ப்பு இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே அவையில் அமர்ந்திருக்கிற பேரவைத் தலைவர் அவர்களும் ஒரு வழக்கறிஞர்; துணைத் தலைவர் அவர்களும் ஒரு வழக்கறிஞர். இந்தச் சட்டத்திலே வழக்கறிஞர் நல நிதி



1987 நவம்பர் 17] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

என்று குறிப்பிடுகிறபோது வழக்கறிஞர் நலன் ஒன்றையே கருதிப் பார்த்திருக்கிறார்கள்; வழக்குகளை நடத்துவதிலே நமக்கெல்லாம் உதவியாக இருக்கின்ற வக்கீல் குமாஸ்தாக்களை எண்ணிப்பார்க்கவில்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். வழக்கறிஞர்களோடு பிணைந்து, பிரிக்க முடியாத அளவுக்கு வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் வக்கீல் குமாஸ்தாக்கள். அவர்கள் எல்லாம் செல்வந்தர் நிலையில் இருப்பவர்கள் அல்ல. இன்றைக்கு இருக்கின்ற யதார்த்த நிலையில் வழக்கறிஞர்களே சொல்லமுடியாத தொல்லைகளுக்கு ஆட்பட்டு இருக்கிறார்கள். வழக்கறிஞர்கள் நிலை இப்படி இருந்தால் வக்கீல் குமாஸ்தாக்கள் நிலை எப்படி இருக்கும் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே இந்தச் சட்டத்தில் அவர்களையும் சேர்த்து முறைப்படுத்தி, அவர்களுக்கும் இவ்வாறு உதவி செய்ய முடியும் என்ற என்னுடைய ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை ஏற்றுக்கொண்டால் குறிப்பிட்ட எண்ணிக்கையில் இருக்கிற, மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிற அவர்களையும் இந்த அரசு கவனித்திருக்கிறது; அவர்களுக்கும் உரிய ஏற்பாடுகளை இந்தச் சட்டத்தின் மூலம் அரசாங்கம் செய்திருக் கிறது என்ற நற்பெயரை இந்த அரசு பெறும் வாய்ப்பு இருக்கிறது. அந்த அடிப்படையில் இந்தச் சட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கறிஞர்களைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டத்தின் மூலமாக நிதி வழங்குவதோடு நின்றுவிடாமல் வழக்கறிஞர் தொழில் செய்துகொண்டிருக்கிறவர்களிலிருந்து பெருமளவில் நீதிபதிகளை நியமிக்க வேண்டும். இன்றைக்கு அரசாங்கம் என்ன செய்கிறது? அரசாங்கப் பணியிலே இருக்கிறவர்களை நீதிபதிகளாக நியமிக்கிறது. அதனால் பயிற்சிபெற்று ஆர்வத்தோடு வழக்கறிஞர் தொழிலில் ஈடுபடுகின்ற வழக்கறிஞர் களுக்கு நீதிபதிகளாக வருகின்ற வாய்ப்பு குறைகிறது. அதனால் தான் இதுபோன்ற நல நிதிகள் எல்லாம் உருவாக்குகின்ற காலகட்டத்திற்கு அரசு தள்ளப்படுகிறது. ஆகையால் இன்றைக்கு வழக்கறிஞர் தொழிலில் பதிவு செய்து, தொழில் நடத்திக் கொண்டிருக்கிற வழக்கறிஞர்களில் பெரும்பகுதியினர், ஒரு பொருத்த சதவீதத்தினர் மாஜிஸ்ட்ரேட்டுகளாக, நீதிபதிகளாக வருவதற்கான வாய்ப்பினை உருவாக்க இந்தச் சந்தர்ப்பத்தில் அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[1987 நவம்பர் 17

(இரவு 7-00)

* **திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற வழக்குரைஞர்கள் நல நிதிக்கான இந்தச் சட்ட முன்வடிவை நான் முதலிலே வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்து வைக்க விரும்புகிறேன். வழக்குரைஞர்கள் சமுதாயமே ஒட்டுமொத்தமாக வரவேற்கக்கூடிய ஒரு சட்டமாக நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களால் இது கொண்டுவரப்பட்டு இருப்பது உள்ளபடியே இந்த வரலாற்றில் அல்லது புரட்சித் தலைவர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ஒரு புதிய மைல் கல்லாகும் என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அருமைச் சகோதரர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்களால் பாராட்டப்பட்டிருக்கின்ற ஒரு மலைச்சட்டம் என்பதில் இந்தச் சட்டம் இன்னும் சிறப்பு அடைகிறது. இங்கே அந்த வகையில் இதுநாள் வரையில் வழக்குரைஞர்கள் ஏங்கிக்கொண்டிருந்தனர். இப்படிப்பட்ட ஒரு சட்டம் எந்த ஆட்சியிலாவது கொண்டுவரமாட்டார்களா என்று ஏங்கிக்கொண்டிருந்த அந்த எண்ணம் ஈடேறுகிற வகையில், ஏக்கத்தையெல்லாம் போக்குகிற வகையில் நம்முடைய அமைச்சர் அவர்களால் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனவே நீதிமன்றம் இருக்கிறவரை, வழ்க்குரைஞர்கள் தொழில் இருக்கிற வரை இதயதெய்வம் புரட்சித்தலைவருடைய பெயரும் சட்ட அமைச்சருடைய பெயரும் ஒவ்வொரு வழக்குரைஞர் இல்லங்களிலும் ஒலித்துக் கொண்டு இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அனைத்துப் பிரிவுகளும் வரவேற்கத்தக்கன, பாராட்டத்தக்கன என்று சொன்னாலும் ஒன்றிரண்டைக் குறிப்பிட்டு நான் பாராட்டியாக வேண்டும். இந்தச் சட்டத்திலே 18-வது பிரிவில் உறுப்பினர்களுக்கான லைஃப் இன்சூரன்ஸ் திட்டம் என்ற அடிப்படையில் குரூப் இன்சூரன்ஸ் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருப்பது உள்ளபடியே வரவேற்கக்கூடிய ஒன்றாகும். மற்ற மாநிலங்களில்



1987 நவம்பர் 17] [திரு. செ. செம்மலை]

அதாவது ஒன்றிரண்டு மாநிலங்களில் இந்தச் சட்டம் நடைமுறையில் இருந்தாலும் இப்படிப்பட்ட பிரிவு இருக்கிறதா என்று கூட ஐயப்பாடு இருக்கிறது. அப்படிப்பட்ட லைஃப் இன்சூரன்ஸ் திட்டத்தை குரூப் இன்சூரன்ஸ் திட்டம் என்ற அடிப்படையில் அறிவித்திருப்பது, அதற்கான பிரிவை இங்கே சொல்லியிருப்பது உள்ளபடியே வரவேற்கத்தக்கது.

அதோடு இந்தச் சட்டத்தின் அடிப்படையில் வழக்குரைஞர்கள் அதாவது இதிலே உறுப்பினர்களாகச் சேருகிறவர்கள் பெறுகிற அந்தத் தொகையை—30,000 ஆனாலும் சரி, 10,000 ஆனாலும் சரி —அவர்களுக்குப் பாதிப்பு இல்லாமல் அல்லது அந்த வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாமல், எந்த நீதிமன்றமும் அதை முடக்கி வைக்கவோ அதிலே பிடித்தம் செய்யவோ, அதாவது அட்டாச்மென்ட் செய்யவோ முடியாது என்ற அளவுக்கு 17-வது பிரிவில் ஒரு விதியைக் கொண்டு வந்திருப்பது உள்ளபடியே பாராட்டக்கூடிய அம்சம் ஆகும். அதை விட இன்னொன்று. வழக்குரைஞர்கள் போடுகிற அந்த 50 ரூபாய், 100 ரூபாய், வக்காலத்து நாமாவுக்கு என்ற வகையில் சேருகின்ற அந்தப் பணம் மட்டும் போதாது என்ற எண்ணத்தின் முன் யோசனையாக அந்தத் தொகையை முடக்கி வைக்காமல் அதை முதலீடு செய்தோ அல்லது அரசாங்க நிறுவனத்திற்குக் கடனாகக் கொடுத்து அதன்மூலம் வட்டியை வாங்கி இந்தத் தொகையைப் பெருக்குகிற அளவிற்கு பிரிவு 10-ல் சொல்லியிருப்பது உள்ளபடியே பாராட்டக்கூடிய ஒன்றாகும்.

நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் இன்னொரு கருத்தையும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் மூலம் பொறுப்பாட்சிக் குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. அதிலே அட்வகேட் ஜெனரல் சேர்மனாக இருக்கிறார். அதேபோல் லா செக்கரட்டரி அதிலே உறுப்பினராக இருக்கிறார். ஜி.பி. அல்லது ஹோம் செக்கரட்டரி உறுப்பினராக வருகிறார். பார் அசோசியேஷனிலே பி.பி. இதிலே உறுப்பினராக வருகிறார். இருந்து 3 வழக்குரைஞர்கள் உறுப்பினர்களாக வருகிறார்கள். பார் அசோசியேஷன் செக்கரட்டரி இந்தக் குழுவினுடைய செயலாளராகவும் வந்துவிடுகிறார். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஒன்றை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புவது, இப்படிப்பட்ட சட்டம் நம்முடைய ஆட்சிக்காலத்தில்

வந்திருப்பது நமக்கெல்லாம் பெருமை. இந்தக் குழுவிற்குக் காப்பாளர் என்ற வகையில், பேட்ரான் என்ற வகையில், சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இருந்தால் நலமாக இருக்கும். அந்தக் குழுவிற்கு அவர் காப்பாளராக இருப்பது பொருத்தம். பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ஆளுநர் அவர்கள் சேன்சலராக இருக்கிறார்கள். பல்கலைக் கழகத்தை நிர்வகிக்கிற பொறுப்பு வைஸ் — சான்சலருக்குத்தான் என்றாலுங்கூட சான்சலராக ஆளுநர் அவர்கள் இருப்பதுபோல் இந்தக் குழுவுக்கு சட்டத்துறை அமைச்சர் காப்பாளராக இருந்தால் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். பல்வேறு சிக்கல்களைத் தீர்க்க அது வழிவகுக்கும் என்று கருதுகிறேன்.

இன்னொரு கருத்தைச் சொல்லி விடைபெறலாம் என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள்கூட இதைச் சொன்னார்கள். பத்தாண்டுகளுக்குக் குறைவாக பணியாற்றுகின்ற வழக்குரைஞராக இருந்தால் 50 ரூபாய் செலுத்தவேண்டும் என்றும் 10 ஆண்டுகளுக்கு மேலே தொழில் நடத்துபவராக இருந்தால் 100 ரூபாய் செலுத்த வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறோம். அட்வகேட்ஸ் ஆக்டில் செக்ஷன் 16-ன்படி அட்வகேட்டை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கிறார்கள். ஒன்று அட்வகேட்ஸ். இன்னொன்று சீனியர் அட்வகேட்ஸ். அதிலே 10 ஆண்டு தொழில் புரிந்த வழக்கறிஞர்கள் 50 ரூபாய் செலுத்துவதும், இப்போதுதான் தொழிலுக்கு அறிமுகம் ஆகிற ஓராண்டு வழக்கறிஞர்களும், 50 ரூபாய் செலுத்துவதும் அவ்வளவு சரியாக இருக்காது. அதேபோல சீனியர் அட்வகேட்ஸ் என்று சொல்லப்படுபவர்கள் அதிகமாகச் சம்பாதிக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொஞ்சம் அதிக தொகையைக் கூட கொடுக்கலாம்.

அந்த அடிப்படையில் 10 ஆண்டு என்று சொல்வதற்கு பதிலாக ஓராண்டிலிருந்து 5 ஆண்டு வரை தொழில் செய்கிற வழக்கறிஞர் களுக்கு 50-க்கு குறைவாக ஒரு தொகையை நிர்ணயித்து, 5 ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் வரை தொழில் செய்கிற வழக்கறிஞர்களுக்கு 50 ரூபாய் என்று வைத்து, அதற்கு மேலே பத்தாண்டுகளுக்கு மேலே இருக்கின்றவர்களுக்கு நீங்கள் சொல்வது போல் 100 ரூபாய் என்று ஒதுக்கி, சீனியர் அட்வகேட்ஸ் என்ற வகையிலே அவர்களுக்கு 250 ரூபாய் சந்தா



செலுத்தலாம் என்று சொன்னால்கூடப் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதையும் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே இருந்து எதிர்பார்க்கிறேன். இதிலே 16-வது பிரிவிலே, 5 ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு கால அளவிற்கு உறுப்பினராக இருந்தால், அவர்களுக்கு அந்த தொகை செல்லுகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே 1-வது உப—பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற புரவிசோவிலே, அதிலே யாராவது 5 ஆண்டுகளுக்கு குறைவாக ஒரு ஆண்டிலோ, 2 ஆண்டுகளிலோ அல்லது 3 ஆண்டுகளிலோ பெர்மனன்ட் டிஸ்எபிலிட்டி என்று தொழில் செய்யாத அளவுக்கு பாதிக்கப் படுவார்களேயானால், அந்த புரவிசோ படி அவர்களுக்கும் இந்த உதவி கிடைக்கும் என்று இருக்கிறது. ஐந்து ஆண்டுகளுக்கு மேல் உறுப்பினர்களாக இருப்பவர்களுக்குத்தான் இந்தச் சட்டத்தின் படி அந்த உதவி கிடைக்கும். ஆனால் அந்த பெர்மனென்ட் டிஸ்எபிலிட்டி என்ற வகையில் 5 ஆண்டுகளுக்கு குறைவாக பாதிக்கப்பட்டிருந்தாலும் கிடைக்கும்.

ஆனால் அதிலே 2-வது உப—பிரிவிலே இறந்தவர்களுக்கு, அந்த நிதி வாரிசுதாரர்களுக்கு போகிறபோது, அந்த 5 ஆண்டுகளுக்கு மேல் என்பது பொருந்துமா அல்லது 5 ஆண்டுகளுக்குள்ளே 2 ஆண்டு, 3 ஆண்டு என்ற அந்தக் காலக் கட்டத்திலே இறப்பவர் களுக்கு அது பொருந்துமா என்ற ஒரு விளக்கத்தை மட்டும் அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். காரணம் 16-வது செக்ஷனில் 1-வது பிரிவிற்கு மட்டும் அந்த புரவிசோ கொடுக்கப் பட்டிருக்கிறது. இரண்டாவது பிரிவிற்கு அந்த புரவிசோ பொருந்துமா அல்லது பொருந்தாதா? அதைப் பொருந்துவதாக வைத்தால்தான் நன்றாக இருக்கும். காரணம் பெர்மனென்ட் டிஸ்எபிலிட்டிக்கு மட்டும் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக இருப்பவர் களுக்கு அந்த உதவியைச் செய்து விட்டு, இறந்து விட்டவர் களுக்கு 5 ஆண்டுகளுக்கு என்று நாம் வைத்து விட்டால், அந்த வாரிசுதாரர்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே அந்த ஒண்ணாவது பிரிவிற்கு இருக்கின்ற புரவிசோவையும், 2-வது பிரிவிற்கும் பொருந்துமாறு செய்தால் நன்றாக இருக்கும் என்ற கருத்தை

[திரு. செ. செம்மலை] [1987 நவம்பர் 17

மட்டும் சொல்லி, மொத்தத்திலே இந்தச் சட்டம் வரவேற்கப்படக் கூடிய சட்டம். புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் வழக்கறிஞர்களின் சமுதாயத்திற்கே வாழ்வு அளிக்கக் கூடிய நல்ல காரியத்தைச் செய்கிற சட்டமாக இது பலராலும் பாராட்டப்படுகிறது. குறிப்பாக வழக்கறிஞர்கள் சமுதாயம் புரட்சித் தலைவர் அவர்களை காலம் உள்ள வரை பாராட்டிக் கொண்டிருப்பார்கள் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கும் இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். அதே நேரத்திலே ஒரு சில கருத்துக்களை இந்தச் சட்டம் சம்பந்தமாக சொல்ல வேண்டிய நிலையில் நான் இருந்து கொண்டிருக்கிறேன். இது சம்பந்தமாக ஒரு சில திருத்தங்கள்கூடக் கொடுத்திருக் கிறேன். காலம் கடந்துவிட்ட பிறகாவது இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பதை நிச்சயமாக பாராட்டுகிறேன்.

1981-வது வருடத்திலே தமிழ்நாடு பார் கவுன்சில் இப்படிப் பட்ட ஒரு சட்டத்தை தயாரித்து அரசுக்குக் கொடுத்தார்கள்; நீண்ட விவாதத்திற்குப் பிறகு இன்றைக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கக்கூடிய நேரத்தில், அதனுடைய உண்மையான நலம், வழக்கறிஞர்கள் சமுதாயத்திலே ஒரு சிலரைப் பொறுத்த அளவிலே கிடைக்காமல் இருக்கக் கூடுமா என்ற சந்தேகம் ஏற்பட்டதன் விளைவாகத்தான் ஒரு சில திருத்தங்களைக்கூட இங்கே கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

(இரவு 7-10)

இன்று இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இது ஒரு வாலண்டரி ஸ்கீம் என்பது தெளிவாகச் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. ஒரு வாலண்டரி ஸ்கீமாக இருந்தாலும் கூட பார் கவுன்சிலைப் பொறுத்தவரையில் இதிலே ஒரு லெஜிஸ்லேட்டிவ் கம்பல்ஷன் இருந்தால்தான் இந்த ஸ்கீமை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். அல்லது இந்த ஸ்கீமை வெற்றிகரமாக அமல்படுத்திக் கொள்ள முடியுமென்ற காரணத்தால்தான் அவர்கள் அரசை அணுகி இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை உருவாக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்கள்.



1987 நவம்பர் 17] (திரு. ஜே. ஹேமச்சந்திரன்)

இன்றைக்கு இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் ஒரு வழக்கறிஞர் இதிலே உறுப்பினராவதற்கு 200 ரூபாய் அட்மிஷன் பீஸ் கொடுக்க வேண்டுமென்ற முறையில் இருக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால் ஜூனியர் அட்வகேட்ஸ்களைப் பொறுத்தவரையில் இப்படி 200 ரூபாய் அட்மிஷன் பீஸ் கொடுத்து உறுப்பினராக சேர்வதற்கு முடியாத ஒரு நிலை யதார்த்தமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவேதான் இந்தத் தொகையை 100 ரூபாயாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்த முறையில் ஒரு திருத்தத்தைக் கொடுத் திருக்கிறேன். இன்னொன்று வருடா வருடம் அவர்கள் 50 ரூபாய் அல்லது 100 ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால் இந்த ஜூனியர் அட்வகேட்சைப் பொறுத்தவரையில் இந்த 50 ரூபாயை ஒவ்வொரு வருடமும் கொடுப்பதில் சிரமங்கள் ஏற்படுகின்றன என்பது பல ஜூனியர் அட்வகேட்ஸ்களின் கருத்தாகும். ஆகவே இந்தத் தொகையை 25 ரூபாயாகக் குறைப்பதற்கு அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான அம்சம் என்னவென்றால் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டத்தில் குறிப் பிட்டுள்ள ஸ்கீம் வெற்றிகரமாக ஈடேறவேண்டுமானால் அரசினுடைய உதவியில்லாமல் முடியாது என்பது தெள்ளத் தெளிவாகும். எனக்குத் தெரிந்தவரையில் கேரள மாநிலத்தில் இப்படிப்பட்ட ஒரு ஸ்கீம் உருவாக்கப்பட்ட நேரத்தில் அரசு 20 லட்சம் ரூபாய் தன்னுடைய காண்ட்ரிபியூஷனாகக் கொடுத்தது. மத்தியப் பிரதேசத்தில் 6 லட்சம் ரூபாய் அரசால் கொடுக்கப் பட்டது. கர்நாடக மாநிலத்தில் ஒவ்வொரு வருடமும் 50 ஆயிரம் ரூபாய் இதற்குக் கொடுக்கப்படுகிறது. ஆகவே அந்த முறையில் ஒரு காண்ட்ரிபியூஷன் கொடுப்பதற்கு அரசு முன்வராமல் இந்த ஸ்கீம் வெற்றிகரமாக நடத்த முடியாது. அந்த முறையில் தமிழக அரசு எவ்வளவு கொடுக்க முன் வந்திருக்கிறது அல்லது எவ்வளவு கொடுப்பதற்கு யோசிக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்ல வில்லை. ஒருவேளை இதுசம்பந்தமான விளக்கத்தைச் சொல்கிற நேரத்தில் அவர்கள் சொல்வார்கள் என்று எண்ணுகிறேன்.

இன்னொரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இனிஷியல் பர்ப்பஸ் ஏற்படுத்தப்படாமல் இது நடைமுறையில் வெற்றிகரமாக நடத்திக்கொள்ள முடியாது என்பதை அமைச்சர் அவர்கள் நன்கு உணர்வார்கள். எனவே, இப்போது தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் கிராச்சுவிட்டி வசதி, அதேமாதிரி பீடித் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் பேமிலி பெனிபிட் ஸ்கீம் போன்று பல்வேறு வசதிகளைத் தருகிற வகையில் சமூக நலனை எதிர்நோக்கியுள்ள சட்டங்களை இன்றைக்கு உருவாக்கி இருக்கிறோம். அதாவது பிராவிடண்ட் பண்ட் போன்றுள்ள சட்டங்கள். இவற்றில் எல்லாம் அரசினுடைய கான்ட்ரிபியூஷன் இருக்கிறது. அதனால் அரசு ஒரு சமூக நலனை எண்ணி இந்த ஸ்கீமை வெற்றிகரமாக நடத்துவதற்குக் கணிசமான கான்ட்ரி பியூஷன் இருக்க வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். (மணியடிக்கப்பெற்றது) துணைத் தலைவர் அவர்களே நான் கொடுத்திருக்கிற அமென்ட்மெண்ட்சையும் சேர்த்துப் பேசி விடுகிறேன்.

இன்னொரு முக்கியமான அம்சம் என்னவென்றால் 30 ஆண்டுக் காலம் அல்லது 25 ஆண்டுக்காலம் ஒரு வழக்கறிஞராக இருந்தவரைப் பொறுத்தவரையில் இப்போது இந்த ஸ்கீமில் சேர்வதால் பெரிய அளவிற்குப் பலன் அளிக்குமா என்ற சந்தேகம் இருக்கிறது. ஏனென்றால் இந்த ஸ்கீமில் உறுப்பினராகச் சேர்ந்ததற்குப் பிறகுதான் அவர் ஒரு உறுப்பினர் என்ற முறையில் அவருக்கு பெனிபிட்ஸ் கொடுக்கப்படுமென்று இருக்கிறது. இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் கேரள மாநிலத்தில் சட்டம் உருவாக்கப்பட்டபோது

For computing the period of practice for the purpose of payment under this Act, every four years of practice at the Bar, if any, before admission to the Fund shall be computed as one year of practice and added on to the number of years of practice after such admission

என்ற ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு ஷரத்து இந்தச் சட்டத்திலே சேர்க்கப்பட்டால்தான் 25 ஆண்டுக் காலம் அல்லது 30 ஆண்டுக்காலம் அல்லது 20 ஆண்டுக்காலம்





வழக்கறிஞராக இருந்தவர்கூட இந்த ஸ்கீமினுடைய பலனை அனுபவிக்கக்கூடிய நிலை ஏற்படும். ஆகவே அவர்களைக்கூட இந்தச் சட்டத்தினுடைய ஸ்கோப்பிலே கொண்டு வருவதற்கு இப்படிப்பட்ட திருத்தத்தை அமைச்சர் அவர்கள் கொண்டு வரவேண்டும் அல்லது இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தைக் கூட நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு வக்காலத்து நாமா போடும்போது, ஏற்படக்கூடிய கோர்ட் ஃபீசினால் அரசுக்குக் கிடைக்கக்கூடிய அந்தப் பணத்தை இந்த ஸ்கீமிற்குக் கொடுப்பதற்கு வகை செய்யக்கூடிய முறையிலே, இன்றைக்கு மத்தியப் பிரதேசத்திலும், கேரள மாநிலத்திலும் கொண்டு வந்துள்ள சட்டத்திலே வகை செய்யப்பட்டிருக்கிறது. எனவே அந்த முறையில் உள்ள ஒரு நிலையை இந்தச் சட்டத்திலேயும் கொண்டு வரவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு பிரச்சினையை நான் எடுத்துச் சொல்ல விரும்புவது என்னவென்றால், இன்றைக்கு பார் அசோசி யேஷனிலோ அல்லது அட்வகேட்ஸ் அசோசியேஷனிலோ உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்களுக்குத்தான் இதனுடைய பெனிபிட்ஸ் கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது. இன்றைக்குப் பல வழக்கறிஞர்கள் பார் அசோசியேஷனிலோ அல்லது அட்வகேட்ஸ் அசோசியேஷனிலோ உறுப்பினர்களாக இல்லாமல் இருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்டவர்கள் எல்லாம் அந்த ஸ்தாபனங்களிலே உறுப்பினர்களாக இல்லை என்ற காரணத்தால் இந்த ஸ்கீமினுடைய பெனிபிட் அவர்களுக்குக் கிடைக்காமல் போகக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டாம் என்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால், பார் கவுன்சில் ஆப் இந்தியா உருவாக்கியிருக்கிற அவர்களுடைய பெனிபிட் ஸ்கீமிலே கூட, பார் அசோசியேஷனிலோ அல்லது அட்வகேட் அசோசியேஷனிலோ உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்ற கட்டாயமான ஒரு ஷரத்து கிடையாது. ஆகவே இந்த நேரத்திலே நான் இன்னொரு கருத்தைக்கூட சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.. ஒரு உறுப்பினரைப் பொறுத்தவரையில், அவர், ஒரு வருடமோ, அல்லது 2 வருட காலமோ உறுப்பினராக இருந்து 30 ஆண்டுக்காலம் அல்லது 28 ஆண்டுக்காலம் வழக்கறிஞராக

(திரு. ஜே. ஹேமச்சந்திரன்) [1987 நவம்பர் 17

இருந்துவிட்டு, பின்னர் இந்த ஸ்கீமிலே சேர்ந்த 2 வருடங் களுக்குப் பிறகு அவர், தங்களுடைய பிராக்டீசை விட்டுச் சென்றால், இந்தச் சட்டப்படி 2 ஆயிரம் ரூபாயோ அல்லது ஓர் ஆயிரம் ரூபாயோதான் கிடைக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது. இன்றைக்கு பணத்தினுடைய மதிப்பு குறைந்திருக்கிற நோத்தில் ஆயிரம் ரூபாய் அல்லது 2 ஆயிரம் ரூபாய் என்பது எந்த விதத்திலேயும் ஒரு வழக்கறிஞரைப் பொறுத்தவரையில், ரிஹேபிலிடேட் பண்ணுவதற்கு பெரிய அளவில் உதவி செய்யக் கூடிய நிலையில் இல்லை. எனவே ஒரு உறுப்பினர் இந்தத் தொழிலை விட்டு, வெளியிலே செல்லக்கூடிய நோத்திலே குறைந்தபட்சம் அவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் அளவுள்ள பலன் கிடைக்கவும், அதேபோல் ஊனமுற்றுப் போகக்கூடியவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் அளவுள்ள பலன் கிடைக்கவும் இந்தச் சட்டத்திலே வகை செய்யப்படவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று வழக்கறிஞர்களுக்குக் கொண்டு வந்திருப்பதைப்போல, வழக்கறிஞர்களுடைய குமாஸ்தாக்களுக்கும் ஒரு ஸ்கீமினை உருவாக்குவதற்கான ஒரு சட்டத்தை அமைச்சர் அவர்கள் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னொரு விஷயத்தையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு பார் கவுன்சில் ஸ்தாபனத்தினுடைய பிரதிநிதி களுக்குத்தான் இந்த நிர்வாக அமைப்பிலே இடம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், சமீபத்திலே ஸ்டேட் பார் பெடரேசன் என்ற ஒரு ஸ்தாபனம் உருவாகியிருக்கிறது. அதனுடைய தலைவரையும், செயலாளரையும்கூட இந்த ஸ்கீமினுடைய அட்மினிஸ்ட்ரேஷனிலே இணைத்துக்கொள்வதற்குத் தகுந்த அளவிலே உள்ள ஒரு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று கேட்டு, அந்த முறையிலே உள்ள கருத்துக்களை நான் திருத்தங் களாகக் கொடுத்திருக்கிறேன் என்று சொல்லி, இந்தச் சட்டத்தை பொறுத்தவரையிலும், இதனுடைய உண்மையான நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இப்படிப்பட்ட திருத்தங்கள் இன்றைக்கு மிக முக்கியமானவை, இன்றியமையாதவை என்பது எங்களுடைய கருத்து என்று கூறி அந்த முறையில் இந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

1987 நவம்பர் 17]

மாண்புமிகு திரு. ஜி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களுடைய [illegible] சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், 1981-லேயே அரசு இது குறித்து ஒரு கொள்கை முடிவு எடுத்தது. அதில் பல்வேறு கருத்துக்களை வழக்கறிஞர்களுடைய பிரதிநிதி களிடமிருந்து அவ்வப்போது பெறவேண்டியிருந்ததன் காரணத் தாலும், மாறுபட்ட கருத்துக்கள் வந்தபோது அவற்றைப் பேசி தீர்க்கவேண்டிய நிலை இருந்த காரணத்தாலும், அவைகளை எல்லாம் ஆராய்ந்திட்டு தற்போது இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது, அவர்கள் கொடுத்திருக்கின்ற திருத்தங் களைப்பொறுத்து சிலவற்றை வலியுறுத்தினார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(இரவு 7-20)

அதிலே அவர்கள் 'President and Secretary of the Bar Federation of Tamil Nadu'

என்ற ஒரு திருத்தத்தை [illegible] பார் கவுன்சிலுக்கு 4 பேர்களை நியமிக்கக்கூடிய வாய்ப்பு ஒரு தனிப் பிரிவிலே தரப்பட்டிருக்கிறது. [illegible] இதை நாமினேட் செய்யலாம் என்று இருக்கிற காரணத்தாலே அது தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

அதைப் போலவே "being a Member of a Bar Association or an Advocates' Association"

என்பதை சேர்க்கவேண்டாம். இந்த 2 அமைப்புகளிலும் உறுப்பினர்களாக இல்லாத வழக்கறிஞர்கள் இருக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். 100-க்கு 99 சதவீத வழக்கறிஞர்கள் ஏதோ ஒரு அமைப்பில் உறுப்பினராக இருக்கிறார்கள். இல்லாமல் சில இடங்களில் இருக்கலாம். ஆனால் தமிழ்நாடு வழக்கறிஞர்கள் [illegible] சார்பிலும், உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பிலும், தமிழ்நாடு பார் கவுன்சில் சார்பிலும் [illegible] பேசி இறுதி முடிவு எடுக்கப்பட்டது. அதிலே [illegible] இருக்கவேண்டும் என்ற கருத்தை [illegible] வழக்கறிஞர்கள் அட்வகேட் அசோசியேஷன் வலியுறுத்திய காரணத்தால், இது

[திரு. சி. பொன்னையன்] [1987 நவம்பர் 17

ஏற்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அதற்குக் கூறியிருக்கிற கருத்து பார் அசோசியேஷன், அட்வகேட் அசோசியேஷன்-ல் உறுப்பினர்களாக இருக்கிறபோதுதான் அந்த அமைப்பும் இந்த நிதியையும் செம்மையாகச் செயல்படுத்த முடியும் என்ற ஒரு கருத்தைத் தெரிவித்து அந்த அடிப்படையில் அது ஏற்கப்பட்டிருக்கிறது.

ஐம்பது ரூபாயை குறைக்கவேண்டியது இல்லை என்று அரசு கருதுகிறது. ஆண்டுக்கு 50 ரூபாய் என்பது மிக ஒரு குறைந்த தொகை என்ற காரணத்தால் குறைக்கவேண்டியது இல்லை. இதுகூட அரசு நிர்ணயித்த தொகை அல்ல. தமிழ்நாடு வழக்கறிஞர்கள் சம்மேளனத்தினுடைய ஏகமனதான விருப்பப்படி அவர்களே கொடுத்தது.

Each and every provision has been settled in active consultation with the Representations of the Tamil Nadu Bar Federation என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் பேசுகிறபோது கோர்ட் பீ-யினுடைய ஒரு பகுதியாக இந்த நிதி பெறக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்பட்டால் நலமாக இருக்கும் என்று சொன்னார்கள். இதிலே நான் தெளிவாக்க விரும்புகிறேன். 'ஹாண்டிகேப்'-க்கு 5 ஆயிரம் ரூபாய் மிகக் குறைந்த தொகை என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஒருவருக்கு மேற்பட்ட வழக்கறிஞர்கள் ஒரு சீனியர் தலைமையில் ஒரு வக்காலத்திலே கையெழுத்து இடுகிறபோது ஒவ்வொருவரும் அந்த வக்காலத்து நாமாவிலே அந்த ஸ்டாம்பை ஒட்டவேண்டுமா என்ற ஒரு கோரிக்கையைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிதியைப் பொருத்தவரைக்கும் மிகத் தெளிவாக எந்த எந்த பிரிவிலிருந்து இந்த நிதி வருகிறது என்பதை 2-வது பிரிவிலே தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அதிலே இறுதியாக போட்டு இருக்கிற

2. J (I) all funds collected by sale of stamp under section 22 என்ற பிரிவிலே அதுதான் இதிலே மிக முக்கியமான பிரிவு என்பதை நான் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். காரணம் ஒவ்வொரு வக்காலத்து நாமாவின் மூலமாகவும் ஒரு வழக்கிலே வழக்கறிஞர்கள் ஏதோ ஒரு காரணத்தால் [illegible] எண்ணிக்கை அப்பியர் ஆனாலும் அவர்கள் இந்த வக்காலத்து நாமாவிலே ஒரு ரூபாய் என்று வருகிறபோது ஒரு ஆண்டுக்குப் பல லட்ச ரூபாய்



1987 நவம்பர் 17] (திரு. சி. பொன்னையன்)

மொத்தமாக இந்த நிதிக்கு பணம் வரக்கூடிய ஒரு ஆக்கபூர்வமான வாய்ப்பு இருக்கிற காரணத்தால்தான் இதை நாம் அதிகமாக வேறு எங்கும் அரசு நிதி என்றோ, பிற நிதி என்றோ அந்த நிதியையும் நாம் சேர்க்கவில்லை. நாம் எதிர்பார்ப்பதைவிட மிக அதிகப்படியான, சில ஆண்டுகளில் வழக்கறிஞர்களுடைய நலத் திட்டத்திற்காக வரக்கூடிய நிதி சில கோடிகளாக உயரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. காரணம் ஒவ்வொரு வழக்கிலும் வக்காலத்து நாமாவிலே ஒரு ரூபாய் என்று வருகிறபோது அந்த வாய்ப்பு அதிகம் இருக்கிறது. 10 நபர் என்றால் வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பில் அரசுக்கு அவர்கள் கூறியிருப்பது சீனியர் ஒருவர் இருந்து, ஜூனியர் 4 பேர் இருந்தால் அவர்கள் வக்காலத்திலே கையெழுத்து இடுகிறபோது ஒவ்வொருவரும் ஒரு ரூபாய் ஸ்டாம்பு அங்கு தரவேண்டும் என்பதுதான் வழக்கறிஞர்கள் சங்கத்தினுடைய விருப்பம். விதியிலே இதற்கு அந்த விளக்கத்தைத் தர அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

அதைப்போலவே வக்கீல் குமாஸ்தா, எழுத்தர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பொன் முத்துராமலிங்கம் அவர்களும் ஹேமச்சந்திரன் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். இது குறித்து பார்நிதிமன்றத்தோடு கலந்து எந்த எந்த முறையில் அவர்களுக்கு செம்மையான ஒரு நிலையை உருவாக்க முடியும் என்பதை ஆராய்ந்து அரசு அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் பேசுகிறபோது 16-வது பிரிவிலே ஒரு விளக்கம் கேட்டார்கள். ஒருவர் ஊனம் உற்ற நிலையில் இருப்பார் என்றால் 'வித் இன் 5 இயர்ஸ்' என்று இருக்கிறபோது, அவருக்கு கிடைக்கக்கூடிய அந்த வசதி இறந்து விட்டவர்களுக்கு உண்டா என்று கேட்டு இருக்கிறார்கள். அதிலே தெளிவாக்கப்பட்டிருக்கிறது, ஊனமுற்றோர்களுக்கு மட்டும்தான் இது பொருந்தும் என்றிருக்கிறது. தேவைப்படில் அந்த நடைமுறைக்குக் கொண்டு வந்து, பிறகு அதில் ஏற்படுகிற நிலைமைகளைப் பார்த்து, அதற்கேற்ப பிறகு முடிவு செய்ய அரசு தயாராக இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி வழக்கறிஞர்களுடைய நலன் கருதி, கொண்டு வந்திருக்கின்ற இந்த நல்ல திட்டத்திற்கு அவை ஏற்பு அளிக்க வேண்டுமாய்க் கேட்டு அமைகிறேன்.

[1987 நவம்பர் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதியச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

Thiru J. HEMACHANDRAN: Mr. Speaker, Sir, I move the following amendment

'In clause 3, in sub-clause (2), *add* the following sub-item *(k)* after sub-item *(j)*

*(k)* The amount received by the Government from the court fees on vakalathunamas."

**திரு. கோ. வீரய்யன்:** நான் அதை வழிமொழிகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.



1987 நவம்பர் 17]

பிரிவு 4.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

Thiru J. HEMACHANDRAN: Mr. Speaker, Sir, I move the following amendment:

"In clause 4, in sub-clause (3), *add* the following sub-item *(g)*, after sub-item *(f)*—

(g) The President and Secretary of the Bar Federation of Tamil Nadu."

**திரு. கோ. வீரய்யன்:** நான் அதை வழிமொழிகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 4 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 5 முதல் 14 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு—15.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 15 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

Thiru J. HEMACHANDRAN: Mr. Speaker, Sir, I move the following amendments:

1. In clause 15, in sub-clause (1), *omit* the words "and being a member of a Bar Association or an Advocates' Association."

2. In clause 15, in sub-clause (3), *for* the words "two hundred", *substitute the words* 'one hundred'.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 நவம்பர் 17

3. In clause 15, in sub-clause (3), *add* the following words at the end "in Two equal instalments"

4. In clause 15, in sub-clause (4), for the words column 2, "Fifty rupees" and "One hundred rupees', *substitute* the words "Thirty rupees" and "Sixty rupees."

**திரு. கோ. வீரய்யன்:** நான் அதை வழிமொழிகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்** அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 15 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

**பிரிவு 16.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 16 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

Thiru J. HEMACHANDRAN: Mr. Speaker, Sir, I move the following amendment:

"1. In clause 16, in sub-clause (1), *omit* the words for a period of not less than five years" and *add* the following words at the end—

'subject to not less than an amount of Rs. 5,000'.

2. In clause 16, in the proviso to sub-clause (1), *add* the following at the end
"and an amount of Rupees ten thousand"

3. In clause 16, after sub-clause (2), *add* the following as sub-clause (3)—

"(3) For calculating the period of completed years of practice for the purpose of payment under this Act, every three years of practice at the Bar, if any, before the admission to the fund shall be computed as one year of practice and added on to the number of years of practice after such admission."

**திரு. கோ. வீரய்யன்:** நான் அதை வழிமொழிகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.



1987 நவம்பர் 17]

பிரிவு 16 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 17 முதல் 27 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதியச் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1987) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(இரவு 7-30)

**8. அரசினர் தீர்மானங்கள்.**

**(ஆ) விதி 32-ஐத் தளர்த்தல்.**

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப் பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (18—11—1987) தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 18—11—1987 காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

103. 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குடிவாரா உரிமைகள் பதிவு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையில் 12—6—1987 ஆம் நாளிட்ட 875 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குடிவாரா உரிமைகள் பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1987) 18 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

104. 1984-85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

105. 1985-86 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

106. 1984-85 ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் முதலாவது அறிக்கை மற்றும் கணக்குகள். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

19. 1972-73 முதல் 1975-76 ஆம் ஆண்டுகள் வரையிலான தமிழ் நாடு மின்சார வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1985-86) அளித்த இருபத்தொன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த மேல் நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி ஐந்தாவது அறிக்கை. (தமிழ்)

20. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970-71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான குறிப்புகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின்





(1985-86) ஒன்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீதான அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தாறாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

21. 1981-82 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்).

22. 1981-82 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

23. 1982-83 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்).

24. 1982-83 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

25. 1981-82 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை. (தமிழ், ஆங்கிலம்).

26. 1982-83 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை. (தமிழ், ஆங்கிலம்).

27. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (முதலாவது பட்டியல்).

28. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (இரண்டாவது பட்டியல்).

29. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (மூன்றாவது பட்டியல்).

30. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (நான்காவது பட்டியல்).

31. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (ஐந்தாவது பட்டியல்).

136540 சென்னை-600 009

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-1
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Anantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.